# என்றென்றும் அன்புடன்...

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட் நாராயணா சாலை
தி. நகர், சென்னை-600 017

முதற் பதிப்பு : டிசம்பர், 1984
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1986
மூன்றாம் பதிப்பு : மே, 1988
நான்காம் பதிப்பு : அக்டோபர், 1989
ஐந்தாம் பதிப்பு : மே, 1991
ஆறாம் பதிப்பு : ஆகஸ்ட், 1992
ஏழாம் பதிப்பு : செப்டம்பர் 1994
எட்டாம் பதிப்பு : ஜூன் 1999

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

விலை : ரூ. 45-00

ENRENDRUM ANBUDAN
By : BALAKUMARAN
Eighth Edition : June 1999

கிடைக்குமிடம் :
திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை.
தி. நகர், சென்னை-600 017

THIRUMAGAL NILAYAM
55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai-600017
Phone : 434 28 99
Fax : 081 - 044 - 434 15 59

ஸ்ரீ வோதயம் அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5

30197
4657070

## சமர்ப்பணம்

சூழ்நிலைச் சூறாவளியில் என் வாழ்க்கைப் படகு தத்தளித்த நேரத்தில் எதிர்பார்ப்புகள் இன்றி கலங்கரை விளக்காய் நின்று உதவி செய்த

தாய் ஆசிரியர்

வலம்புரி ஜான், எம். பி. அவர்கட்கு

என்றென்றும் அன்புடன்

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| நானே எனக்கொரு போதிமரம் | 44-00 |
| இனி என் முறை | 52-00 |
| சிநேகமுள்ள சிங்கம் | 54-00 |
| காதல் வெண்ணிலா | 35-00 |
| என் கண்மணி | 29-00 |
| மெர்க்குரிப் பூக்கள் | 64-00 |
| ஆசை என்னும் வேதம் | 55-00 |
| அகல்யா | 27-00 |
| கரையோர முதலைகள் | 57-00 |
| கானல் தாகம் | 30-00 |
| எட்ட நின்று சுட்ட நிலா | 26-00 |
| விசிறி சாமியார் | 26-00 |
| சுந்தரி கண்ணால் ஒரு சேதி | 32-00 |
| ஆசைக் கடல் | 60-00 |
| அடுக்கு மல்லி | 35-00 |
| நெல்லுச் சோறு | 40-00 |
| வன்னி மரத் தாலி | 32-00 |
| இரவல் கவிதை | 32-00 |
| அன்புக்குப் பஞ்சமில்லை | 30-00 |
| ஆனந்த வயல் | 52-00 |
| ஒரு வழிப் பாதை | 30-00 |
| கிருஷ்ண அர்ஜுனன் | 25-00 |
| தாயுமானவன் | 45-00 |
| முன் கதைச் சுருக்கம் | 40-00 |
| சின்ன சின்ன வட்டங்கள் | 34-00 |
| பந்தயப் புறா | 60-00 |
| இனியெல்லாம் சுகமே | 66-00 |
| தலையணைப் பூக்கள் | 58-00 |
| பலா மரம் | 42-00 |
| கனவுகள் விற்பவன் | 63-00 |

## முன்னுரை

ஓவிய மாணவனாக நான் இருந்த நாட்களில் ஊர் ஊராகச் சென்று மிகக் குறைந்த செலவில் ஏதாவது ஒரு சிறிய ஹோட்டலில், சத்திரத்தில் தங்கி, அந்த ஊர் கோயில்களையும் சிற்பங்களையும் அங்கேயே அமர்ந்து மணிக்கணக்கில் நாட் கணக்கில் ''ஸ்பாட் பெயிண் டிங்ஸ்'' செய்ததுண்டு. அஜந்தா எல்லோராவிலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சை, மதுரை, காஞ்சி, குமரிமுனை என்று சுற்றி அலைந்து நான் தீட்டிய வண்ண ஓவியங்களே இன்று எனது விலை மதிக்க முடியாத சொத்துக்கள்.

தஞ்சைக் கோயில் எதிரே எட்டுமணி நேரம் உட்கார்ந்து ஓவியமாய்த் தீட்டியது இன்னும் பசுமை யாய் இருக்கிறது.

தலைக்குப் பின்னால் உதயமான சூரியன் உச்சி யைக் கடந்து கண்ணுக்கெதிராகக் கீழே வந்து சுவரில் மறையும் போது ஓவியம் முற்றுப் பெற்றது. சப்பணம் கட்டி உட்கார்ந்திருக்கக் கால்கள், மரத்துப் போனது அப்போதுதான் தெரிந்தது. கண்கள் பொறி தட்டிவர, வெறும் வயிறு குழைந்து தவிக்கத் தீட்டிய ஓவியத்தை நிஜத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். திருப்திகரமாய் அச்சாய் வெள்ளைத் தாளில் வந்திருக்கிறது.

சந்தோஷம் வந்தது. சந்தோஷம் வந்த கணம் யோசித்தேன். ஒரு கான்வாஸில் இதை வரைந்து முடித்தபோதே இத்தனை சந்தோஷம் என்றால் இதை

எட்டு வருடங்கள் கட்டியவன் எத்தனை சந்தோஷப் பட்டிருப்பான். எட்டுமணி நேரஉழைப்பிற்கேஇத்தனை பொறுமையும், வேதனை தாங்கும் மனநிலையும், மனசு ஒன்றிய புத்தியும் வேண்டுமென்றால் இதைக் கட்டிய வனுக்குள் எத்தனை நடந்திருக்கும்.

ராஜராஜனுக்கு மட்டுமா... உழைப்புச் செலவும் உடல் வேதனையும்?மன்னன் மட்டுமா கட்டிய கோவில் இது? எத்தனை சிற்பிகள்... எத்தனைக் கூலிகள்... எவ்வளவு மேற்பார்வைகள்... எவ்வளவு மனித நாடகங் கள் நடந்திருக்கும் இங்கே...

யோசிக்கும்போது ஆச்சரியம் கரை கடந்தது. எத்தனைபேர் கால்கள் நசுங்கியிருக்கும். எட்டுமணி நேரம் உட்கார்ந்து வரைந்தவனுக்கே மரத்துப்போய் வெட வெடத்தது கால்கள். எட்டு வருடங்கள் விடாமல் தினந்தோறும் இரவு பகலாய் செதுக்கினவனுக்கு, கல் சுமந்தவனுக்கு எவ்வளவு வலி... எவ்வளவு மனித உழைப்பு, எவ்வளவு வியர்வை, எவ்வளவு ரத்தம், எத்தனைபேர் உணவு, எத்தனை சமைத்திருப்பார்கள். எவ்வளவு குதிரைகள், எவ்வளவு யானைகள், மாடுகள் எத்தனையெத்தனை சவுக்கடிகள்... என்னவெல்லாம் நேர்ந்திருக்கும்.

சித்திரம் திருப்தியாய் வரைய முடிந்த மகிழ்ச்சி இருந்தாலும், மனசுக்குள் ஏதோ புரியாத ஒரு வேதனை யும் வந்தது.

கோவில் வாசலில் பூக்குடலை, தேங்காய் பழம் வாங்கி ஒரு சுற்று சுற்றி சாமி கும்பிட்டுப் போயிருந் தால் இத்தனை யோசித்திருக்க முடிந்திருக்காது. பெரிய கோயிலா, பார்த்திருக்கிறேன் என்கிற பதிலே கிடைத்திருக்கும்.

என் கால்வலி என்னைக் கிளறிவிட, நான் என்றோ வாழ்ந்த மனிதர்களின் வலிகள் பற்றி யோசித்தேன்.



எட்டு மணி நேரம் சித்திரம் வரைந்ததில் காலதேச பரிமாணங்கள் தாண்டி ஒரு வேதனை வந்தது.

இது கலைஞன் மனது. கலை தரும் நல்விதயம் இது. ஓவியமோ, சிற்பமோ, நாட்டியமோ, இலக்கி யமோ எதுவாயினும் உழைப்பும் யோசிப்பும் கலவை யாகிவிட மனசு செம்மைப்பட்டு விடுகிறது. எனக்குக் கால் வலி, அதற்குத் தைலம் என்ற யோசிப்பைவிட மனித வாழ்வு முழுமைக்கும் எல்லா காலத்திற்கும் உள்ள நோவுபற்றி என்று சிந்தனை பறந்து விடுகிறது. இங்கு நான் என்னைப் பற்றி சொல்லவில்லை. அருமை நண்பர் பாலகுமாரனைச் சொல்கிறேன்.

மனைவியைத் தவிர இன்னொரு பெண் துணை யைத் தேடும் எழுத்தாளனைப் பற்றிய கதை இது. எழுத்தாளனை நோக்கி, வீட்டைப் புறக்கணித்து எது நேர்ந்தாலும் சரி என்கிற திடத்தோடு சபிதா என்கிற பெண், ரயில் பயணம் செய்கிறாள். இனி வாழ்க்கை நல்லா இருந்தாலும் இருக்கலாம், இல்லாதும் போக லாம் என்று நூறு சதவிகித ரிஸ்கில் கிளம்புகிறாள்— ஃப்ளாஷ் பேக்.

எழுத்தாளன் ராகவனும் வீட்டைப் புறக்கணித்த பெண் சபிதாவும் பேசிய, சிரித்த, சல்லாபித்த, இடையி டையே ஒரு நாவல் பற்றி அணு அணுவாய் விவாதித்த சம்பாஷணைகள்,தான் எழுதப்போகும் நாவல் மையத் தையும் தன் வாழ்க்கை பற்றியும் ஒப்பிட்டு எடை போட்டுக் குழம்பிய தருணங்கள், அடுக்கடுக்காய் மனித நாடகங்கள், உணர்வுப் போராட்டங்கள்—கீறல்கள், காயங்கள், ஆறுதல்கள், ஆசுவாசங்கள்

ராஜராஜன் பெரியகோயில் கட்டியது கலையார் வமா, பேராசையா, கர்வமா, நிர்ப்பந்தமா—நானும் சித்திரம் எழுதிய பிறகு தூக்கமில்லாமல் புரண்டு புரண்டு கேள்வி கேட்டுக் கொண்டேன்.

சரி கோயில் கட்டவேண்டியது அவன் சூழ்நிலை என்றே வைத்துக்கொள்வோம் பாதிப்பு அவனோடு முடிந்ததா? அவன் கட்டளைக்குப் பணிய வேண்டிய ஊர் ஜனங்கள் மேலும் விழுகிறது அல்லவா. பொறுப்பும் கவலையும் சிரமமும் சிக்கலும் வருகிறதல்லவா.

தஞ்சைச்சேரிப் பெண் தேவரடியாளான புகழிக்கும் வருகிறது. ராகவன் நாவலில் வரும் கதாநாயகி இந்தப் பெண் சபிதாவும் ராகவனும் இவளைப்பற்றி யோசிக்கிறார்கள்.

கோவில் கட்டுதல் for good cause என்று தன்னை அதில் ஈடுபடுத்தித் தன்னை அழித்துக்கொள்கிற பெண். தாஸி. சற்று தளர்வான மரபு அவளுக்கு உண்டு. எனினும் தன் சுகத்துக்கு என்று அதை யோசிக்காமல் ஊர் காரியம் ஊர் நலன் என்று கல் கொண்டுவர பதினாறு முரட்டு ஆண்களுடன் போகிறாள். புகழியோடு தன்னை ஒப்பிட்டு எனக்கும் என் வாழ்வில் ஒரு பர்பஸ் இருக்கிறது. என்னோடு வாழ்வு முழுவதும் வா. மரபு மீறல் தான். சட்டப்படி தவறுதான். இருப்பினும் கூலியாள் மாதிரி வா. கல் தூக்கி வருவோம் வா. கோபுர உச்சிக்கு ஒற்றை உருண்டைக் கல் வேண்டி புகழி பயணப்பட்டது மாதிரி என்னோடு பயணப்படு. என் எழுத்துக்குத் துணையாய் இரு என்று ராகவன் சபிதாவை வேண்டுகிறான்.

சபிதாவுக்கும் ராகவன் எழுத்துப்பற்றி நம்பிக்கை. எல்லோருக்குமா எழுத முடியுது. லட்சத்துல ஒருத்தர்க்குக் கிடைக்குமா. இதை விட்ற கூடாது நீங்க. எழுதறது நிறுத்திடக் கூடாது.

ஆனால் வாழ்க்கை அவ்வளவு எளிதில்லை. கசையடிகள் விழும். கால் விரல் நசுங்கும் என்பதாய் யாரையோ வேதனைப்படுத்தப் போகிறோம் என்கிற பயமும் வருகிறது.

ராகவன் மனைவி மீனாட்சி சாது. இரண்டு மூணு பேர் கேட்டா, ராகவன் எழுதறதுக்கு நெறைய



ஹெல்ப் பண்ணுவீங்களான்னு. நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். அவராத்தான் எழுதறார். இதுபத்தி எனக்கு அவ்வளவா தெரியாதுன்னேன். எதுக்குப் பொய் சொல்லணும் சொல்லுங்கோ.

இவள் ஒரு குழந்தை. ஒரு பொய் கூட சொல்லத் தெரியாத குழந்தை. ருசியாய் சமைக்கத் தெரிந்த பெண். வீடு சுத்தமாய் வைக்கத்தெரிந்தவள். கொஞ்சம் இருமினாலும் மருந்தோடு நிற்பவள்.

இதுக்கு மிஞ்சி ஒரு ஆம்பளைக்கு என்ன வேணும்? நிறைய பேர் கேட்கிறார்கள் மனசைப் பொன் செய்யும் மருந்தாய் வைத்துக்கொண்டவர்கள் அதட்டிக் கேட்கிறார்கள்.

ஆனால் தனிமை துணை இல்லாதநிலை ராகவனை அடித்துப் போடுகிறது சபிதா என்கிற பெண்ணை சந்திக்கிறவரை. இனி மெல்ல மரணம் தானே, என்கிற சிந்தனைக்கு வருகிறபோது சபிதா சமாதானப்படுத்துகிறாள்.

சற்று பிசகினாலும் ஆபாசமாகி விடுகிற அபாயம் உள்ள நாவல் இது.

எத்தனைத் தெளிவாகவும் அடுக்காகவும் விவாதங்கள் வந்தாலும் மீனாட்சியின்பால் ஒரு இரக்கம் படிக்கிறவருக்கு வரக்கூடும். இதற்கு இன்றைய காலகட்டம் காரணம். விட்டுக் கொடுத்தல், கணவனையே பங்கு போடச் செய்தல் பலருக்கு சம்மதமில்லாத விஷயமாய்ப் போகலாம். நம் வாழ்க்கைச் சூழ்நிலை இது.

அன்றைய சமூகம் அங்கீகரித்த, கௌரப்படுத்திய தேவரடியாள் என்கிற வாழ்க்கையைத் தேவடியாள் என்று மாற்றி அந்தச் சொல்லுக்கே, வாழ்க்கைக்கே, வேறுவித அர்த்தம், இழிவு கற்பிக்கப்பட்ட நிலை இன்று (இன்றைய மரபுகள், கௌரவங்கள் எத்தனை தற்காலத்தில் இழிவாய், வசவு சொல்லாய் மாறப்

போகிறதோ என்கிற எண்ணமும் எழுகிறது) ராகவன் தன்னைப் புகழி என்கிற தாசியோடு ஒப்பிட்டுக் கொள்கிறான். புகழிக்கு ரசனையும் கற்றுக் கொள்ளலும் இயல்பாய் இருந்தன. கல் கொண்டுவர நேரிட்டது. ஒரு சந்தர்ப்பம்; ஒரு சூழ்நிலை. அதுபோல தன் ரசனையும் அறிவும் குமாஸ்தாவாக இருப்பினும் எழுத்துத் துறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது சந்தர்ப்பம்; இதை விடலாகாது என்பதே சபிதாவின் விருப்பம். வளர்க்கவேண்டும் துணை வா என்பது ராகவனின் வாதம்.

விளைவு மனித நாடகம், உணர்வுப் போராட்டம். மீனாட்சியின் கோபமும் அழுகையும் சவுக்கடியாய் விழுகின்றன.

சட்டென்று அவன் சிலிர்த்து சபிதாவை ஏற்றுக்கொண்டதே நாவலின் திருப்பம். இம்மாதிரி இடங்களில் யாரோ ஒருவர் பலி என்பதே தமிழ் இலக்கியத்தின் சினிமாக்களின் வழக்கம்.

ராகவனின் நெருங்கிய நண்பர்களே அவனை அவமானப்படுத்துகிறார்கள். தன்னால் செய்ய முடியாததை மற்றவன் செய்து மகிழும்போது மரபு முதலைகள், கண்ணீர் விட்டவாறு கரையோரம் காத்திருக்கும் முதலைகள். அவனைக் கடித்துக் குதறக் காத்திருக்கின்றன என்பதாய் ராகவன் யோசிக்கிறான்.

இத்தனை யோசனைத் திறனும் புத்தியும் உள்ள ராகவன் முதன் முறையாகவே ஒரு புத்திசாலிப் பெண்ணைத் தேடி கடிமணம் புரிந்திருக்கக் கூடாதா என்ற கேள்வி வருகிறது.

ராகவனுக்கு அவ்விதம் நேர்ந்தது, மறுபடி இன்னொன்றும் நேர்ந்தது இருதார வாழ்க்கையைப் பாராட்டும் விதமாக இந்நாவல் இல்லை. சக்தியின்றி சத்தமின்றி புத்தித்துணையால் ஒரு சூழ்நிலைச்



சிக்கலை ராகவன் வெல்கிறான். இதற்கு அடிப்படையாய் ஒரு பெரிய கோயில் காரியம் போல தனக்கும் ஒரு காரியம் இருக்கிறது என்று கூறுகிறான். இரு மனைவியருடன் இன்பகரமாய் அவன் குடும்பம் நடத்துகிறான்.

தன் காரணம் எவ்வளவு உயர்வாய் இருப்பினும் இந்தப் பெண்களைவிடத் தான் ஒரு மாற்று கம்மிதான். தன்னைவிட இப்பெண்கள் நிச்சயம் உயர்வுதான் என்றும் நினைக்கிறான்.

இது ஒரு கலைஞனின் மனது. கலை கொடுத்த நல்விதயம் இது. கலைஞனைச் சார்ந்தவர்களுக்கும் இம்மனப்பக்குவம் வந்துவிடுகிறது. மூவரும் பரஸ்பரம் விட்டுக் கொடுக்க, மீனாட்சி மாதிரி நல்ல குணம் ராகவன் மாதிரி புத்திசாலித்தனம் எல்லோருடனும் என்றென்றும் அன்புடன் இருக்கவேண்டிய அவஸ்யம் என்னுள்ளே இருக்கும் தைரியம் எல்லாம் சேர்ந்து பெற்று என் வயிற்றில் வளரும் மகனே சந்தோஷமாய் இவ்வுலகிற்கு வா என்று வயிற்றில் சுமந்துகொண்டிருக்கும் மகனோடு சபிதா பேசுகிறாள்.

மூவரின் குணங்களும இனி வருகிற பிள்ளைக்கு, தலைமுறைக்கு வரட்டும் என்று பிரார்த்திக்கிறாள். என் முன்னுரையை மீறியும் இந்நாவல் சர்ச்சைகள் தரக்கூடும். சிறந்த நாவல் என்றால் அது சர்ச்சைக்குரியதாகத்தான் இருக்கும். அவ்வகையிலும் இந்நாவல் பலருக்கு உதவக் கூடும்.

என் அருமை நண்பர் பாலகுமாரனுக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

7, கிருஷ்ணாராவ் தாயுடு தெரு.
சென்னை—17.

அன்புடன்,
சிவக்குமார்

30197
465 7070

# என்றென்றும் அன்புடன்

## 1

''சரி ஊருக்குப் போய் லெட்டர் எழுது. மறந்துடாத''—கார்த்தி கடைசி வாக்கியமாய் இருக்கட்டும் என்று சொன்னான். சரி என்று சொன்னதும் நகர்ந்து விடவேண்டும் என்று நினைத்தான்.

சபிதா சிரித்தாள்.

''என்னக்கா சிரிக்கற'' கார்த்தி கர்ச்சிப்பால் முகம் துடைத்துக் கொண்டான். அது கடைசி வாக்கியம் இல்லையென்று ஆகிவிட்டது. இன்னும் ஐந்து நிமிஷமாவது சபிதாவோடு பேச வேண்டியிருக்கும்.

''இந்த ரயில்ல மொத்தம் எத்தினி ஜன்னல் இருக்கும் கார்த்தி? நூறு இருக்குமா? அந்த நூறு ஜன்னல்ல தொண்ணூறு ஜன்னல் இதே வார்த்தையைக் கேட்டுக்கிட்டு இருக்கும். சொல்ல வேணாம்னாலும் சொல்லும்படியா ஆயிடுது இல்லே? இதைச் சொல்லாம நிறைவு வராது இல்லே—டக்குன்னு சொல்லிடறோம்.''

''அப்படியில்லேக்கா. நான் சொன்னாக்கூட நீ லெட்டர் போடறது சந்தேகம்தான். நான் சொல்லலேங்கறதுக்காகப் போடாம இருந்துடப் போறியோன்னு பயத்தில் சொல்லிட்டேன். போடறதா இருந்தா நாலு நாளைக்குள்ள போடு, அப்புறம் நானும் என் உத்தியோகம் பார்க்கக் கிளம்பணுமில்ல.

லெட்டர் பாத்துக் கிளம்பினா ஒரு நிம்மதி.''

''என்னென்னவோ போர்டு எழுதியிருக்கு ஸ்டேஷன்ல. ஊருக்குப் போனதும் கடிதம் போடுங்கன்னு ஒரு போர்டு பத்தடிக்கு ஒண்ணா ஸ்டேஷன்ல வைக்கலாம், இல்லியா. எப்படி ஐடியா?''—சபிதா முகவாயை ஜன்னல் விளிம்பில் வைத்தபடி பேசினாள்.

''ம்ஹூம்... போர்டே இல்லாத ஸ்டேஷன்தான் எனக்கு வேணும். இங்க துப்பு. அங்க துப்பு. இதை வாங்கு... அதைப் படிச்சியா. ஆண்கள்... பெண்கள்.. எதுவும் இல்லாத ஸ்டேஷன்தான் எனக்குப் பிடிக்கும்.''

''அப்படி ஒரு ரயில்வே ஸ்டேஷன் நாமதான் இனிமே கட்டணும். நீ எட்டாவது படிக்கறச்சே ஒரு ரயில்வே ஸ்டேஷன் கட்டினோமே.''

''அதுக்கும் சமயபுரம்னு பேர் வெச்சோம் போர்டு எழுதினோம்.''

''பத்து வருஷம் ஆச்சா...''

''இருக்கும். மாடில ஐயா வீட்ல கொலு வெச்சப்போ அவங்களுக்குச் செஞ்சு கொடுக்கலாம்னு ஆரம்பிச்சு நல்லா வந்ததும் நாமே வெச்சுக்கிட்டோம். கொடுக்கலை.''

''என் சமயபுரம்னு வெச்சோம்?''

''ஒரு தடவை சமயபுரத்துக்குப் பஸ் கிடைக்காம திண்டாடி தனித்தனியா முண்டியடிச்சு தெரிசல்ல ஏறி வீட்டுக்கு வந்து, டிரான்ஸ்போர்ட் ரொம்ப மோசம்னு புலம்பி—ரயில்வே ஸ்டேஷன் கட்டினோம். ''சமயபுரம்தான் எனக்கு பெரிய இழப்பு கார்த்தி. நினைச்சுக்கிட்டு திடும்திடும்னு கிளம்புவோம் மெட்ராஸ் போனா அது முடியாது.''

''நம்ம வீடு முக்கியமா படலியா அக்கா?''



''இல்லை கார்த்தி''

''அவ்ளோ விட்டுப் போச்சா?''

''ஒட்டவேயில்லை. பத்மா செத்துப் போனதிலேர்ந்து மெல்ல மெல்லப் பிரிய ஆரம்பிச்சிடுச்சு. தினம் தினம் ஆபீஸ் போய் வீடு வந்து... என்னத்துக்கு இதெல்லாம்னு அலுப்பு வந்துடுச்சு.''

''மாறுதலுக்குத்தான் இப்படி போக முடிவு பண்ணியா?''

''ஆமான்னு தோணுது.''

''அங்கியும் போய் மாறிடாதக்கா.''

''தெரியலை கார்த்தி.''

''ஸ்டேஷனுக்கு யார் வருவாங்க?'',

''அவர் வரேன்னு எழுதியிருக்கார்.''

''மெட்ராஸ்ல எங்க தங்குவே?''

''ஹாஸ்டலதான். அவர் வீட்டுக்கிட்டேயே பார்த்திருக்காராம்.''

''எத்தினி நாளைக்கு ஹாஸ்டல்?''

''தெரியலை கார்த்திக்.''

''பயமே இல்லியா உனக்குள்ளே.''

''இருக்கு கார்த்தி. வெளியில காட்டிக்கல. யார் கிட்டயும் சொல்றதில்ல. சொல்லி என்ன புண்யம். வாணாம். போவாதேன்னு சொல்வாங்க என்னால போகாம இருக்க முடியாது.''

''உனக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்காதுன்னு நீலாக்கா நினைச்சுதாம். கிடைக்கக் கூடாதுன்னு வேண்டிக்கிச்சாம்.''

''அவ கிடக்கறா.''

''நீலாக்கா வேணாம்னுதான் ஓடறியா?''

''நிலாவுக்கும் நமக்கும் இப்ப என்ன உறவு? இப்ப அவ வேற வீட்டுப்பொண்ணு. இன்னொருத்தர் சொத்து. அவ கஷ்டம் அவ வரைக்கும். எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லை.''

'என்கிட்டயாவது ஒட்டுதல் இருக்கா?''

''ஒட்டுதல் என்னா...நீ பேசினா பேசுவேன். வேணாம் பேசாதேன்னா பேசமாட்டேன்.''

''விலகிப்போயே மத்தவங்களை வளைக்கலாம்னு பாக்கிறியாக்கா?''

''அப்படி இல்ல கார்த்தி, விலகிப் போகணுங்கற போதுதான் நீங்க துரத்திக்கிட்டு வரீங்க. வீட்ல இருக்கிறபோது என் நினைப்பு வந்ததேயில்லை, உங்க யாருக்கும்.''

''என்ன அர்த்தம் இதுக்கு?''

''எனக்கு முப்பது வயது ஆச்சுன்னு அர்த்தம்.''

''புரியுது அக்கா. சுந்தரமூர்த்தி ஜாதகம் பார்த்து பேசினாங்களாமே.''

''சுந்தரமூர்த்தி வேணாம்.''

''வேற யாரு வேணும் சொல்லு.''

''இனிமே நான் சொல்லி நீங்க வலை வீசித் தேடப் போறீங்க, அப்படியா?''

கார்த்தி மௌனமாய் இருந்தான். கைக்கட்டை விரலால் ரயில் வண்டியின் பெயிண்டை மெல்லக் கீறினான்.

''எனக்கு இப்பத்தானே வேலை கிடைச்சிருக்கு. நிலாக்கா கல்யாணக் கடனும் இப்பதான் அடைஞ்சிருக்கு.''

''ஆமா...நான் லோல் பட்ட மாதிரி நீயும் லோல்பட வேணாம். நிலாவுக்காவது வீட்ல நகை இருந்திச்சு. எனக்கு எல்லாமே இனிமேதான் செய்யணும். எத்தினின்னு கடன் வாங்குவ. எப்படி அதெல்லாம் அடைச்சி முடிப்பே?...''



''உனக்கேன் அந்தக் கவலை? இது என்னோட கடமையில்லையா?''

''வேணாம், எனக்கு இஷ்டமில்லை.''

''இது தப்பு அக்கா.''

''ஆமா.''

''தெரிஞ்சேதான் செய்யிறியா?'

''ஆமா.''

''என்ன தைரியம் உனக்கு.''

''தப்போ, சரியோ மனசுக்குப் பிடிச்சிருக்கு. மனசுக்குப் பிடிச்ச இடத்தில் சௌகர்யமா, நிம்மதியா இருக்கலாம்னு தோணுது.''

''அப்படி என்ன அந்த ஆள் உசத்தி?''

''உசத்தி ஒண்ணுமில்லை. நல்ல மனுசன். எல்லா விதமாகவும் யோசனை பண்ணத் தெரியுது. என்னை மாதிரியே திடம். திமிர். சரின்னு பட்டுது.''

''நடுவுல உட்டுட்டா?''

''தனியா இருப்பேன்.''

''கெட்டுப் போறதுங்கற முடிவோடயே போறியா?''

''நல்லா இருக்கணும்னுதான் போறேன் கார்த்தி. வேற மாதிரி அமைஞ்சிட்டா அதுவும் சரின்னு சும்மா இருந்துடுவேன்.''

''நான் அந்த ஆளை சும்மா விடமாட்டேன்.''

''ஓஸ் மாதிரி பேசாதே. என் காரியத்துக்கு யாரைப் போய் என்னான்னு கேப்பீங்க.''

''அந்த அம்மாவை நினைச்சா எனக்குக் கஷ்டமா இருக்கு.''

''அதோ அங்க பெஞ்ச் இருக்கு. போய் உக்காந்து தனியா கஷ்டப்படு.''

' என் இப்படித் திமிராப் பேசற?''

''பின்னே என்ன...? யாராவது நம்ம வீட்ல சரியா பேசறீங்களா? என் காலை உடைச்சி வீட்ல உக்கார வைக்க ஆள் கிடையாது. அந்த ஆளைப் பிடிச்சு உலுக்கினா?''

'நீ பொம்பளையே இல்லேக்கா.''

'இப்ப ப்ளேட் மாறிப் போச்சாக்கும். பத்மா ஆஸ்பத்திரி செலவுக்குக் கடன் கேட்டு அலைஞ்ச போதும், நீலா கல்யாணத்த முன்ன நின்னு முடிச்ச போதும் ஆம்பளை மாதிரி இந்தப் பொண்ணுன்னாங்க. அப்பப்ப உங்க சௌகர்யத்துக்கு ஆம்பளை வேஷம் போட்டுக்கணுமா.''

''சரி போய் லெட்டர் போடு.''

''கார்த்தி...''

''ம்ம்...''

' கோபமா என்மேலே.''

''இல்லேக்கா.''

''அப்படி ரொம்பக் கஷ்டமாயிடுச்சு என் நிலைமைன்னு எழுதினா என்ன செய்வே?''

''ஓடி வருவேன். என்ன வேணுமோ செய்வேன்.''

''உன் வீட்ல வச்சி சோறு போடுவியா?''

''போடுவேன்க்கா.''

''எனக்குக் குழந்தை பிறந்து அதோட வந்து நின்னா...?''

''செய்வேன் நிச்சயமா செய்வேன்.''

''தொரத்த மாட்டியே?''



''என்னால தொரத்த முடியாதுக்கா.''

''யம்மா நிம்மதியா மெட்ராஸ் போகலாம்.''

''இன்னும் பயமா இருக்கா?''

''ஆமா கார்த்தி. ஆனா பயத்தை யார்கிட்ட சொல்லணும் தெரியுமா? யார் பயத்திலேர்ந்து காப்பாத்துவாங்களோ அவங்ககிட்டதான் சொல்ல முடியும். மணியடிச்சிட்டான். நீ கிளம்பு.''

''வண்டி கிளம்பினப்பறம் போறேனே.''

''வேணாம். கொஞ்சம் தனியா விடு என்னை. நானா கிளம்பிப் போன மாதிரி இருக்கட்டும். நீ வீட்டுக்குப் போ.''

' நீ போய் லெட்டர்...''

''தொண்ணூறு ஜன்னல் விளிம்பில் இதையேதான் கேட்கும்.''

''நான் வரேன்க்கா.''

''ம்ம்... போய்ட்டுவா.''

''வரட்டுமா... போய் ''

கார்த்தி திரும்பி நடந்து ரயில் பெட்டிகள் ஓரம் நடக்கையில் வண்டி குலுங்கிற்று. முன்னால் இழுபட்டது நகர்ந்தது.

ஒவ்வொரு ஜன்னலாய் அவனைக் கடந்தது.

கார்த்தி நின்றான். நகரும் ஜன்னல்களைப் பார்த்தான். ரயில் நகர, நகர ஒவ்வொரு ஜன்னல்களிலும் ஒவ்வொரு சோகம். ஒவ்வொரு பிரிவு. ஒவ்வொரு கையசைப்பிலும் ஒவ்வொரு வேதனை. மொத்தமும் கார்த்தியின் வயிற்றில் பந்தாய் சுருண்டது.

' அடடே... அந்த ஆள் அட்ரஸ், ஹாஸ்டல் அட்ரஸ் கேட்டுக்கலையே. நம்ம வீட்ல அட்ரஸ் இருக்குமா. அப்பாக்கிட்ட கொடுத்திருக்குமா.''

## 2

''கண்ணன் ஒரு கைக் குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை''

சினிமா பாட்டு நெஞ்சைப் பிழிந்தது. விழி யோரத்தில் நீர் கசிந்தது. நிலா வானத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தாள். குழந்தையாய், வெகுளியாய் புருஷன் இருக்கிறது எவ்வளவு சந்தோஷம். புருஷனை மடியிலிட்டு, மார்பில் அணைத்துக்கொண்டு கேசம் வருடி இன்னிக்கு என்ன ரசம் சொல்லுங்க என்று சமையல் செய்த கையை முகரத் கொடுத்து, அது பிள்ளையாய் தவிக்கிறதைப் பார்ப்பது எத்தனை சுகம். சட்டென்று விவரம் தெரிந்து என்ன ரசம் என்று சொல்லிவிடக் கூடாது. கொஞ்சம் விழிக்க வேண்டும், தெரிந்தாலும் தெரியாதது மாதிரி விழிக்க வேண்டும். தெரிந்துகொண்டே தெரியாதது மாதிரி புருஷப்பிராணி நடிக்கிறது என்று கண்டுகொள்வதுகூட சுகம்தான். அப்படி இருப்பவனைத்தானே பிள்ளைக் குழந்தை என்று கொண்டாடலாம்.

புருஷனுக்கும் மனைவிக்கும் நடுவே பொய் சொல்லிக் கொள்ளலாம். சின்னச் சின்னதாய் ஏற்றலாம்— அரை மணி வீடு வர தாமதமானாலும் ''என்னாங்க இவ்வளவு லேட், தவிச்சுப் போயிட்டேன்'' என்று மனைவி சிணுங்கலாம். சைக்கிளில் எங்கோ லேசாய் சிராய்த்துக் கொண்டதை அவன் பெரிதுபடுத்திப் பேசலாம்.

''நான் பாட்டுக்கு ஓரமா வந்துக்கிட்டிருந்தேனா மெயின் காட்கிட்டே பளிச்சுன்னு லாரி திருப்பிச்சு, ப்ரேக் போட்டு லெஃப்ட்ல ஒடிச்சேன். அந்தப் பேமானியும் திரும்பறான். ஒரே எரிச்சல், வண்டியை விட்டு ஒரே ஜம்ப்''—ஏதாவது பெரிதாய்ச்சொல்லலாம்.



மனைவியும் வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருக்கலாம் ''வெள்ளில கை வாங்கி சமயபுரத்துக்குப் போடறேங்க விரல் காயம் சரியாயிடும்''—நிதானமாய் விரல் காயம் கழுவி பெரிய கட்டுப் போடலாம் ஒத்தடம் கொடுக்கலாம். வேண்டிக்கொண்டபடி புருஷன் குழந்தையோடு ஒரு டிரிப் சமயபுரம் போய்விட்டு வரலாம். தாயே என் புருஷனுக்கு, என் குடும்பத்துக்கு எந்த இடறுமின்றி காப்பாற்று என்று அம்மாவை வேண்டிக்கொள்ளலாம்.

என்ன தப்பு... என்ன இழுக்கு... இந்தப் பொய் என்ன பெரிய பாவம். பொய்யாய்தான் இருக்கட்டுமே... எவ்வளவு சந்தோஷம். என்ன ரசம் என்று தெரிந்து கொண்ட போதிலும் ஒரு அன்பின் காரணமாய் தெரியாதது மாதிரி புருஷன் விழிக்கிறது என்று கண்டு கொள்வது எத்தனை குதூகலம்.

''பொய்...பொய்... உடம்பெல்லாம் பொய் உனக்கு. நிலா... நீ உருப்படவே மாட்டே''—சபிதா எடுத்தெறிந்து விட்டுப் போயிற்று.

மெல்ல மெல்ல விலகி இன்று ஊரை விட்டே போய் விட்டது.

அது அப்படிப் போவதற்கு நீயும் ஒரு காரணம் என்று கார்த்தி சொல்கிறான். கூடப் பொறந்ததுகளுக்குள்ள ஒத்துமையில்ல. நான் யாரைப் பிடிச்சு என்னத்தை சரி செய்யிறது என்று அப்பா அலுத்துக் கொள்கிறார்.

சந்தோஷத்துக்குப் பொய் சொல்லக்கூடாதா சபிதா? இறுக இறுக வைத்துக் கொள்வதா சுகம். ஆனால் எத்தனை இறுக்கம், எத்தனை துணிவு! இந்தத் துணிவு தனக்கு வருமா. பளிச்சென்று ஒரு முடிவு எடுத்து வீட்டுக்குச் சொல்லி அழுகையின்றி நகர முடியுமா?

சபிதாவுக்கு புடவை, ரவிக்கை கொடுக்கும்போது அழுகை வந்து விட்டது.

''ச்ச... தோ பார்... அழுகை ஆர்ப்பாட்டம் பண்றதா இருந்தா புடவையை நீயே வச்சுக்க. ஒழுங்கா குடுக்கறதா இருந்தா கொடு. இல்ல நீயே உன் புடவையை எடுத்துக்கிட்டுப் போ.''

சுள்ளென்று முகம் தைக்கிற கோபம். இரக்கமின்றி எதிர்க்கும் சுபாவம்.

''எனக்கு முடியலடி. அழுவறேன்.''

''செத்தா போயிட்டேன். நடுவூட்ல வச்சு குளிப்பாட்டியா புடவை சாத்தறே?'

''சபிதா...?''

''சும்மா கிட நீலா. நீ அழுது, அம்மா அழுது, உன்னைப் பார்த்து ஆடே அழுவும். நான் எட்டி உதைச்சுக்கிட்டுப் போய்டுவேன். ஒழுங்கா புடவை கொடுக்கறதா இருந்தா கொடு. நீ புடவை கொடுக்கலேன்னு இப்ப யார் அழுதா?''

''சரி... அழுவலை... வாங்கிக்கடி.''

''நாலு வயசு பெரியவதானே? விழுந்து கும்பிட்டு வாங்கிக்கயேன்''— அம்மா பேசிற்று.

''முடியாது வெறும வாங்கிக்கறேன்.''

''அப்படி என்ன வெறுப்பு எம் பேர்ல?''

''எம்மேலதான் வெறுப்பு, கத்தறேன்.''

''என் கல்யாணத்துக்கு கடன் வாங்குன்னு நானா சொன்னேன்? ஒடி ஒடி செய்துட்டு என்னை எதுக்குக் கடிச்சுத் துப்பணும்?''

''உன்னைத்தான் கட்டிக் குடுத்தாச்சு இல்ல. அப்புறமும் இங்கேயே ஏன் சுத்தறே? நான் கிளம்பற போது புடவை துணியோட வர்ற. உன் வீடு, நின்னு இரேன்.''

''கல்யாணமாய்ட்டா அம்மா, அப்பாவை விட்றணுமா? உன்கிட்ட பாசம் இல்லாது போயிடுமா?''



''பாசம் பொங்கி என்ன செய்யப் போறீங்க. உடனே ஒரு பத்து ரூபாய்க்கு செலவு வப்பீங்க.''

''துட்டு கணக்குத்தானா எல்லாம். காசு கணக்குன்னா நூத்தி பத்து ரூபா புடவையோட வருவேனா. உனக்குப் பிடிக்கும்மேன்னு ஆர்கண்டிப் புடவை இன்ஸ்டால்மெண்டில்தான் வாங்கினேன்.''

''பாத்தியா... விலை சொல்லீக் காட்டிட்டே. முடியாதபோது ஏன் செய்யணும். பதறி பதறி விலை கொள்ளாத பொருளா வாங்கி நீ நிக்கறதை நீயே பாராட்டிக்கணுமா. குடுக்கறதை சும்மா வச்சுக் குடுத்துட்டுப் போக வேண்டியதுதானே. எதுக்கு இந்த டிராமா, எதுக்கு பாசம் பொங்கி வழியறாப்பல வேஷம் போடறே''—பபிதா சீறி வெடித்தாள்.

இன்னும் அந்தச் சீற்றத்தின் வேர் பிடிபடத்தான் இல்லை. சரி... அவள் பிரிவு வலித்தது என்பது பொய்யாய் இருக்கட்டுமே. புடவை பரிசளிப்பு வேஷமாகவே இருக்கட்டுமே. பின்னல் தழைய நமஸ்கரித்துப் புடவை வாங்கிக் கொண்டால் நிறைவு இருக்காதா— கொடுக்கிற மனசுக்கு. வாங்கிக் கொள்கிற தன்மைக்கு ஒரு நியாயம் இருக்காதா.

சற்று நெஞ்சு இளகி நிற்பதற்குப் பெயர் பொய்யா. ஒருவேளை நான் ரொம்பதான் இளகலோ. அதிகம் இளகி என்னை அழித்துக்கொண்டு விட்டேனோ. இறுக மரமாய், கம்பமாய், தூணாய் நிற்கிற சபிதாதான் ஜெயிப்பாளோ?

சபிதா போனபிறகு அம்மா மடியில் விழுந்து அழுத போது அம்மாவும் அழுதது. ''உசிரோட குடுத்துட்டேனேடி. உசிரோட பொண்ணைக்கொடுத்திட்டேனே...'' என்று அழுதது சபிதா போன துக்கம். தன்னை இப்படி ஏசிவிட்டுப் போய்விட்டாளே என்ற துக்கம். தனக்கு இந்தத் திறமை இல்லையே என்கிற துக்கம். எல்லாமாய் அழுகையாயிற்று.

வீட்டில் எந்தத் தடையுமின்றி சபிதா வெளியேறுகிறாள் தனக்குப் பிடித்த புருஷனை நோக்கிப் போகிறாள். சென்னை விளிம்பில் நின்று வரவேற்க அவன் காத்திருப்பான் நிச்சயம் என்கிற நினைவோடு போகிறாள்.

கோழைக்கும், உலோபிக்கும், அடிமை மனசுக்காரனுக்கும், பொய்யனுக்கும், புத்தி மாறாட்டம் உள்ளவனுக்கும் இந்த உலகில் எந்தச் சுகமும் இல்லை என்று ஒரு ஸ்லோகம் மனுநீதியில் உண்டு

துணிந்தவனுக்கு துக்கமில்லை என்று தமிழ் இதை ஒரே வரியில் சொல்லி விடுகிறது.

சபிதா, நான் கோழையில்லை உலோபியில்லை. நம்மில் பொய்யில்லை. புத்தி பிசகி காரியம் செய்யவில்லை. நமக்கு வெற்றி நிச்சயம். வேண்டியதை விரும்பு. வேண்டியதை வெறுப்பது வாழ்க்கையல்ல. தப்பித்தல். அயன்ராண்ட் சொல்கிறான்:

ஆசை உள்ளவனுக்கே வாழ்க்கை
நாம் வாழ ஆசைப்படுவோம்.

வா சபிதா நான் காத்திருக்கிறேன், முருங்கை மரத்தில் ஆணி இறங்கின மாதிரி பச்பச் என்று எழுதியிருக்கிறான்

ஒன்றா இரண்டா... இரண்டரை வருடத்தில் நூறு கடிதங்கள் எழுதியிருப்பான். அப்பா...என்ன எழுத்து... எவ்வளவு தெளிவு...என்ன திமிர்...என்ன வைராக்கியம். இவள் குணமே போல அவன். அவன் குணம் ஒட்டி இவள்.

லேசாய் ஒரு பொறாமை வரத்தான் செய்கிறது. சபிதா ஜெயித்து விட்டாளோ, சரியான இணையைச் சரியான நேரத்தில் தேர்ந்தெடுத்து விட்டாளோ?

ஒடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருந்து கொத்திப் பறந்து விட்டாளோ. கொக்கு யார். அவளா... அவனா...



ஜாதகம் பார்த்து, நேரம் பார்த்து, சாத்திரம் பார்த்து தனக்கு நடந்த கல்யாணத்தைவிட சபிதா திருமணம் உசத்திதானோ...

காத்திருக்கிறேன் வா என்று எழுதுபவனைத்தான் கைக்குழந்தையாய் மடியில் போட்டுக் கொள்ள முடியுமா. மாதவனே தாலேலோ... என்று பாட முடியுமா.

'காயத்ரீ மந்திரத்தை உச்சரிக்கும் பக்தனம்மா
கேட்கும் வரம் கிடைக்கும்வரை கண்ணுறக்கம்
மறந்ததம்மா'

—மனசு, முடிந்துபோன பாட்டை மறுபடி பாடிற்று.

பூணூல் போட்ட பையன். சோழிய வேளாளர். மாப்பிள்ளை. சண்முகம் பிள்ளைக்கு மருமகன்.

''அவர் கறி சாப்பிடுவாரா சபிதா?''

''சாப்பிடமாட்டார் ''

''அப்புறம்... நீ...''

''நானும் சாப்பிடறதில்லை, வேணாம்னு விட்டுட்டேன்.''

''நிசம்மாதானா?''

''நிசம்மா ''

''முட்டை கூட சாப்பிடமாட்டியா?''

''மாட்டேன்.''

''ஏன்... முட்டை மட்டுமாவது சாப்பிடலாமே...''

''பிடிக்கலை விட்டுட்டேன்.''

''கூடாதுன்னுட்டாரா?''

''இல்லையே நானேதான் விட்டுட்டேன். சாப்பிடறதில்லைன்னு சொன்னேன். சரி. சந்தோஷம்னு சொன்னார்.''

''கொசுவம் வச்சு புடவை கட்டிக்குவியா?''

''அவங்களே இப்ப அந்த மாதிரி கட்டறதில்லை. நான் எதுக்கு கட்டிக்கணும்?''

''பசு மாட்டை நம்பி ஆறு தாண்டற, சரியில்லை. சொல்லிட்டேன்.''

''பின்ன, முதலை முதுகுல ஏறியா ஆறு தாண்டு வாங்க. இதோ பாரு நிலா. நான் என்னை நம்பி நிக்கறவ. உன் உபதேசம் தேவையில்லை.''

சே... என்ன பிடிப்பு—எவ்வளவு அழுத்தம். இதுக்கு பெயர்தான் காதலா. காதலுக்கு இவ்வளவு வலிவா. சபிதாவுக்கு இவ்வளவு அதிர்ஷ்டமா... இது அதிர்ஷ்டம் தானா...

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் கிளம்பியிருக்கும். ஸ்ரீரங்கம் தாண்டியிருக்கும். லால்குடியில் நின்றிருக்கும்.

நகர்ந்து சென்னை நோக்கி சீராய்ப் போய்க் கொண்டிருக்கும். சபிதா தூங்கியிருப்பாளா. தூங்க முடியுமா. சபீதா நீ இப்போது என்ன செய்கிறாய். தூங்குகிறாயா... தூக்கம் வந்துவிட்டதா. தூக்கம் கண்ணைச் சுழற்ற உட்கார்ந்திருக்கிறாயா.

நிலா தூங்கிப் போனாள். கனவில் யார் யாரோ வந்தார்கள். கல்யாண வீட்டில் வரவேற்க நிற்கையில் ராகவன் வருகிறான். சபிதாவைக் கேட்கிறான். 'உள்ள வாங்க... உள்ள வாங்க' என்று அவனுக்கு நிலா நாற்காலி போடுகிறாள். பானம் தருகிறாள். வெளியே ஸ்பீக்கரில் கண்ணன் ஒரு கைக்குழந்தை பாடுகிறது. அவன் தம்ளரை தருகையில் தக்கென்று வயிற்றில் இடித்து விடுகிறான். விழிப்பு வந்துட்டது. குழந்தை புரண்டு வயிற்றில் கால் போட்டிருக்கிறான். மணி இப்ப என்ன இருக்கும். மெல்ல எழுந்து உள்ளே அறைக்கு



நகர்ந்து விளக்கு போட்டாள். மணி ஒன்று. மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் விழுப்புரம் போயிருக்குமா.

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் இரண்டு மணிக்கு விழுப்புரத்தில் நுழைந்தது. சபீதா கீழே இறங்கிக் கடந்து குழாயின் அருகே போய் முகம் கழுவிக் கொண்டாள். கொஞ்சம் கைகுவித்துக் குடித்தாள்.

ராகவன் இப்போ என்ன செய்து கொண்டிருப்பார்.

## 3

சண்முகம் பிள்ளை புரொஜெக்டரைத் திறந்து எரிந்துபோன கார்பன் குச்சியைக் கிடுக்கியால் அசைத்து இழுத்து ஓரமாய் போட்டார். புதிய கார்பன் குச்சியின் உறையைக் கிழித்து புரொஜெக்டரில் பொருத்தினார். புரொஜெக்டரை மூடி கொக்கிவிட்டு புரொக்ஜெக்டரின் ஸ்விட்சைப் போட பளிச்சென்று சீற்றத்துடன் கார்பன் பற்றியெரிய ஆரம்பித்தது. கருப்புக் கண்ணாடித் தகட்டின் உதவியால் கார்பன் ஜ்வாலையைக் கவனித்து சரியான அளவுக்கு கார்பனை நகர்த்தினார். பாஸிட்டிவும் நெகடிவும் சரியான கோணத்தில் அமர்ந்து ஒன்றையொன்று எதிர்நோக்கி சீற்றத்துடன் எரிந்து கொண்டிருந்தன. மெல்லிய வெள்ளை ஆவியும் வெப்பமும் இனம் தெரியாத ஒரு எரிபொருள் வாசனையும் சண்முகம் பிள்ளையைத் தாக்கின. அறை முழுக்கவும் ஒரு கதகதப்பு இருந்தது. முதல் புரொஜக்டர் மேல் மூடியைத் திறந்து ரீலைப் பார்த்தபோது இன்னும் ஐந்து நிமிஷம் ஓட்டம் என்று சுலபமாய் கணக்கிட முடிந்தது. அறையின் வெளிப்பக்கம் வந்து

நின்று கொண்டார். இப்போது முதுகில் வெப்பத்தையும் மார்பில் குளுமையான காற்றையும் உணர முடிந்தது

கார்த்திப் பையன் வருவானா... இல்லை... நேரே வீட்டுக்குப் போயிடுவானா... கார்த்தி வந்தால் நன்றாக இருக்கும். சற்று பேசிக்கொண்டிருக்கலாம். படம் முடிந்து பதினாறு ரீலையும் ரீவைண்ட் பண்ணியதும் கேபினைப் பூட்டிக்கொண்டு அவனோடயே வீட்டுக்குப் போயிடலாம். வண்டி இந்நேரம் கிளம்பியிருக்கும்.

''நீங்க ஸ்டேஷனுக்கெல்லாம் வரவேணாம். இந்தப் பெட்டில துணிய மட்டும் அடுக்கிக் கொடுங்க'' — காலையில் சபிதா சொல்லிற்று. பெண் பக்கத்தில் உட்கார்ந்து ஒவ்வொரு துணியாய் எடுத்துக் கொடுக்க அவள் உடுத்திக் கொள்ளும் ஒவ்வொரு துணியையும் நீவி நீவி அடுக்கிக் கொடுத்தபோது சுகமாக இருந்தது. இப்படிச் சின்ன சின்னதாய் தன் குழந்தைகளுக்கு உதவிசெய்வது பிடித்தமான விஷயம். பள்ளிக்கூடம் திறக்கிறபொழுது எல்லா குழந்தைகளின் நோட்டு புஸ்தகத்திற்கும் அட்டை போட்டுக் கொடுக்கிற சுகம். லேபிள் கத்தரித்து ஒட்டி கொட்டை கொட்டையாய் பெயர் எழுதிக் கொடுக்கிற சுகம்; பொங்கல் பண்டிகையின்போது மூன்று குழந்தைகளுக்கும் துணிகளை அடுக்கி, சந்தனக் குங்குமத்தோடு தாம்பாளத்தில் வைத்து, விடியும் பொழுது விழுந்து நமஸ்கரிக்க எடுத்துக் கொடுக்கிற சுகம்! இப்படிச் சின்ன விஷயத்தையும் பதவிசாய் துப்புரவாய் செய்வது அவருக்கு மிகவும் பிடிக்கும். இந்தத் துப்புரவும் சுத்தமும் சபிதாவுக்கு இயல்பாய் வந்திருக்கிறது. அந்தந்தப் பொருள் அந்தந்த இடத்தில் இருக்க வேண்டிய கண்டிப்பு சபிதாவுக்கு அதிகம்.

உடை நழுவாது நடமாடும். தூங்கும்போது கழுத்து வரை போர்த்திக் கிடக்கும். வயிறு படியப் புடைவை கட்டி நிதானமாய் ஆபீஸுக்குக் கிளம்பும்போது...



இது நம்ம வம்சமேயில்லை என்றுதான் மனசுக்குத் தோன்றும். பக்கத்து வீட்டு இரண்டு ஐயர் பெண்களும் சபிதாவிடம் தான் புடைவை கட்டிக்கொள்ள கற்றுக் கொண்டார்கள். சம்பத்து ஐயர் பையன் அவளிடம்தான் கணக்கு கற்றுக் கொண்டான். அதட்டலும் மிரட்டலுமாய் பாடம் சொல்லித் தருகையில் அவர் சபிதாவிடம் மெல்லச் சொன்னார். ''மக்குப் பையா... மக்குப் பையான்னே கூப்பிடறே அவனை...! பெரியவங்க காதிலே விழுந்தா தப்பா நினைச்சுக்குவாங்க... இதமாய்ப் பேசு சபிதா...''

''பதிமூணாம் வாய்ப்பாடு தெரியலை. இவனை எதுக்குப் படிக்க வைக்கிறது. பேசாம அமாவாசை மந்திரம் கத்துக்கிட்டு ஆத்தோரம் உக்காரட்டும். ஆனா அதுவும் மறந்து போச்சுன்னு அறை வாங்கிட்டு வருவான். தத்திப் புண்ணாக்கு...''

''வேணாம் கத்தாதே... சபிதா. அவங்க காதில விழப் போவுது...''

''ஏன் எனக்கென்ன பயம்...? அவங்கப்பா கிட்டேயே சொல்லுவேன் இதை...''

சம்பத்தின் அப்பா வேறு மாதிரியாய் இருந்தார். ''தலையிலேயே போடு நடப்பத்துல சாத்து... யாரும் சொல்லிக் கொடுத்தும் வரலைன்னா என்னா அர்த்தம்? கூசாம அடி. நான் கேட்கவே மாட்டேன்.''

ஆறு மணிக்கு குட்டும், காது திருகலும், விசும்பலுமாய் பாடம் நடக்கும். 'போய் லாண்டிரில என் துணியைப் போட்டுட்டு, புடவை ஃபால்ஸ் தைக்கக் கொடுத்ததை வாங்கிட்டு வா'' என்பாள்.

பையன் மந்திரத்துக்குகட்டுப்பட்டதாய் நடப்பான். சண்முகம் பிள்ளைக்கு, ஐயர் பையன் தன்வீட்டு அழுக்கு மூட்டையுடன் நடப்பது வேதனைப்படுத்தும். எலக்டிரிக்

பில் கட்டுவதற்கும், ரேஷன் கடைக்கும் துரத்துவாள்-வேண்டாமே என்று தோன்றும்.

''செய்யட்டும்பா... சூது வாது கத்துக்கட்டும். வீட்டோட பொம்பளைப் பிள்ளையோட பொம்பளைப் பிள்ளையா நிற்கிறான். செய்யட்டும்.''

அவனுக்கு எஸ் எஸ்.எல்.ஸி. பரிட்சையின்போது ஒரு வாரம் லீவு போட்டாள். பரிட்சை ஹால் வரை அவனோடு தினமும் பேசிக் கொண்டு போனாள். பரிட்சை முடிந்ததும் அவன் வீட்டோடு நீலா, அம்மா எல்லாரையும் கூட்டிக் கொண்டு சினிமாவுக்குப் போனாள்.

சம்பத்து பாஸ் பண்ணி 'தொண்ணூறு மார்க் கணக்கில்' என்று வாசற்படியைப் பிடித்து தழுதழுக்கச் சொல்கையில், தாய் தந்தையோடு வந்து புடவை, ரவிக்கைத்துண்டு வைத்து நமஸ்கரிக்கையில் கொஞ்சம் கூட அச்சமின்றி, பையன் நெற்றியில் முத்தமிட்டாள்.

அந்தப் பிள்ளை இன்னும் விசுவாசமாய் இருக்கிறான்—சபிதாவுக்குச் சகல உதவியும் அவன்தான் செய்கிறான்.

ராகவன் திருச்சி வரும்போதெல்லாம் விடிகாலை பஸ் ஸ்டாப்புக்கு அவன்தான் சபிதாவின் துணைக்கு ஓடுகிறான். சைக்கிளில் ஏற்றி பஸ் ஸ்டாப்பில் விட்டு, பஸ் ஏறியதும்தான் திரும்புகிறான்.

''சபிதா அந்தப் பையனைத்தான் கட்டிக்கப் போறாளா...?''—சண்முகம்பிள்ளையும் அவன் மனைவி சரஸ்வதியும் குறுக்கு விசாரணை செய்கையில் சம்பத் 'ஆமாம்' என்றான்.

' அவனை உனக்கு நல்லாத்தெரியுமா... பேசியிருக்கிறியா...?''

''தெரியும். பேசியிருக்கேன்.''

''இது தப்புன்னு சொல்லலையா?''



''இல்லை''

''ஏன்?''

''தப்பா இருந்தா சபிதா அக்கா செய்யாது.''

''ரெண்டாந்தாரமா கட்டிக்கிறது ..! அதுவும் மூத்த பெண்டாட்டி உயிரோடு இருக்கிறப்போ... வைப்பாட்டியாவா இவ இருக்கப் போறா...? இதுக்கு ஏன் இந்தத் தலையெழுத்து... இது ரொம்பத் தப்பு நான் சபிதாவைக் கண்டிக்கப் போறேன். நீ துணைக்குப் போயிட்டிருந்தே...உங்க வீட்ல சொல்லி உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவேன் ''—இவர் மனைவி சரஸ்வதி எச்சரித்தாள்.

''யார்கிட்ட வேணா சொல்லுங்க. சபிதா அக்கா கூப்பிட்டு இதைச் செய்யுன்னா நான் செய்யத்தான் செய்வேன்.''

''நீ சின்னப் பையன்... விவரம் தெரியாது பேசாத...''

பையன் இறுகின வாய் திறக்கவில்லை.

ஒருதடவை சரஸ்வதி அவன் வீட்டு வாசலில் போய் எகிறிவிட்டு வந்தாள்.

''அடித்து நொறுக்கினாலும் சபிதாவின் வார்த்தையைத் தட்ட மாட்டேன்'' என்று பதிலுக்கு கூச்சல் போட்ட பையனை எவராலும் எதிர்க்க முடியவில்லை.

''சம்பத்...எனக்காக நீ எதுக்கு அடிபடற. நான் தனியாப் போறேனே...''

இடது பக்க வீடும், வலது பக்க வீடுமாய் ஸ்டோர் குடும்பங்கள் அத்தனையும் சபிதாவுக்கு புத்தி சொல்லிற்று. வீட்டுக்காரர் முனிரத்தினமும் எதிர் வீட்டு வரதராசனும் பயமுறுத்தலாய் கூடப் பேசினார்கள்.

''அப்படி என்ன... அவன் கொட்டி வச்சிருக்கான். ஆம்பிளை தேடி அலையறியே .. நாயே... இன்னொரு குடித்தனம் நாசம் பண்றவளா நான் பெத்தது. வெளிய

போ. எனக்கு நீ பொண்ணே இல்லை. இந்த மாதிரிப் பொண்ணைப் பெத்ததுக்குப் பதிலா மலடின்னு பேர் வாங்கியிருக்கலாம்''—சரஸ்வதி கூச்சலிட்டாள்.

''தப்பா வளர்த்திட்டீங்க... பெரிசாயிட்டா விட்டோட மடக்கிப் போடறதுதான் நம்ம குடும்பத்துக்கு நல்லது. வேலை வெட்டின்னு காசு பார்க்க அனுப்பிச்சா... இப்படித்தான் ஆவும்''—முனிரத்தினம் நொந்துகொண்டு பேசினார்.

அன்று இரவு முழுவதும் சபிதா முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. தூங்கச் சொல்லி சண்முகம் பிள்ளை வற்புறுத்தியபோது அவர் மடியிலேயே சுருண்டு கொண்டு படுத்துவிட்டது.

''அந்த மனுஷன் ரொம்ப நல்ல மாதிரிப்பா... ஆசை இருக்குன்னு சும்மா லோலோன்னு சுத்தறது அசிங்கம். யாரையும் ஹிம்சிக்காம சமாதானப்படுத்தி கல்யாணத்தை முடிக்கணும்னு சொல்ற ஆம்பளை அபூர்வம். நான் நல்லா இருப்பேன். இன்னொரு விஷயமும் கூட பார்க்கணும். எனக்கு வேற இடத்துல கல்யாணம் பண்றதுன்னா என்னா செலவு ஆகும்...? பலதும் யோசனை பண்ணித்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். நீங்க வேணா அவர் அடுத்த மாசம் வர்றபோது பேசிப் பாருங்களேன்.''

சண்முகம் பிள்ளை மறுத்துவிட்டார். அதே சமயம் சபிதாவையும் தடுகக முடியாது என்று தெரிந்து கொண்டார்.

தீர்மானித்தபடியே அவர் பெண் இன்று சென்னை நோக்கிப் போகிறாள். தாலி கட்டிக்கொண்டு கௌரவமாய் குடித்தனம் பண்ணுமோ... இல்லை கட்டிக் கொள்ளாமல் தனியே அசிங்கப்படுமோ...தெரியவில்லை.

மூத்த மாப்பிள்ளையும் முனிரத்தினத்தையும் வரதராசனையும் சென்னைக்கு அனுப்பி அந்தப் பையனை மிரட்டிப் பார்த்ததும் இது வேறு வழியாய் முடியவில்லை.



''சபிதா இங்கு வரப் போவது நிச்சயம். உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டானாம்.

சபிதா பற்றி ஸ்டோருக்கு மொத்த விபரமும் தெரிந்து விட்டது. ஊருக்கும் மெல்ல மெல்ல இனி தெரிந்து போகும். வழியில் நிறுத்தி ஒவ்வொருவராய் விசாரிக்கப் பதில் சொல்லும்படியாகும், பதில் ஏதாவது சொல்லிக் கொள்ளலாம். சபிதா சரியாக வாழ்க்கையில் நிற்கவேண்டும். மனைவி சரஸ்வதி சபிப்பது பலிக்காமல் போக வேண்டும்.

என்ன திடம் என்ன திடம் நான் நல்லா இருப்பேன். கவலை வேண்டாம் என்று கையை அழுத்திப் பிடித்து சொல்லி விட்டுப் போன திடம்.

நல்லா இரு தாயே... நல்லா இரு—சண்முகம் பிள்ளை மனசுள் மெல்ல விசும்பினார். ரவிக்கையின்றி பவழமாலையும் சிகப்புப் புடவையுமாய் அறுவடை மேற்பார்வைக்குப் போகும் அம்மாவின் நினைவு வந்தது. சபிதா அம்மா மாதிரி. அவள் குணம், முகம் கூட சபிதாவுக்கு என் அம்மா போல.

படீரென்று ரீல் சுருண்டு தளர, புரொஜெக்டர் தானாய் அணைந்தது.

சண்முகம்பிள்ளை பரபரப்பாய் எழுந்து அடுத்த புரொஜெக்டரை முடுக்கினார்—ஜிவ்வென்று கார்பன் பற்றிக் கொள்ள ரீல் மோட்டாரை இயக்கினார். நாற்பது விநாடியில் திரைப்படம் தொடர்ந்தது.

வாழ்க்கைகூட இப்படித்தான் மாறுவது தெரியாமல் மாறவேண்டும். தாமதப்பட்டு தயங்கி மாறுகிறபோது ஊர் விஸில் அடித்து விடுகிறது.

சபிதா இந்நேரம் விழுப்புரம் போயிருக்குமோ?

## 4

''திருமகள் போல பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடுங் கங்கபாடியும்......''

''அது என்ன முணுமுணுன்னு, ஏதாவது ஸ்லோகமா?''

''ஸ்லோகமில்லை. மெய்க் கீர்த்தி. ராஜராஜன் மெய்க்கீர்த்தி.''

''கோயிலுக்கு வந்துட்டு ஏதாவது ப்ரேயர் சொல்றீங்களோன்னு நினைச்சேன். ப்ரேயர் எல்லாம் செய்வீங்க இல்லே...?''

''ம்ம்...செய்வேன். கோயிலுக்குப் போவேன். ஆனா இது கோவில் மாதிரியே படலை முப்பது நாப்பது தடவை இந்த இடத்துக்கு வந்து சுத்தி சுத்தி திரிஞ்சிருக்கிறேன். இது கோயில்ங்கற நினைப்பே வரலை. அரண்மனையா, யாரோ வாழ்ந்த வீடாதான் படுது.''

ரொம்ப- பிரும்மாண்டம். அதனால் உங்களுக்கு கோயில் மறைஞ்சு போச்சு. ஒரு அதிசயம் தட்டிப் போய் மனுஷனா இதைக் கட்டினான்னு தோணி உள்ளுக்குள்ளே இருக்கற கடவுள் உருவத்தை விட, செய்துட்டு செத்துப்போன ராஜராஜன் நினைப்பு வந்திருக்கு.''

''கரெக்ட். ஆனா...ராஜராஜன் ஒருத்தன் மட்டுமா கட்டினான். எத்தனை ஆட்கள்? எத்தனை பேர் திறமை? சபிதா, சட்டுன்னு இதை ஒன்பதாம் நூற்றாண்டா நினைச்சுக்க பார்க்கலாம். இந்த இடம் எப்படி இருக்கும்? என்னென்ன சப்தம் வரும், அந்தத் தமிழ் எப்படி ஒலிக்கும்? அப்போ மனுஷங்க உடை எப்



படி இருக்கும்?'' ராகவன் மதில் சுவரில் நின்றபடி மார்பில் கைகளை குறுக்கே கட்டி விமானத்தைப் பார்த்தான். காற்று சீறி தலையைக் கலைத்தது.

''நீங்களே கட்டினதா தோணுதா?''

''பெக்யுவர் பார்டன்.''

''ராஜராஜன்னு உங்களை நீங்களே கற்பனை பண்ணிக்கிறீங்களோ?''

''யெஸ் ராஜராஜன்னு இல்லை. இன்னும் கொஞ்சம் கீழ நிக்க ஆசைப்படறேன். வந்தியத்தேவனா இல்லை. இன்னும் கீழே, ஒரு படைத்தளபதியா இல்லை இன்னிக்குப் பிறந்த மாதிரியே அன்னிக்கும் ஒரு ஐயர் பையனா''

சபிதா வாய் விட்டுச் சிரித்தாள்.

''என்ன சிரிப்பு''

''பத்து நூற்றாண்டு முன்னாடி போனாக்கூட ஜாதிய விட மனசில்லை, இல்லையா. அப்பவும் ஐயர் பையனா பிறக்கணுமா?''

''ஜாதிங்கறது அவமானமா... தொழில் தானே சபிதா.''

''உங்களுக்கு அவமானம் இல்லாது இருக்கலாம்.''

''உனக்கு உண்டா?''

''சொல்லிக் காட்டறபோது ஒப்பிட்டுப் பார்க்கறபோது என் புத்தி, என் குணம், என் ஜாதியால் வர்ணிக்கப் படறபோது கோபம் வரத்தான் செய்யுது. இரண்டு வருஷம் முன்ன பிராமின்னா கொஞ்சம்கூடப்பிடிக்காது. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்கிட்டேன்.''

''எனக்குள்ளேயும் இருந்தது சபிதா. ஆனா அது சொல்லிக் கொடுக்கப்பட்ட விஷயம். சட்டுன்னு ஒரு நாள் தூக்கி எறிஞ்சிட்டேன்.''

''சரி... ராஜராஜன் காலத்துல ஐயரா பொறந்து என்ன பண்ணுறீங்க?''

''இந்த மாதிரிதான் ஏதாவது செய்துகிட்டு இருப்பேன்.''

''லாரிசேஸிங் கம்பெனில அக்கௌண்டென்டாவா?''

''நான் வெறும் அக்கௌண்டென்ட்தானா உனக்கு''

''அடடே கதை எழுதற ஆள் இல்லே... ஸாரி, மறந்து போச்சு. ம்... சொல்லுங்க.''

''குடுமி வச்சு. கடுக்கன் போட்டுக்கிட்டு கோயில்ல வேத பாராயணம் பண்ணி ஒரு நாளைக்கு மூணு குறுணிநெல் சம்பளம் வாங்கி எப்பவாவது தமிழ்ல கவிதை எழுதி ராஜராஜன்கிட்ட காமிச்சு...''

''தருமி மாதிரியா...''

''ஐயர்ல கவிதை எழுதறவன்னா தருமி பேர்தான் நினைவுக்கு வருதாக்கும். அடடா...என்ன தமிழறிவு...?''

''சுத்தமா இல்லை. சொல்லுங்க.''

''ராஜராஜன் கிட்ட காமிச்சு அந்த ஆள் அடடேன்னு சொல்லி பிரம்மராயர் கிட்டபோய் இருங்க... நம்பிக்கையான ஆள் வேணும்னு சொல்லலாம்.''

''பிரம்மராயர் யாரு?''

''உன் பாஷைல சொன்னா ஐயரு. அவருக்கு அநிருத்த பிரம்மராயர்னு பேரு. படைத்தளபதி. மந்திரி மாதிரி. நாம நிக்கற இந்த மதில், ஐயர் கட்டின மதில் சுவர்தான்...''

சபிதா அவனைக் கூர்மையாய்ப் பார்த்தாள்.

ராகவன் அவளைச் சிரிப்போடு பார்த்தான்.



''ஏதோ கேலிக்கு இறங்குகிற மாதிரி தெரியுது. வேணாம், நல்லதில்ல. சொல்லிட்டேன்.''

''சே...சே. கேலியில்லை சபிதா நீ சொன்னியே என், புத்தி என் குணம். என் ஜாதியால வர்ணிக்கப் படும்போது கோபம் வருதுன்னு.. அப்ப சட்டுன்னு ஒரு விஷயம் புரிபட்டுப் போச்சு.''

''என்ன அது?''

''புத்திசாலித்தனம் ஜாதியால பகுபட முடியாது ஆனா குணம் ஜாதியால பாதிக்கப்படலாம். உதாரணமா மறவர்களுக்கு கோபம் அதிகமாகவும் ஐயர் பையனுக்கு குறைவாகவும் இருக்கலாம். அப்படி இருக்கறதுதான் நியாயம் இல்லையா. இது தொழில் ரீதியான குணாம்சம். ஐயர் பையனுக்கு கோபம் வந்து என்ன புண்யம். அதனால்தான் ஜாக்கிரதை உணர்வு அதிகம் வெளிப்படுது. கோபத்துல வர விளைவு தாங்க முடியாதுன்னு தெரியும். சாபத்துக்கு முன்னாடியே மனசு கணக்குப் போடுது. உதாரணமா இவ்வளவு பெரிய கோவில் கட்டின ராஜாவுக்குத் தோணலை சுத்தி கோட்டை கட்டணும்னு. பிரம்மராயருக்குத் தோணிருக்கு. என்? ஐயர் புத்தி சாபத்து செய்யற குணம். அகழியைப் பாரு எவ்வளவு ஆழம்! எவ்வளவு அகலம்! இரண்டு சுத்து கோட்டை இங்கிலீஷ் 'வி' மாதிரி நடுநடுவே இடைவெளி. வெளிலேர்ந்து அம்பு போட முடியாது. உள்ள நின்னபடி நூத்துநாப்பது டிகிரி ஆங்கிள்ல அம்பு அடிக்கலாம். கோட்டை சுவருக்கு நேர் கீழ குதிரை லாயம் மாதிரி இடம் இது. கோயிலே இல்லை சபிதா. பக்கா கோட்டை. ராஜராஜனைப் பத்தி யாரோ கவலைப்பட்டிருக்காங்க; உன் ராஜாங்கம். கோவில் எல்லாத்தையும் உடைக்க ஆள் உண்டு. ஜாக்கிரதை வேணும்னு யோசனை செய்திருக்காங்க.''

''கோட்டை கட்டினது பிரம்மராயர். மந்திரி பிரம்மராயர். ஒருவேளை அவன் கவலைப்பட்டிருக்கலாம்.

ஐயர் பட்ட கவலை ஒரு அழகான கோட்டை. எனக்கென்னவோ பிரம்மராயர்கிட்ட வேலை செய்யணும்னு தான் தோணுது. எம் புத்திக்கு அவர்தான் சரி. என்ன பேச்சையே காணோம்?''

''இல்லை. குடுமியும் கடுக்கனுமா உங்களை கற்பனை பண்ணிப் பார்த்துக்கிட்டு இருக்கேன்.''

''நல்லாதான் இருக்கும். ராஜராஜன் காலத்தில் நீ எப்படி இருப்பே, சபிதா? ரவிக்கை கிடையாது அப்ப. பிரா கிடையாது. விவசாயக் குடும்பம். காதில பனை ஓலை. கோடாலி முடிச்சு. கால்ல தண்டை, தலைல சும்மாடு போட்டு சிறுகீரை, முளைக்கீரை, அகத்திக்கீரைன்னு கத்திக்கிட்டு வருவேயில்லையா?''

'வள்ளி இலைக்கறி விற்பாள் இவள் மருங்கல் இற்று விடுமென்று முலைகறி விப்பாரில்லையே முன்.''

''எவனாவது உன்னைப் பார்த்துட்டுப் பாட்டுப் பாடலாம். உன் சைஸ் என்னா முப்பத்திரண்டா?''

''சீசீய்...என்ன பேச்சு இது...கோயிலுக்கு வந்துட்டு. இந்த மாதிரிப் பேச்சைக் காணோமே, ஐயரு திருந்திட்டாரோன்னு பார்த்தேன். எங்கே போகும் புத்தி. பொறுக்கி ஐயரே...'' சபிதா கைப்பையை எடுத்து அவன் மீது வீசினாள்.

ராகவன் குனிந்து அடியை வாங்கிக் கொண்டான்.

''ஐயர் பொறுக்கியா இருக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டமா?''

''சே சே...இது செல்லமா சொன்ன வார்த்தை. எங்க பெரியம்மா பொண்ணு விஜி இப்படித்தான் தனக்கு ரொம்ப பிடிச்சவங்களைப் பத்திப் பேசும் போது சரியான பொறுக்கிடின்னு சிரிச்சுக்கிட்டே சொல்லுவா. அவகிட்டேயிருந்து எனக்கும் ஒட்டிக்கிச்சு.''

''இல்லை. நான் நிஜமாத்தான் சொல்றேன் ஐயர் பிம்ப் மாதிரிகூட இருந்திருக்கான். மாதவி கோவலனுக்கு ஓலை எழுதி சாந்து மேல முடியைச் சுத்தி சீல் வச்சு ஒரு ஐயர் மூலமா அனுப்பியிருக்குதே. ஐயருக்கு மாதவி வீட்ல என்ன வேலை. டான்ஸ் பார்க்க வரவனாக இருக்காது. நம்பிக்கையான ஆள். நடுவுல ஓலையைப் பிரிச்சுப் பார்க்காத ஆள். நடுவுல ஓலையைப் படிச்சுட்டு, அந்தக் கோவலன் முடியாதுன்னுட்டான். நீ கவலைப்படாதே. நானே வந்து போறேன்னு சொல்ல மாட்டான். இது குலம் கொடுத்த நம்பிக்கை.''



''எனக்கு கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை''

''யார் மேலே?''

''உங்க மேல. என் மேல.''

''ஏன் சபிதா.''

''என்னவோ நம்பிக்கை வரலை.''

''நம்பிக்கையில்லாமலா திருச்சிலேர்ந்து தஞ்சாவூர் வந்து கோயில் கோயிலா சுத்தறே. விதியேன்னா வரே.''

''விட முடியலை வரேன். வீட்டைப் பகைச்சுக்கிட்டு வரேன்.''

''உனக்கு நம்பிக்கை வர இன்னும் நான் என்ன செய்யணும் சபிதா?''

''இன்னி தேதிக்கு என்ன செய்ய முடியும். என் வேலைமாத்தி மெட்ராஸ் வந்து அப்ப பார்த்துக்கலாம். மெட்ராஸ் வந்து இறங்கறபோது நீ யாருன்னு கேட்காம இருந்தீங்கன்னா சரி.''

சட்டென்று சபிதாவுக்குள்ளே ஒரு அனல் புகை ஆடிற்று. மெட்ராஸ் எக்மோரில் பெட்டி படுக்கை சபிதா இறங்குகையில் ராகவன் தொலைவில் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறான்.

''ராகவன்—இங்கே இங்கே இருக்கேன்.''

ராகவன் வெல்ல விழித்தபடி நிற்கிறான். திரும்பி நண்பனைப் பார்த்து உதட்டைப் பிதுக்குகிறான் ''யெஸ் நான் ராகவன். நீங்க யாரு தெரியலையே.''

சபிதா கண்களை இன்னும் அழுத்தி கண்விழிகளை நிலத்தில் இறக்குகிறாள். வண்டி இருட்டைக் கிழித்துப் போய்க் கொண்டிருக்கிறது. தூக்கம் சுத்தமாய் போய் விட்டது. ராகவன் ஸ்டேஷனுக்கு வருவாரா. வர முடியுமா, வேறு ஏதாவது இடைஞ்சல் வருமா தெரிய வில்லை. இரண்டரை வருட காத்திருத்தல் தவிப்பை விட இந்த எட்டுமணி நேரத் தவிப்புதான் பெரிய அலைக்கழியலாய் இருக்கிறது.

ஏன் இந்த அசட்டுக் கற்பனை, மறுபடி தஞ்சாவூர் மதில் கோட்டை நினைவுக்குப் போய் விடலாம். அது தான் சரி.. அப்புறம் என்ன ஆயிற்று. ராகவன் மதில் மீதே தன்னை இழுத்து அணைத்துக் கொண்டான் ''மனசுக்கு கஷ்டமாயிருந்தா திரும்பி உடனே திருச்சி போயிடலாம், சபிதா.''

''பாதிக் கோட்டை கூடப்பார்க்கலையே ராகவன்''.

''ஒரு கல்வெட்டு கூடப் பார்க்கலை. இன்னும் உள்ள பெயிண்டிங்ஸ் பார்க்கணும். முடிஞ்சா இன்னிக் குப் பார்ப்போம். போகணும்னு தோணிட்டா புறப்படு வோம்.''

''பார்க்கலாம் ராகவன்.''

''நான் ஜாதி பத்திப் பேசினது கஷ்டமாயிடுச்சா?''

''ச்சே...அதெல்லாம் இல்லை.''

''திடீர்னு நம்பிக்கை பத்தி பேசிட்ட.''

''பேசியது திடீர்னுதான். ஆனா உள்ளுக்குள்ள ஒவ்வொரு வினாடியும் இந்த வேதனை உண்டு ராகவன். இது பொம்பளைப்புத்தி, நீங்க சொன்ன காபந்து குணம். நீங்க சரித்திரம் பேசினாலும் இதுதான் கடைசில நிக்கும். அது சரி. நம்ம நிலை என்னான்னு கேட்டுக்கத் தோணும். இன்செக்யூரிட்டிதான் காரணம் கோவிலைச் சுத்தி கோட்டை கட்டினது பத்திரமா நாமும் எப்போதும் இருக்கணும்கற ஆசை. ஏன்



கோவில் மாதிரி எப்பவேணா அழிக்கப்படலாம். எதனால வேணா பாதிக்கப் படலாம்கற பயம் அழகோ வலிவோ புத்தியோ பவித்திரமோ காப்பாத்து. கோட்டை கட்ட வேண்டியிருக்கு. நான் கோவிலா, வெறும் கல், நடுகல், என்னை எது காப்பாத்தும்.''

''ச்சு என்ன இது...?''

''நான் அலுத்துக்கிட்டு சொல்லலை. யோச்ய தையை சொல்றேன். நடு கல்லுக்கு யார் மதில்கட்டி அகழி தோண்டுவாங்க. தின்று தடவி, படிச்சுட்டு நகர்ந்து டுதான் முடியும்.''

''சபிதா...''

''அப்புறம் பேசுவோம். பெயிண்டிங்ஸைப் பார்க்க லாமா. ஏதாவது எழுத தோணிச்சா. நானூறு பொண் களுக்கு நிவந்தம் விட்டிருக்கானே. வருடத்துக்கு நூறு கலம் தளிச் சேரி வீடு இது—கதையா படலையா. தாசி பத்தி எழுதினா ஓஹோன்னு ஓடும் கதை. உங்களுக்கு இது எழுதச் சொல்லியே தரவேணாம்.''

''கோவம் இன்னும் இருந்தா முன்னை மாதிரியே திட்டிடு. அனாவசியமா கதை பத்திப் பேசாதே.''

''என்னது முன்னைமாதிரி.''

''பொறுக்கி ஐயரே...''

சபிதா நடு கூடத்தில் வாய்விட்டுச் சிரித்தாள்.

''பொறுக்கின்னு சொன்னாகூடத் தேவலாம். பிம்ப் வேஷம்வேணாமா?''

''ஏய்.. பிம்ப் வைச்சு சரித்திரக் கதை எழுதினா என்ன'' அன்று இரவு வீட்டுக்குப் போகவில்லை. ராகவ னுடன் லாட்ஜில் தங்கியாயிற்று பகல் பொழுதுகளில் பலநேரம் தங்கியிருந்தாலும் அதுவே முதல் முறையாய் இரவு தங்கலாயிற்று. ராகவன் இரவு பற்றிய

பிரக்ஞையோ இவள் இருப்பு பற்றி நினைவோ இன்றி சரித்திரக் கதையே பேசிக் கொண்டிருந்தான். இரவு வெகு நேரம் கழித்து சபிதா அவன் விரல் பற்றி முத்தமிட கதையினின்றும் விழித்துக் கொண்டான்.

## 5

''நான் பாட்டுக்கு புள்ளையா ஏதோ பேசிக்கிட்டு இருந்தேன். தட்டுன்னு உருட்டி விட்டுட்டேயே.''

''உருண்ட இடத்திலேர்ந்து தொடர்ந்து பேசறது.''

''உருண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு.''

''அப்படி என்ன தொண்டு?''

''இலக்கியத் தொண்டு.''

''இந்த அசட்டுக் கர்வத்தில் ஒண்ணும் குறைச்சலில்லை.''

''ஏன் இது அசட்டுக் கர்வம். இலக்கியத்தில் தொண்டு செய்ய முடியாதா?''

''அவங்க அவங்க ஈகோ பிச்சிக்கிட்டு கிளம்ப எழுதவர்றீங்க அப்புறம் தொண்டுன்னு பொய் என்னா.''

''ஈகோதான். இரண்டங்குலம் உசரமா நடக்கணும்னு ஆசைதான். எல்லா ஆரம்பமும் அப்படித்தான். காவி உடுத்திக்கறது கூட ஈகோ ஆரம்பம்தான். பின்னால மொள்ள மொள்ள என்ன செய்யறோம் ஏது செய்யறோம்னு கேள்வி கேட்டுகிட்டா ஈகோவை உதிர்த்துடலாம். குழந்தைகளுக்கு பருப்பு சாதம் ஊட்டற மாதிரி...மசிய பிசைஞ்சு அம்மா ஊட்டலாம்.''

''தாசி கதைகூட பருப்பு சோறா?...''

''நிச்சயமா—ஊட்டமான விஷயம்தான்.''

''ஊர் மொத்தமும் ஒக்காளிக்கப் போவுது. உங்க மேலேயே துப்பப் போவுது.''



''கலவை சரியா இருக்கணும். பருப்பு நல்லா வெந்திருக்கணும். ஊட்டறதிலே ஒரு பக்குவம் வேணும். குழந்தை வயிறு தெரிஞ்சு ஊட்டணும்.''

''யப்பா... பேச்சு வக்கணைல உங்கள மிஞ்ச முடியாது.'

''புத்தி... பேச்சு... செயல் எல்லாம் என்கிட்ட ஒண்ணுதான் சபிதா. நான் மறைச்சுக்கறதில்லை. தாசி கதைல தப்பு என்ன?''

''கள்ளுகுடி இல்லாத ஊரிலே இம்போர்ட்டட் விஸ்கி பத்தி விளம்பரம் கூடாதுங்க. பசங்க தவிச்சிருவில்ல.''

''தப்பு சபிதா பொண்ணை போதையா காட்டப் போறதில்லை. தாசிங்கறது பெண்ணின் கடைநிலையான விஷயம்னு வெச்சுக்குவோம். அப்படிப்பட்ட பெண்ணைக் கூட மரியாதையா நடத்துங்கடா. அதுதான் முறைன்னு சொல்றேன். காசுக்கு வரப்பட்டவளை கூட வாங்க வாங்கன்னு எழுந்து நின்னு வரவேற்கறது நல்லது உத்தமம்னு சொல்லப் போறேன்.''

''மரியாதை மறந்துபோய்டும். தாசி மடில வந்து உட்கார்ந்ததுதான் புத்தில நிக்கும்.''

''அது எழுதறவன் தப்பா ''

''இங்கே எல்லாமே தப்புங்கறபோது, எழுதறவன் கவனமாக இருக்கணுமில்லையா.''

''இந்தக் கத்திக்குத்து, எழுதறவனுக்கு மட்டும் தானா. சினிமாவுக்கோ, சிற்பம் பண்றவனுக்கோ, பெயிண்டருக்கோ இல்லையா? ராதையும் கிருஷ்ணரும் பொம்மை பண்றாங்க. தொப்புளுக்கு கீழே புடவை ரவிக்கை இல்லாத உடம்பு. யாரும் கீழே போட்டு உடைக்கக் காணோம். குளிக்கிற பொண்ணுன்னு பெயிண்டிங் பண்ணிடறான். கோவமே வரலை. சினிமா கற்பழிக்கறபோது மட்டும் புடவை. மத்த நேரமெல்லாம் புடுங்கின்டு நிக்கும். எழுதற ஆளு கலவின்னு சொல்லிட்டா விரலைக் கொண்டா நசுக்கிடறேன்னு கேட்கறீங்க ''

''சிற்பம் இன்னும் மத விஷயம். ரவிக்கை இருக்கோ இல்லையோ ராதை கடவுள்தான். பெயின்டிங் என்னா நல்லா செய்தாலும் மூவ்மெண்ட் கிடையாது. குளிக்கிற பொண்ணு சோம்பல் முறிக்காது. சோம்பல் முறிக்கிற சினிமா பொண்ணு அந்நியம், நடிப்பு பார்க்கறபொழுதே இன்ன பேர் கொண்ட நடிகை, அவ சம்பளம் இவ்வளவு. அந்தப் பொண்ணு நமக்குக் கிடைக்காதுன்னு விலகல் இருக்கும். எழுத்து அப்படியில்லை. சியாமளின்னு பேர் போட்டுட்டா எதிர் வீட்டு சியாமளி அப்படிப்பட்டவளான்னு தோணுது. நான்தான் ஹீரோ. என் மனசுதான் இந்தக் கதைன்னு ரொம்ப டக்குன்னு ஒட்டிக்கிறது.''

' நீ பேசாம என் விரலை நசுக்கிடேன் ''

''ச்சே நசுக்கறது கஷ்டமா. ஒன்னு நசுக்கினா இன்னொன்னு முளைக்கும். இன்னிக்கு முளைச்சதை ஒழுங்கா கத்திரிச்சுப் படர விடணுமில்லையா?''

''ஸோ எனக்கு நீ கிராப் பண்ணப் போறே.''

''அப்படித்தான் வச்சுக்கங்களேன்.''

''அப்படி என்னங்க எம்மேல அக்கறை?''

''உங்க மேல அக்கறையில்லங்க. ஊர் மேல இருக்கற அக்கறை. காடா மண்டி, பாம்பும் தேளுமா புறப்படப் போவுதேன்னு ஒரு கவனம்.''

''ஊர் பத்தி ரொம்பக் கவலைப்படறீங்க, இல்லியா? நல்ல சமூக சிந்தனை. என்னிலேர்ந்து இந்தக் கவனம்.''

''என்னிக்கு எனக்கு கல்யாணம் நடக்காதுன்னு தோணிச்சோ அன்னிலேர்ந்து இத்தனை வருஷம் வாழ்ந்த வீட்டை கசக்கிப் பிழிஞ்சாத்தான் நான் சுகப் படமுடியும்னு தோணிச்சோ அன்னிக்கு வந்த வேதனை. ராகவன் உங்களுக்கு வைப்பாட்டியா இருக்கணும்னு நான் தவம் கிடக்கலை. உங்க வீட்டு அம்மாவை வாரி வாய்ல போட்டுக்கணும்னு நான் நினைச்சதுகூட இல்லை. என்னால எங்கம்மாவைகூட கோச்சுக்க



முடியாதபோது அவங்களைக்கூட வெறுக்க முடியாத போது உங்க மனைவிக்கு ஹிம்சை பண்ண இஷ்டப் படுவேனா. சபிதாவைப் பார்க்க திருச்சி போறேன்னா போது மீனாட்சி அழுததா சொன்னீங்க. ரொம்ப சிரம மாயிடுச்சு சட்டுன்னு உங்களை நிறுத்திடலாம்னு பட்டுது நான் மெட்ராஸ் வரேன். வைப்பாட்டியா வேணாம். தாலி கல்யாணம் எதுவும் வேணாம். நான் பாட்டுக்கு ஹாஸ்டல்ல இருக்கேன். நீங்க உங்க வீட் லேயே இருங்க. நாம எங்கயாவது சாயந்தரமா உட் காருவோம். பேசுவோம். நிறைய படிப்போம். எழுது வோம். நிஜம்மா சத்தியத்துல இங்க என்ன பிரச்ச னைன்னு கவனமா யோசனை பண்ணுவோம். செடியா வளர்ந்தாச்சு. யாரோ பதியன் போட்டு யார் யாரோ தண்ணீர் ஊத்தி எழுத்துன்னு ஒண்ணு வந்தாச்சு. அத்தினி பேரும் உழைச்சு மரம் வளர்ப்போம்—நல்ல நந்தவனம்னு சொந்தக்காரனுக்கு பட்டயம் வந்தா தோட்டக்காரனுக்கு சந்தோஷமில்லையா.''

''ம்ம்ம்...பெரிய பேச்சுதான். அடிவயித்திலேர்ந்து பேசறதைக் கேட்கக் குளுமையா இருக்கு. ஆனா சித்த முன்ன என்னை உருட்டிவிட்டது ..?''

''ஏன் பயமாயிட்டுச்சாக்கும்...? தான் தண்ணீர் ஊத்தின மரத்துக்குக் கீழே தோட்டக்காரன் துண்டு விரிச்சு படுத்த மாதிரி...மரத்தை நிலத்தோட பேர்த் துக்கிட்டா போயிட முடியும். '

''என்ன பேசற நீ...?''

''மீனாட்சியை விட்டுட்டு ஒரு வரிகூட உங்களால் எழுத முடியாது. எனக்குத் தெரியும். குழந்தை பிரியதர் ஷினியை விட்டுட்டு உங்களால இருக்கவே முடியாது. அதுவும் எனக்குத் தெரியும். பிரிச்சுப் போட்டுட்டு சிரிக்கறவ இல்ல நான். அட்டா உருண்டு பொறள ஆம்பிளை கிடைச்சான்னு அழுத்திக்கில. பொண்ணு நினைச்சா கொடுக்கற நேரத்துல தாசியாயிடலாம். ஆனா அது மரியாதை இல்லாத இடம்.''

''ஆனா நான் படுத்துக்கிட்டது எனக்குள்ள ஒரு கமிட்மெண்டாப் படுது.''

''தேவையில்லை ஒருநாள் ஒரு க்ஷணம்கூட இது பத்திப் பேசி உங்களை சங்கடத்துல நிக்க வைக்க மாட்டேன். நானா விருப்பப்பட்டு சரின்ன விஷயம் இது. எத்தனை நாளைக்கு உடம்பைக் காமிச்சு ஏமாத்த முடியும். இதுக்குத் தேவடியாத்தனம் உசத்தி. காசு, பதிலுக்கு உடம்புன்னு பளிச்சுன்னு முடிஞ்சு போயிடும். ஆம்பளைய வளைக்க உடம்புதான் ஆதாரம்னு ஒருத்தி நினைக்க ஆரம்பிச்சா அத்தோட அவளும் அழிஞ்சா ஆம்பளையும் ஒழிஞ்சான். உள்ளங்கை சாபத்தை உச்சிலே தேச்சுக்கற காரியம் இது.''

''மெட்ராஸ் வரதுக்கு உன் வீட்டுல என்ன சமாதானம் சொல்லுவே.''

''ஏன் சமாதானம் சொல்லணும். முப்பது வயசு வரைக்கும் வளர்த்து விட்டாச்சு, கல்யாணம் கட்டி வைக்கல கட்டி வைக்க முடியலை. அந்தப் பொண்ணு வீட்ல இருந்தா என்ன...வெளியில இருந்தா என்ன— கடைசி வரைக்கும் அப்பாவுக்குப் பொண்ணா இருக்கவா பொறந்திருக்கேன். தேர் ஆர் பெட்டர் திங்ஸ் டூ.''

''உன் வீட்டுக்கு உன் சம்பாத்தியம்...உன் காசு வேணாமா?''

''கட்டி வச்சப் பிறகு காசா தரமுடியும். தான்னு தான் கேட்பாங்களா, கட்டிக் கொடுத்ததா நினைச்சுக் கட்டும்.'

''பாவம் சபிதா.''

''நான் பாவம் இல்லையா ராகவன்.''

''விரக்தியா பேசற.'

''நோ. அதை எப்பவோ தாண்டிட்டேன்.''

''சரி. இருபத்தி மூணு வயசுல கல்யாணம் முடிஞ்சிருந்தா?''



''இமை நகராம குடித்தனம் பண்ணுவேன். முத்து முத்தா மூணு குழந்தைங்க பெத்துக்குவேன். சத்தான ஆகாரத்தோட அறிவும் கொடுப்பேன்.''

''மூணு பெத்த பிறகு என்னைப் பார்த்திருந்தா?''

''அப்படியே துணி நழுவ ஓடியாந்துடுவேன்னு நினைச்சிங்களா ஐயாவுக்கு நினைப்பு பொழப்பைக் கெடுக்குது. வருவேன். வந்து பார்ப்பேன். கைக் குழந்தையைத் தூக்கிட்டு கரைச்ச பாலும் டர்க்கி டவலுமா மீட்டிங்குக்கு வருவேன். தேவர் ஹால் ஓர நாற்காலில உட்கார்ந்து உங்க பேச்சைக் கேட்டுட்டுப் போவேன். போறப்போ 'இது என் குழந்தை சிவசுன்னு பேர் வச்சிருக்கேன். உங்க கதை ஞாபகமா—நீங்க எப்படி இருக்கீங்க. நல்லா இருக்கீங்களா'ன்னு கேட்டுட்டுப் பஸ் பிடிச்சு ஓடிடுவேன்''

''அது மாதிரியே நடந்திருக்கலாம் சபிதா.''

''சோகமான கனா இல்லை. எனக்குள்ளேயும் லேசா தோணும் ராகவன். இந்த ஆளை அலைக்கழிச்சிடப் போறோமோ, போட்டு மிதிச்சிடப் போறோமோ, பயிர் வளர்கிறதா நினைச்சிட்டு பிடுங்கி எறிஞ்சிடப் போறோமோ, எந்தப் பாவியாவது தாலிகட்டி பிள்ளை கொடுத்து பெண்டாட்டியா வந்திருந்தா இன்னும் மரியாதையா இவனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கலாமேன்னு தோணும் ராகவன்''

''ஊத்தின வரைக்கும் போதும் தாயே. பயிர் நானே வளர்த்துக்கிறேன் எழுந்து போன்னு சொல்லிட்டா!''

''ஐயோ தெய்வமே, நான் விளையாட்டுக்குப் பேசினா வினையாக்கிட்டீங்களே—''

''ஏய் சபிதா ...என்ன இது ..''

''சும்மா ஒரு சினிமா டயலாக் பேசிப் பார்த்தேன். போன்னு சொல்லிட்டா அஞ்சு மணி முதல் பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போய் சொம்பு சொம்பா தலைக்கு ஊத்தி குளிச்சிட்டு தூங்கிப் போயிடுவேன். அத்தோட

சரி— பார்க்கிறது கொள்றது. கடிதாசி, போக்கு வரத்து எல்லாம்.''

''அப்பப்ப நினைச்சுக்க மாட்டியா?''

''ஜன்னல் கம்பியப் பிடிச்சிக்கிட்டு நிலா பார்க்கற போதெல்லாமா, அது வேற ஆள் ராகவன், நல்லநா உங்க கதை வந்தா அட நம்மாளுன்னு நினைச்சுக்க லாம்.''

''அப்ப—உன் கல்யாணம்... கார்த்தி... சரி அப்படி, வேணாம், உன் பாஷைப்படி ஒரு கம்பானியன்...''

''கிடைக்காத போயிடுமா என்ன?''

''சரி... அப்ப நீ போய் தலைக்குத் தண்ணீர் ஊத்திக்கலாம்.''

''அடிசக்கை...ஈகோ பொத்துக்கிச்சாக்கும் இலக் கியம் பேச பொம்பளை வந்தாக்கூட அவ உங்க காலடியே கதின்னு இருக்கணுமாக்கும். நம்மூர் ஆம்பிளைங்க அத்தனையும் சொத்தை.''

''அப்படி இல்லை. கதை படிச்சு கதை படிச்சே நீங்கள்ளாம் கெட்டுப் போயிட்டீங்களோன்னு தோணுது.''

''அதுல உங்களுக்கும் பங்கு உண்டு. ஆமா கெட் டுப் போறதுன்னா என்ன—சுயமா சிந்திக்கிறதா—தன் காலிலேயே நிற்கிறதா, தனக்கு தோதான ஆளை தானே விருப்பப்பட்டு தேடிக்கிறதா. இதுதானே கெட்டுப் போறது உங்க அகராதிப்படி. இதெல்லாம இல்லை. படுத்துக்கறது மட்டுந்தான் தப்புன்னு சொல்வீங்களா? நான் யோசனை செய்து பார்த்தேன் ராகவன். ஆம்பளையோட வெறும்ன சுத்தினாலே கெட்டுப் போயிட்டதா சொல்றாங்க. கெட்ட பேர் வரதென்னவோ நிச்சயம். அதுக்குப் பாதி கிணறு தாண்டுவானேன்னு குதிச்சிட்டேன். இல்லே இல்லே நான் உடம்பால கெட்டுப்போவலேன்னு கதறிஅழுவுற துக்குப் பதிலா ஆமா. என்ன சொல்ற கெட்டுப் போயாச்சுன்னு பதில் சொல்லலாமில்லையா.''



''விரக்தி மறுபடி விரக்தி. புகை மூட்டி வெம்பினது கனிஞ்சதாயிடாது சபிதா.''

''மரத்திலயே பழுக்கணும்னா மனுஷ நடமாட்ட மில்லாத இடமா இருக்கணும் ராகவன்.''

''யாராயிருந்தாலும் சரி. உன்னோட முடித்தனம் பண்றது சிரமம்தான்.''

''எனக்கும் தெரியுது—என்னைக் கட்டி எவனால மேய்க்க முடியும்னு நானும் உள்ளுக்குள்ளகேட்டுக்கறது உண்டு. ஒன்னு கட்டிக்கிறவன் படு அசமஞ்சமா இருக் கணும். இல்லேல படு புத்திசாலியா இருக்கணும். அசமஞ்சமா இருந்தா ஐயோ பாவம்ன்னு விட்டுடுவேன். புத்திசாலியானா மிஞ்ச முடியாம நின்னுடுவேன்.''

''நான் எப்படி?''

''இரண்டு முகமும் இருக்கு.''

''எப்ப அசமஞ்சம்?''

''பேச்சுக்கு நடுவே விரலைப் பிடிச்சு இழுத்தநும் தொப்புன்னு பேச்சை விட்டு மேல சாஞ்சீங்களே, அசமஞ்சம்தான். கொஞ்சம் நிதானிச்சிருக்கக்கூடாதா. அப்புறம் மெல்ல கண்ணைத் தொறந்து உருட்டி விட்டுட்டியேன்னு கோவப்படாம கேட்டது புத்திசாலித் தனம். உள்ள நிலைமையை கோவமில்லாம புரிஞ்சுக் கறது கெட்டிக்காரத்தனம்தானே.''

''அம்பிகே மீனாட்சி. என்னைக் காப்பாத்துத் தாயே''—ராகவன் படுத்திருந்தபடியே கைகூப்பினான்.

''ஐயரே, அப்பப்ப பிடாரியையும் கும்பிட்டுக்கறது மீனாட்சி மீனாட்சின்னுதான் கூவணுமா.''

''பலியில்ல கேட்குது பிடாரி.''

''யாரை?''

''என்னையே பலி போடுன்னுதே.''

''ராகவன்!''—சபிதா சட்டென்று விலகி அவனை உற்றுப் பார்த்தாள்.

## 6

ராகவன் அசையாது படுத்திருந்தான்.

''இவ்வளவு பெரிய சுயபரிதாபத்தோட நான் உங்களுக்கு அவசியம்தானா?''

''எனக்கு சுயபரிதாபம்னு யார் சொன்னது?''

''வாழ்க்கை மொத்தமும் பலிபீடத்தில் வச்சுட்டதா சொல்றது ரொம்ப கம்பீரம்னு நினைப்பா?''

''உன்னை நீ பிடாரின்னு சொல்லிக்கறபோது நான் பலி ஆடான்னு கேட்கப்படாதா?''

''அபத்தமா பேசாதீங்க ராகவன். இப்பவும் ஒண்ணும் குடிமுழுகிடலை வேணாம்னு சொல்லுங்க. சந்தடி பண்ணாத போயிடுவேன். பயமோ குற்ற உணர்ச்சியோ உங்களுக்கு வரவே வேணாம். இதுக்கெல்லாம் எந்த அவஸ்யமுமில்லாம அமைதியாயிருந்துடுவேன். வேணாம்னு மனசுக்குப்பட்டா பளிச்சுன்னு சொல்லிடுங்க சுமைன்னு தோணித்துன்னா இறக்கி வச்சிடுங்க சொல்லுங்க. நகர்ந்துடட்டுமா?''

''ம்... அதைப்பத்திதான் நானும் யோசனை பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''எதைப்பத்தி?''

''சின்ன சின்ன அபிப்பிராய பேதத்துக்கெல்லாம் விட்டுடுங்க விட்டுடுங்கன்னு சொல்றதைப் பார்த்தா உனக்கு இதில் இஷ்டமில்லையோன்னு தோணுது. இது ஒண்ணும் ஒப்பேறாது. நாலு வருஷம் காத்திருந்தாலும் நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கறதுதான் ஒசத்தி. ஊர் கூட்டி தாலி கட்டிக்கறதுதான் உத்தமம்னு உனக்கு பட்டுடுச்சோன்னு தோணுது. உங்களை

30/97
665070



விட்டா வேற ஆம்பிளையே இல்லையான்னு அலட்சியமாப் பேசறதுக்கும் இதுதான் காரணமாய் படுது. என் காலடியே கதியாக்கிடக்கணும்னு நான் சொல்லலை சபிதா. வேற இடத்தில் நல்லபடியா கல்யாணம் ஆகும்னா உன்னைத் தரதரன்னு நான் பிடிச்சு இழுத்துண்டு போறதில என்ன புண்ணியம். இன்னொரு நல்ல சான்ஸ் கிடைக்கும் நான் ஏன் குறுக்க நிக்கணும்? உனக்கு வேணாம்னு தோணினா நீ தாராளமா போகலாம். அந்தப் பொண்ணா சபிதாவா எனக்கு நல்லா தெரியுமே. நான் மறந்து போய்கூட எவர்கிட்டயும் பேச மாட்டேன். பிரியறது. வருத்தமாதான் இருக்கும். என்னால பொறுத்துக்க முடியும். நாலைஞ்சு மாசம் சுத்தி சுத்தி நெஞ்சை அறுக்கும். வாயைத் தொறக்காத வேதனையைத் தாங்கிக்க முடியும். சுந்தரமூர்த்தி ஜாதகம் ஒத்துப் போயிருக்குன்னா சரின்னு சொல்லிடேன்.''

''ஏன், வந்து நின்னு நடத்திக் கொடுத்திட்டு வெத்திலைப் பாக்குப் பை வாங்கிட்டு கிளம்பிடலாம்னு பார்க்கறீங்களா. ஐயோ பாவம் சுந்தரமூர்த்தி! ஊர்ல வேற பெண்ணா கிடைக்காத போயிடும். அவனுக்கு. போலியா பேசாதீங்கன்னு எத்தினி தடவை சொல்றது. நான் யாரையாவது நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கறதுதான் உங்களுக்கு நிம்மதிங்கறது சினிமாத்தனமான கற்பனை கல்யாணப்பரிசு கதை. வேணாம்னு விட்ட பிறகு ஒருத்தர் மேல ஒருத்தருக்கு அக்கறை இருக்கறதா காட்டிக்கறது அசிங்கமா நிக்கும் உங்களை விட்டா வேற ஆம்பிளையே இல்லியாங்கறது திமிரில்லை ராகவன். இந்த ஆளை நம்பித்தான் இந்த உலகத்தில் ஒரு உறவும் கிடையாது. தனியா சுயமா நிக்க எல்லா உயிர்க்குமே தெரிஞ்சிருக்கு பெரிய பெரிய இழப்பெல்லாம் ஈடு கொடுத்திட்டு ஜனங்கள் வெளியே வந்திருக்காங்க. நாம் இல்லாது போனா சகலமும் சரிஞ்சுப் போயிடும்கற நினைப்புதான் சட்டுன்னு

அனுப்பு கொடுத்துடும். பிரிவு வேதனைன்னு சொன்னீங்க. நிச்சயமா அப்படி இல்லைன்னுதான் தோணுது. வெறும் புலம்பல்னுதான் படுது. வேதனையோட இருக்கறது பிடிச்சுப் போய் பெரிசு பண்ணிக்கறோம். கடிச்சு குதறினாத்தான் வேதனை கூட இருந்தே மிதிச்சிக்கிட்டிருக்கறதுதான் வலி. சுதந்திரமா இருக்கிறது என்னான்னு தெரிஞ்சிட்டா எது பிரிஞ்சாலும் வேதனை தராது.''

''புஸ்தகம் படிச்சுட்டுப் பேசற சபிதா.''

''இல்லை ராகவன். நான் எது சொன்னாலும் புஸ்தகம்னு சொல்றீங்க. இது எனக்காத் தோணின விஷயம் இது மாதிரி புஸ்தகமெல்லாம் நான் படிச்சதே இல்லை.''

''கொஞ்சம் பிரிஞ்சுப் பார்ப்போமா?''

''கொஞ்சம் பிரியறதுன்னா?''

''நாளை காலைல வீட்டுக்குப்போய் தலைக்குத் தண்ணீர் ஊத்திக்க. சாயந்திரம் ஒரு நாலு மணிக்கு ஆபீஸலேர்ந்து வர்றபோது நான் லாட்ஜுல இருக்கேனான்னு வந்து பார். அந்த பன்னிரண்டு மணி நேரப் பிரிவு. நான் இந்த ஊர்ல இருக்கும் போதே நீ என்னைப் பார்க்காத பிரிவு எப்படி இருக்கும்னு அனுபவி.''

''என்கிட்ட சொல்லிட்டுத்தானே போவீங்க.''

''சொல்லிட்டுப் போகலாம். சொல்லாமலும் போகலாம்.''

''சொல்லாம ஏன் போகணும். சண்டை போட்ட மாதிரி.''

''அஞ்சு மணிக்குக் கிளம்பும்போது சொல்லிக்கயேன்.''

''அப்போ போன்னு தீர்மானமா சொல்றீங்க.''

''தீர்மானமா இப்ப சொல்லலை. ஒரு தீர்மானத்துக்கு வரணும்னு முயற்சி பண்றேன். நாளைக்குள்ள ஒரு தீர்மானம் பண்ணிடுவேன்.''



''சரி... அப்ப நான் போய்ட்டு வரட்டுமா ''

''மணி மூணுதானே ஆவுது. இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கே, பஸ்ஸுக்கு.''

''நான் இப்பவே சொல்லிக்கறேன்.''—சபிதா நெருங்கி அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள் அவன் மார்பை விரல்களால் வருடினாள். காதோரம் முத்தமிட்டாள். ''குழந்தைக்கு ஃபிராக் தைக்கக் குடுத்திருக்கேன். சாயந்திரமா எடுத்திட்டு வரேன் வாங்கிட்டுப் போயிடுங்க.''

''ம்...''

''மீனாட்சியைக் கேட்டதாகச் சொல்லுங்க.''

''ம்...''

''அந்தச் சரித்திர நாவலை விடாத எழுதி முடிச்சிடுங்க. தஞ்சாவூர் லைப்ரரி ரெஃபரன்ஸ் வேணும்னா கோவப்படாம கேளுங்க. போய் படிச்சு காப்பி பண்ணி அனுப்பறேன். சிவசு கதை புஸ்தகமா வந்தா ஒரு காப்பி அனுப்புங்க. இதுவரைக்கும் நேரம் போனதே தெரியலை, இந்த இரண்டு மணி நேரம் நகர்றதுதான் சாகடிக்குடும். கிட்ட வந்து கட்டிக்கங்களேன். வேணாம்னு சொல்லி விட்டதால் மரக்கட்டையா கிடக்கணுமா ''

''இது கூட வேணாம்னு தோணுது.''

''நிச்சயமாதானா?''

''நிச்சயமாதான்!''

''அப்ப சரி.''—சபிதா எழுந்து புடவையைச் சீர் செய்து கொண்டாள். கட்டிலிலிருந்து விலகி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். பழைய வாரப் பத்திரிகையைப் பிரித்துப் படிக்கத் துவங்கினாள்.

ராகவன் போர்வையை இழுத்துப் போர்த்தி ஒருக்களித்துப் படுத்துக்கொண்டான். போர்வைக்குள்ளிருந்து தலையைத்தூக்கி ''போறபோது எழுப்பிட்டுப் போ. நான் கதவைத் தாள் போட்டுக்கணும்.''

சபிதா பதில் பேசாது இருந்தாள்.

ராகவன் அயர்ந்து தூங்கிப் போனான்.

முரட்டுத்தனம், பிடிவாதம், சரக்கென்று பற்றிக் கொள்ளும் போட்டி மனப்பான்மை, ரத்தம் வரும் அளவுக்குக் கிள்ளினாலும் வீம்போடு வாய் இறுக வலியைப் பொறுத்துக்கொண்டிருக்கும் பிள்ளை குணம். நீ பத்தடி தாண்டுவியா, நான் பதினைஞ்சடி தாண்டுவேன் என்று பீற்றிக் கொள்கிற பள்ளிப் பிள்ளையின் புத்தி. உடம்பு சக்தி அனைத்தையும் தேக்கி அந்தத் தாண்டலுக்கு விழி பிதுங்க பேயாய் ஓடிவரும் செயல ராகவன் இரண்டுங் கெட்டான்தான். ஸ்நேகத்தில் கனிழிகிறானோ இல்லையோ சீண்டலில் கனிழ்ந்து விடுகிறான். பெண்ணைக் காட்டிலும் நான் வலிவு மிக்கவன் என்று திருப்பி திருப்பிச்சொல்ல ஆண் வெட்கப்பட்டதேயில்லை. இந்த வலிவு எதைச் சாதிக்கப் போகிறது. இவர்களுக்குத் தெரியப் போவதில்லை. பதிலுக்குப் பதில்தான் என்று யோசிக்க முடியுமா தவிர தன் இயல்பு எது என்று கேட்டு கொள்வதில்லை பிரிவு என்பது உனக்கு நோவு இல்லையா... எனக்கும் இல்லை. இதைச் சொல்லிவிட்டு இப்படி ஒருக்களித்துப் படுத்துக் கொள்ள வேண்டுமா? போகும்போது எழுப்பி விட்டுப் போஎன்றுவிட்டேேற்றியாய் சொல்லிவிட்டால் வலிவுள்ளவனா... விடுவாயா? அஞ்சு மணிக்குத்தானே போக போகிறாய். அதுவரைப் பேசிக்கொண்டிருக்கலாமேன்னு உங்களுக்கு ஏன் சொல்லத் தோன்றவில்லை ராகவன். 'அந்தச் சரித்திரக் கதை முழுக்கச் சொல்றேன். சரியா இருக்கா பார்...' மேற்கொண்டு ஏன் பேசத் தோன்றவில்லை.

அகங்காரி... ராகவன் தொடையை இறுக்கிக் கொண்டு போர்வையைக் கழுத்துவரை இழுத்துக் கொண்டான். புஸ்தகமே படிச்சதில்லையாம் அத்தனையும் இவளாக நினைத்துக்கொண்டு சொல்கிறாளாம். சற்று யோசிக்கத் தெரிந்த சௌகர்யம் போதும். சடைமுடியும், சூலமும் நெற்றிக் கண்ணும், சகல ஞானமும் கைகூடியதான பிரமை வந்துவிடும். அறிந்துகொள்ள வேண்டியவை அநேகம் இருக்கின்றன என்பதே மறந்துவிடும். உடனே டீச்சரம்மா வேஷம் போட்டுவிட வேண்டும். இது வாத்திச்சிபுத்திதான். மொத்த உலகத்தையும் எலிமென்ட்ரி ஸ்கூலாய் நடத்துகிற காரியம். கைகட்டு, வாய் பொத்து, எழுந்திரு, உட்காரு, அன்புள்ள என்று எழுதிவிட்டால் கீழ்படிதலுள்ள என்று நினைக்கிறார்கள். சம்பாதிக்கிற சௌகர்யத்தில் தலைகால் புரியாமல் ஆடுகிறார்கள். பொருளாதார விடுதலையை உணர்ச்சி விடுதலையாய் நினைக்கிறார்கள், பிரிவு நோகாதாம் சுதந்திரம் என்பது தனித்துப் போவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்டி வாழாது போனால் விடுதலை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், எப்படி தனித்துப் போக முடியும். அண்டி வாழாது எவர் இருக்க முடியும். நீ இருந்தாலும் சரி...இல்லாது போனாலும் சரி_இதைச் சொல்ல ஒருவருக்கு எவ்வளவு பக்குவம் வேண்டும். சபிதாவுக்குப் பயம் வந்துவிட்டது. வீட்டை விட்டுப் பிரிய வேண்டும் என்கிற கவலை வந்துவிட்டது. அவட்சியம் கம்பீரமாகாது சபிதா. கருணைதான் கம்பீரம்.

வெளிச்சம் வந்ததும் சபிதா அவன் தலையை வருடி தூக்கத்தைக் கலைத்தாள்.

''நான் கிளம்பறேன் சாயந்திரமா பார்க்கலாமா?'' அவன் புரண்டு படுத்துக் கொண்டான்.

''போய்ட்டு வான்னாவது சொல்லுங்களேன் பேசாத கோபத்துல யாருக்குப் புண்ணியம்.''

''சரி கிளம்பு''—மல்லாந்து கிடந்தபடியே ராகவன் பதில் சொன்னான்.

சபிதா போன பிறகு வெகுநேரம் வரை விட்டத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தான்.

வெயில் சுள்ளென்று சீறத் துவங்கிய நேரம் நிதானமாய்க் குளித்தான். பெட்டியிலிருந்து குறிப்புகளை எடுத்து சரித்திரக் கதைக்கான குறிப்புகள் எடுக்கத் துவங்கினான். மணி பதினொன்று. சபிதா ஆபீஸில் இருக்கும்.

மணி ஒன்று முப்பது.

சபிதா சாப்பிட்டுக் கொண்டிருக்கும்.

மணி மூன்று பதினைந்து.

சபிதா காப்பிக்குப் போயிருக்கும்.

மணி நாலு பத்து.

சபிதா பர்மிஷன் போட்டுவிட்டுக் கிளம்பியிருக்கும்.

சபிதா வருமா, வந்து வாசற் கதவைத் தட்டுமா?

திறந்ததும் ஹலோ சொல்லுமா. உள்ளே நுழைந்ததும் இறுக்கிக் கொள்ளுமா. பிரிவு வேதனை சபிதா, புலம்புகிற வேதனையில்லை. உள்ளே கனம் அழுந்தி ஆளை நகர ஒட்டாமல் செய்கிற வேதனை. நீ இல்லாமல் என்னால் இருக்க முடியும். எந்த உறவும் தனித்துப் போக முடியும். தனித்துப் போகவும் அறுத்துக்கொள்ளவும் தைரியமிருந்தால் போதும் ஆனால் தனித்துப் போவதில் லாபமென்ன? உறவுகளை வளர்ப்பது தானே சிரமம், வெட்டி எறிய பலம்தானே வேண்டும். ஊட்டி வளர்க்க பொறுமையல்லவா வேண்டும். தைரியத்தைக் காட்டிலும் பொறுமை பெரிது சபிதா. உனக்குப் பொறுமையில்லை. வெறுமை இந்த உறவு நீண்டு கொண்டு போவது உனக்குப் பிடிக்கவில்லை. இடதோ வலதோ இது முடிய வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது என் எண்ணமும் அவ்விதமே போதும் என்று சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டும். அல்லது போக முடியாது என்று இறுக்கிக் கொள்ள வேண்டும். இதில் எது உத்தமம்? இப்போது தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த க்ஷணம் முடிவாக வேண்டும் நாம் இருவரும் இம்சைப்படுவது இந்த தேர்ந்தெடுப்புப் பற்றிதான். இந்தக் குழப்பம்தான் ஆத்திரமாகவும் குத்தல் பேச்சாகவும் வெளிவருகின்றன. ஒத்திப் போடுவதில் நம்பிக்கையில்லாதவர்கள் நாம். தள்ளிப் போடுவது தப்பித்துப் போதலின் வழி என்று நமக்குப் புரிந்திருக்கிறது. இந்த ஒரு தெளிவு இன்னொரு தெளிவை நோக்கி வருகிறது. தப்பித்துப்போதலில் விருப்பமில்லாதபோது, தள்ளிப் போடுதலில் நம்பிக்கையில்லாதபோது, ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று ஆதங்கப்படுகிறபோது அந்த முடிவிலிருந்து தொடங்கும் பயணம் பற்றிக் கவலை வந்துவிடுகிறது. அந்தக் கவலைதான் என்னை பலிகடா என்று பேசவைத்து விட்டது. சபிதா வருவாளா? ராகவன் அறை ஜன்னல் வழியே வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தான்: ஹோட்டலுக்கு வெளியே ஒரு பெரிய தோட்டம். தோட்டத்தின் இடமும் வலமுமாய் நீண்ட சாலை. சாலையின் இடது முனையில் சபிதா தோள் பை அசைய நடந்து வருவது தெரிந்தது. சபிதா .. சபிதா வருகிறாள். ராகவன் பரபரப்புடன் சட்டையை மாட்டிக் கொண்டான். இன்னும் ஒரு சீண்டல் சபிதாவைச் செய்தால் என்ன... கதவைப் பூட்டிக் கொண்டு ரிஸப்ஷனை நோக்கி ஓடினான். ரிஸப்ஷனில் உட்கார்ந்திருந்தவனை தனியே அழைத்தான்.



''என்னைத் தேடிட்டு ஒரு லேடி வருவாங்க. காலையிலேயே ஊருக்குப் போய்ட்டதா சொல்லுங்க. ஏதாவது மெஸேஜ் இருக்கான்னு கேப்பாங்க. ஒண்ணுமில்லேன்னு சொல்லிடுங்க.''

' ஏன் சார்?''

' சும்மா ஒரு விளையாட்டுக்குத்தான். சிரிச்சிடாதீங்க. சீரியஸாகவே சொல்லுங்க''—ராகவன் ரிஸப்ஷன் ஹாலின் மூலையில் உட்கார்ந்து செய்தித்தாளால் முகத்தை மறைத்துக் கொண்டான். சபிதா உள்ளே நுழைந்தாள். ரிஸப்ஷனைத் தாண்டி மாடிக்குப்போகையில் சட்டென்று நின்றாள்.

''ராகவன் இருக்கிறாரா? '

குனிந்து சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தவன் முகம் நிமிராமல் நிதானித்து மெல்ல தலையைத் தூக்கி ''காலையிலேயே காலி செய்துவிட்டாரே... உங்களிடம் சொல்லவில்லையா?'' என்றான்.

சபிதா வெளிறினாள். மேஜையைப் பிடித்துக் கொண்டாள்.

''உண்மையாகவா... உண்மையாகவா.'' —ரிஸப்ஷன் ஆளை ஊடுருவியபடி கேட்டாள்.

சபிதா மெல்ல ஹாலைக் கடந்தாள். படியிறங்கினாள். தோள் பையைப் பிடித்தபடி சற்று நேரம் தோட்டத்தில் நின்றாள். தயங்கினாள். மெல்ல சோர்வோடு தலை குனிந்தபடி நடக்கத் துவங்கினாள். இனி எங்கே போவது, எவ்வளவு தூரம் போவது. கவிதையாய் கதையாய்ப் பொங்கின. ஸ்நேகமெல்லாம் ஒருநாள் கோபத்தில் தீர்ந்து விடுமா. பிரிவு வேதனையில்லை ராகவன். அலட்சியம்தான் வேதனை, அக்கினி திராவகம். வாய் நிறைய திட்டி விட்டுப் போனால்கூட கை ஆட்டி விடை கொடுத்திருப்பேன். அறைந்து நகர்ந்தால்கூட நன்றி சொல்லி வழி அனுப்பியிருப்பேன். வியாபாரம் புரியாத தரகன்போல விருட்டென்று நகர்வதுதான் வேதனை ராகவன். சரி இதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியும் இந்த வேதனை புதியது என்றாலும் விழுங்கிக்கொள்ள முடியும். ஆனால் நான் அழமாட்டேன். இனி எதற்கும் எக்காரணம் கொண்டும் அழமாட்டேன். அழுகை தோல்வியின் வெளிப்பாடு. எனக்குத் தோல்வியோ வெற்றியோ விஷயமில்லை, சபிதா வேகமாக நடந்தாள்.

## 7

கார்த்தி பஸ்ஸை விட்டுக் கீழிறங்கி தியேட்டரை நோக்கி நடந்தான். திருச்சியின் எல்லா விளிம்பில் ட்ரங்க் ரோடு இரண்டாகப் பிரிந்து இருளில் நெளிந்து கிடந்தது. கார்த்தி வலப்பக்கச் சாலையில்



இறங்கி நடந்தான். வெகு தொலைவில் தியேட்டர் வாசலின் வெளிச்சமும் பாட்டு சத்தமும் அப்பாவின் இருப்பை நினைவுபடுத்தின. அப்பா காத்துக்கொண்டிருப்பாரா, இல்லை... சகலமும் மறந்துவிட்டு கார்பன் குச்சியைத் தேய்த்துக் கொண்டிருப்பாரா? இத்தனைப் பெரிய விஷயத்துக்கு வீடு அதிராமல் ஆர்ப்பாட்டம் காட்டாமல் இருப்பது அதிசயம்தான். இது ஆர்ப்பாட்டம் இல்லாமல் போனதற்குக் காரணம் அப்பாவோ என்று தோன்றுகிறது அம்மாவும் அலுப்போடு அமைதியானதற்குக் காரணம் இவர் தானோ என்று தோன்றுகிறது. மாற்று யோசனை எதுவுமே இல்லாமல் போனபோது இதை ஏற்றுக்கொண்டு விட்டார்களோ என்று தோன்றுகிறது. அப்பா காதலை எதிர்க்கிறவர் இல்லை. திரும்பத் திரும்ப சினிமா உழுழும் காதல் விஷயங்களை முப்பது வருடத்துக்கும் மேலாகப் பார்த்ததாலோ என்னவோ மனசு நெகிழ்வதைப்பற்றி அவர் அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை. சபிதாவுடைய வெறும் காதல் கல்யாணம் என்றால் அவர் நிச்சயம் நேரே நின்று முடித்து வைத்திருப்பார். இது நெருடலாய் ஊகா முள்ளாய் நிற்கிற போதுதான் வெளியே சொல்ல முடியாமல் அவஸ்தைப் படுகிறார். விதியே என்று கண்களை மூடிக்கொள்கிறார். இன்னொரு காரணமும் இருக்கலாம். இதுபற்றி அதட்டிக்கொண்டு அதிகம் சத்தம் போட்டால் அடுத்தடுத்த வீடுகளுக்கு விபரம் போய் தினசரி வாழ்க்கை பெரும் பிரச்சினையாகப் போகும். பொழுது விடிந்து பொழுது போனால் ஊரின் கடுஞ்சொல்லுக்கு ஆளாக நேரிடும். முள் செடியில் துணி விழுந்த பக்குவமாய் ஆத்திரம் காட்டாது செயல்படவேண்டும் என்று தோன்றியிருக்கும், துணியே முள்செடியைத் தேடித் தழுவிக் கொள்கிறபோது, ஊத்து வீசும் காலக் காற்றுக்கு இறுகப் பிணைந்து கொள்கிறபோது எந்த விதமாய்த்தான் துணியை அகற்ற இயலும். சேதத்தை எப்படித் தடுக்க இயலும்.

சரி... துணியும் முட்செடியும் நாசமாய்ப் போகட்டும் செடியைத் தாங்கிக் கொண்டிருக்கும் நிலம் இந்தத் துணியை எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறது? இலை, கிளை, பூ எல்லாம் மூடிக்கொண்டிருக்கிற இந்த முரட்டுத் துணியை எப்படி அகற்றப் போகிறது? துணியின் சேதம் நிச்சயம். துணியால் செடிக்குச் சேதம் நிச்சயம். சேதமுள்ள செடியைத் தாங்கும் பூமிக்கும் வேதனை வரும்.

அந்தப் பெண் மீனாட்சி பூமிதான். பூமாதேவிதான். விதி இந்த நஞ்சுச் செடியை சுவரில் கொண்டுபோய் நட்டு வைத்திருக்கிறது. சபிதாவின் சீரழிவைவிட அந்தப் பெண்ணின் வேதனைதான் கார்த்திரின் நெஞ்சைக் குடைந்தது. அவளை வேதனைப்படுத்திவிட்டு இவர்கள் இரண்டும்பேரும் என்னமாய் கூத்தடிக்கிறார்கள் அந்த ராகவன் இவளை விட்டுவிட்டு இன்னொருத்தியைக் காதலிக்கமாட்டான் என்பது என்ன நிச்சயம்? அந்த ராகவன் எழுதுகிற கதைகளில் பிடிக்கிறபோது அவன் உள்மனம் கார்த்திக்குத் தெளிவாய்ப் புரிந்தது. பெண் அந்த ராகவனுக்குப் போதையான விஷயம். குடிப்பழக்கத்துக்கு ஒருவன் அடிமையாயிருக்கிற மாதிரி இவன் பெண் ஸ்நேகிதங்களுக்கு அடிமையாயிருக்கிறான். பெண்களைப் பற்றி இவன் உயர்வாக எழுதுகிறான். பெண்களைப் பூவாக மதிக்கிறான் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். சபிதாகூட இரண்டுமுறை சொல்லியிருக்கிறது. அது பொய் பெண்களை வைத்துப் பெண்களைக் கவர பெரிய பெரிய நாடகமாய்ப் போடுகிறான். புகழ்ச்சியால் பெண்களை வெட்டித் தள்ளுகிறான். பூவாய் மதிப்பதுபோல பிடுங்கிப் போடுகிறான். இவனுக்கு ஒரு சபிதா போதாது. காமத்தை மிக நளினமாய் காதலாக்குகிறான். இங்கே அத்தனைப் பெண்களும் காணாததைக் கண்டதாய் அவன் காலில் விழுகிறார்கள். சபிதாவும் சறுக்கியிருக்கிறது. ஊரில் எத்தனைப் பெண்கள் இல்லை, என் தமக்கைதானா கிடைத்தாள்



அவனுக்கு. சபிதா சறுக்கியதும் இன்னொரு ஆச்சரியம். காசு இல்லை... அதனால் தனக்குத் திருமணம் இல்லை என்ற காரணத்தால் மட்டும் அது போகவில்லை அது வேறு கணக்கு போட்டிருக்கிறது. ஒரு வீட்டிற்கு மருமகளாய் போவதுபற்றி அவளுக்குப் பயம் வந்திருக்க வேண்டும் மாமியும் நாத்தியும் மைத்துனனுமாய் உள்ள இடத்தில் வாழ்க்கைப்படுவது பற்றி சற்று கலவரப்பட்டிருக்கவேண்டும். முப்பது வயது வரை விட்டேற்றியாய் வாழ்ந்துவிட்டு சட்டென்று தன்னை சுருக்கிக்கொண்டு தாதியாய், சமையற்காரியாய் குடும்பப் பொறுப்பு ஏற்கிற குணமாய் தன்னால் வாழமுடியாது என்று யோசித்திருக்க வேண்டும். வேலைக்குப்போய் சம்பாதித்து வந்து அதட்டலோடுநடக்கிற தன் ஆண்பிள்ளை குணம் இழந்துவிடக்கூடாது என்கிற கவலை வந்திருக்கக் கூடும். வைப்பாட்டியாய் இருப்பதில் இந்த சௌகர்யம் உண்டு என்று கணக்குப் போட்டிருக்க வேண்டும். இழிவானாலும் பரவாயில்லை. இதுஇம்சை இல்லாத இடம் என்று நினைத்திருக்க வேண்டும். வைப்பாட்டியாய் இருப்பதில் இம்சையில்லை என்று எவரால் சொல்ல முடியும். அனுபவித்தால்தான் தெரியும். சபிதா போ. போய் அனுபவி. உன் அனுபவத்தையும், வேதனையையும் எங்கள் தலையில் தேய், எங்களையும் துடிக்க விடு. கேட்டால் காதல் என்கிற பெரும் பொய்யைச் சொல்.

சே...அந்த வார்த்தையைக் கேட்கிறபோதெல்லாம் வெறுப்பாக இருக்கிறது. படிக்கிற போதெல்லாம் குமட்டிக்கொண்டு வருகிறது. கார்த்தி தியேட்டருக்குள் நுழைந்தான். பழைய காலக் கட்டிடம். பெரிய போர்டிகோவும், விசாலமான ஹாலும் இரண்டு பக்கத்திலும் மாடிப்படிகள்கூடி மேலே தொடுவதும் தொட்ட இடத்திலிருந்து இன்னும் அகலமான மாடிப்படிகளும், மேலே பெரிய திறந்தவெளியும், வலப்பக்கம் கேபின் ரூமும், இடப்பக்கம் ரீவைண்டிங் ரூமும், சிலுசிலுவென்ற

காற்றும், அறையிருட்டும், இத்தனை நேர கோபத்தை சற்றுக் குறைத்தன. கார்த்திக்கு அந்தக் கட்டிடம் ரொம்பப் பிடிக்கும். சிக்கலில்லாத திடமான கட்டிடம். கார்த்தி மேல் மாடி ஹாலுக்கு வந்து அப்பாவைத் தேடினான். அப்பா ரீவைண்டிங் ரூமில் ரீலைச்சுற்றிக்கொண்டிருந்தார். மங்கிய ஒளியில் நிழல் படமாய்த்தெரிந்தார். வலதுகை கைப்பிடியைச் சுற்றிக் கொண்டிருக்க இடதுகை ரீல் சுழற்சியை அளவோடு அனுமதித்துக் கொண்டிருந்தது. இடையிடையே நடுவிரல் நிமிர்ந்து ஃபிலிம் ஓட்டத்தைத் தடவிக் கொண்டிருந்தது. கார்த்தியின் நிழலாட்டத்தைக் கண்டு அப்பா திரும்பினார்.

''எத்தி அனுப்பிச்சிட்டியாப்பா...?'' —சுழற்சியை நிறுத்தாமல் கேட்டார்.

கார்த்தி பதில் பேசாமல் நின்றிருந்தான்

''உள்ள போய் உக்காரு. போற போது பேசிட்டுப் போகலாம்'' —அவனை நிமிர்ந்து பார்க்காமல் சொன்னார்.

கார்த்தி. கேபின் ரூம் வழியாக ஸ்கிரீனைப் பார்த்தான். மரோசரித்திரா... கமலஹாசனும், சரிதாவும் பாடிக் கொண்டிருந்தார்கள். பாலு ..ஸ்வப்னா....பாலு... ஸ்வப்னா என்று மண்டபம் பாறை எங்கும் செதுக்கி வைத்திருந்தார்கள். கும்மாளம் பொங்கும் பாட்டுக்கு நடுவே காமிரா இந்தப்பெயர் செதுக்கலைக் காண்பித்து காண்பித்து அவர்கள் காதலை ஜனங்களுக்கு உறுதிப் படுத்திக்கொண்டிருந்தது. பாறையில் பெயர் செதுக்கிக் கொள்ளுகிற காதல். என்ன அபத்தம். இது எவ்வளவு அடலஸென்ட் எண்ணம். இங்கே பெயரைப் பொறித்து யாருக்கு தங்கள் காதலை பறையறிவிக்கிறார்கள். இது தங்களை வெளிப்படுத்தும் காரியமா அல்லது தங்களுக் குத் தாங்களே உறுதி செய்து கொள்ளும் விஷயமா. இப்படிக் கால்மேல் கால் வைத்து நடக்கும் களியாட்டம் தானா காதல். இப்படி கால் மாற்றிக் காத்திருந்து



கண்டவுடன் கைப்பற்றி சுற்றுவதுதானா உயர்வு. கமலும், சரிதாவும் கழுத்துவரை மணலில் புதைந்திருந்தார்கள். தியேட்டர் கைகொட்டி சந்தோஷம் தெரிவித்தது. அந்தக் காட்சி, காதல் ஒரு புதை குழி என்று சொல்லுவதாகத்தான் கார்த்திக்குப்பட்டது. ஆண் வீரியம் குறையும்போது தான் காதலிக்கத் துவங்குகிறான். இல்லையெனில் ஒரு பெண்ணை முதுகில் பைத்தியம் என்று எழுத எவன் அனுமதிப்பான். பெண்ணுக்குப் பணிந்து போவது போல் நடக்கும் ஆணின் பாசாங்குதான் காதல். பெண் எனும் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வெளிப்படுத்தும் பொய். வம்ச விருத்தியின் பொருட்டே திருமணம் என்பது உறுதியானால் இதில் காதல் என்கிற நெகிழ்வு தேவையில்லையே. வம்சம் பற்றியும், விருத்தி பற்றியும் கவலைப் படாதவனே தான், தன் சுகம் என்று நினைப்பவனே காதலை கௌரவப்படுத்தி விடுகிறான், ஊர் முழுக்க சுய நலமிகளாய் இருப்பதால்தான், வம்சம் பற்றி கவலைப்படாததால்தான் காதல் இப்படி கொடி கட்டிப் பறக்கிறது. ராகவனுக்குத் தன் மனைவி பற்றியும் அக்கறையில்லை தன்சுகம் பற்றிய கனவே சபிதாவைக் கவரத் தூண்டியிருக்கிறது. சபிதாவுக்கும் பிறர் பற்றிய அக்கறை இல்லை. தன் வாழ்க்கை விரும்புதல்களை விட்டுக் கொடுக்காமல் இருப்பதற்காகவே இவனை நாடியிருக்கிறது. கமல் சரிதாவை முத்தமிடும்போது கார்த்தி வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

''வாசல்ல நிக்கறேம்பா,'' என்று சொல்லிவிட்டு தோட்டத்திற்கு வந்துவிட்டான்.

ஆற்று மணலில் இடறி விழுந்த குடத்து ஜலம் போல படம் முடிந்து ஜனங்கள் வெளியே பரவினார்கள். காணாமல் போனார்கள். அப்பா கேபினைப் பூட்டி சாவியை மானேஜரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தார். களைத்து காணப்பட்டார்.

''படம் பார்க்கலியா நீ. வெளியே வந்துட்ட...?'' கார்த்தி ச்சு கொட்டினான்.

''நல்ல படம்னு சொல்றாங்க. கூட ரெண்டு வாரம் ஓடும் போலிருக்குதே''

''சொல்றாங்களா நீங்க பார்க்கலியா?''

''நான் என்னிக்கு உட்கார்ந்து படம் பார்த்தேன்? ரீல் மார்க் எப்ப விழும்னு எட்டி எட்டிப் பார்த்துக்கிட்டிருக்கேன். விசில் தூள் கிளப்பினா நல்ல படம். இல்லேன்னா இல்லை.''

உலகத்தில் எது பற்றியும் அப்பாவின் ரசனை அவ்வளவுதான். கூட்டமாக நூறு பேர் சொல்லும் அபிப்ராயம்தான் அவருடையதும். திரையில் ஓடும் படத்தை மட்டுமில்லை. வீட்டு விஷயங்களைக்கூட ஒரு சின்னச் சந்து வழியாகத்தான் எட்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வீட்டில் எதற்கேனும் எதிர்ப்பு அதிகம் கிளம்பினால் கெட்டது. இல்லாது போனால் நல்லது. வேரைக் குடைந்து கேள்வி கேட்பதோ கோபித்துச் கொள்வதோ பிரயோசனமற்ற காரியம்.''

''என்ன சொல்லிச்சு சபிதா''—நடந்து போகும் போது அப்பாவாகத்தான் ஆரம்பித்தார்.

''வண்டி கிளம்பறத்துக்கு முன்னாடியே நீ போ. நான் தனியா இருக்கணும்னு சொல்லிடுச்சு.''

''ஏன் அப்படி...''

'தானே வீட்டைவிட்டுப் போறதா இருக்கணுமாம்.''

''அப்படியா, என்னத்துக்கு அந்த மாதிரி.''

கார்த்திக்கு லேசாய் கோபம் வந்தது. நுணுக்கி, நுணுக்கி இவருக்கு விளக்கிக் கொண்டிருப்பது அனாவசியம் என்று பட்டது. அப்பாவின் வெகுளித்தனத்தைக் கண்ட கோபம் சபிதாவின்மீது திரும்பிற்று.



''திமிருப்பா... தனக்குத் தெரியாதது உலகத்தில் எதுவுமில்லை என்கிற திமிர். அந்த ஆள் நல்லாவா இருக்கப் போறான். இதுகிட்ட மாட்டிக்கிட்டுப் படாத பாடு படப் போறான் பாரு.''

''வேணாம். திட்டாதடா நம்ம வாயால யாரையும் சபிக்க வேணாம். அது நல்லா இருக்கட்டும்.''

''நான் சபிதாவையா சொல்றேன். அந்த ஆள் இதுகிட்ட மாட்டிக்கிட்டு அவஸ்தைப் படணும்னு சொல்றேன்.''

''வேணாம். அதுகூட சொல்லாதே. அவன் அவஸ்தைப்பட்டா அந்தப் பொண் மீனாட்சிக்கில்ல கஷ்டம். அதைக் காப்பாத்த ஆள் இல்லாம போச்சே அதுதான் வேதனை.''

கார்த்திக்கும் உள்ளூர வேதனை பொங்கிற்று. தான் இதுவரை பார்த்தேயறியாத பெண்ணின் சோகம் உள்ளுக்குள் தாக்கிற்று. மீனாட்சிக்கு மட்டும் அவன் தம்பியாகப் பிறந்திருந்தால் ராகவனைப் பந்து விளையாடியிருப்பான் விஷயத்தை தெருச் சண்டையாக்கி, கோர்ட், கேஸ்வரை போயிருப்பான். குற்றம் செய்த கூட்டத்துக்கு துணை போகும்படி ஆகிவிட்டது.

'மீனாட்சி வீட்லேர்ந்து யாரோ வந்தாங்களிங்களே, இது மெட்ராஸ் போனா அவங்க சும்மாவா இருப்பாங்க. கழுத்தைப் பிடிச்சுத் திருப்பி நம்ம ஊருக்கே வெரட்ட மாட்டாங்க.''

''தெரியலியே. வந்து விழுந்துச்சின்னா இன்னும் கேவலம். இங்க வந்து நம்மைப் பார்த்துப் பேயாக் கத்தும்.''

''அது ஊராருக்குப் பயந்திட்டிங்கப்பா, மீனாட்சி அழுகை உங்களுக்குத் தெரியலியா?''

''அது என்னை மாதிரி வாயில்லாப் பூச்சிடா''

'அடிச்சக்கை. உங்களை மாதிரியா, வாயில்லாப் பூச்சியா. இது மட்டும் எப்படி தெரிஞ்சுக்கிட்டீங்க?''

''நாலு மாசம் முன்னாடி வந்து அழுதுதே.''

''ஆமா எனக்கு நீலாக்கா எழுதியிருந்திச்சு. மீனாட்சி என்ன சொன்னாங்க. தனியா வந்தாங்களா?''

''தனியாதான் வந்திச்சு. ராகவனே வண்டி ஏத்தி அனுப்பிச்சு வச்சாராம்.''

''ராகவனேவா!''

''ஆமா ''

''போய் பேசிப் பாரு. அவங்க அப்பா அம்மாவைப் பார்த்துட்டு வா. சபிதா யாருன்னு தெரிஞ்சிக்கன்னு அனுப்பிச்சு வச்சானாம்,''

''ராஸ்கல்...'' — கார்த்தி ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தான். கெட்டிக்கார ராஸ்கல். சூதும், சூழ்ச்சியும் தெரிந்த பார்ப்பன ராஸ்கல். பெருந்தன்மையை நடைபாதையாக விரித்து விருட்டென்று வீழ்த்தி விடுகிற அயோக்கியத்தனம், புருஷனே போ என்று தான் காதலிக்கிற பெண் வீட்டுக்கு மனைவியை அனுப்பி வைக்க போராடும்பலம் அவனுக்கு எங்கிருந்து வரும். அனுப்ப மறுத்தால் ஆக்ரோஷம் வரும் என்பதை, அடக்கி வைத்தால் பீறிடும் என்பதை, எதிர்த்து நின்றால் உடைபடுவோம் என்பதைத் தெரிந்து வைத் திருக்கிற அயோக்கிற ராஸ்கல் அது வெகுளி, இங்கே வந்து அழுதுவிட்டுப் போயிருக்கிறதே தவிர ஆவேசம் கொள்ளத் தெரியவில்லை. சபிதாவை நார் நாராக கிழித்துப் போட்டிருக்க வேண்டாமா? திரும்பி சென்னைக்குப் போக டிக்கெட் வாங்கித் தருகிறாயா என்று இதையே கேட்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைத் தனத்தை இந்த இரண்டு பேரும் பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அவனை எங்கு வேண்டுமானாலும் நகர்வதற்கு இடம் கொடுப்பது போல் கொடுத்து மூலையில் அழுத்தி விட்டார்கள். எத்தனை நாளைக்கு இந்தக் கெட்டிக்காரத்தனம். அந்தப் பெண் அழுதால். அத்தனை வெகுளியான பெண் அழுதால்—சபிதா நீ உருப்படுவாயா, உங்கள்



கெட்டிக்காரத்தனமான ஸ்நேகம் எத்தனை நாள் நிலைத்து நிற்கும். உன் புத்திக் கூர்மையும், அவன் புத்திக்கூர்மையும் உரசும்போது இருவருமே கிழிபடப் போகிறீர்கள் சபிதா. ஆனால் அப்போதும் அந்தப் பெண் மீனாட்சிதான் வேதனைப்படும்.

''ஒரு வேளை மீனாட்சியை இவன் ஒதுக்கி வச்சிட்டால் நாம போய் அதுக்கு உதவி செய்யலாம்பா.''

சண்முகம்பிள்ளை மெல்லத் திரும்பினார். ''எனக்கும் தோணிச்சு கார்த்தி. ஆனா நம்மைக் கண்டா அதுக்கு இன்னும் எரியுமே தவிர அது வேதனையை நம்மால் தீர்க்க முடியுமா?''

' அப்ப வேற என்னதான் வழி இதுக்கு?''

சண்முகம்பிள்ளை உதட்டைப் பிதுக்க வானத்தைக் காட்டினார்.

கார்த்தியும் வேதனையுடன் வானத்தைப் பார்த்தான்.

யுகத்துக்கு யுகம் அவதரிக்கிறவனே, நீ மறுபடியும் வரமாட்டாயா? அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுபவனே. இது அதற்கான நேரமில்லையா?

கார்த்தி அடிவயிறு குழைய வேதனைப்பட்டான், இந்த ஜென்மத்தில் திருமணமே செய்து கொள்ளக் கூடாது. காதல் என்று ஒரு பொழுதும் கசிந்துருகக் கூடாது. கடைசிவரை இப்படியே இருந்துவிட வேண்டும். தனித்து வேதனைப்படுபவர்களுக்கு உதவியாய் ஒருவாழ்க்கை மேற்கொள்ள வேண்டும். மீனாட்சி அக்காவுக்கு மனசு திறந்து தன் வீட்டு நிலைமையைச் சொல்லி ஒருகடிதம் எழுத வேண்டும். மீனாட்சி அக்கா! சட்டென்று என்ன இதமாய் ஒரு உறவுச்சொல் மனசில் ஒட்டிக் கொண்டுவிட்டது.

வீட்டுக்குள் நுழைந்ததும் திடுமென்று அப்பா கதவு மூலையைக் காட்டி ''இங்கேதான் அந்தப் பொண்ணு மீனாட்சி உட்கார்ந்து அழுதுது'' என்றார்.

கார்த்தி சட்டையைக் கழற்றி வேஷ்டி உடுத்திக்
கொண்டு கால் அலம்பி அந்த இடத்துக்கு அருகில்
உட்கார்ந்து கொண்டான்.

# 8

சொற்களில் சிக்கனமாக இருக்கத் தனக்குத்
தெரியவில்லை. மனதை நிதானமாய் வெளிப்படுத்த
முடியவில்லை. ஹா என்ற ஒரு அலட்சியம் எப்
போதுமே உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. எது
நடந்தாலும் என்ன இப்போ என்ற ஒரு கேள்வி வந்து
விடுகிறது. அம்மா இதைத்தான் தடித்தனம் என்று
சொல்கிறார்கள் போலும். அகங்காரி என்று ஆபீஸில்
தனக்குக் கிடைத்த பட்டம் இதற்குத்தான் போலும்.
உங்களைவிட்டா வேற ஆம்பிளையே கிடைக்காதா
என்ன... இதுதான் இவனையும் காயப்படுத்தியிருக்க
வேண்டும். ஆனால் இது ஒரு நிதர்சனமான உண்மை
யில்லையா இதைச் சொன்னதில் என்ன தவறு? ஒரு
வேளை இப்படிச் சொல்லியிருக்க வேண்டுமோ? நீங்கள்
இல்லையெனில் என் வாழ்க்கை அஸ்தமித்து விடாது
ராகவன் என்று சொல்லியிருக்க வேண்டுமோ? முன்ன
தற்கும் பின்னதற்கும் அர்த்தம் ஒன்றுதான். எனினும்
வெளிப்படுத்தும் தனிைத்தில் வித்தியாசம் இருக்கவே
தான் செய்கிறது. மாதவி பாடலுக்கு கோவலன்
கோபித்துக் கொண்டு போனது போல அதே விதமான
சொல் பரிமாற்று தவறுதான் இங்கேயும் இருந்திருக்
கிறது. பெண்ணிடம் கோபித்துக்கொண்டு போவது ஒரு
ஆணுக்கு அழகா என்ன? இன்செக்யூரிட்டிதானே உன்
பலவீனம். இந்தா இன்னமும் அனுபவி என்று தீய்த்து
விட்டுப் போவது ஆணின் குணமா என்ன... ஆனால்
என் மனசே எனக்கு இப்போதும் அதிசயமாகத்தான்
இருக்கிறது விம்மி விம்மி அழவேண்டாமோ? வெறுமை
தான் தட்டுகிறது நீயுமா ராகவன் என்ற வேதனை



படருகிறது. சரி இனி என்ன செய்வது? சில நாட்கள்
மௌனமாய் இருப்போம். எந்தக் கவலையும் படாதது
போல நாலு நாட்கள் கழித்து ஒரு கடிதம் எழுதுவோம்.
நலமாய் ஊர் போய்ச் சேர்ந்தீர்களா? மீனாட்சி சௌக்
யமா? குழந்தை எப்படி இருக்கிறாள்? ராஜராஜ
சோழன் கதை எழுத ஆரம்பித்து விட்டீர்களா? என
முன்பிருந்த ஸ்நேகம் போலவே கடிதம் எழுதுவோம்
காதல் இல்லை என்று அறிவித்து விட்டால் என்ன?
ஸ்நேகமாவது மிஞ்சட்டும். ராகவன் இன்றிருந்தால்
இப்போதே ராஜராஜன் கதையை எழுத ஆரம்பித்திருக்
கலாம். கதையைச் சொன்னவிதம் அற்புதமாயிருந்தது.
எழுதும்போது இன்னும் நகாசு கூடும். சண்டை
போட்ட வேதனையில் அது எழுதுமோ அல்லது ச்சீ
என்று என்னை ஒதுக்கினது போலகதையையும் ஒதுக்கி
வைத்து விடுமோ.. தெரியவில்லை.

எப்படி சமாதானப்படுத்திக் கொண்டாலும் நல்ல
நட்பு முறிந்து போனது வேதனையாகத்தான் இருக்
கிறது. இன்றிரவு நிச்சயம் தூக்கம் வராது. படிக்க
முடியாது. தன்னை மறந்து வேலைகளில் ஈடுபட முடி
யாது. எப்போதும் ராகவனின் நினைப்பு உறுத்திக்
கொண்டுதான் இருக்கும். இந்தப் பிரிவு மீனாட்சிக்குப்
பெரிய பாரம் குறைந்தாற்போல இருக்கும். அவ
கிடக்கா விடுங்கோ, நானிருக்கேன் என்று மீனாட்சி
சொல்ல வேண்டும். என்னைப் பிரிந்த வேகத்தில் வேறு
எவளையாவது ராகவன் தேடாது இருக்க வேண்டும்.
பாவம் மீனாட்சி. ராகவனை வளைத்து நிறுத்த
அவளால் முடியவில்லை. முரட்டுக் குதிரையாய்
திமிறும் அவனை நெருங்கக்கூட முடியவில்லை.

நாலு மணிக்கே ஆபீஸ் விட்டுக் கிளம்பியாகிவிட்டது.
இப்போது எங்கே போவது? கொஞ்ச நேரம் சமயபுரம்
போய் உட்கார்ந்து விட்டு வரலாமா? உள்ளே போய்
அவளைப் பார்த்தவுடன் இத்தனை நேரம் அடக்கக்

கொண்டிருந்த அழுகை பொத்துக் கொண்டு வரும். தன்னிரக்கம் கிளர்ந்து செயலிழந்து அவள் காலடியில் மனசைப் போட்டு விம்மி விம்மி அழவைத்துவிடும். என்னை இப்படி அலைக்கழிக்கிறாய் என்று அவனைக் கோபித்துக் கொள்ளத் தோன்றும். எனக்கு என்ன வழி எனக்கு ஒரு புருஷன் கொடு என்று பல முறை சமயபுரத் தடியில்போய் உட்கார்ந்து கொண்டிருந்திருக்கிறேன். இன்றும் போய் உட்காரலாம். உள் பிரகாரத்து வடக்குப் பக்கம் இருக்கும் திண்ணையில் காலைக் கட்டிக் கொண்டு வானம் பார்க்கலாம். முன்பு ஒரு முறை அப்படி வெறுமையில் உட்கார்ந்திருந்தபோது சின்ன தாய் ஒரு தற்கொலை எண்ணம் தோன்றிற்று. இன்று மறுபடியும் அப்படித் தோன்றுமா? இப்படி அடிக்கடி தோன்றி அங்குதான் முடியப் போகிறேனோ? சமயபுரம் போகும் முன் காவிரிப் படித்துறையில் சற்று நேரம் நின்று விட்டுப் போகலாமா! அது ராகவனை முதலில் சந்தித்த இடம். அங்குதான் அவன் ஆதிமந்தி ஆட்டனத்தி கதையைச் சொல்லி வாய் விட்டுச் சிரித் தான். ''வெறும் விறாப்பில் விளைந்த வேதனையைப் பார். காதலிக்கு வீரம் காட்ட சுழலில் குதித்திருக் கிறான். பெண்ணின் பாராட்டுக்கு ஏங்குவது இன்று வரை ஆணின் குணமாகவே இருக்கிறது. எனக்கு நீந்தத் தெரியும். காவிரியோடு நல்ல பழக்கம். நான் குதிக் கட்டுமா சபிதா.''—சட்டைப் பட்டனை கழற்றப் போன வனைச் சரக்கென்று பிடித்து நிறுத்தியாகிவிட்டது. ஏன் என்ன பயம் என்று கேட்கையில் என்னால்காவிரிப் பூம்பட்டினம் வரைக்கும் நடந்து வர முடியாது. இங்கேயே முழுக்குப் போட்டு விட்டு வீட்டுக்குப் போயிடுவேன் அன்று கரையோரம் இருவரும் கை கோர்த்து முழுக்குப் போட்டது வேறு கதை அதைக் கதையாக்கி அவன் வாரப் பத்திரிகையில் போட்டபோது மனசு முழுதும் தித்தித்தது. தன்னிடம் பேசிக்கொண்டே காவிரி நடவடிக்கை முழுவதையும் அவன் கண்ணால் விழுங்கிக் கொண்டது ஞாபகம் வந்தது. கரையோர



ஒவ்வொரு அசைவையும் அவன் காட்சிப் பொருளாய் கதையில் விளக்கியிருந்தது வியப்பைக் கொடுத்தது. அந்த ரசனையும் சொற்களின் கோர்வையும் துரிதமும் வெகு நாள் மனசில் நர்த்தனமாடின. பேசாம காவிரிக் கரைக்கே போகலாம். காவிரியின் குளுமையை மனசில் நிறைத்துக் கொள்ளலாம் சமயபுரம் போய் உடைந்து போவவைவிட இது சௌகரியம்.

பாலத்துக்கு டிக்கெட் எடுத்து வலப்புறப் பாதையில் வளைந்து இறங்கி ஓலைக்கூரை சலூன்களைத் தாண்டி படியிறங்கி கணுக்கால் ஜலத்தில் கால் வைத்தபோது யாரோ தோளைத் தொட்டார்கள். திடுக்கிட்டுத் திரும்பு கையில்...ராகவன்.

''ஏய்'' சந்தோஷம், திடுக்கிடல், பரவசம், பயம் எல்லாமாய் சேர்ந்து குரல் மாறி கிறீச்சிட்டதாய் ஒரு எக்காளம் வாயிலிருந்து கிளம்பிற்று.

ராகவன் அவள் புஜத்தைப் பிடித்து மேலேற்றி னான்.

''நீங்க போகலியா...''

''இல்லை.''

''போய்ட்டதா சொன்னாங்க.''

''பொய். நான்தான் பொய் சொல்லச் சொன் னேன். நீ விசாரித்தபோது நான் ஹால்லதான் உட்கார்ந்திருந்தேன்.''

சபிதாவுக்கு தொடை நடுங்கிற்று. ஆடுகால் தசை வலிவின்றி நெகிழ்ந்தன.

''ஏன் இப்படிச் செய்தீங்க ராகவன்?''

''உன்னை அழ வச்சுப் பார்க்கணும்னு ஒரு ஆசை.''

''ஏன்?''

''கோபமோ, குத்தலா பேசறதோ உன்னைத் தாக்கறதில்லை. இதமா சொன்னாலோ, நைச்சியமா பேசினாலோ உனக்குப் புரியறதில்லை. அதிரடியா செய்து பார்ப்பமேன்னுதான்.''

''அதிர்ந்துட்டதாய் யார் சொன்னா...''

''ஆத்து ஜலத்தில் போய் நின்னா என்ன அர்த்தம். ரொம்ப அதிர்ந்து போய்ட்டியோன்னுதான் ஓடிவந்து தொட்டேன்.''

''இப்படிச் செய்தது குரூரமில்லையா ராகவன்?''

''நிச்சயமா குரூரம்தான். குரூரம் பற்றி உனக்குத் தெரியணும்னுதான் அப்படிச் செய்தேன். பிரிவு என்கிற விஷயத்தை குரூரமா சொல்லிக் காண்பித்தேன். நேசங்கற விஷயத்தை அல்பமா, காலைக் கடவா நீ பேசின குரூரத்துக்கு இது பதில் குரூரம் அதட்டிச் சொன்னா கணக்குப் பாடம் வருமோங்கற முடிவு. எல்லா மனுஷரும் தனித்தனியான உலகம்தான் சபிதா. ஆனா யாரும் யாரையும் எத்தி எறிஞ்சிட முடியாது. இந்த நாப்பது நிமிஷமும் தனிச்சுப் போயிட்டேல்ல...? இது மத்தவங்களுக்கும் உண்டு. நீ காலடியிலேயே கிடக்க வேணாம் சபிதா. நேருக்கு நேரா நின்னு பார். முக்காலி மேல நின்னுக்கிட்டு உலகம் முழுக்க தெரியுதுன்னு எப்படி சொல்ற? வீட்டுக்குப் போய் தலைல ஜலம் ஊதிக்கறது அவ்வளவு சுலபமா? எதிர் வீட்டுக்காரன் செத்தாகூட ரெண்டு நிமிஷம் வயிறு கலங்கத்தான் செய்யும் அவன் சாவுக்குப் போய் தலைக்கு ஜலம் ஊத்திக்கிட்டாக்கூட ஜலம் ஊத்திக்கிற நேரத்தில் அவனுக்கும் நமக்கும் உள்ள உறவு மொத்தமும் உள்ளுக்குள்ள வழியும். நட்போ உறவோ நீ சொல்ற வார்த்தை மாதிரி லேசானதில்லை. சபிதா ஐ லவ் யூ இந்த வார்த்தையைத்தான் சொல்ல வேண்டியிருக்கு. விரலை பிடிச்சிக்கிட்டாலும் உடம்பு மொத்தமும் கட்டிக்கிட்டாலும் ஒன்னுக்குள்ள ஒன்னு கலந்தாலும் கனவில் கவிதை எழுதற மாதிரி அனிச்சையா அதே சமயத்தில் அர்த்தம் உள்ளதா இந்த வார்த்தையை உபயோகப்படுத்த வேண்டியிருக்கு. வா குழுக்குக் போகலாம்.''



ஆட்டோவில் குழல் பறக்க உட்கார்ந்திருந்தாள். கடந்து போகும் கட்டிடங்களை அர்த்தமற்று வெறித்திருந்தாள். ரிஸப்ஷன் ஹாலை தலை குனிந்தபடி கடந்தாள்; படியேறி அறைக்குள் நுழைந்து நாற்காலியில் சுருண்டு உட்கார்ந்தாள்.

இன்னொரு நாற்காலியை அருகே இழுத்துப் போட்டு ராகவன் அவள் தலையைத் தடவினான்.

''உன் பேச்சையும், நடவடிக்கையையும் நீ கம்பீரம்னு நினைச்சுக்கிட்டிருக்கியா? கம்பீரம்கறது சாட்டையா வார்த்தையை சொடுக்கறதா? சகலமும் நானேன்னு நினைச்சுக்கறதா? நீ எவ்வளவு சுயநலமா இருக்க விரும்பறயோ அதே அளவு சுயநலமா இருக்க எதிராளிக்கும் உரிமை உண்டுல்ல...? நீ என்னை ஆளணும்னு ஆசைப்பட்டா பதிலுக்கு நான் உன்னை அடக்கணும்னு ஆசைப்படலாமில்லை? என்னை விட்டாலும் உனக்கு வேறு ஆம்பளை கிடைக்கும். எனக்கும் பொம்பளை கிடைக்கும். இல்லேன்னு சொல்லலை. ஆனா பரஸ்பரம் வெறும் ஆம்பளை பொம்பளையா தேடினோம். நாம ரெண்டு பேரும் போட்டிபோட ஆரம்பிச்சா நாம் யாரையும் எதிர்த்துப் போட்டிபோட முடியாது. சகல இடத்திலேயும் இணையான ரசனையோடு ஒரு துணை... இதை இரண்டு பேருமே தேடிக்கிட்டிருக்கப்போ வெறும் பேச்சு கம்பீரத்தில் இதை எட்டி உதைச்சிடப்படாது. உன்னை தண்டிக்கறதுக்காக குரூரம் பண்ணலை சபிதா. உனக்குப் புரியணும்ங்கறதுக்காக கொஞ்சம் முரட்டுத்தனம் காட்டினேன். இப்போ உனக்கு நீயே கேட்டுக்க. பிரிவு கஷ்டமா, சுகமா? தலைக்கி தண்ணீர் ஊத்திக்கிற காரியம்தானா? காபிக்கு சொல்லிருக்கேன். இரு சாப்பிட்டுட்டுப் போகலாம். நாளை காலைல வா. மிச்சத்தை அப்பப் பேசிக்குவோம்.''

இரவு அம்மாவுக்கருகில் ஒண்டிப் படுத்துக்கொண்டான். இவளையும் பிரியத்தான் போகிறோம்.

இவளைப் பிரிவதும் வேதனையாகத்தான் இருக்கிறது. இவள் உறவு போதும் என்றாலும் வேதனை வரத்தான் போகிறது. ஆனால், உறவு போதுமென்பது எங்ஙனம், எவ்விதம்? நான் சாகும் வரையில் இவள் எனக்கு அம்மாதானே. கார்த்தி எனக்கு தம்பிதானே. அப்பா எப்போதும் அப்பாதான். அபிப்ராய பேதங்களால் உறவு அறுந்து போவதுண்டே தவிர அழிவதில்லையே. வாஸ்தவம் உறவு என்பது துச்சமில்லை. உலகத்தின் சசல பொருட்கள் போல உறவும் அநித்தியம் என்றாலும் தானிருக்கும் வரை இந்த உறவுகளும் உண்டு. உறவு பற்றி அருவருப்படைய ஏதும் நியாயமில்லை. விடிந்ததும் பின்பக்கக் கதவைச் சாத்திக் கொண்டு தலைக்கு சொம்பு சொம்பாய்த் தண்ணீர் விடுகையில் உலகத்தின் சகல உறவுகளும் தன் மீது வடிந்து ஓடுவதாய்ப் பட்டது.

நேற்றைய என் ஏமாற்றத்திற்கு ஏன் ராகவனிடம் சீறமுடியவில்லை, ஏன் எதிர்த்துப்பேச முடியவில்லை. கோபத்தின் சாயலைக் கூட காட்ட முடியவில்லையே ஏன்... வேதனையில் மௌனமாகி விட்டோமா? அவன் சமாதானத்தில் கரைந்து விட்டோமோ? பிரிவு என்பது வேதனைதான். ராகவன் இல்லை என்றதும் துக்கம் பொங்கியது உண்மைதான். இதை உணர்ந்த பிறகு ஏற்பட்ட மௌனமா இது. தடலடியாய் ஒரு விஷயம் சொல்லிக் கொடுத்து விட்டானா? சரி... என்னைப் பிரிவது ராகவனுக்கும் ராகவனைப் பிரிவது எனக்கும் வருத்தம்தான். நாளைக்கு மீனாட்சி பிரிந்து போகிறேன் என்றால் ராகவன் என்ன செய்வான்? எப்படிச் சமாளிப்பான்? மீனாட்சிக்கு வேறு மதிப்பு எனக்கு வேறு மதிப்பா? மீனாட்சியைவிட குழந்தையிடம் கொள்ளை ஆசை ராகவனுக்கு பிரியாவின் பிரிவை எப்படித் தாங்குவான்?

''ரொம்ப ஸிம்பிள் சபிதா. இதுபத்தி நீ யோசனை செய்யவேயில்லையா '' ராகவனை சந்தித்துக் கேட்டபோது முகத்துக்குப் பவுடர் தடவிக் கொண்டிருந்தான்?



''நீ, நான், மீனாட்சி, ப்ரியா ஒரு கூரைக்குக் கீழதான் இருக்கப் போகிறோம். இருப்போம், இது என்னிக்கு சாத்தியமோ அன்னிக்குதான் நம்ம கல்யாணம். மீனாட்சியை நான் பிரிய முடியாது பிரியமாட்டேன். ஐ நீட் யூ இதுக்கு அர்த்தம் மீனாட்சி வேண்டாம்னு இல்லை. குழந்தையை ஒதுக்கப் போறேன்னு இல்லை.''

''இது ரொம்ப சிரமம் ராகவன். மீனாட்சி ஒத்துக்க மாட்டாங்க. இரண்டு பெண்கள் ஒருத்தனுக்கு மனைவியா ஒரே இடத்தில் இருக்கவே முடியாது.''

''ஏன்?... காரணம் சொல்ல முடியுமா? கௌரவம்னு சொல்லாத உன்னைக் கொண்டுபோய் தனியா ஒரு வீட்ல வைக்கறதுதான் அசிங்கம். அதை நான் செய்ய மாட்டேன்.''

''நீங்க இங்க வரதே மீனாட்சிக்குப் பிடிக்கலைங்கறபோது நான் அங்கவந்து இருக்கறதை ஒத்துக்குவாங்களா?''

''பிடிக்கலைதான் அதுக்காக நான் மீனாட்சிகிட்ட பொய் சொல்லிட்டு வரலை. ஏமாத்தலை. உன்னைப் பார்த்துட்டு வரதாத்தான் சொல்லியிருக்கேன் முசுமுசுன்னு அழுதா, கத்தினா பேசாம கேட்டுண்டு வந்துட்டேன். நீயும் நானும் நடந்துக்கற விதம்தான் மீனாட்சியை மாத்தணும், அவ அழுகைக்கும் கோபத்துக்கும் அடிப்படை பயம். தனியா வாழா வெட்டியா போய்டுவோமேன்னு பயம். நீ உள்ள நுழைஞ்சு சகலத்தையும் முழுங்கிடுவியோன்னு பயம். அதைப் பார்த்து நாலு பேர் ஐயோ பாவம்னு சொல்லப் போறாங்களோன்னு பயம். அந்தப் பயத்தை அவகிட்டேர்ந்து எடுக்கணும். அதான் சொல்றேன். நீயும் நானும் போட்டி போட்டா நீயும் நானும் சண்டை போட்டா, சுலபமா நம்மை உடைச்சி தூரதூர எறிஞ்சிடுவாங்க மூணு பேரும் காணாத போய்டுவோம்.''

''எப்ப ஊருக்குப் போறீங்க?''

''ராத்திரி வண்டிக்கு.''

''ப்ரியாவுக்கு ஃபிராக் வாங்கிட்டு வந்துடலாமா? தைச்சு முடிச்சிருப்பான்.''

''மீனாட்சிக்கு ஒண்ணும் வாங்கலையா?''

''வாங்கலாம்... தூக்கி எறிஞ்சிட்டா?''

''எடுத்து வச்சிடறது. மறுபடி அவளையே தானா கொண்டா அதைன்னு கேக்க வைக்கறது.

''திடமாப் பேசறீங்க ராகவன்.''

''ஐ லவ் மை வொய்ப், உண்மையான லவ் தோத்துப் போனதா சரித்திரமேயில்லை. மறு கன்னத்தைக்காட்டுங்கறதுக்கு வலியைப் பொறுத்துக்கோன்னு அர்த்தமில்லை. உன் கோபம், நீ செய்யற அவமானம் என்னை ஒண்ணும் பண்ணாது இத்தனையும் தாண்டி ஸ்டில் ஐ லவ் யூன்னு அர்த்தம்.''

''புடவை எடுக்கட்டுமா?''

''மீனாட்சி பேர்ல அன்பு இருந்தா மீனாட்சி வேணும்னு உனக்குப் பட்டுதுன்னா எடு.''

''பாவங்க மீனாட்சி.''

''ம்ம்... செய் ''

''அவங்களை கதறவிடறோமேன்னுதான் கஷ்டமா இருக்கு ''

''குட், இதுக்கு பேர்தான் லவ் ''

''அவங்க கதறும்போது உங்களுக்குக் கஷ்டமா இருக்காது?''

ராகவன் மெல்ல நிமிர்ந்தான். ''நிச்சயம் கஷ்டம் தான் ஆனா நான் செய்யறதுதான் மீனாட்சிக்கு நல்லது— குழந்தைக்கும் நல்லது.''

''ஏன் ராகவன்... ஏன் இப்படி... நீங்க சொல்றது புரியலையே.''



''வாக்கியம் வாக்கியமா விளக்கறதைவிட நீயா புரிஞ்சுக்க. அதுதான் நல்லது. அப்பதான் மனசில பதியும். எழுந்திரு போகலாம்.''

''கடைப் பக்கம் போயிட்டு வந்து சரித்திரக் கதைக்கு உட்கார்ந்துடுவோம்.''

''உடனேயா?''

''சூடா விஷயம் மனசுல இருக்கறச்சையே பேசி முடிச்சுடலாம்.''

''இப்பவே ஆரம்பிச்சிடலாம், பேசிகிட்டே கடைப் பக்கம் போகலாம்.''

ராஜராஜன், கோயிலுக்காக நிறைய நிவந்தம் விட்டிருக்கான் அதுல ஒன்னு தளிச்சேரி கட்டி நானூறு வீடுகள் தாசிகளுக்குக் கொடுத்தது டக்குன்னு ஒரு ஊர்ல நானூறு வீடுகள் தாசிகளுக்குக் கொடுத்தது டக்குன்னு ஒரு ஊர்ல நானூறு தாசி ஏன். என்ன அவஸ்யம், ஊர் நிலைமை என்ன ஆகும், கோயில் கட்டின பிறகு மதில் சுவர் எதுக்கு, என்ன பயம்?''

''என்ன பயம்''—சபிதாவும் எதிரொலித்தான்.

## 9

''அந்தப் பயம் பற்றிதான் இந்தக் கதை.''

''ராஜராஜன் எதுக்குப் பயந்து மதில் கட்டினான்னு சொல்ல ஒரு கதையா?''

''ராஜா பயந்தது கதையில்லையா?''

''என்ன மெஸெஜ் என்ன செய்தி சொல்லப் போறீங்க நாவல்ல அதைத் தீர்மானம் பண்ணிக்கங்க. சரித்திரம் சொல்வது, சரித்திரக் கதைங்கறது சாதாரணவிஷயம். இந்தசரித்திரக் கதையோடசெய்தி என்ன?

சமூக நாவல்ல மட்டும்தான் செய்தி இருக்கணுமா. சரித்திரக் கதையில இருந்தா தப்பா? இந்த நாவல்ல செய்தி ராஜா பயந்தான்ங்கறது மட்டும்தானா? இதைச் சொல்லத்தான் கோயிலை அப்படி புரட்டிப் பார்த்தீங்கன்னா எழுதவே வேண்டாம்.''

''வேற என்ன வேணும்னு எதிர்பார்க்கறே?''

''இன்னிக்கு இருக்கறவனுக்கு இந்தச் சரித்திரக் கதை மூலமா என்ன சொல்லப் போறீங்க. அதை எதிர் பார்க்கிறேன், ராஜராஜன் புகழைச் சொல்றதுக்கு கோயில் இருக்கு, கல்வெட்டு இருக்கு. நீங்க வேணாம். அன்னிக்கு வாழ்ந்தவங்க வாழ்க்கையைப்பத்தி... இதை விமர்சனமா செய்ய முடியுமான்னு பாருங்க. அன்னிக்கு இருந்த வாழ்க்கை ஸிஸ்டத்தை இன்னிக்கு இருக்கிற ஸிஸ்டத்தோட ஒப்பிட்டுப் பாருங்க.''

''கல்வெட்டுல ராஜாதானே முக்கியமாகத் தெரியறாரு ஜனங்க பின்னுக்குப் போயிடறாங்களே.''

''வாஸ்தவம் ஆனா பெரிய கோயில் கல்வெட்டு ஜனங்களைப் பத்தி அதிகமாகவே சொல்லுது. அவங்க இப்படி இருந்திருக்கலாமேன்னு ஒரு அனுமானம் செய்யலாமே. நீங்க ராஜராஜனைப் பின்னுக்குத் தள்ளிடுங்க. ஜனங்களை Zoom பண்ணிக் காமிங்க. ஏழெட்டு தாசி பேர் படிச்சீங்களே... என்னது...?''

''ஆடல் வல்லான்,ஐயாறு, புகழி, ராஜராஜி, பெற்ற திருபாவை.''

''வெரிகுட். நாம புகழியை கதாநாயகியாய் எடுத்துக் கொள்வோம், தஞ்சாவூர்ல கோயில்கிட்ட தனியா ஒரு வீடு அந்தப் பொண்ணுக்குக் கிடைச்சிருக்கு. அந்த வீட்டுக்கு ஒரு நம்பர் உண்டு. அவளுக்கு ஒரு சம்பளமா நூறுகலம் நெல் உண்டு. இப்ப அவ கவர்மெண்ட் ஸர்வெண்ட். ஸ்டேட் கவர்மெண்ட் ஸர்வெண்ட்.''



''வேணாம் சபிதா. உதைக்கப்போறாங்க நம்மை.''

''அடிச்சக்கை... டக்குன்னு கம்பேர் பண்ணிட்டீங்க பார்த்தீங்களா அன்னிக்கு நிலைமையோட இன்னிக்கு நிலைமையை ஒப்பிட்டுப் பாத்திட்டீங்க பாத்தீங்களா. அந்த அம்மா டான்ஸ் ஆடறவங்க. ஏன் தப்பாவே யோசனை பண்றீங்க தாசின்னா பிராஸ்டிடியூட்னு ஏன் நினைக்கறீங்க. அவர்களோட கற்பு நிலை வேறு விதமானது அவ்வளவுதான் சற்று தளர்ந்தது அந்த அம்மா எல்லார் கிட்டயும் சிரிச்சுப் பேசலாம் அதுக்காக அவளை இழிவுப்படுத்தி விடமுடியாது அந்த அம்மா வீட்டுக்குக் கூடப் போய் உட்கார்ந்து டான்ஸ் பார்க்கலாம் என்ன வேணாலும் செய்துவிட முடியாது. அவளைப் பாதுகாக்க ஆட்கள் உண்டு. அதையும் குறிச்சிவச்சோமில்லையா.''

''தேவரடியாளுக்கு நாயகம் செய்ய தஞ்சாவூர் பரஞ்சோதி, கோவிந்த சோமநாதன்.''

''சரி, அவங்க எல்லாரையும் மரியாதையாகவே வச்சுக்குவோம். அப்படி யோசனை செய்வோம். புகழி காலைல என்ன செய்வா?''

''லேட்டா எழுந்திருப்பா.''

''ச்சீ .. ச்சீ... அல்பம் இருக்காது சீக்கிரம் எழுந்திருப்பா ஏன்னா .. சாயந்திரம் ஆறு மணிக்கு டான்ஸ் ஆரம்பிச்சு எட்டு மணிக்கு முடிஞ்சுடும். பத்து மணிக்கு தூங்கப் போயிடுவா பலபலன்னு விடியறபோது எழுந்து குளிச்சிடுவா. வேற டிரஸ் போட்டுக்கிட்டு ஒரு டோஸ் வெத்திலை பாக்கு போட்டுக்குவா.''

''காலைலியேவா?''

''காப்பி குடிக்கிற மாதிரி ஒரு பழக்கம்னு வச்சுக்குவோமே ''

''சரி மேற்கொண்டு நான் சொல்றேன். ஒரு தட்டுல பூமாலை எடுத்துக்கிட்டு பக்கத்துல இருக்கற சிவன்

கோயிலுக்குப்போவா. இவ வந்த பிறகுதான் சன்னதிக் கதவு திறக்கும். சிவலிங்கத்து மேல இருக்கற பழைய பூவை இவகிட்ட கொடுத்துட்டு இவ பூவை சாமிக்குப் போடுவார்கள்... அதாவது சாமி அன்னிக்கு இவ முகத்தில் முழிக்கிறதா ஒரு ஐதீகம். ஏன்னா தாசி என்பவள் ஒரு மங்கலச் சின்னம் அவ எதிர்க்க வந்தா மங்கலம்.''

''வேற வார்த்தைல சொன்னா ரெஸ்பெக்டபிள்.''

''நிச்சயமா.''

''கற்பூர ஆரத்தி முடிஞ்சவுடனே சன்னதிக்கு நேரே சின்னதா ஒரு டான்ஸ் நாட்டியத்தில தினம் செய்யற அடிப்படியான பயிற்சி இறங்கி தெருவுல நடக்கற போது வழியில போறவங்க மரியாதையா வழி விடறாங்க.'

''சரி... அன்னிக்கு தெரு எப்படி இருந்திருக்கும். தஞ்சாவூர் எப்படி இருந்திருக்கும்?''

''ஆம்பிளைக் கூட்டம் ஜாஸ்தியா இருந்திருக்கும். தெற்கே லங்கையிலிருந்து. வடக்கே காந்தாரம் வரைக்கும் போய் ராஜராஜன் ஜெயிச்சுட்டு வந்திருக்கான். ஜெயிச்ச தேசத்து ஆட்களையெல்லாம் கோயில் வேலைக்குப் புடிச்சிட்டு வந்திருக்கான். சோழ படை வீரர்கள் அதிகமா இருக்காங்க. ஜெயிச்சோம்ங்கறதை அடிக்கடி காமிச்சுக்கிறாங்க. படைவீரர்களுக்கு மதிப்பு ஜாஸ்தியா இருக்கு அவங்களைப் பத்தி ஒரு சின்ன பயம் இருக்கு. குதிரை சத்தம் கேட்டா. தெரு ஒதுங்குது. கூலி வேலைக்குன்னு பிடிச்சிகிட்டு வந்த வேற்று தேசத்து ஆட்கள் எழுந்து நிக்கறாங்க. சாதாரண சோழ படை வீரனுக்குக் கூட கைகட்டிப் பதில் சொல்றாங்க. வெவ்வாறு தேசத்திலிருந்து வந்த கூலியாட்கள் தமிழ் சரியாப் பேச வராத வேற்று ஆட்கள். அவங்க தமிழ் கேலி பேசப்படுது ''

''சரித்திரக் கதையில கொச்சைஉபயோகப்படுத்தப் போறீங்களா?''



' ஏன் செந்தமிழா இருக்கணும்னு ஏதாவது கட்டாயமா?''

''தேவையில்லை மேல சொல்லுங்க.''

''தமிழ் பற்றிய கேலிக்கு நடுவே அவர்கள் தோற்றுப் போன கேலியும் சேர்ந்து கொள்கிறது. சமீபத்தில் யுத்தங்கள் மறக்கப்படவில்லை. மறக்கப் படணுங்கறதுக்காகத்தான் இந்தக் கோயில் வேலையை முன்னிட்டு இந்தக் கேலிகள் சண்டையாகாம சமாதானமாக்கப்படறது. சோழ படைவீரர்கள் மீது மரியாதை இருந்தாலும் இந்த வேறு தேசக் கூலிகள் மீது ஜனங்களுக்குப் பொதுவா ஒரு அனுதாபம் பொறக்கறது. இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு தெருவுல அதிகமா நடமாடறவங்க சிற்பிகள். இவர்களை ஊர் பரபரப்பாப் பாக்குது. அவர் பேர் இது. இவர் பேர் இது. அவர் புள்ளை இது. இவர் தம்பி இது. அடையாளம் காட்ட ஆரம்பிக்குது.''

''அதாவது...''

''அதாவது இன்னொரு குரூப் படை வீரர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு குரூப் பாப்புலரா இருக்கு. அவங்க வீட்ல போட்ட டிராயிங்கை பேனர் ஸ்கெட்ச் மாதிரி வச்சுக்குவோமே, துணியில மூடி கூலியாட்கள் தலைல வச்சு எடுத்திட்டுப் போறாங்க. தெரு ஜனங்க அதை மடக்கி என்னான்னு கேட்க, பிகு பண்ணிக்கிறாங்க. வற்புறுத்தி கேக்கறப்போ சீக்கிரம் பார்க்கச் சொல்லி திரைச் சீலையை விலக்கிக் காமிக்கறாங்க. பெரிய பெரிய துவாரபாலகர்கள், யாளி முகங்கள், தாமரைத் தூண்கள். ஜனங்கள் ஒஹோன்னு புகழற போது அலட்சியமா ஏத்துக்கறாங்க. ஜனங்களைத் தாண்டி வரத்துக்கு போலீஸ் தேவைப்படுது.''

''அதாவது...?''

''சோழப் படைவீரர்கள். அடுத்த நாள் இந்தச் சிற்பிகள் தெருவுல எஸ்கார்ட்டோட வருவாங்க.

இன்னும் பெரிசு பெரிசா பேனர் ஸ்கெட்ச் கூலியாளுங்க தலைல''

''ராகவன் கூடியவரைக்கும் தமிழிலேயே யோசனை பண்ணுங்களேன் இங்கிலீஷ் வேணாமே''

''சரி குறுக்கப் பேசாத சிற்பிகள் மிடுக்கா போறாங்க. பெரிய பெரிய கூரைகள் கட்டி அதில வரை படங்கள் வைக்கிறாங்க. ராஜராஜ சோழன், வந்தியத்தேவன் குந்தவை. பிரும்மராயன் உள்ள நுழைஞ்சுப் பார்க்க வெளியே பெருங்கூட்டம் காத்திருக்கு. அவங்களும் சித்திரம் பார்க்கணும்னு ஆசைப்படறாங்க. பிரம்மராயர்கிட்ட பாக்கணுங்கற ஆசையைச் சொல்றாங்க, ராஜா போகட்டும்கறாரு. பிரம்மராயர் கொஞ்சம் உயரமா நின்று கூட்டத்தைப் பார்க்கறாரு. தஞ்சாவூர் ஜனம்ன்னு சொல்ல முடியலை. முன்பக்கமா நிக்கறதுதான் தஞ்சாவூர் ஜனம், சோழ தேசத்து ஜனம், பின்னால வெவ்வேறு முகம் தெரியுது. எல்லோரையும் உள்ள விடலாமா படம் சேதமாகாம இருக்குமா, வேலைக்கு இடைஞ்சல் வராதா. சோழ தேசத்து ஆட்கள் மட்டும் உள்ள வரலாம்னு சொல்றதா. குழம்பறார். எதுக்கும் முன்னேற்பாடா இன்னும் காவல் ஆட்களை ஜாஸ்தி போடறாரு. ராஜா வெளியே நகர ஜனம் அலை மோதுது. அப்ப கோவிந்த சோமநாதன் தாசிகளின் நாயகம் வந்து. டான்ஸ் ஆடற பொண்ணுங்க படம் பார்க்க ஆசைப்படறதா சொல்றான். சரின்னுடறாரு. லைனா. நூறு தாசி. எக்ஸிபிஷன் மாதிரி வச்சிருக்கிற படங்கள் பார்க்க வராங்க. நடனத்தோட சிற்பம் நெருக்கமான கலை இல்லையா. ஆர்வமா பார்க்கறாங்க—கொஞ்சம் சிரிச்சுப் பேசற பெண்கள் இல்லையா. சந்தோஷமா கமெண்ட் அடிக்கறாங்க. துவாரபாலகன் மாதிரி கால் தூக்கி விழியை உருட்டி ஒருத்தி போஸ் பண்றா. ஒரு சிற்பி அவளை அப்படியே நிக்கச் சொல்றான். மடமடன்னு கரிக்கட்டியால பேனர்ல படம் எழுதறான். அவ பேர் விசாரிக்கறான். இவ அவன் பேர் கேட்டுக்கறா. வெளிய வெயில். ஜனம்



கலையாம தவிக்குது. தலைமைக் காவலன் பொண்டுகளை சீக்கிரம் சீக்கிரம் சீக்கிரம்ங்கறான். படம் வரைஞ்ச சிற்பி சும்மா இரு. பெண்களை விரட்டாதேங்கறான். பேச்சு தடிக்குது. பெண்களுக்கு முன்னால இரண்டு பேரும் கௌரவம் காப்பாத்திக்க முயற்சி பண்றாங்க. பிரம்மராயர்கிட்ட மறுபடியும் கம்ப்ளெயிண்ட். பெண்களைப் போகச் சொல்லுங்கறான். சிற்பி முன்னால வந்து அந்தப் பொண்ணுங்க மாடல் மாதிரி. அவங்க துணை இல்லேன்னா வேலை நடக்காதுங்கறான் சரி ஜனங்களைப் போகச் சொல்லு. இன்னொரு நாள் காட்டறதா சொல்லுங்கறாரு. ஜனங்க கலையாத போது பின்னாடி நிக்கற கூலி ஆட்களை குதிரையை விட்டு முதல்ல அடிச்சு விரட்டச் சொல்றாரு. அப்பாவி கூலி ஆட்கள், வேறு தேசத்து ஆட்கள் அடிபடறாங்க ஜனக்கூட்டம் வெறுப்போட கலையுது. சிற்பியை இது நியாயமான்னு கேட்கிறார் ஒரு ஆள். எனக்குத் தெரியாது. சோழப் படை வீரர்களை கேள்ன்னு கை காமிக்கறான். படை வீரர்கள் அதிகம் அலட்டறதா ஜனங்க முடிவு பண்றாங்க. மறுபடி படைத் தலைமைக்கும் சிற்பிகளுக்கும் வாக்குவாதம். சிற்பி ஜனங்களை நானே உள்ளே விட்டுட்டு இரண்டு படம் கிழிச்சு போட்டுட்டு ராஜாகிட்ட காவல் சரியில்லைன்னு சொல்லிடுவேன்ங்கறான். பொண்ணுங்க சிரிக்குதுங்க. படைத்தலைமை வாயை மூடிக்கிட்டுப் போகுது ஜனங்களை இன்னும் வேகமா கலைக்குது.

பெண்களுக்கும், சிற்பிகளுக்கும் ஒரு அன்யோன்யம் வருது. ராத்திரி டான்ஸுக்கு சிற்பிகளை வரச் சொல்றாங்க அங்கங்க தாசி வீடுகள்ள ராத்திரி சிற்பிகள் கூட்டம். முதல் மரியாதை, முதல் தாம்பூலம், அவங்களுக்கு பிடிச்ச பாட்டு அவங்களுக்குப் பிடிச்ச டான்ஸ்.

''அதாவது...''

''அதாவது பதினைஞ்சு வருஷமா படை வீரனுக்கு சோழ தேசத்துல இருந்த மதிப்பு குறைஞ்சு சிற்பிக்கு

அதிகமாகிறது. யுத்த காலம் வரைதான் போர் வீரர்கள். சாதாரண காலத்துல அவன் வெறும் காவல்காரன். முன்ன எவ்வளவு அத்துமீறினாலும் படை வீரனை சகிச்சுக்கிட்டிருந்த கூட்டம் இப்ப சகிச்சுக்கல. தொரத்த வந்துட்டான் போடாங்கற மாதிரி எதிர்ப்பு காமிக்குது. அந்த ஆத்திரத்தை கூலி ஆட்கள் மேல படை வீரன் காமிக்க ஒரு ஆள் முறைக்கிறான். ஏன்னா அவனுக்கும் சோழ தேசத்துக்கும் சம்பந்தமில்லை. கைதியா இங்கே வந்தான் போர் வீரன். அடிதடி நடக்க எதிர்த்த கூலி ஆளை, கழுத்தில கைல சங்கிலி மாட்டி இழுத்துக்கிட்டுப் போறாங்க. ஜனங்க அனுதாபம் இப்ப..."

"கூலியாட்கள் மேல."

"தனிச்சுப் போனது..."

"சோழப்படை வீரர்கள்."

"யெஸ். இதுதான் நாவல் ஆரம்பம். யுத்தம் முடிஞ்ச பிறகு வர குழப்பம். கூட சண்டை போட்ட கூலிகளை சோழர் படை தேட ஜனங்க தப்பிப்போக விட்டுடறாங்க. சும்மா அடிபடறாங்களேன்னு ஒரு அனுதாபம்."

"புரியுது."

"இப்ப நம்ப நாவலை மெள்ள தாசிப் பக்கம் திருப்பணும். அவங்க எப்படி இருந்திருப்பாங்கன்னு யோசிக்கணும்."

"எப்படி இருந்திருப்பாங்க...?"

"ரொம்ப மலர்ச்சியா இருந்திருக்கணும்."

"ஏன்?"

"கோவில் மரியாதை. க்வார்ட்டர்ஸ், நூறு கலம் நெல், கவர்மெண்ட் சம்பளம், சிற்பிகள் சகவாசம்."

"சிற்பி சகவாசம் என்ன உசத்தி?"

"நிச்சயமா உசத்திதான். போர் வீரன்ங்கறவன் முரடன், முட்டாள். சிற்பி இன்டலக்சுவல் கம்பானியன். பேச விஷயமுள்ள ஆண். கலையோட சம்பந்தப்பட்ட



நபர். அவனும் பாட்டு, டான்ஸோடு தொடர்பு உள்ளவன். அதேசமயம் நளினம் உள்ளவன். எல்லா காலத்திலேயும் பொண்ணுக்குப் பிடிச்சவன். இப்படிப் பட்ட ஆம்பிளைதானே..."

"புரியுது. மேலே சொல்லுங்க."

"நீ யோசனை பண்ணேன்."

"தாசிங்கறவ வெர்ஜினான்னு ஒரு கேள்வி வருது."

"அவஸ்யமில்லை."

"கேள்வியா?"

"இல்லை. வெர்ஜினிட்டி பத்தி யாருக்கும் அக்கறையில்லை. அது அவ இஷ்டம். அவ சௌகர்யம்."

"அப்போ தாசி, கற்பு பற்றி சுதந்திரம் உள்ள பெண்."

"யெஸ் சமூகம் கொடுத்த சுதந்திரம்."

"மரியாதையோட கொடுத்த சுதந்திரம்."

"ஆமா"

"அதை அவ எக்ஸ்ப்ளாயிட் பண்ணிக்குவாளா?"

"எக்ஸ்ப்ளாயிடிங் எப்ப வருது சபிதா. பயம் வர்ற போதுதானே. தாசிக்கு என்ன பயம் இருக்கும் சொல்லு."

"ஜனங்களுக்கு உள்ள பயம் அவளுக்கும் வருமில்லையா. சோழப் படைவீரனைப் பார்த்தா அவளும் ஒதுங்கணுமில்லையா?"

"புரியலை சபிதா."

"சுதந்திரத்தை அத்து மீறலா பயன்படுத்தறது மனுஷ புத்தி. போர் காலத்துல படை வீரன் குடிச்சிட்டு ஆடினா பொறுத்துக்கற மாதிரி, தாசி இதைப் பயன்படுத்துவாளா?"

"யார் மேலே?"

"சோழப் படை வீரன் மேலே."

"ஏன்?"

''அந்த க்ஷணத்துல இளப்பம் அவன்தானே.''

''இளப்பம்னா சொல்றே.''

''கொஞ்சம் நிலைமை சரியுதுன்னுதானே நாவல்ல ஆரம்பிச்சோம்.''

''தாசியை குரூர புத்தி உள்ளவளா காமிச்சு என்ன செய்தி சொல்லப் போறோம்.''

''ஒரு காலகட்டம். ஒரு வகுப்புக்குக் கொடுத்த சுதந்திரத்தை அத்துமீறுவது தவறு. சுதந்திர அத்துமீறலில் மனித நேயம் நசுக்கப்படுகிறது. இரு இடத்தில் மனித நேயம் சுதந்திர அத்துமீறலில் நசுக்கப்பட ஒன்றன்பின் ஒன்றாய் சங்கிலித் தொடராய் விளைவுகள் உண்டு. கலைக்குக் கொடுத்த மரியாதை அது. தனி ஆள் தனக்குக் கிடைச்சதா நினைக்கக் கூடாது.''

''ம்ம்ம்...''

ராகவன் மெல்ல படுக்கையில் சரிந்தான். கைகளை தலைக்குப் பின் கட்டி யோசித்தான்,

''என்ன... சாஞ்சிட்டீங்க...''

''நல்லா சொன்னே சபிதா.''

''என்ன சமாச்சாரம்?''

''வேறென்னவோ நினைப்பு வந்திடுச்சு.''

''என்ன நினைப்பு?''

''மீனாட்சி நினைப்புதான்.''

''ஏன் திடீர்னு?''

''மனிதநேயம் ஒரு இடத்தில் நசுக்கப்பட, சங்கிலித் தொடராய் விளைவுகள் உண்டுன்னியே.''

''மீனாட்சியை நசுக்கினதா யார் சொன்னா?''

''நான் நசுக்கறேனோன்னு படுது.''

''அதுக்கு நான் விடமாட்டேன்.

''அவ விடணுமே!''

''புரியலைங்க.''



''அவ தன்னைத்தானே நசுக்காத இருக்கணும். நாம இரண்டு பேருமே அவளை லவ் பண்றது அவளுக்குத் தெரியணும்.''

''தெரியாமப் போகாது ராகவன்.''

''போயிடுச்சுன்னா... நீ உள்ள உறவேகூடாதுன்னு அவ என்னை நசுக்கிட்டா?''

''என்ன ஆயிடும்?''

''ஒரு இடத்தில் மனித நேயம் நசுக்கப்பட சங்கிலித் தொடராய் விளைவுகள்.''

''குழப்பறீங்களே...''

''இங்க சுதந்திர அத்துமீறல் என்னுது. கலை கொடுத்த சுதந்திர அத்துமீறல். எழுதறவன்னு அவ எனக்குக் கொடுத்த சுதந்திரத்தின் அத்துமீறல். எங்க வீடு கொடுத்த சுதந்திரத்தின் அத்துமீறல்.

''ம்ஹூம். ஒரு மனித நேயம் நசுக்கப்படும்சுதந்திர அத்து மீறிலின் விளைவுகள்தான் மோசம். நம்ம அத்து மீறல்ல, மீனாட்சி நிச்சயம் நசுங்க மாட்டாங்க நசுக்கப்பட விடமாட்டேன்.''

## 10

ராகவனை சபிதா சற்று நேரம் மௌனமாகப் படுத்திருக்கும்படி விட்டாள். சட்டென்று உள்ளே வழிந்த குழப்பத்தால் ராகவன் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. தன்னோடு மிக நெருக்கமாய் அந்தரங்கமாய் 'சந்தோஷமாய்ப் பேசுகிறபோதெல்லாம் இவனுக்கு மீனாட்சியின் நினைவு வந்து விடுகிறது. அதுவும் அறைக்குள்ளிருந்து பேசும்போது அதிகம் வெளிப்படுகிறது. வெளியிடங்களில் கைகோர்த்து நடக்கும்போது சகலமும் மறந்தவனாகி விடுகிறான். எதிர்பாராமல் மூன்றாம் மனிதரைச் சந்திக்கும் போது கூட சங்கடமின்றி 'இது சபிதா. என் சிநேகிதி' என்று

அறிமுகப்படுத்துகிறான். 'ஸ்நேகிதி மட்டும்தானா" என்று சில பேரிடமிருந்து விஷமமாக கேள்வி வருகையில் ஸ்நேகிதிக்கும் மேலாக என்று கூச்சமின்றி சொல்கிறான். முகத்தில் கலவரமோ, பயமோ, குழப்பமோ இன்றி எதிராளியைச் சந்திக்கிறான். உள்ளே அறைக்குள் பேசும்போது மட்டும் மீனாட்சியின் நினைவு முட்டி விடுகிறது. அதுவும் அறைக்குள் உட்கார்ந்து பேசும் போது மட்டும்தான். இழுத்து அணைத்துக்கொண்டு மூக்கோடு உரசும்போது மறந்து விடுகிறது. இப்படி உறவாடுகையில் மனதில் நெருடலாயிருக்காதோ... சபிதாவுக்குக் கேள்வி வரும் "இப்ப நினைச்சுக்கங்களேன் மீனாட்சியை" என்று ஒரு முறை வேண்டுமென்றே மனசை கிள்ளியிருக்கிறாள். ஒரு க்ஷணம் தயங்கி விழி விரித்து மீனாட்சி மீனாட்சி, என் மீனாட்சி' என்று அவளை இன்னும் இறுக அணைத்துக் கொண்டிருக்கிறான்.

"அடிசக்கை.. நான் இப்ப மீனாட்சியா...மெட்ராஸுக்குப் போய் சபிதா சபிதான்னு சொல்வீங்களா.. இந்த மாதிரி அவங்களோடு இருக்கும்போது சபிதா பேர் வந்துடுமா."

"வருமே... வந்திருக்கே..."

"தப்பு ராகவன்...மீனாட்சிக்கு கஷ்டமாயிருக்கும்!"

"ம்ம்...கஷ்டப்பட்டு பிடிச்சுத் தள்ளியிருக்கா..."

"என்ன செய்திங்க..."

"இதே மாதிரிதான் தலைக்குப் பின்னர் கையைக் கோர்த்துக்கிட்டு தூங்கிப் போயிட்டேன்."

"இப்படிச் செய்யாதிங்க ராகவன்."

"எது...உன்னைக் கட்டிக்கிட்டு மீனாட்சி பேரை சொல்றதா..."

சபிதா ஒரு க்ஷணம் மௌனமாக இருந்தாள். "எனக்கும் இது நெருடல்தான். ஆனால் நான் தாங்கிக்கு



வேன். மீனாட்சி தாங்காது. வீணா என்னைப்பத்தி நிறையப் பேசி அவங்களுக்கு வெறுப்பேத்தாதிங்க.'

"உனக்குப் பிடிக்கலைன்னு சொல்லிட்டுப் போயேன். மீனாட்சிக்கு பரிஞ்சு பேசற மாதிரி எதுக்கு வேஷம் போடறே. இந்த ரூம்ல மீனாட்சி பேரே சொல்லக்கூடாதுன்னு சொல்லிடு. ஒளிவு மறைவா பேசுவானேன்?"

"வேணாம், நான் எதுவும் பேசலை. எது பேசினாலும் குத்தமாப் படற நேரம் இது ஒன்னைத் தொட்டு ஒன்னா பேச்சு வளர்ந்துடும். விட்டுடலாம்"—சட்டென்று அன்று பேச்சை முடித்துக் கொண்டாள். இன்று மறுபடி ஆரம்பிக்கத் தயங்கினாள். முன்னூறு கிலோ மீட்டர் தள்ளி வீட்டை விட்டு வந்து இன்னொரு பெண் எதிரே மனைவியின் நினைவில் புழுங்கிக் கொண்டிருப்பவனை என்ன செய்யமுடியும்? மௌனமாய் விட்டுவிட வேண்டியதுதான். அவனாகவே அவள் நினைவிலிருந்து மீளும்வரை பொறுத்திருக்க வேண்டியதுதான். மீனாட்சியாவது அதட்டலாம் 'போறும் உங்க சபிதா பத்திப் பேச்சு' என்று கடுகடுக்கலாம். நான் என்ன செய்ய முடியும்?

ராகவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். துண்டால் முகத்தை அழுத்தத் துடைத்துக் கொண்டான்.

"புகழியை எங்கே விட்டோம்?"

"நடுத் தெருவுல."—சபிதா இடக்காகப் பதில் சொன்னாள்.

"இல்லியே சிற்பக்கூடத்துல போஸ் கொடுக்கற மாதிரியில்லே...?"

"எல்லாம் ஒண்ணுதானே? மீனாட்சின்னு கண்ணு சொருக உட்கார்ந்துட்டா மத்தவங்க எங்கே இருந்தா என்ன...உங்களுக்கு?"

"அஞ்சு நிமிஷம் கண்ண மூடிட்டு வீட்டை யோசனை பண்ணினது உனக்குக் கஷ்டமாயிடுச்சா?"

''எனக்கு எந்தக் கஷ்டமுமில்லை. உங்க கஷ்டம் தான் மனசை அறுக்குது. இத்தனைக் கண் சொருகலா பெண்டாட்டியை நினைக்கிற ஆள் இங்க வந்து லோல்படுவானேன்னு பாவமா இருக்கும்.''

''நான் ஊருக்குப் போனபிறகு பரிதாபப்படு. இப்ப மேற்கொண்டு கதைக்குப் போகலாமா சரி—புகழியை குரூரமுள்ளவளா காண்பிக்க வேணாம். கொஞ்சம் குழப்பமுள்ளவளா காட்டுவோம். படைவீரர்—சிற்பி.... இரண்டுக்கும் நடுவுல யாரைத் தேர்ந்தெடுக்கறதுங் கறதுல... யாருக்கு அதிகமா மதிப்பு கொடுக்கறதுங் கறதுல குழப்பம் வருது. ஆறு மணிக்கே சிற்பி கூட்டத்தை வரவழைச்சு டான்ஸ் ஆட ஆரம்பிச்சுடறாங்க. எட்டு மணிக்கு வரும் படைவீரனுக்கு உட்கார இடமில்லாமப் போவுது. சிற்பிகளைப் போகச் சொல்லவும் முடியாது. ஏதாவது காரணம் காட்டி படைவீரனை நகர்த்தி விட முடிகிறது படைவீரர்கள் முந்திக் கொண்டாலும் இன்று நடனமாட உடல் நிலை சரியில்லை என்று சொல்லிவிட முடிகிறது.

''வெறும் டான்ஸ் மட்டும்தானா அங்கே. சிற்பியும் தாஸியும் என்ன பேசுவாங்க...''

''சிற்பம் பத்தித்தான் அதிகம் பேசமுடியும். பொதுவா பொம்மனாட்டி கேள்வி கேட்டாலே விலாவாரியா பதில் சொல்றதே ஆம்பிளைக்குப் பழக்கம். இந்தக் கதையை எப்படி எழுதினீங்கன்னு நீ கேட்டால் பெரிய பதிலா வரும். இதையே நம்ம வள்ளிநாயகம் கேட்டா மழுப்பலாத்தான் சொல்வேன்.''

''வள்ளிநாயகத்துக்கு என்னைவிட இலக்கியம் நல்லாத் தெரியும். டபாய்க்கறது கஷ்டம்.''

''ஆமா அதுவும் ஒரு காரணம். வள்ளியோட பேசினா அது சண்டைலதான் முடியும். பிடிச்ச பொம்மனாட்டியோட பேசினா நாம சொல்றதுதான் வேதம்.''

''அடடா... என்ன கண்டுபிடிப்பு... சரி... புகழி சிற்பிக்கு பிடிச்ச பொம்மனாட்டி... என்ன பேசுவான்?''



''கல்லு தேர்ந்தெடுக்கறதிலேர்ந்து கடைசி நகாசு வேலை வரைக்கும் சொல்லித் தருவான் 'என்ன இது இத்தனை கோடு போட்டிருக்கீங்க— ஒரு பாறைலே'ன்னு கேக்கறதா வச்சுக்குவோம். வெட்டறது இது... விடறது இதுன்னு சுலபமா சொல்லித் தருவான். நுணுக்கமா சுத்துக் கொடுப்பான். காரணம் புகழி சிற்பம் பண்ண வரமாட்டா... ரா முழுக்க நெருக்கமா உட்கார்ந்து பேசிக்கிட்டும் இருக்கலாம்.''

''உங்ககிட்ட என்ன பேசினாலும் எனக்குக் கதை எழுத வராதுங்கிறீங்க.''

''அப்படிச் சொல்லலை. ரொம்ப நுணுக்கமா சொல்லிக் கொடுத்தா வள்ளிக்குக் கதை எழுத வந்தாலும் வந்துடும். அது நல்லதில்லை பாரு.''

''ஐயோ பாவம் வள்ளிநாயகம். நல்ல மனுஷன். இது தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவார்.''

''சின்னச் சின்ன சம்பவங்களா சிற்பிகள் செல்வாக்கு ஊர்ல வளர ஆரம்பிக்கறதை சொல்லணும். இரண்டு மூன்று நடன முத்திரை சிற்பங்களைப் பார்த்ததும் ராஜராஜன் அதிசயப்பட்டுப் போறான். 'இது எப்படி... யார் சொல்லி செய்தது'ன்னு கேட்க இரண்டு மூணு தாசி பேர் சொல்றாங்க. அதில புகழியும் ஒன்னு. நாதூறு வீடு நிவந்தம் விட்டது சட்டுனு நினைவுக்கு வருது ராஜாவுக்கு. ஒரு திடீர் இன்ஸ்பெக்ஷன். பாராட்டு. அங்கங்கே உடனே சிறிய பரிசுகள் கொடுக்கறான். புகழியிடம் வீடு இடம் சௌகர்யமான்னு கேட்கறான். வீட்டை எப்படி வச்சிருக்காங்கன்னு சுத்திப் பாக்கறான். சுவர்ல நிறைய கோடு. கட்டிட வரைபடம். ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்க்க புகழி வரைஞ்ச டிசைன்னு சொல்றாங்க. மேற்கொண்டு கேள்வி கேட்க நிறைவான பதில் கிடைக்கிறது. புகழிகிட்டேர்ந்து. ராஜாவுக்கு ரொம்ப சந்தோஷம் இவ்வளவு ஈடுபாடா. இவ்வளவு புத்தியா என்று மலைச்சு நிற்க... இது

கோவில் விஷயம். எனக்கு மட்டும்தானா ஈடுபாடு. ஊர் மொத்தமும் கோபுரம் நல்லபடியா முடியணும்னு ஆசைப்படுது. கோவில் கட்டிடம் சுத்தி கட்டுக்காவல் ரொம்ப அதிகம். எல்லாரும் பார்க்கணும். வாரத்தில் ஒரு நாள் பார்க்க அனுமதிக்கணும்னு சொல்றா. சரின்னுடறான் ராஜா. புகழி சொல்லி அனுமதின்னு ஊரே பேசிக்குது சந்தோஷமா பாதி கட்டிடத்தை சுத்தி சுத்திப் பார்க்குது. என்ன இருந்தாலும் பொம்பளை மனசு, பொம்பளை மனசுதான்னு பேசிக்கறாங்க. சிற்பிகள் சிலருக்கு வருத்தம் பாதி வேலைல பார்க்கக் கூடாதுன்னு ஒரு சட்டம் சொல்றாங்க. ஒரு சின்ன பொண்ணே இவ்வளவு சஜெஷன் சொல்லறப்போ ஊர் ஜனம் நிறையவே சொல்லும்... கேட்டுக்கறது தப்பில்லைங்கறான் ராஜராஜன்.

புகழி தெருவுல போனா கை கூப்பறாங்க. குடும்பத்துப் பொண்ணுங்க கூட சௌக்யமான்னு சிரிக்கறாங்க. அவ கண்ணுல படும்படி பெரிய டிசைன் கோலமா வீட்டு வாசல்ல போடறாங்க.

தங்களுக்கு மிஞ்சி தாசிகளுக்குப் பேரும், மரியாதையும் போறதுன்னு சிற்பிகளுக்கு உள் வருத்தம். எங்கே காமிக்க கோபத்தை? படைவீரன்தான். காவல் காக்கறவனை ஒரு கைபுடின்னு அவனை கல்தூக்க வைக்கிறாங்க. கூலி ஆட்கள் போறலைன்னு சொல்லி சோழப் படைவீரர்களும் கல்தூக்கற ஆளா நிக்கும்படி ஆயிடுது.''

''அப்படின்னா ஸோல்ஜர்ங்கற மதிப்பு சுத்தமாப் போச்சு.''

''ஆமாம். ஆனா கோவில் காரியம் ராஜாங்கக் காரியம். எடுத்துப் பேசமுடியுமா, கடைசில 'ஒத்தைக் கல்வேணும். கோபுரத்துமேல வைக்கணும்'னு தலைமை சிற்பி கேக்கறப்போ தனியா ராஜா சில ஆட்களை பெரிய ஒற்றைப் பாறாங்கல் கொண்டுவர செலக்ட் பண்றாரு. கல்தேர்ந்தெடுக்க ஆள் வேணும். சிற்பிகளை அனுப்ப முடியாது. எல்லோருக்கும் வேலை பளு ஜாஸ்தி. யாரை அனுப்பலாம்ங்கற போது ஒரு சிற்பி புகழி பேரைச் சொல்றான். அவளுக்குக் கல் பார்க்கத் தெரியும் என்றான். சரின்னு சொல்லிடறான் ராஜராஜன்.



புகழி தலைமையிலே பதினாறு பேர் தெற்குப் பக்கம் போகணும். காடு மேடு ஆறுதாண்டி கல் எடுத்து வர இரண்டரை வருஷம் ஆகும். நோகாம வீட்டுக்குள்ள டான்ஸ் ஆடிக்கிட்டிருந்த பொண்ணு, பதினாறு முரட்டு ஆட்களோட தஞ்சாவூரை விட்டுப் போறா. கவலையோட போறா. நாலு சோழப் படை வீரர்கள். மத்த பன்னிரெண்டு பேரும் வெவ்வேறு தேச ஆட்கள், தலைமை ஒரு பெண். தாசிப் பெண்.''

புரியுது ராகவன். அத்தனை பேரையும் ஒரு நிலைக்கு அடக்கிக் கொண்டுவந்து கல் எடுத்து வரணும்... புரியுது. பொண்ணையா அனுப்புவான் ராஜா. இவ்வளவு பெரிய காரியத்துக்கு...இது நிசமா...இல்லை கற்பனையா.''

''இல்லை கற்பனை. உறவுங்கறது உண்மையில் என்ன...எது உறவுன்னு யோசனை வந்து அதனால வந்த கற்பனை. வாழ்க்கையில் ஒரு குறிக்கோள். ஒரு நல்ல குறிக்கோள் வந்தா கூட்டமா இருக்கிற உறவு முக்கியமில்லை. அந்தச் சட்டமே நல்ல குறிக்கோள் வேணும்னு வச்சுது, விஷயம் உசத்தியா இருந்தா அது சட்டத்துக்குள்ள அடங்கணும்னு அவஸ்யமில்லை. பர்பஸ் முக்கியம். செய்ய வேண்டிய காரியம் முக்கியம். புகழிக்கு ஒரு முக்கிய குறிக்கோள் கிடைச்சுப் போச்சு. கத்துக்கிட்டது பாதி... தானா வந்து தலையில கவிழ்ந்தது பாதி. சிற்பம் பத்தி தெரிஞ்சுக்கிட்டது ஒரு சந்தர்ப்பம். அதை வளர்த்துக்கிட்டது ஆர்வம் அறிவு. அதைப் பயன்படுத்த ஒரு சந்தர்ப்பம் வர்றபோது பதினாறு முரட்டு ஆட்கள் தலைமன்னோ, நிழலை விட்டுத் தெருவுக்கு வரணுமேன்னோ கவலைப் படலை. காரியம் சரியா முடியணும்னு கவலைப்படறா. உலகத்திலே சில

பேருக்கு இப்படி அமைஞ்சிடும். தலையெழுத்தா விதியா அமையும். இனிமே அவளுக்கு அந்தப் பதினாறு பேரும் முக்கியம்.''

'புரியுது...''

''என்ன புரியுது?''

''பின்னால சொல்றேன்.''

''முடியாது இப்பவே சொல்லு.''

''கஷ்டப்பட்டு புகழி மூலமா உங்களை நியாயப் படுத்திக்கிறீங்க.''

''அவஸ்யமே இல்லை. அடுத்த ஆள் யாருக்கும் நியாயப்படுத்த அவஸ்யமேயில்லை. முரட்டுத்தனமாகவே எதையும் முடிச்சிடலாம். எனக்குள்ள அடி ஆழத்தில் ஒரு கேள்வி நிக்குது. அதுக்குப் பதில் தேடறேன்.''

''என்ன கேள்வி?''

''நீ எவ்வளவு அவஸ்யம் எனக்கு...அந்த அவஸ்யம் நியா ஏன் இருக்கணும். உன்னை எடுத்துக்கிட்ட பிறகு என் காரியம் என்ன... எவ்வளவு தூரம் உன் உறவு துணைவரும்.''

''என்ன சுயநலம்?''

''சுயநலம்தான். லவ் பண்றதுன்னா என்னான்னு நினைச்சுக்கிட்டு இருக்கே. உனக்காக உயிரை கொடுக்கிறதா. ஒரு ஆளுக்கு உருகித் தொலைகிறதா.''

சபிதா மௌனமாய் இருந்தாள். தீவிரமாய் யோசித்தாள்.

''அப்ப என் சுயநலம் என்னன்னு கேட்கட்டுமா?''

''நானே சொல்றேன். இப்ப இருக்கற குறையை நிவர்த்தி செய்யறது. உன் கல்யாணம் பிரச்சனைங்கற போதுதான் எனக்கு ஹலோ சொன்னே. என் கூட ஊர் சுத்தறே. உன் அளவில் உன் ஸ்கேல் பிரகாரம் நான் உனக்கு சரியான துணை. ஆனா ஒரே ஒரு குறை. நான் கல்யாணம் ஆனவன். ஆன பிறகும் நிறைவு இல்லாதவன்.''



''ராகவன்... எல்லோரும் இப்படி பறக்க ஆரம்பிச்சிட்டா கஷ்டமில்லையா?''

ராகவன் வாய்விட்டுச் சிரித்தான். ''கஷ்டம்தான். பறக்காம பல்லைக் கடிச்சுகிட்டுப் பொறுத்துக்கிறாங்க நிறையபேர்.''

## 11

''என்ன கஷ்டம் வந்தாலும் சமாளிக்க முடியும்னு நம்பிக்கைலதான் இந்த காரியத்துல இறங்கினீர்களா?''

''கஷ்டப்படறதே முக்கியம்னு இறங்கலே. இதுல கஷ்டம் வரும்னு தெரியும். எதிர் நீச்சல் கைஓயற மட்டும் போடணும்னு தெரியும். தெரிஞ்சுதான் இறங்கறேன்.''

''உங்க வலிவு மட்டும்தான் நம்பிக்கையா? எதிர் நீச்சல்போட முடியாத அளவு ஆறு ஆழமில்லை; அடிச்சுக்கிட்டு போற வேகமில்லைன்ற தைர்யம் கூடவே இருக்குதில்லே.''

''மீனாட்சியை ரொம்பப் பயந்து நடுங்கறவள்னு நினைச்சக்கிட்டிருக்கியா? மீனாட்சியைத் தூண்டி விட ஏராளமா ஆட்கள் இருக்கு. கடைசி வரை அவளை ஆவேசமா ஆடவிட மனுஷங்க உண்டு. தெரிஞ்சவங்க. தெரியாதவங்க. சம்பந்தம் உள்ளவங்க. இல்லாதவங்க அத்தனை பேரும் அவளை முன்னே தள்ளி சங்கு முழங்கி யுத்தம் செய்யப் போறாங்க. மீனாட்சி ஒரு சாக்கு என்னை மடக்கி அடக்கிப் போடறது நிறையப் பேருக்கு முக்கியம்.''

''என்ன செய்யப் போறீங்க?''

''புகழி செய்த காரியம்தான். புகழிக்கு கோயில் கட்டிடம் முக்கியம். பதினாறு பேரும் கருவிகள். அவன் உள்பட வெவ்வேறு குணமுள்ள பதினாறு ஆட்களும் கருவிகள். எப்பாடு பட்டேனும் அவங்களை அமைதி

பண்ணி கல் உருட்டிக்கொண்டு வந்து கோயில் மேலே வச்சிடணும். நானும் கல் கொண்டுவர தாசி மாதிரி தான். ஒரு பெரிய கட்டிடத்துக்கு என்னால உண்டான காரியம்தான். இனி, புகழிக்கு சகல நேரமும் கல்தான் ஞாபகம், எனக்கும் அப்படித்தான். புகழிக்கு அந்த மாதிரி ஒரு நிலை ஏற்பட்டுப் போச்சு. எனக்கும் ஏற்பட்டிருக்கு. நாட்டியம் ஆடற பொண்ணுக்கும் கோயில் கட்டிடத்துக்கும் என்ன சம்பந்தம். ஆபீஸ் குமாஸ்தாவுக்கும் இலக்கியத்துக்கும் என்ன பிணை, நாட்டியம்ங்கறது நூறு கலம் நெல், சோறு, வீடு. எனக்கும் என் உத்தியோகம் அப்படித்தான். இடையில் ஆர்வக் கோளாறா கத்துக்கிட்டு விவரம் தெரிஞ்சு திறமை கூறப்போ பொறுப்பு புதுசா விழும். கல் கொண்டு வர்றது ராஜராஜன் கட்டளை. எனக்கு இது யாரும் சொல்லாத கட்டளை. என் காலம் எனக்கு கொடுத்த நிர்ப்பந்தம். விட்டுடுங்க ராஜான்னு ஓடிப்போயிடலாம். எனக்கு அவ்வளவெல்லாம் தெரியாதுன்னு டபாய்ச்சுடலாம். நிழல்ல டான்ஸ் ஆடிக்கிட்டுக் கிடக்கலாம். தோகாதகலை வளர்க்கலாம், கோவில் கட்டிடம் பொது ஜனக் காரியம். காலம் காலமா நிற்கப் போற விஷயம். வம்சம் வம்சமா நல்லது நடக்க. நம்பிக்கை கொடுக்க உயரமா நிற்கிற நினைவுச் சின்னம். மலைச்சுப் போய் மனுஷாளை நிறுத்த மட்டும் உதவியில்லை. அந்த மலைப்புக்குப் பிறகு உள்ளே கிளர்ச்சியை அமைதியைக் கொடுக்கிற கட்டிடம். அந்தக் கட்டிடத்துக்கு ஒரு கல் புகழியின் உபயம்...''

''அப்போ நீங்க ஆம்பிளை தாசி...''

''என் ஸ்நேகிதன் ராஜு அடிக்கடி சொல்வான். 'நம்ம அலையற புத்திக்குப் பொம்பளையாய் பொறந்திருந்தா தாசியாத்தான் போயிருப்போம்னு. அலையற புத்தி மட்டும் தானா நமக்கு'ன்னு பதிலுக்குக் கேட்டேன். அலையற புத்திக்கப்புறம் ஒரு நல்ல குணம்



இருக்கு. அதனாலதான் நான் தாசின்னு சொன்னேன். 'தாசிக்கும் பிராஸ்டிடியூட்டுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு'ன்னு பதில் சொன்னான். மரபு, மரபில்லாதது, சௌர்கர்யம், கஷ்டம், மதிப்புள்ளது, மதிப்பில்லாதது. இதெல்லாம் அப்புறம். முதல்ல காரியம் முக்கியம். இது சரியா முடிய யார் உதவி வேணுமோ அவங்க முக்கியம்.''

''சரி, நீங்க புகழி. நான் யாரு அங்கே?''

''கூலி ஆள் விடுதலை வேண்டுகிற அடிமைப்பட்ட கூலிப் படைவீரன். சோழ வீரன் அறைஞ்சி பின்னுக்குத் தள்ளினவன். முரண்டி எதிர்த்தபோது சங்கிலி கட்டி இழுத்துப் போகப்பட்டவன். உனக்கு இது பனிஷ்மெண்ட். போடா போய் கல் இழுத்து வான்னு அனுப்புறாங்க. புகழிக்கு அவன் நிலைமை புரியுது. அவன் மேலே மெலிசா ஒரு காதல் வருது முதல் முதல்ல ஒரு ஆள் அதுவும் பெண் இதமா மதிச்சுப் பேசுறப்போ அந்தக் கூலி ஆளுக்கும் அதாவது அடிமை வீரனுக்கும் சந்தோஷம் வருது. நன்றி கலந்த சந்தோஷம். நான இருக்கேன் துணைக்கு, கவலைப்படாதே எது வந்தாலும் உனக்கு பக்கபலமா நிற்பேன். சத்யம்னு சொல்றான்.''

''யப்பா...ஆம்பளைய பொம்பளையா மாத்தி பொம்பளைய ஆம்பளையா மாத்தி..யாருக்கு புரியப் போறது இது...?''

''ஆம்பளையானா என்ன பொம்பளையானா என்ன? உடம்பு அமைப்புதானே வித்தியாசம். உணர்ச்சி, லட்சியம் வெளிப்பாடு எல்லோருக்கும் ஒண்ணுதானே சபிதா.''

''வாஸ்தவம். எனக்கு இப்போ கொஞ்சம் கதைப் போக்கு புரியுதுங்க ராகவன். மேலே சொல்லுங்க.''

''இரண்டரை வருஷம் கஷ்டப்பட்டு, சரியான பாதையில்லாத பாதையில் ஆறு தாண்டி, பள்ளம் தாண்டி, மேடு தாண்டி, கல் எடுத்துக்கிட்டு வராங்க.

அவங்களுக்குள்ள ஆயிரம் சண்டை, மோதல், அடிதடி-மனஸ்தாபம். பேச மாட்டேன்ற கோபம். புகழி ஒவ்வொரு ஆளையும் ஒவ்வொரு விதமா சமாளிச்சு கல் எடுத்துட்டு வர்றா. கல்லு, தஞ்சாவூர் வர்றப்போ— உடம்பு ரொம்ப வாடிப் போனாலும் பளபளப்பு குறைஞ்சு போனாலும் ஜெயிச்ச நிறைவு கண்ணுல தெரியுது. பதினாறு பேரும் குணத்தில் மாறிப் போய் ஒத்துமையா இருக்கிறது தெரியுது.''

''பிறகு''

''புகழிக்கு 'ஆய்ச்சி' என்கிற பட்டம். ஆய்ச்சின்னா இடைசாதின்னு அர்த்தமில்லை. மரியாதைக்கு உரியவள்ன்னும் சொல்லாம். செட்டி நாட்டுல ஆச்சின்னு பெரியவங்களை இப்பவும் கூப்பிடறதில்லையா...மத்த விரர்களுக்கு பொற்கிழிகள், கல்லு வந்த சந்தோஷம், சரியான கல்லுன்னு அப்ரூவ் ஆன சந்தோஷம். பதினாறு கூலி ஆட்களுக்கு லேசான வேலை. மேற்பார்வை மாதிரி கொடுக்கப்படறது. புகழிக்கு நாட்டியம் ஆட இஷ்டமில்லை. கோவில் கட்டிட வேலையை வேணும்னு தோணுது கட்டிடம் வளர வளர அங்கேயே நிற்கணும்ங்கற ஆசை வருது. தாகத்துக்கு மோர் கொடுக்கறா. இன்னும் உள்ள வர, கல்லை உரசிப் பார்க்கறா. கற்களை வேணாம்னு தள்றப்போ ஒரு சிற்பிக்கும் அவளுக்கும் வாக்குவாதம் வர, சட்டுன்னு சிற்பி அவளைப் பின்னால தள்ளிடறான். வலிவு இல்லாது மல்லாக்க விழுந்தவ தலையில் பலமா அடி பட்டுடுது. தபதபன்னு ஆளுங்க ஓடி வராங்க. தள்ளின சிற்பியைப் பிடிச்சு நல்லா மொத்தி எடுத்துடறானுங்க. சிற்பியை அடிச்சது யாருன்னு பார்த்தா பதினாறுபேர்-புகழி கூடப்போன பதினாறு பேர். ஒரு சிற்பி அடி வாங்கின உடனே, எல்லா சிற்பியும் 'உளியைக் கீழே போட்டுடறான். இரண்டு நாளுக்குள்ள அடிச்சவன் அத்தனை பேரையும் தண்டிக்கலைன்னா வேலை நடக்காதுன்னு ஸ்டிரைக் செய்யறாங்க.''



''உங்க சரித்திரக் கதையிலயும் ஸ்டிரைக் தானா.''

''கூட்டத்தைக் கவனிக்கறது எனக்கு ரொம்பப் பிடிக்கும் சபிதா. கும்பலா கூடினா மனுஷங்க புத்தியே தனி. இதை வச்சிக்கிட்டு எத்தனை நாவல் வேணா எழுதலாம்.''

''சரி மேலே சொல்லுங்க.''

''சிற்பியை அடிச்சா ராஜதுரோகம். ராஜாங்கத்தை அவமதித்த குற்றம். அரசு துரோகத்துக்கு மாறுகால். மாறுகை வாங்கறதுதான் தண்டனை. பிரம்மராயர் யோசனை பண்ணி அதுதான் முடிவுன்னு சொல்றார். அப்படி ஒரு தண்டனைதான் அவங்களுக்கு உண்டுன்னா அதுக்கு முன்னாடி நான் தீக்குளிப்பேன்னு சொல்றா புகழி.''

''ஏன்...''

''சிற்பி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கூலி ஆளும். அவனை அழிச்சா நானும் அழிவேன்னா புகழி. புகழி தீக்குளிச்சா நாங்களும் தீக்குளிப்போம்னு கொஞ்சம் தாசிங்க வேற கிளம்பறாங்க.''

''எதுக்கு...''

''கஷ்டப்பட்டு கல் கொண்டு வந்தவளை இழிவு பண்ணலாம்னா, கல் கொடுத்தவளைவிடக் கட்டிடக்காரன் முக்கியம்னா நாங்களும்முக்கியமில்லைன்னு ஒரு எதிர்ப்பு.''

''இது குழு மனப்பான்மை இல்லையா. கூட்டமா நிக்கிற சைகாலஜி இல்லையா?''

''ஆமாம்.''

''சரி மேற்கொண்டு...''

''பிரம்மராயர் பயந்து போனார். ராஜராஜன் குந்தவைப் பிராட்டியை பழையாறிலேர்ந்து வரச் சொல்றாரு. மூணு நாள் வேலை நடக்கலை.''

''ம்ம்''

''ராஜராஜன் தனித்தனியா விசாரிக்கிறான். புகழியைஏன் இப்படிபயமுறுத்தறேன்னுகேட்கறபோது இவ்வளவு பெரிய கட்டிடம் கட்டறது யாரு? பெருந்தச்சனா? சிற்பியா? குந்தவையா? பிரம்மராயரா? ராஜராஜனா?...இல்லை. இது எல்லோரும் சேர்ந்து கட்டற கட்டிடம். அத்தனை பேருக்கும் இதுல பங்கு உண்டு உரிமை உண்டு. இதுல ராஜராஜன் கல்வெட்டோ, பெருந்தச்சன் பெயரோ மட்டுமே இருக்கிறது என்ன நியாயம்? இவங்க இரண்டு பேர் உழைப்புன்னு நாளைக்கு ஊர் நினைச்சுக்கறது எவ்வளவு பெரிய துரோகம். இதிலே இவங்க முக்கியம் அவங்க அலட்சியங்கறது எவ்வளவு பெரிய பாவம்னு சீறி விழறா.''

''குந்தவைக்குப் புரியுது—ஏன் அந்தப் பதினாறு பேர் தாக்கினாங்கன்னு. ஏன் அந்தப் பதினாறு பேர் புகழிக்குப் பரிஞ்சு வந்தாங்கன்னு. அத்தனை பேரும் புகழிக்கு உறவு. வெவ்வேறுவித குணாதிசயத்துக்கு வெவ்வேறுவித உறவு. அத்தனை பேரையும் மடக்கிக் கொண்டு வந்தது புகழி. அந்தப் பதினாறு பேர்ல ஒருத்தன் தண்டிக்கப்பட்டாலும் புகழிக்கு தாங்காதுன்னு தெரியும்.

ராஜராஜனை சமனப்படுத்தி தன் இடக்கை வளையல்களை மொத்தமும் அிழ்த்து கோவில் பாத்திரம் செய்ய நிவந்தம் கொடுக்கிறதா. குந்தவையைப் பார்த்து வானதி கொடுக்கறாங்க. மந்திரி கொடுக்கறாரு. ராஜராஜன் இன்னும் சில நிவந்தம் கொடுக்கறான். ஊர் மொத்தமும் கோவிலுக்குன்னு கொடுக்கறதை வாங்கிக்கிறான். அத்தனைக்கும் கணக்கு வைக்கிறான். எடை போட்டு நிறுத்து கல்லுல கணக்கு வெட்டி வைக்கிறான். யார் நிர்வாகம், எப்படி நிர்வாகம்ன்னு எழுதறான். தாசிகள் பேரு, விளக்குப் பிடிக்கிறவன், மணியடிக்கிறவன், மேளம் வாசிக்கிறவன், மடப்பள்ளி குசவர், வண்ணத்தார், நாவிதஞ் செய்வார் அத்தனைபேர் பேரும் எழுதறான். எல்லோருக்கும் கோவில்ல பங்கு உண்டுன்னு காமிக்க இப்படிச் செய்யறான்.



30 | 97
065 7070

''பிரம்மராயரைப் பார்த்து நீங்க ஒன்னும் நிவந்தம் விடலையான்னு கேட்க... பிரம்மராயர் யாரு. நம்ம ஆளு பிரம்மராயர்.''

''ம்ம்ம். இப்ப ஜாதி என்னத்துக்கு... சொல்லுங்க.''

''பிரம்மராயர் கோவிலைச் சுற்றிய மதிலும், மதிலைச் சுற்றிய அகழியும் கேரளாந்தக அநிருத்திர பிரம்மராயன் உபயம்ன்னு முடிக்கிறான்.

உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருள இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் சேனாதிபதி சோழமண்டல உய்யகொண்டார். வடநாட்டு வெண்நாட்டு அமண் குடியான கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீகிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன்—இது கல்வெட்டு.

மதில் எதுக்குன்னு ராஜராஜன் கேட்க. சாதாரண பெண் பிள்ளை சமாச்சாரமே இப்படி நிலை குலைய வச்சுதே, இந்தக் கோவில் இவ்வளவு பெரிய கட்டிடம் உருப்படியாக நிக்கணும்னா மதிலும் அகழியும் அவஸ்யம்னு சொல்றான். ஸோ, கடைசி உபயமா பிரம்மராயருடைய மதில் சுவரில் அகழி இருக்குது.''

''குட். வெரிகுட். ஒரு சந்தேகம். புகழி—எழுத்தாளன்; கூலி ஆட்கள், கூட நின்னு உறவா நட்பா அவனுக்கு உதவி செய்யறவங்க. சிற்பி யாரு?''

''பத்திரிகைக்காரன்னு வச்சுக்கயேன். எடுத்து வந்த கல்லை பல பேர் பார்க்க உயரமா தூக்கி வைக்கிறது யாரு? முக்கியமான ஆளுங்கதானே.''

''ராஜராஜன்?''

''கவர்மெண்ட்.''

''புரியுது ராகவன். ஸோ நான் இப்ப விடுதலை தேடற படைவீரன். புகழிக்கிட்டே வந்தா விடுதலை கிடைச்சுடுமா?''

''கொஞ்சம் தளர்வா இருக்கும். புரிஞ்சுக்கிற ஆள் கிட்ட இருக்கும்படியா இருக்கும். சோழப் படைவீரர் கிட்ட முரண்டு அடிபடறதைவிட தாசி ஸ்நேகம் சௌகர்யம்தானே.''

''தாசிக்கு நிறைய ஸ்நேகம். அதுல நான் ஒரு ஸ்நேகம்.''

''என்னா மதிப்பு குறைவு. நான் மட்டும்தான் ஸ்நேகம்னு ஆட்சி பண்ணணுமா. ஸ்நேகத்தைவிட கல் கொண்டு வர காரியம் முக்கியம்னு படலையா.''

''கல்லு கொண்டு வரப் போறமோ கொண்டாந்து தலைல போட்டுக்கப் போறோமோ தெரியலை.''

''போச்சுடா... கிளம்பறபோதே அலுப்பு தட்டிடுச்சா.''

''அலுப்பு இல்லை. ஒரு அவநம்பிக்கை. இதெல்லாம் யாருக்கும் புரியாது ராகவன். தாசி ஸ்நேகம்னு இழிவுதான் நிக்கும்.''

''யாருக்குப் புரியணும் சபிதா. உனக்கும் எனக்கும் புரிஞ்சா சரி.''

''மீனாட்சிக்குப் புரியணுமே.''

''மீனாட்சிக்குப் புரிஞ்சிட்டா நிம்மதியாயிடுவியா?''

''பாதிபாரம் குறைஞ்சிடும் எனக்கு.''

''அப்புறம் இழிவு வந்தா தாங்குவியா?''

''தாங்குவேன். தாங்கிக்கப் பழகிக்குவேன்.''

''மீனாட்சி கவலையை என்கிட்ட விடு.''

''என்ன செய்யப் போறீங்க?

''போய் பேசுவேன்.''

''காது கொடுத்துக் கேட்கணுமே.''

''கேட்க வைக்கலாம்.''

''தயவு செய்து யாரையும் மிரட்டாதீங்க ராகவன்.''



''மாட்டேன், சபிதா. மிரட்டினா அடங்கறது டெம்ரரி. நான் புரிய வைப்பேன். கல் கொண்டுவர சிரமத்தை, முக்கியத்தை நிச்சயம் சொல்லிக் கொடுப்பேன்.''

''நான் இன்னும் ஒண்ணு கேட்கிறேன். கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''கேளு.''

''உங்களைப் பத்தி நீங்க அதிகமா அலட்டிக்கிறீங்களோன்னு தோணுது.''

''எப்படி?''

''இலக்கியம் சுமக்க நீங்க மட்டும்தானா ஆள். கொஞ்சம் அதிகமா க்ளெய்ம் பண்றதாப் படலையா உங்களுக்கு? முறைக்காதீங்க. எனக்குப் புரிய வைங்க முதல்ல.''

ராகவன் மௌனமாய் எழுந்து நின்றான். மெல்ல நடந்து ஜன்னலுக்கருகே போனான். வெகுநேரம் வரை அவள் கேள்விக்குப் பதில் சொல்லாது உதடு துடிக்க தனக்குத்தானே பேசியபடி வெட்ட வெளியை வெறித்துக்கொண்டு நின்றான்.

## 12

துணை என்பது மாயை. உண்மையில் துணையாக எவருமில்லை நெஞ்சருகே ஒட்டி நின்று நினைவு முழுதும் விழி வழியே புரிந்துகொள்ளும் துணையோ ஸ்நேகிதமோ எவருக்கும் லபிப்பதில்லை.

கடவுளைத் தேடுவதும் துணையைத் தேடுவதும் ஒன்றே.

நிச்சயம் கடவுள் உண்டு என்று நம்புவது போலவே மனிதர்களையும் சில சமயம் நம்பும்படி நேரிடுகிறது.

இன்னின்னார் ஸ்நேகிதம் என்று தனக்குத்தானே மனது உறுதி செய்து கொள்கிறது.

வேதனையான கட்டங்களில் கடவுள் நிந்தனை போலவே மனித நிந்தனையும் ஏற்பட்டு விடுகிறது.

ஆனால் மறுபடி கடவுளைப் போலவே மனிதர்களும் தேவையாய் இருக்கிறார்கள். தனிமையை தனித்துத் தாங்க முடியவில்லை தனிமையைப் பகிர்ந்து கொள்ள தனக்குத் தனிமையில்லை என்று மறுதலிக்க உறவுக்கு ஏக்கம் கொள்கிறது.

சட்டென்று தனித்துப் போய்விட்டேன் ஊர் முழுக்க எழுத்துக்கு கைகுலுக்குகையில் மிரட்சியுடன் பின்னுக்கு ஓடினேன். உண்மையா உண்மையா... இந்த பாராட்டுக்கள் புரிந்துதான் தரப்படுகின்றனவா என்ற சந்தேகம்மேற்கொண்டு தொடர்பு கொள்வதை கத்தரித்துப் போட்டது. புகழுரைகளில் வெட்கம் மேலிட்டது. ஆட்டோ கிராப் வேதனைப்படுத்திற்று. என்னைவிட அற்புதமான ஆட்கள் இங்கு உண்டே அவர்கள் பெயராவது உங்களுக்குத் தெரியுமா... தொண்டைக் குழியில் சுருண்டு சுருண்டு கேள்வி எழும்பிற்று.

கோயம்புத்தூரில் நாற்சந்தியை ஒட்டிய மைதானம்... பிதுங்கி வழியும் கூட்டம். "மந்திரம்போல் வேண்டுமடா... தமிழில் வார்த்தை என்று பாரதி பாடினான். ராகவனுடைய வார்த்தைகள் மந்திரமாய் இன்று ஒலிக்கின்றன."—ஒரு அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர், இளைஞர். பாராட்டுரை நிகழ்த்தியபோது வெடவெடவென்று முதுகு நடுங்கிற்று. நகம் கடித்துத் தவிர்க்க நேரிட்டது. மேடைக்குப் பின்புறம் இறங்கி விரல் நடுங்க சிகரெட் பிடிக்க வைத்தது.

இந்தப் பதக்கங்களை அடகு வைக்காமல் சரியாக உபயோகப்படுத்த வேண்டுமே... கிறங்கி விடாமல் கால் ஊன்ற வேண்டுமே. இன்னும் இன்னும் தெளிவு நோக்



கிப் போகவேண்டுமே இந்த விழாவிற்கு சம்மதித்திருக்கக் கூடாதோ இன்னும் அடக்கம் வந்திருக்க வேண்டுமோ இன்னும் அமைதியாய் இருக்கக் கற்றுக் கொள்வது அவசியமோ? இன்னமும் அடித்துப் போகிற ஆற்றில் மிதந்து போகிற தென்னை மட்டையாய்தான் இருக்கிறேனோ?

கூட்டமும் முடிந்து ஆள் ஆளுக்குப் பதில் சொல்லி கலவரமும், குழப்பமுமாய் வெளி வருகையில், சபிதா கை கூப்பினாள்.

"பயப்படாம இருங்க ராகவன். சாதாரணமாய் இருங்க."—அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள்.

தக்கென்று யாரோ தாங்கிப் பிடித்தாற்போல இருந்தது.

"ரொம்ப கலவரமாத்தான் இருக்கு, சபிதா."

"ச்சீ... அசட்டுத்தனம் ஒட்டாத இருங்க" மறுபடியும் கும்பல் சூழ்ந்து கொள்ள சபிதா விலகிப் போனாள்.

இந்த இரண்டுவார்த்தைக்காகவே திருச்சியிலிருந்து கோவைக்கு வந்தவள் மாதிரி நடந்து கொண்டாள்.

மீனாட்சியும் குழந்தையும்கூட கோவை கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். திரும்பி ரயிலில் சென்னை வருகையில் குழந்தையை மடியில் போட்டு அவளையே உற்றுப் பார்த்தபடி வந்தான். இந்தக் குழந்தையையும் சரியானபடி வளர்க்க வேண்டும். எனக்கு உண்டான போராட்டங்கள் இல்லாது இவள் சற்றுத் தேற வேண்டும்.

"நீ சபிதாவைப் பாத்தியா மீனாட்சி?"

"யாரு... கறுப்பா, மூக்குக் கண்ணாடி போட்டுண்டு திருச்சிலேர்ந்து வந்ததே அந்தப் பொண்ணா..."

"ஆமா திருச்சின்னு எப்படித் தெரியும்?"

''அவளே சொன்னா... பேசிண்டுருந்ததே.''

''என்ன பேசினா?''

''நெறைய ஹெல்ப் பண்ணுவீங்களா, ராகவன் எழுதறதுக்குன்னு கேட்டா, நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். அவராதான் எழுதறார். இதுபத்தி எனக்கு அவ்வளவா ஒண்ணும் தெரியாதுன்னேன். அவ மட்டும் இல்லை. இன்னும் இரண்டு மூணு பேர் கேட்டா. எதுக்கு பொய் சொல்லணும் சொல்லுங்கோ எல்லார் கிட்டேயும் ஒரு மாதிரி. எனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரியாது, ஏதோ கதை படிப்பேன். அவ்வளவுதான்று சொன்னேன். என்ன சொல்றேள், நான் சொன்ன பதில் சரிதானே.''

சோகத்துடன் மீனாட்சியை திரும்பிப் பார்த்து, சரி தான், என்று சொன்னதும் நினைவுக்கு வருகிறது. ஆமோதித்த அந்த வேளையில் இன்னும் தனிமை அதிகமாயிற்று.

இவள் குழந்தை. ஒரு பொய்கூட சொல்லத் தெரியாத குழந்தை வெகுளி. ப்ரியாவை மடியில் போட்டுக் கொள்வதுபோல இவளையும் மடியில் விட்டுத் தூங்கப் பண்ணலாம். இதை எடு. அதை வை என்று கட்டளைகள் சொல்லிச் சொல்லி காரியம் செய்து கொள்ளலாம். மீனாட்சி நல்ல மனைவி ருசியாச் சமைக்கத் தெரிந்தவள். வீடு சுத்தமாய் வைக்கத் தெரிந்தவள். கொஞ்சம் இருமினாலும் மருந்தோடு நிற்பவள்.

இதுக்கு மிஞ்சி ஒரு ஆம்பிளைக்கு என்ன வேணும்.

இன்னும் ;நிறையபேர் கேட்கிறார்கள். மனசை பொன் செய்யும் மருந்தாய் வைத்துக்கொண்டவர்கள் அதட்டிக் கேட்கிறார்கள். ஆனால் இது போதும் என்று சொல்ல எனக்குத் தெரியவில்லை.

இந்த தனிமையே உசத்தி என்று கொஞ்ச நாள் சமாதானப்படுத்திக் கொண்டு அலைந்து பார்த்தாயிற்று.



யாரோடும் ஒட்டாது தொடர்பெதுவும் ஏற்படுத்திக் கொள்ளாது தனக்குத்தானே பேசிக்கொண்டு உழைப்பியாயிற்று. சட்டென்று தானே பேசிக் கொள்வதின் பயங்கரம் புரிய, சிந்தனையற்று இருக்கமுயற்சி செய்ய, நீலம் நீலம் நீலம் என்று ஆழ்நிலை தியானத்தில் இறங்கி கறுப்புப் புள்ளிகளை உடைத்து உள்ளே வெகு தூரம் பயணப்பட்ட புலன்கள் உள்ளுக்குத் திரும்பின. செவி வெளிப்புற சப்தத்தை மறந்து உள்ளே நரம்பு அசைவதையும் எலும்பு நடுங்குவதையும் கேட்டது. வெளியே கேட்கும் எல்லா சப்தத்துக்கும் நடுவே இருதயத் துடிப்பு எப்போதும் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. பெயர் சொல்லித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு எவராவது கை குலுக்கும் போது சட்டென்று சற்று முன் சொன்ன பெயர் மறந்துவிடும். இவன் அறியாது இவன் அனுமதியில்லாது மனம் ஆழ்நிலைத் தியானத்துக்குப் போய்விடும். இந்த கால கட்டத்தில் தூக்கம் அறவே போய்விட்டது. புத்தி உறங்க மறுத்து விட்டது. களைப்பில் அசையாது படுத்திருக்க முடியுமே ஒழிய தூங்க முடிந்ததில்லை. சதா நேரமும் ஒரு குதிரை உள்ளே அமைதியின்றி வட்டமடித்துக் கொண்டிருக்கும். அதீத சக்தியொன்று பேயாய் நடனமாடும். சுவரை பலம் கொண்ட மட்டும் தள்ளி உடைத்துவிட வேண்டும் என்று தோன்றும். சின்ன எதிர்ப்புகளுக்குக்கூட மூர்க்கமாய் தாக்கும் முனைப்பு கூடும். ஆவேசம் அதிகரிக்கும்.

மதுராந்தகத்தில் இலக்கியப் பேச்சு களமாய் மாறிப் போயிற்று. கூச்சமின்றி ஆரவாரமும் சீறலுக்குப் பதில் சீறலுமாய் ரணகளப்பட்டது.

ஏதாவது, ஏதாவது எழுதவேண்டும் என்று ஆத்திரம் அதிகரித்தது. ஒரு சின்ன பெண் சினிமா நட்சத்திரம் செத்துப்போன செய்தி கிடைத்ததும் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு பறந்து, இறங்கி ஸ்டாண்ட் போடுகையில் தெரிந்தது, பூட்டிய ஸ்கூட்டரை ஒட்டி

வந்திருக்கிறோம் என்று. செய்தி சேகரித்தலில் அத்தனை ஆவேசம் இண்டு இடுக்கெல்லாம் புகுந்து அந்தச் செய்தியைக் கவிதை மாதிரி எழுதியாயிற்று அவள் அம்மாவின் கதறலே தலைப்பாயிற்று

பேட்டிகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்று மனசின் சக்தி விரயவாவது தெரிந்தபோதும் தடுத்துக் கொள்ள விருப்பமில்லை.

உடம்பில் களைப்பு மேலிடும்போது நீலம் மனசுள் விரியும். மரணம் பற்றி அடுக்கடுக்காக சிந்தனை வளரும். மரணம் என்பதை உடனே உணர, உயிருடன் உணர ஆவல் வரும்.

எவர் துணையுமின்றி எவரும் வழிகாட்டியில்லாது தன்னுள் உள்ளதைத் தானே கண்டு கொள்ள உள்ளே சுடராய் ஜரிகை பேப்பராய் ஒளி ஊடுருவ முடியாத ஒளியாய் ஒன்று உலாவுவது தென்பட்டது. இங்கு நில் இந்த இடத்தில் நில் என்று மூச்சடக்கி இழையாய் சுவாசம் அனுமதித்து அதைக் கட்டிப்போட முயன்ற போது சுள்ளென்று உள்ளே எங்கேயோ சுருங்கிக் கொண்டது.

எங்கோ நரம்பு மண்டலத்தில் முடிச்சு மாதிரி ஒன்று விழுந்து விட்டது. புரட்டி புரட்டி எடுக்கிற வலி. கதற அடிக்கிற வேதனை உடம்பில் பரவிற்று. என்ன காரணம் என்று தெரியாமல் மருத்துவமனையில் பதினைந்து நாட்கள் படுத்துக் கிடக்க, உள்ளே குதிரையும் படுத்துக் கிடந்தது.

இந்த அலையல் போதும் என்று முடிவு செய்தாயிற்று. முன்பு போல பாதிப் பாதி சுவாசம் விட, எல்லா மனிதரைப்போல் கொட்டாவி விட மறுபடி பழகிக் கொள்ள உடம்பு இயல்புக்குத் திரும்பியது.

இதை எவரோடும் பகிர்ந்து கொள்ள முடியாமல் போயிற்று. யாருக்கும் இதை விளக்க முடியாது என்று பட்டது.



ஸ்நேகமில்லாமல்தான் தனக்கு அலையல் அதிகமாவது தெரிந்தது. ஆண் நண்பர்கள் அதிகம் புகழ்ந்தார்கள். அல்லது பொறாமைப்படுபவர்களாய் இருந்தார்கள்.

நான்கு மாதம் கழித்து சபிதாவுக்கு எழுதி ஆடிப் பெருக்கு வருகிறது சபிதா, நான் திருச்சிக்கு வருகிறேன். பெருக்கை ரிப்போர்ட் செய்யப் போகிறேன்.

ஸ்டேஷனுக்கு வருவாள் என்று நினைக்கவில்லை. வாய் கொள்ளாது பேசுவாள் என்று தோன்றவில்லை. ஆனால் அத்வைதம் பற்றி மணிக்கணக்காய்ப் பேசினாள்.

''எனக்கு சில விசித்திர அனுபவங்கள் ஏற்படுகின்றன. ராகவன், நான் இடது புறம் படுத்தால் உள்ளே யாரோ வலதுபுறம் பார்த்துப் படுத்திருக்கிறார்கள். நான் நேரே நடக்கையில் உள்ளே என்னைப் பார்த்து நிற்கிறார்கள். நான் உள்ளே நிற்பவரை நோக்கி நடக்கிறேன். இது சரியா அல்லது என்னுள் ஏதாவது தவறா, இது பிரமையா நிஜமா? பயத்தில் சட்டென்று இந்த நிலைகளை கலைத்து விடுகிறேன். கலைப்பது நல்லதா? தொடர்வது நல்லதா? இப்படி எல்லோருக்கும் வருமா, எனக்கு மட்டுமா? இம்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாமா? சில சமயம் மோசமான கனவு மாதிரி ஒன்று வருகிறது. என்னை தானே பலி பீடத்தில் வெட்டிக் கொள்வது போல வருகிறது. கனவு என்று தெரிந்தாலும் விழிப்பு வரவில்லை. ஐயோ இந்தக் கனவு வேண்டாமே என்றிருக்கிறது. இது என்ன கனவு ராகவன்? அவள் கனவு இதற்குப் பிறகு காவிரிப் படுகையில் வெகுநேரம் பேசாமல் உட்கார்ந்திருக்கத்தான் முடிந்தது.

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா சபிதா?''

''நிஜமாகவா ராகவன்?''

''நிஜம்தான் சபிதா.''

''சரி.''

அப்புறம் பேசப் பேச, பழகப் பழக இந்த நினைவுகள் பின்னடங்கிப் போயின. அவரவர் குடும்பங்கள் சௌகர்ய அசௌகர்யங்கள் தோன்றின. வாத விவாதங்கள் வந்தன. பரிசுப் பொருட்கள் வாங்குவதும் கொடுப்பதும் நடந்தன.

நட்பு இறுகிற்று. உள்ளார்ந்த நினைவுகள் பற்றி அதிகம் பேசாமல் சினிமாவும் பாட்டும் கவிதையும் கூத்துமாய்ப் பேச்சுத் தொடர்ந்தது. உள்ளுணர்வுகளை விலக்கி விடுவதுபோல் லோகாயத காரியங்களில் ஈடுபடத் தோன்றியது. நல்ல கதைகள் எழுதுவது பற்றி விவாதம் வந்தது.

இன்று விவாதம் உச்சக்கட்டம் வந்துவிட்டது முகம் படித்து உள் நினைவைப் புரிந்து கொண்டவளே இன்று தன்னை அதிகம் அலட்டிக் கொள்வதாய் கேள்வி கேட்கிறாள், வேஷம் போடுவதாய் சொல்கிறாள்.

துணை என்பது மாயை. உண்மையில் துணை எவரும் இல்லை. நெஞ்சருகே ஒட்டி நின்று நினைவு முழுதும் விழி வழியே புரிந்து கொள்ளும் துணையோ, ஸ்நேகிதமோ எவருக்கும் லயிப்பதில்லை.

# 13

குருவைத் தேடியிருக்க வேண்டுமோ? உள்ளூர இத்தனை குழப்பங்களைச் சுமந்து கொண்டிருப்பவன் துணை தேடாது அடைக்கலமாய் ஒரு குருவிடம் போயிருக்க வேண்டுமோ?

தேடினான். கற்றுக்கொடு. எனக்குக் கற்றுக்கொடு என்று பல பேரை அண்டினான். தன்னைக் காட்டிலும் விஷயம் தெரிந்த நபர் என்று பட்ட க்ஷணமே அவர் பின்னால் நாயாய் அலைந்தான். அறிதலில் ஆர்வம் இளம் பிராயத்திலேயே வந்துவிட்டது. சைக்கிள் கற்றுக் கொடுத்தவனையும், கவிதை கற்றுக்கொடுத்தவனையும் உள்ளே நிற்க வைத்து பூஜை செய்தான். ஜோஸ்யம் சொல்லிக் கொடுத்தவனையும் ஜே கே. கூட்டம் கூட்டிப் போனவனையும் நன்றியுடன் நினைத்துக் கொண்டான். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு முகம் இருந்தது. எல்லோரிடமும் கடுமை இருந்தது. கற்றுக் கொள்ள வந்து விட்டால் இந்த கடுமையைத் தாங்கிக் கொள்வது அவஸ்யம் என்று புரிபட்டது



சைக்கிள் கற்றுக் கொடுக்கையில் முதுகில் குத்துவார்கள் கவிதை பற்றி பேசுகையில் மனசில் அறைவார்கள். ஜோஸ்யம் கற்றுத் தருபவன் காசு பிடுங்குவான். ஜே. கே. கூட்டம் அறிமுகப்படுத்தியவன் நேரத்தைப் பிடுங்குவான்.

பிரம்பால் அடித்து நொறுக்கி கணக்கு சொல்லிக் கொடுத்த எட்டாம் வகுப்பு வாத்தியாரை இன்று நினைத்தாலும் துக்கம் எழும். உள்ளங்கையில் சுளீர் சுளீரென்று அடித்து விட்டு சாக்பீஸால் கரும்பலகையில் கணிதம் போடச் சொன்ன வாத்தியாரின் முட்டாள்தனம் இன்னமும் வேதனையாய் எட்டும். எவ்வளவு பெரிய முட்டாள் அந்த வாத்தியார்.

கேட்பவனை தன் முன்னே ஒருமுகப்படுத்த பொறுமையில்லாது தனக்குப் புரிந்ததைப் பிறருக்கும் புரிந்துவிட்டதான அனுமானத்துடன் பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதில் கரும்பலகை வாத்தியார் மட்டுமில்லை? சைக்கிள் கற்றுக் கொடுத்தவனும் கவிதை கற்பித்தவனும் அடக்கம்.

மெல்லிய தெளிவு ஒன்று பிற்பாடு வந்தபோதுதான் கற்றுக்கொள்வதில் கொண்ட வேதனை தன்னால் மற்றவர்க்கு வரக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டான். கற்றுக் கொள்பவன் ஆசிரியனை மதிக்காது போகலாம் இதில் நஷ்டம் ஆசிரியனுக்கல்ல. ஆசிரியன் மாணவனை மதித்தே ஆகவேண்டும். இல்லையெனில் நஷ்டம் ஆசிரியனுக்குத்தான். மதித்தல்என்பது

பிறரை அறிந்து கொள்ளுதல். அறிந்துகொள்ள அனுமானமற்று இருக்க வேண்டும். அனுமானமற்று இருக்க ஒரு நிதானம் வேண்டும் உயிர்கள் மீது காதல் வேண்டும்.

சரி. இங்கு எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்? உண்மையில் இங்கு உள்ள குழப்பங்களுக்கு என்ன காரணம்? வறுமை வறுமை என்று முழங்கினார்கள் சில நண்பர்கள். பொருளாதார சீர்குலைவு என்றார்கள். காசா மனிதனை நிர்வகிக்கிறது என்ற கேள்வி வந்தது இவனுக்குள். காசுள்ள தேசத்தில் இக்குழப்பமில்லையா என்று கேட்டபோது அதிக செல்வமும் குழப்பத்துக்குக் காரணம் என்றார்கள்.

சரி.. வறுமைக்கு என்ன காரணம்? அரசு என்றார்கள். எந்த அரசு தீர்க்கும் என்றபோது எங்கள் அரசு என்றார்கள். நிர்வாகம் சோறு பங்கிட்டுக் கொடுக்கும். சோறு தின்றால் வயிறு நிறையும். அமைதி வருமா? சோறு மட்டும் ஸ்நேகம் வளர்க்குமா? சரி எல்லோருக்கும் சோறு என்ற தேசத்தில் ஒவ்வொரு ஆட்கள் மாறும்போது ஒவ்வொரு பெருந்தலை செத்த போதும் அடிதடி வருகிறதே?

வறுமையை சவுக்கால் விரட்டலாம். ஸ்நேகம் வளர்க்க சவுக்கு உதவுமா? மனித நேயம் கனியாமல் காலா காலத்துக்கும் பிஞ்சாய் நிற்க காரணமென்ன..? மரத்தில் இருக்கிற வரை விளாம்பழம் பழுக்காது. பழுத்தால் மரத்தில் இருக்காது. மனித நேயம் இங்கு சாத்தியமில்லை. நேயம் வந்த பிறகு உன்னால் உயிரோடு இருக்க முடிவதில்லை என்றான் ஒரு கஞ்சா கவிஞன்.

இவன் இதை விவரித்து சொல்லச் சொல்ல துக்கம் மண்டிற்று. தூக்கமில்லாமல் போயிற்று. தீர்வுக்கும், தெளிவுக்கும் மூளை குடைந்தது.

**இந்த மூளை குடைவு தாங்காமல்தான் புத்தன் ஓடினான். நீயும் ஓடு என்றது கவி.**



மற்றதேசம் விரட்டியிருக்கிறதே. இங்கு வறுமையை நிமிண்டக்கூட முடியாத காரணமென்ன...?

உத்வேகமில்லை. ஜனங்களுக்கு எது பற்றியும் ஆவேசமில்லை ஏதோ காலம் ஓடுகிறது என்று எல்லோருமே சோம்பலுடன், சலிப்புடன் இருந்து விடுகிறார்கள். இந்தக் குணம் ஒரு ஒட்டுவாரொட்டி தொற்றுநோய் யாரிடமிருந்து யாருக்கு... எவ்விதம்?

இது பரம்பரை நோய் தலைமுறை தலைமுறையாய் வளரும் நோய். கடவுள் கண் திறக்க மாட்டானா என்று சலிப்புடன் காத்திருக்கச் செய்யும் நோய். பஸ் ஸ்டாண்ட் விளிம்பில் விரல் சொடுக்கு எடுத்தபடி பஸ் வரும்வரை நிச்சயம் காத்திருப்போம் என்கிற தன்மை.

இரண்டு நிமிடத்திற்கு மேல் பஸ் ஸ்டாண்டில் காத்திருக்க இவனால் முடிவதில்லை. நடக்க மனசு பரபரக்கும். பஸ்ஸ்டாண்டிலேயே குறுக்கும், நெடுக்கும் நடக்க வைக்கும். அலையாதடா என நண்பர்கள் பலமுறை அறிவுரை செய்திருக்கிறார்கள். கூட நிற்கும் அத்தனை பேரையும் புறக்கணித்துவிட்டுத் தனியே பல நேரம் நடந்திருக்கிறான்.

மூவ், மூவ் என்று உள்ளே மனசு குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

அந்த விரையும் ஆவல் ஏன் இல்லை மக்களுக்கு? பறக்கிற பிள்ளைளை தந்தை தட்டி மடக்குவதும், தாய் பயமுறுத்தி நிற்க வைப்பதும் வீட்டுக்கு வீடு இயல்பாகிறது.

இங்கு தவறு தாய் தந்தையர் மீதா, அம்மா வேறு. அப்பா வேறு என்று இரண்டு உலகமாக நிற்பதா? அந்த இரண்டு உலகங்களும் தனித்தனியே கடைசிவரை இருந்து விபத்தாய் பிள்ளைகளைப் பெறுவதா? இந்த விபத்து பிள்ளைதான் பெண்களை வெறிக்கிறானோ இந்த விபத்து பெண்தான் ஹலோ என்றதும் திடுக்கிட்டு நெஞ்சைப் பொத்திக் கொள்கிறாளோ?

நெருங்கிய துணையின்றி, அறிந்துகொள்ள ஆட்கள் இன்றி, அனுபவம் பகிர்ந்துகொள்ள ஸ்நேகம் இன்றி பரஸ்பரம் துவேஷணையோடு சந்தேகத்தோடு வாழ்க்கை நடத்துகிறார்களோ?

பெண் புதிர்.

ஆண் ஆத்திரக்காரன்.

இதுதான் பரஸ்பர அபிப்ராயமா? கால காலத்துக்கும் இந்த இடைவெளிதான் சாஸ்வதமா?

இந்த இடைவெளியில் வளரும் குழந்தைகள்தான் சக்தியை விரையமாக்குகிறதா? மகிழ்ந்து குலாவி பிள்ளைகள் பெறுபவர் அரிதா?

அம்மாவுக்கு அப்பாவிடம் பயம். அப்பாவுக்கு அம்மாவின் திறமையில் அவநம்பிக்கை. இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளை, பயமும் அவநம்பிக்கையும் பகிர்ந்து கொண்டு இதே விதமாய் வளர்ந்த ஒரு பெண்ணைக் கைப்பிடித்து மேலும் பயந்து அவநம்பிக்கை வளர்த்து காலம் வரும் கடவுள் கண் திறப்பார் என்று காத்திருக்கிறதா?

இங்கே ஆண் பெண் உறவு சரியில்லை. பெண் என்னும் மாயப் பிசாசு இந்த வார்த்தை அம்மாவுக்குமா... கூடப்பிறந்த சகோதரிக்குமா இல்லை மனைவி மட்டும் தானா. ஸ்நேகிதமே இல்லையோ. தமிழில் ஸ்நேகிதி என்று எழுதினால் இன்னமும்கூட கண் சிமிட்டுகிறார்கள். புருஷன் தெய்வம். மனிதனாய் மனைவி கணவனை மதிப்பதில்லை.

எனக்கும் இப்படியே விதித்திருக்கிறது.

மீனாட்சிக்கு நான் தெய்வம், கல், மரக்கட்டை, கண்ணாடி சட்டமிட்ட படம்.

ஒருவேளை மீனாட்சி மேல் மாடிக்குப் போய் மழை என்று கேட்டால் மழை பொழியக் கூடும். ஆனால் வெளியே மழை பொழிந்து என்ன பயன்? மீனாட்சி மனசு வறண்டிருக்கிறதே.



சரிசமமாய் வரும் முயற்சியே இல்லையே.

அடுத்த வருடமே குழந்தை பிறந்தது.

குழந்தை வளர்ப்பில் ஆறு வருடம் தள்ளிக்கொண்டு போயிற்று.

இந்த ஆறு வருடமும் அப்போது எழுதின எழுத்தனைத்தும் நல்ல உறவுக்கு ஏங்கும் கதைகளாய் இருந்தன. புத்திசாலித்தனமாய் பெண்கள் அறிமுகமாக உள்ளே கிறங்கித் தவித்தது. இதே விதமாய் ஏங்கும் மனிதர்களை எழுத்து அறிமுகப்படுத்திற்று.

இத்தனை ஏக்கமா உனக்கு... என்னிலும் உண்டு என்று தன் மன ரகஸ்யத்தை ஒவ்வொரு ஸ்நேகமும் அம்பலப்படுத்திற்று.

ஒவ்வொரு ரகஸ்யமும் வெளிவர வெளிவர ஆண் பெண் உறவு தேசத்தில் பேதலித்துக் கிடப்பது இன்னும் உறுதிப்பட்டது.

''பிள்ளை பெற்ற அனுபவம் உனக்கெப்படி இருந்தது. மீனாட்சி... விவரமாய் சொல்லேன்.''

''உங்களுக்கெதுக்கு அந்த எழவெல்லாம். நாத்தம் குடலைப் புடுங்கும்.''

இதே விதமாய் வேறொரு கேள்வியை ஸ்நேகிதியிடம் கேட்க, மாதவிலக்கு பயமுறுத்தற சமாச்சாரமெல்லாம் இல்லை. கொஞ்சம் அயர்ச்சி, அவ்வளவுதான். பெரியவளானா அழறதோ, அலட்டிக்கிறதோ இங்க ரொம்ப ஜாஸ்தி. உனக்கு மீசை முளைச்ச மாதிரி உன் உடம்புல மலர்ச்சி ஏற்பட்ட மாதிரி. பெண்ணுடலில் ஒரு மலர்ச்சி. ஆணைக்குளிப்பாட்டி ஊர் கூட்டறானா அப்பா அம்மாவுக்கே தெரியாது. பையன் மலர்ந்தது அதேதான் பொம்மனாட்டிக்கும். இதை இந்தக் காலத்தில் பெரிது படுத்தறது முட்டாள்தனம்.

மேலும் சொல்... மேலும் சொல் என்று ஸ்நேகிதியைக் கேட்டு கதையாய் எழுதினது பரவசமான அனுப

வம். விலக்கு பற்றிப் பேசிய பெண்ணின் உடையும் முகமும் முடியும் முலைகளும் மறந்துபோய் ஒருஉயிர் வளர இங்கே இன்னொரு உயிர்படும் மாதாந்திர சிரமம் மட்டுமே மனசில் நின்றது.

"இப்படி மீனாட்சி மனசை உரிக்க முடிந்ததேயில்லை. கணவன் அவளுக்குப் புல், கல், தெய்வம்.

இங்கே வறுமையை விரட்ட, வரதட்சிணை கோரம் ஒழிக்க, நல்ல உறவு தேவை. ஆண் பெண் உறவுமையத்தில் தெளிவு தேவை. நிலநிறப் புடவைக்கு நீலநிற ப்ளவுஸ் அணிந்து என்று வர்ணித்து வரும் வரிகளைப் படிக்கையிலேயே சோர்வு முட்டும். அவயவங்களின் அழகு வர்ணனையைவிட மனசின் பக்குவத்தைச் சொல்லுவதே முக்கியம். தெளிவோடு இருக்கிற பெண்களைச் சொல்லி வழிப்படுத்துவதே நல்லது. உறவு சறுக்கலைச் சொல்லி மீண்டு வருவதை எழுதுவதே ஆரோக்கியம்.

எழுத்து என்கிறகருவி கிடைத்திருக்கிறது ஆவேசப்படாமல் நயமாய் செதுக்குவதே உத்தமம்.

இந்த தெளிவோடு எழுத உத்தியோகம் முக்கியம். எழுத்தே தொழிலானால் தெளிவு சிதைந்துவிடும். சூழ்நிலையில் அமைதி அவஸ்யம். குழந்தைகள் அதிகம் பெறாதிருக்க வேண்டும். இப்போதைக்கு ப்ரியா போதும். அதிக ஆடம்பரம் மனபலத்தைச் சிதறடிக்கும். தேவைகள் குறைந்தால் எழுத்தில் ஈடுபட முடியாது போகும். மிதமான தேவைகளுடன் சொத்து நிர்வாகத் தொந்தரவின்றி எழுதுபவன் இருப்பதே நல்லது இவ்விதமே இருப்போம். இன்றைய எழுத்துக்கு இந்த உத்தியோகம் முக்கியம். உத்தியோகம் முக்கியமெனில் அங்கு குறிப்பிட்ட அக்கறை முக்கியம். அங்கே அக்கறையும், ஓய்வில் எழுத்துமாய், இருப்பதேசிலாக்கியம்.

ராகவன் ஜன்னலைவிட்டு நீங்கி மீண்டும் படுக்கைக்கு வந்தான். மனசு முழுக்க வாழ்க்கை முழுக்க ஒரு



நல்ல எழுத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை யாரிடம் சொல்ல... எவரிடம் பகிர்ந்து கொள்ள...

சபிதா... உன்னிடம்கூட பகிர்ந்துகொள்ள முடியுமடி இனி—

"உனக்குப் புரியுமா என் வாழ்க்கை?

நானா அதிகம் க்ளெய்ம் பண்ணுகிறேன்.

## 14

"இந்த ஒரு கேள்விக்கே இத்தனை இடிஞ்சு போயிடணுமா? இப்படி இவளே கேட்கறாளேன்னு ஆதங்கமா? தான் கேட்காம யாரு கேட்பாங்க? நமக்குள்ளேயே தெளிவு இல்லேன்னா ஸ்நேகம் எப்படி வரும்? ராகவன், கோபமா எம்பேர்ல. உலகமே ஒன்னு சேர்ந்து மூஞ்சில குத்தறா மாதிரி தோணுதா—?"

கட்டிலில் காலைத் தொங்கப் போட்டு உட்கார்ந்திருந்த ராகவனுக்கு அருகில் சென்று சபிதா அவன் தோளைத் தொட்டாள்.

இவன் தந்திரமுள்ளவன். உலகத்தில் நல்லதும் கெட்டதும் சூதும் வாதும் அறிந்தவன். சூட்சுமமாய் சக மனிதர்களைக் கண்டறிபவன். தான், தனது என்று எதையும் யோசிக்க இந்தக் குணங்கள் என்னிடமும் இருக்கின்றன. என் சுகம் முதலில் என்று சுயநலமாய் இருக்கிற பலம் இருவருக்கும் உண்டு. இதன் பொருட்டே இவன் ஸ்நேகம் எனக்குப் பிடித்திருக்கிறது. என் சுயநலம் எனக்கு அதிகமாயிருப்பதாலேயே இவன் சுயநலம் புரிகிறது. இது இயல்பு என்று தெரிகிறது. விட்டுக்கொடுத்துவிட்டுப் புலம்புவது இவனிடம் இல்லை. தியாகம் செய்துவிட்டுப் பறையடித்துக் கொள்ளும் அல்பத்தனம் இவனிடம் இல்லை. வழங்கிவிட்டுப் பதிலுக்கு ஏதும் தேடி வற்புறுத்துவது இல்லை.

இவனுக்கும் சுயநலமாய் இருந்ததில் சுகம் தெரியும். பிறர் சுயநலம் மதிக்க முடியும்.

இவன் குழம்புவது இந்த சுயநலத்துக்கான செலவு பற்றி. இது காஸ்ட்லிதான். பணம், காசு செலவல்ல. மதிப்பு செலவு. ஊர் வாயில் விழுந்து எழுந்திருக்க வேண்டிய செலவு. மதிப்பு என்கிறதை விற்றே என்னை வாங்கவேண்டும். எனக்கும் மதிப்பு செலவுதான். ஆனால் இவனுள் சேர்வது நிம்மதியான விஷயம். தெருவில் நடந்து போகையில் ஊர் நமட்டுச் சிரிப்பு சிரித்தாலும், அறைக்குள் இவனைத்தழுவிக் கிடக்கும் சுகத்தில் சகலவேதனையும் பறந்து போகும். பெயர் தெரியாத வேதனையைவிட பெயர் தெரிந்த பிசாசு நலம். பதினைந்து சவரன் நகை, ஐந்தாயிரம் வரதட்சிணை, படுக்கையும், புடவையும், பாத்திரமுமாய் எவன் வீட்டுக்கோபோய் கன்றுக்குட்டியிலிருந்து நாத்தனார், மாமியார்வரை பயப்படுவதைவிட இது நிம்மதி. இவனுக்குத் துணை நிற்கமுடியும். இவன் எனக்குத் துணையாக முடியும்.

இத்தனை தெளிவுக்குப்பிறகும் இந்த உறவு சூதாட்டம்தான். எல்லா உறவு மாதிரி வாழ்க்கையின் எல்லா அம்சம் மாதிரி இதுவும் வேறாகுதல்தான். ஆடிப் பார்ப்போம்.

இவனே முக்கியம் என்று இறுக்கிக் கொண்டுவிட வேண்டும். எது வந்தாலும் இவன்தான் எனக்கு என்று என்னைத் தயார் செய்து கொள்ளவேண்டும். இப்போதே இந்த க்ஷணத்திலிருந்தே மாற்றிக் கொள்ள வேண்டும். மெல்ல மெல்ல வளர்த்த காதலை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். ஏமாற்றுபவன் குழம்ப மாட்டான். விளையாடி விலக நினைப்பவன் வேதனையில் தவிக்கமாட்டான். என் மீது ராகவனுக்குள் ஒரு பிடிப்பு இருக்கிறது. நானும் உறுதியாய் என் பிடிப்பை இறுக்கவேண்டும். இப்போதே இந்த க்ஷணமே இவனை என்னுள் முழுதாய் வரிக்க வேண்டும்.



கடவுளே பரம்பொருளே... இங்குள்ள இயக்கத்தின் சக்தியே, சமயபுரத்தாளே... நான் இவனை என்னுள் வரிக்கிறேன். இவனையே புருஷனாகக் கொள்கிறேன். எனக்கு யார் துணை என்று கலங்கிக்கொண்டிருந்த வாழ்க்கை முடிந்து விட்டது. இதோ என் துணை, இதோ என் புருஷன். இவன் சுக துக்கம் என்னுடையது இவன் தெளிவு என் பலம். நான் மலர இவன் வலிவடைவது முக்கியம். என் பொருட்டு இவனைக் காப்பேன், என் பொருட்டு இவனை மகிழ்விப்பேன். வா! என் புருஷனே வா, என் பிரிய கணவனே. சகலருக்கும் நல்லது செய்ய நாம் முயற்சிப்போம். உன் வலிவும் என் வலிவும் சேர்ந்து உத்தமம் படைப்போம். உன் ஸ்நேகிதம் என் ஸ்நேகிதம் உன் உறவு என் உறவு உன் குழந்தை என் குழந்தை. உன் மீனாட்சி இனி எனக்கும் உறவு.

சபிதா, ராகவன் முகத்தைத் திருப்பினாள். முகத்தில் சோர்வும் குழப்பமும் மண்டிக்கிடந்தன. மெல்லத் தலையை வருடி அவன் உதட்டில் முத்தமிட்டாள். நெருங்கி அமர்ந்து அவனை இழுத்து தோளில் முகத்தை சார்த்தி இடுப்பைச் சுற்றிக்கொண்டாள்.

''சரி என் கேள்வியை மறந்துடுங்க. நல்லது செய்யலாம்னு தீர்மானம் பண்ணிக்குவோம், இன்னும் உத்வேகமா எழுதறது பத்தி யோசிப்போம். உங்களை நோகடிக்கணும்னு கேட்கலை. நீங்க தெளிவா இருக்கணுங்கறதுக்காக உங்களை நீங்களே கேட்டுக்கணும்னு தான். எனக்குப் பதில் சொல்ல வேணாம். நீங்களே பதில் தேடித் தெளிவடைஞ்சா போதும்.''

''மீனாட்சி வேலைக்குப் போறாங்க, நானும் வேலை பார்க்கிறேன். மூணு பேரும் சம்பாதிக்கிறோம். ஒன்னா இருப்போம். மதிப்பு குறைவுதான். மூணு பேருக்கும் கறுப்புப் புள்ளிதான். கறுப்புப் புள்ளியை நிதானமா அழிப்போம். எத்தினி நாளைக்கு இந்த ஒத்துமைன்னு கேலி பண்ணுவாங்க சேர்ந்து சிரிக்கிறதைப் பார்த்து

வயிறெரிஞ்சி ஏதாவது சில்மிஷம் பண்ணுவாங்க. நிதானமா தாண்டணும். ஊருக்குப் போனதும் மீனாட்சிக்குப் புரியும்படி பொறுமையா எடுத்துச் சொல்லுங்க. நான் வேணும்னாலும் எழுதறேன். யார் கேலி பண்ணினாலும் பரவாயில்லை மீனாட்சி சரின்னுட்டா. மொத்தப் பாரமும் குறைஞ்சிடும். தனித் தனியா இருந்தா அசிங்கம். மூணு பேருக்குமே சிரமம் நிம்மதியும் இருக்காது. மூணு பேருமே வேதனைப்பட்டு மத்தவங்களையும் வேதனைப் படுத்திடுவோம். மீனாட்சிகிட்டே சொல்லுங்க, நானும் என்னை மீனாட்சிக்குப் புரிய வைப்பேன். உங்க ரெண்டு பேரை யும் பிரிக்கமாட்டேங்கிற நம்பிக்கை அவங்களுக்கு வரும்படி நடந்துக்குவேன் என்னுடைய எல்லை எது வரைக்கும்னு தெரியும். நான் தெளிவா இருக்கேன் ராகவன். எனக்கு எந்த லீகல் டைரட்ஸும் கிடையா துன்னும் தெரியும். ஆனா நான் உங்களோடதான் இருப்பேன். தனியா இருந்து இன்னிக்கு வருவீங்களா நாளைக்கு வருவீங்களான்னு அவஸ்தைப்பட என்னால முடியாது. என்ன சொல்றீங்க, இனி குழம்பவே வேண்டாம்.''

ராகவன் மெல்ல சிரித்தான். நிமிர்ந்து எதுவும் சொல்லாமல் இரண்டு நிமிஷம் பார்த்துக் கொண்டிருந் தான். தலைமயிரை வலிக்கப் பிடித்திழுத்து கன்னத்தில் முத்தமிட்டான். கன்னத்தைத் தன் முகவாயில் தடவினான்.

''ஷேவ் பண்ணலையா இன்னிக்கு - எரியுது... ம்ம். வேணாம்பா.''

'பொறுத்துக் கிறியான்னு சோதனை பண்ணிப் பார்ந்தேன்.''

''ஹைம்!...அப்புறம் வேறென்ன சோதனை பாக்கி யிருக்கு? நெருப்புல நிக்கறவரைக்கும் போகுமா சோதனை?''

''நீ மட்டுமா? மூணுபேருமா நிக்கப்போறோமே.''



''மூணு பேருந்தானே.. ஒன்னா கைகோத்துக்கிட்டு ஜாலியா நிக்கலாம். நான் மட்டும்தான்னா, இல்லே நீங்களும் மீனாட்சியும் மட்டும்தான்னாலோ சிரமம்''

''அப்ப துணிஞ்சிட்டே?''

''ஒயெஸ் எப்பவோ துணிஞ்சாச்சு.''

''எப்பவோன்னா?''

''பத்து நிமிஷம் முன்னே.''

''அடடே இப்பத்தானா.''

''கழுத்து வரைக்கும் நின்னேன். இப்ப தலைக்கு மேல வெள்ளம் போவுது. மொத்தமா முங்கிட்டேன்.''

''இனிமே.''

''உள் நீச்சல்தான். தம் பிடிச்சு உள்ள நீந்திப் புதையல் எடுக்கணும்.''

''தமிழ் சினிமால பாட்டு வருமே முங்கி முத்துக் குளிக்கறதுன்னு அது மாதிரியா?''

''அது வெறும் செக்ஸ்.''

''இது.''

''அதுக்கும் மேலே எனக்கும் குழந்தை வேணும். கொஞ்சணும், வளர்க்கணும், பிரியாவோட விளையா டணும். நல்லா படிக்க வைக்கணும்.''

''செக்ஸுன்னு சொன்ன உடனே ஒன்னு ஞாபகம் வருது. மூணு பேரும் ஒன்னா இருந்தா செக்ஸ் எப்படி...?''

''தெரியாது.''

''தெரியாதுன்னுட்டா.''

''அட---அப்பப் பார்த்துக்குவோம்'''

''இல்லே... நான் கேட்கறதை நீ இன்னும் சரியா புரிஞ்சுக்கலைன்னு நினைக்கிறேன். நான் பக்கத்திலே இல்லேன்னாலும் ஒழுங்கா தூங்குவியா?''

''ம் புரியுது. பழகிக்கனும்தான் முக்கியமானது என்னால தனியா இருக்க முடியாதுங்கறதுதான். காத்திருக்கிறது—பிரியறது தினசரி வேதனையாய்ப் போயிடும். இந்த அவஸ்தை எனக்கு மட்டுமில்லை. இங்கேயும் அங்கேயுமா நீங்க லோல் படுவீங்க. மீனாட்சிக்கும் கஷ்டம். ப்ரியா மனசும் கெடும். இதை முக்கியமா நினைச்சா போதும். மத்ததெல்லாம் பழகிக்கலாம். ஒரு கூரைக்குக் கீழே இருந்து பழகறப்போ நீங்க சரியா இருந்தாப் போதும். விட்டுக் கொடுக்கற சுபாவம் வந்துடும். நான் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் அவங்க புரிஞ்சுகிட்டு அவளும் பொண்ணு தானேன்னு விட்டுக் கொடுப்பாங்க ஈஸி.''

''விட்டுக் கொடுப்பேன்னு சுலபமா சொல்லிட்டே உள்ளுக்குள்ளே பொங்காதா...பரபரக்காதா...''

''இருக்கும். இப்பவே பொங்குதே. அப்ப இருக்காதா.''

' இப்ப ஏன் பொங்கனும்?''

''புருஷன்னு மனசில நினைச்சாச்சு. இறுக்கிக் கட்டிக்கத்தான் தோணுது வா—வா—வந்து என்னை நாசம் பண்ணுன்னு ஏங்குதே.''

''இப்பவேவா...''

''ம். இப்பவேதான்.''

''உடனேயே...''

''இந்த க்ஷணமே...''

''கிளறி விடறே சபிதா, அப்புறம் பாதில புத்தி மாறும் உனக்கு.''

''இனி மாறாது ராகவன். நான் உங்க ப்ராப்பர்ட்டி.''

''கமிட் பண்ணிக்கனும்னு பார்க்கறயா?''

''ஒரு விதத்துல ஆமா. இதுல தப்பு இருக்கறதா எனக்குத் தோணலை.''



''விட்டுடறப் போறேனேன்று பயத்துல சொல்றியா.''

''நீங்கள் இனி என்னை விட முடியாது. நானும் விட மாட்டேன்.''

''இறுக்கித்தான் பிடிச்சிட்டிருக்கியே.''

''நான் மட்டும்தானே பிடிச்சிருக்கேன்.''

''ராகவன் முரட்டுத்தனமாய் இழுத்து அணைத்து முத்தமிட்டான். இறுக்கிக் கொண்டு மல்லாக்க சாய்ந்தான். புரட்டி வலப்பக்கம் படுக்கவைத்தான். மல்லாந்து கலைந்து கிடப்பவளை வியப்புடன் பார்த்தான்.

''என்ன ஆச்சு...?''

''ம்ம்... அப்ப நீ என் பெண்டாட்டி.''

''கடவுளை, இதுல என்ன சந்தேகம்?''

' மொத்தமும் எனக்குத்தான்,''

''யார் தடுத்தா.''

''என்ன வேணா செய்யலாம்.''

''சொல்லத்தான் முடியும்.''

''ஷேவ் பண்ணிட்டு வந்துடட்டுமா. எரியுதுன்னியே.''

''ச்சீய், ஷேவ் பண்ற நேரம் பாரு.''

''ம் அப்போ அனுபவி.''

''யப்பா இது என்ன தலைமயிர்... தேங்காய் நார் மாதிரி.''

ராகவன் அவள் தோளைக் கடித்தான். மார்பின் நடுவில் முகம் புதைத்தான். நகர்ந்து வயிற்று மேட்டில் முகவாய் வைத்தான்.

கூச்சம் தாளாது சபிதா நெளிந்தாள். மேலும் கலைந்தாள். மெல்ல முனகினாள். கூச்சத்தில் அப்புறப் படுத்த முயற்சித்தபோது ராகவன் இழுத்து இறுக்கிக் கொண்டான். கண் சொருக உதடு மலர மனசு முழுவதுமாய் ஈடு கொடுத்தாள்.

கூடல் என்பது சுகம். ஆனால் அதற்குக்கூட ஏதோ ஒரு நோக்கம் வேண்டியிருக்கிறது. ஒரு தொலை நோக்கு தேவையாய் இருக்கிறது.

சபிதாவுக்கு யாரோ நெஞ்சில் முகம் புதைத்து அழுத்துவது போலிருந்தது. இடுப்பு சதையை யாரோ இறுகப் பிடிப்பதுபோல் இருந்தது முதுகு முழுதும் ஒரு கை பரபரத்தது. கழுத்து பின்புறம் சூடாயிற்று.

சட்டென்று விழிப்பு வந்தது.

செங்கல்பட்.

அப்பா இன்னும் ஒரு மணி நேரம். ராகவனைப் பார்த்து விடலாம். ஒருமாதப் பிரிவு. பதினாறு கடிதங்கள். மறுபடியும் ராகவனைப் பார்க்கப் போகிறேன். சபிதா பல் தேய்த்து முகம் அலம்பிக் கொண்டாள். பெஞ்சுக்கடியிலிருந்து பெட்டியை எடுத்து வெளியே வைத்தாள்.

வெளியே மெல்ல வெளிறத் துவங்கிற்று. சில்லென்று காற்று முகத்தில் மோதிற்று.

தாம்பரம்.

பறவைகள் சிலுப்பி எழுந்தன. வானம் வெளுத்து விட்டது.

குரோம்பேட்.

மக்கள் நடமாடத் துவங்கி விட்டார்கள்.

கிண்டி.

வாகனங்கள் விளக்குகள் இல்லாமல் விரைந்து கொண்டிருந்தன.

சைதாபேட்.

இங்கேயிருந்து மாம்பலம் தெரியுமா. ராகவன் வந்திருப்பாரா?

வெயில் தரை தொட்டது.



சபிதா ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

வண்டி மாம்பலம் ஸ்டேஷனுள் நுழைந்தது.

ராகவன்... ராகவன்... ராகவன்... தண்டவாளத்தில் தாளமிட்டது. கம்பங்கள் கண்ணெதிரே நகர்ந்தன.

''சபிதா...'' ராகவன் குரல் கேட்டது. குரல் வந்த திக்கில் விழி விரிய எட்டிப் பார்க்கராகவன் கையசைத்தான்.

''யப்பா...''

சபிதா உள்ளே நகர்ந்தாள்.

உட்கார்ந்து கொண்டாள்.

''கடவுளே எனக்கு பலம் கொடு. நல்லதைச் செய்.''

பெட்டியை எடுத்து வாசல் பக்கம் போனாள். மற்ற சாமான்களை நகர்த்தி வைத்தாள்.

வண்டி நின்றதும் இறங்கினாள்.

ராகவன் ஓடிவந்து அருகே நின்றான்.

''சபிதா....''

அவனுக்குள்ளும் ஏதோ தழதழப்பது தெரிந்தது.

''ராத்திரி தூங்கினியா சபிதா.''

'ம்ம்ம் நேத்து ராத்திரி தூங்கினேன்.''

## 15

''சபிதா உனக்கு என் வீட்டுக்கிட்டேயே ஹாஸ்டல் பார்த்திருக்கேன்.''

''எப்படியிருக்கு ஹாஸ்டல்?''

''வெளியே தோட்டமும், மணலுமா நல்லா இருக்குது சபிதா. உள்ள எப்படியோ—? ஹாஸ்டலுக்கு எதிர் வீட்ல எனக்குத் தெரிஞ்ச பொண்ணு இருக்கா,

அட்வான்ஸ் கொடுத்து இடம் ஸெட்டில் பண்ணின பிறகு அந்த ஹாஸ்டலைப்பத்தி ஒரு மாதிரியா சொன்னா...''

''எல்லா லேடீஸ் ஹாஸ்டல் பத்தியும் அப்படித் தான் பேசுவாங்க. ஹாஸ்டல்ல சொந்த அண்ணன் வந்து பார்த்தா கூட தள்ளிக்கிட்டு போறான்னு சொல் வாங்க. பொண்ணுங்க கற்பு புத்தி ரொம்ப சந்தேகப் படற இடம் ஹாஸ்டல்தான். மீனாட்சிக்குத் தெரியுமா நான் ஹாஸ்டலுக்கு வரது.''

''தெரியும்.''

''என்ன சொன்னாங்க.''

''சாப்பாடு சரியில்லைன்னா வீட்லேர்ந்து எடுத் துக்கிட்டு போகச்சொன்னா. டிபன் பாக்ஸ்ல அடைச்சுத் தராளாம்.''

''நிஜமாவா.''

''ஏன் நம்ப முடியலையா?''

''ப்ரியா என்ன சொல்லுது.''

''அதுக்கு ஒண்ணும் தெரியலை.''

''இந்த ஹாஸ்டல் எனக்குப் பிடிக்கலைன்னா என்ன செய்யலாம் ராகவன்?''

''வேறு ஏதாவது பார்ப்போம்.''

''சோர்வா இருக்கீங்களே ராகவன்?''

''பயம்தான்.''

''பயமா...எதுக்கு?''

''வீட்டை விட்டு இவ்வளவு தொலைவு என்னை நம்பி வந்திருக்கியே...உன்னை நல்லபடியா கவனிச்சுக்க ணும்கற பயம்.''

''நான் சமாளிச்சுக்குவேன் ராகவன். கவலையே வேணாம்.''

''என்னிக்கு வேலைல ஜாய்ன் பண்ணணும்?''



''நாளைக்கு...ஆமா... மீனாட்சியை நான் பார்க்க வேணாமா...எப்பப் பார்க்கறது?''

''உடனே என்ன அவசரம்.''

''அவசரமில்லை, ஏன்— வேணாம்னு தோணுதா உங்களுக்கு.''

''பார்க்காம எப்படி முடியும். பார்த்தா பொங் கிடுவா. அழுவா.''

''அப்ப இன்னிக்கு எங்க போறது?''

''எங்கயாவது சுத்துவோம். நீ குளிச்சிட்டு சாப்ட் டுட்டு ரெடியா இரு. நான் வந்து கூட்டிட்டுப் போறேன்.''

''ஸ்கூட்டரா?''

''ஆமா.''

ராகவன் சபிதாவை ஹாஸ்டலில் இறக்கிவிட்டு வீட்டுக்கு வந்தான். உடை மாற்றிக்கொண்டான்.

மீனாட்சி காப்பியுடன் ,வந்தாள். அவனருகே வைத்து விட்டு சுவரில் சாய்ந்து கொண்டாள்.

''என்ன மீனாட்சி?''

''ஒண்ணுமில்லை''

''சொல்லு''

''நாம பிரியற வேளை வந்துடுத்துன்னு தோன்றது''

''நான் உன்னைப் பிரியறதா இல்லை மீனாட்சி. நிச்சயமா குழந்தையை விட்டுப் பிரிய முடியாது.''

''சபிதா என்ன சொல்றா?''

''இங்க வராளாம்''

''முடியாது''

''சரி... கத்த வேணாம். மெல்ல சொல்லேன்.''

''நானா கத்தறேன். அவ வந்து வெளியே போறதை விட நானே வெளிய போயிடறேன்.''

''எங்க போவ...''

''எங்காவது... எண்பது ரூபா ஒண்டிக் குடித்தனத்துக்கு. முடிஞ்சா நீங்க வாங்கோ. அவ இங்கே வரக்கூடாது.''

''சரி.''

''உங்களுக்குப் பயமே இல்லியா. ஊர் சிரிக்குமேன்னு கவலை இல்லையா.''

''இல்லை மீனாட்சி.''

''எப்படி இந்த மாதிரி வெட்கமில்லாம இருக்கேள்.''

''வெட்கம் மனசின் காரியம் மீனாட்சி, சொல்லிக் கொடுக்கப்பட்ட விஷயம். வெட்கம் இயல்பு இல்லை.''

''எனக்குப் புரியவில்லை.''

''புரியாது.''

''புரியும்படியா சொல்லுங்கோ. இது எனக்கு அவமானமில்லையா, எனக்கு அவமானம்னா உங்களுக்கு அவமானமில்லையா. உங்களை வச்சு குடித்தனம் பண்ண எனக்குத் தெரியலைன்னுதானே ஊர் சொல்லும்.''

''அது நெஜம்தானே மீனாட்சி.''

''என்கிட்ட என்ன குறை?''

''மறுபடி மறுபடி அதைப் பேசணுமா.''

''எத்தனை தடவை சொன்னாலும் எனக்குத் தெரியலை. சொல்லுங்கோ, எனக்கு என்ன குறை. எதுக்காக இப்போ இரண்டாவது பெண்டாட்டி?''

''சரி இப்ப இப்படிக் கேளு... இது என் அவமானம்?''

''இது வழக்கமில்லை.''

''பழக்கமில்லாததுதானே அவமானம். பழகிட்டா.''

''என்னைக் கேலி பண்ணுவா.''

''எத்தனை நாள்?''

''நான் சாகற வரைக்கும்.''



''இல்லை மீனாட்சி எப்ப கேலி தெரியுமா. நீயும் நானும் தெருவுல சண்டை போட்டு நின்னா. பிரிஞ்சு போனா.''

''ஆறு வருஷமா நாம சண்டையே போட்டதில்லையே. என்ன பெரிய இலக்கியம். அதுதானே குறை. எனக்கு இலக்கியம் தெரியலைன்னுதான் அவகிட்ட போனேள். இது ஒரு பாவமா?''

''இலக்கியம்கறது என்ன மீனாட்சி, வாழ்க்கையிலேர்ந்து அன்னியப்பட்ட விஷயமா? ரஸனை நல்லபடி இருக்கிறதுதான் உசத்தி மீனாட்சி.''

''எனக்கு நல்ல ரசனை இல்லேங்கறது பாவமா?''

''பாவம்தான். ரஸனை மட்டமா இருக்கறது அறியாமைதான். அறியாமை பாவம். உனக்கும் எனக்கும் நடுவே பள்ளம் இருக்கு மீனாட்சி.''

''ஏன்... கல்யாணத்துக்கு முன்னாடி இது தெரியலையா?''

''தெரிஞ்சுது, கல்யாணத் தன்னிக்குத் தெரிஞ்சுது. அதுக்கு முன்னாடி உன் ஆபீஸ் வந்து பார்த்தேனே.. அப்பவும் தெரிஞ்சுது.''

''வேண்டாம்னு விலகியிருக்க வேண்டியதுதானே.''

''ரொம்ப இடிஞ்சு போயிருப்பே மீனாட்சி எட்டு பேர் பெண் பார்த்து வேண்டாம்ன பொண்ணுன்னு கேட்ட பிறகு நானும் உன்னை வேண்டாம்னு சொல்ல கஷ்டமா இருந்தது.''

''அப்போ இரக்கப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிண்டேளா?''

''ஒரு விதத்துல ஆமா.''

''இப்ப வேண்டாங்கறளே என்னை.''

''வேண்டாம்னு சொல்லலியே, என் மேல இரக்கம் காட்டுன்னுதான் சொல்றேன்.''

''என் கழுத்தை நானே அறுத்துக்கறத்துக்குப் பேர் இரக்கமா?''

''முடியலேன்னா விடு மீனாட்சி.''

''அப்போ அவளோட சுத்திண்டுதான் இருப்பேள் இல்லே?''

''அவளை இனி விட முடியாது.''

''ஏன்?''

''என்னை நம்பி இங்க வந்தாச்சு.''

''யார் வரச்சொன்னா? கொழுப்பெடுத்து ஊரை விட்டு, வீட்டைவிட்டு வந்திருக்கா.''

''வேண்டாம் மீனாட்சி. அவளை ஒண்ணும் சொல்லாத.''

''இப்பவே அவமேல இத்தனை லவ்வா. ஒண்ணும் சொல்லக் கூடாதாம். அவ வீட்டுக்குள்ளேயேவந்துட்டா என்னை மதிப்பேளா?''

''உனக்குப் புரியலை மீனாட்சி.''

''புரியலை புரியலை புரியலைன்னுதானே என்னை ஓரமா தூக்கிப் போடறேள்.''

''மீனாட்சி ப்ளீஸ் கத்தாதே.''

''கத்துவேன்.''

''வேண்டாம் மீனாட்சி.''

''என்னை ஏன் பிடிக்காமப் போயிடுத்து. பிரிய ஏன் நினைப்பு வந்தது?''

''ச்சீ உன்னைப் பிடிக்கலைன்னு யார் சொன்னா? உன்னைப் பிரியக்கூடாதுன்னுதான் அவளும் இங்க இருக்கணும்ங்கறேன். என்ன ஆனாலும் ப்ரியாவைப் பிரியக் கூடாதுன்னுதான் இதைக் கேட்கிறேன்.''

''இவ நமக்குள்ள வராம இருந்திருக்கக் கூடாதா?''

''வராம இருந்திருந்தா வெறும் புருஷன் பெண்டாட்டியா ஊருக்கு முன்னே நிப்போம். உள்ளே ஒட்டுதல் போயிடும்.''

''வந்துட்டா மலர்ச்சியாயிடுமா?''



''நிச்சயம். இதற்கு விட்டுக் கொடுத்த உன்னை நெஞ்சுல வச்சுக்கத் தோணும். இன்னும் நெருக்கம் வரும்.''

''தூக்கிப் போட்டுட மாட்டேளா?''

''நான் பொம்பளை பொறுக்கியில்லை மீனாட்சி. ஒருத்தி பேச்சைக்கேட்டு ஒருத்தியை ஹிம்சை பண்றவன் இல்லை. தமிழ் சினிமா பார்த்துட்டு, தமிழ் நாவல் படிச்சுட்டு பேசக்கூடாது.''

''என்னால ஒத்துக்க முடியாது.''

''சரி வேண்டாம்.''

''என்ன செய்வேள்?''

''எப்ப ஒத்துக்கறையோ அப்பஅவ இங்க வரட்டும். அதுவரைக்கும் ஹாஸ்டல்ல இருக்கட்டும்.''

''தனியா வையுங்களேன்.''

''முடியாது மீனாட்சி. அது அசிங்கம் மூணு பேருக்குமே.''

''அவளுக்குத்தான் அசிங்கம். அதனால முடியாதுங்கறேள்''

''அவளைத் தனியா வச்சா அங்க ரெண்டு நாள் தங்கும்படியா இருக்கும். அது நல்லதா. குழந்தை ஏங்கிடாதா?''

''அதுக்காக அவ வந்து என் குழந்தையைச் சீராட்டணுமா?''

''நிச்சயமா உங்க இரண்டு பேர் பாதுகாப்பில என் குழந்தை வளரணும்.''

''அவளுக்குக் குழந்தை பொறந்தப்புறம், என் பொண்ணை ஹிம்சைப்படுத்துவா.''

''உனக்கு சபிதாவைத் தெரியாது மீனாட்சி. நீயே கற்பனை பண்ணி பயந்து சாகறே. பேசிப் பழகாம ஏன் நீயா அவளைப் பயங்கரமா நினைச்சுக்கறே.''

''அவ நல்லவளோ கெட்டவளோ என் வாழ்க்கை பாழாயிடுத்து. இனி எனக்கு சந்தோஷம் கிடையாது.''

''தப்பு மீனாட்சி''

''நிஜம்தான்னா. அவ வேண்டாம்னு நான்சொன்னா நீங்க வரமாட்டேள். நீங்க இல்லாம என்னால வாழ முடியாது. வாழாவெட்டின்னு ஊர்சொல்லும். என்னோட பொண்ணே என்னைச் சொல்லும். உங்களை விடமுடியலைன்னா விடமுடியலை.''

''விடமுடியாததுக்கு ஊர் மட்டும்தான் காரணமா?''

''——''

''சொல்லேன் ஊர் வாய்க்குப் பயந்தா என்னை விடமுடியாது தவிக்கிறே.''

''.........''

''பேசு மீனாட்சி.''

''உங்களையும் பிடிக்கறது இத்தனைக்கப்புறமும் என் புருஷன் என்னை விடக்கூடாதுன்னு மனது கெஞ்சறது''

''ஏன்?''

''தெரியலை.''

''யோசனை செய்யேன்.''

''நீங்க நல்லவராகத்தான் தெரியறேள்.''

''சரியா யோசனை செய். பயப்படாமப் பேசு.''

''எனக்குத் தெரியலைன்னா. ஒண்ணும் தெரியலை. குழப்பமாத்தான் இருக்கு.''

மீனாட்சி அவன் மடியில் கவிழ்ந்து அழுதாள்.

''அம்மாடி கண்ணம்மா. அழாதேடா மீனாட்சி இங்கபார் என்ன பயம் உனக்கு''

ராகவன் அவளை இறுகக் கட்டிக் கொண்டு தலையைக் கோதினான். உச்சி முகர்ந்தான்.



கடவுளே ஒரு குழந்தையை மனைவியாக்கின பெருமானே நான் தவறு செய்கிறேனோ. இந்தப் பிஞ்சு மனசை நசுக்கித் தீய்க்கிறேனோ கூடாது. இவள் பிஞ்சாய் இருக்கவும் கூடாது. நசுக்கி மிதிக்கவும் கூடாது. உன் வளர்ப்பு தவறு மீனா. நீ வளர்ந்த விதம், வளர்ந்த இடம் தவறு. சகலமும் தெரிந்தவளாகப் பெண் இன்று இருக்க வேண்டும். விபரம் தெரியாதது பாவம். உரத்துடன் இல்லாதிருப்பது கேவலம். உனக்குப் பலம் வரவேண்டும். திடமும் தெளிவும், தன் காலில் நிற்கிற உரமும் வரவேண்டும்.

''இப்போ வெளியே கிளம்பறேளா?''

''ம்ம் ''

''அவளோடேயா?''

''ம்ம்.''

''எங்கே?''

''எங்கயாவது கால்போன போக்குலசுத்துவோம் ''

''சாப்பிட.''

''வழில பார்த்துக்கலாம்.''

''ராத்திரி வருவேளா?''

''எட்டு மணிக்கு வந்துடுவேன் ''

''நிச்சயமா?''

''நிச்சயமா.''

''ஹோட்டல்ல ரூம் போட்டுத் தங்க மாட்டேளே.''

''ஹாஸ்டல் பொண்ணு ஹோட்டல்ல தங்க முடியாது.''

''ராத்திரி சாப்பிட வருவேளா?''

''வருவேன்.''

''இந்தச் சட்டை வேண்டாமே. குங்குமம் ஆயிடுத்து வேறே போட்டுண்டு போங்கோ.''

''சரி.''

''அவகிட்டே நான் அழுதது சொல்ல வேண்டாம்.''

''ஏன்?''

''அசடுன்னு நினைச்சு சிரிப்பா, இரண்டு பேருமா சேர்ந்து சிரிப்பேள்.''

''இவ்வளவு சொல்லியும் இன்னும் புரியாமப் பேசற''

''இருக்கட்டும். எனக்கு மனுஷாயாரும் கிடையாது. பிறந்த இடத்துல வந்து காப்பாத்தமாட்டா. மாமனார் மாமியார் வந்து தடுக்க மாட்டார். எனக்கு உங்களை விட்டா வேற நாதி கிடையாது.''

''எனக்கும்தான்.''

''எப்படிச் சொல்றேள்?''

'உன்னை தவிக்கவிட்டுட்டு என்னால நிம்மதியா ஒரு வாய் சாப்பிட முடியாது.''

''நிச்சயம்.''

''நிச்சயம்.''

''சத்தியமா.''

''பணம் இருக்கா.''

''......''

''ஊர் சுத்தறேளே பணம் இருக்கா கையிலேன்னு கேட்டேன்.''

ராகவன் சற்று நேரம் வேதனையில் தவித்தான். யம்மா, என்று மீனாட்சியை இறுக்கிக் கொண்டான்.

''எனக்கு இது சோதனைதான், நல்லது கெட்டது தெரியாம வளர்ந்துட்ட எனக்கு இது பெரிய சோதனை தான். பகவான் மேலே பாரம் போட்டுட்டு நானும் உறுதியா நிற்பேன். மீனா மீனான்னு நீங்க கடைசி வரை கொஞ்சும்படி இருப்பேன்''

''கிளம்பிப்போன பிறகு அழமாட்டியே''

''அழுதா என்ன?''



''அழக்கூடாது.''

''ஏன்?''

''குழந்தை பயப்படுவா. தனியா உட்கார்ந்து நீ அழுதா அவளும் அழுவா.''

''சரி, அழலை.''

''கிளம்பட்டுமா?''

''சட்டை மாத்தலையா.''

''சரி.''

''ராத்திரி சாப்பிட வந்துடுங்கோ.''

''சரி.''

சட்டை மாற்றி தலை வாரி ஸ்கூட்டரை உதைக் கையில் ராகவனுக்கு உடம்பில் வலுவே இல்லாதது போல்இருந்தது.

## 16

ராகவன் படியிறங்கி மறைந்து மறுபடி வழி நடையில் தோன்றி ஸ்கூட்டரைத் தள்ளித் தெருவில் இறங்கினான். மீனாட்சி மேலேயிருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெருவில் போகிற சம்பந்தமற்ற நிறைய மனிதர்கள் போல அவனும் தோன்றினான். குழந்தை உள்ளேயிருந்து ஓடிவந்து அவளை இடித்துக்கொண்டு ராகவனைப் பார்த்து 'டாடி' என்று கத்தினாள். கையசைந்தாள். ராகவனும் நிமிர்ந்து கையசைத்தான்.

அவன் முகத்தில் வரவர ஒரு கொடூரம் வந்து விட்டதுபோல் மீனாட்சிக்குத் தெரிந்தது. என்னைக் கண்டு எதுக்கும் பயப்படாதே. எது பேசவும் தயங்காதே என்று முதல் இரவில் சொன்ன ஆண் பிள்ளை மறைந்து போனது போல் பட்டது.

எது செய்யவும் துணிந்து இருக்கிற முகம் இப்படித் தான் கொடூரமாகிவிடுமா? புருஷனுக்குப் பயப்படணும் என்பதுதான் அவள் வீட்டில் சொல்லிக் கொடுத்தபாடம் பயப்படாதே என்று சொன்ன புருஷன் விநோதம். ஆனால் புருஷனுக்கு மனைவி பயப்படுவதும் உறவுக்கு ஊருக்குப் பயப்படுகிற புருஷனும்தான் உத்தமம். பயப் பட வேண்டியவைக்குப் பயந்துதான் ஆகவேண்டும். எதற்கும் பயப்படாதவன் சிரமமானவன், ஜீரணிக்க முடியாதவன்.

வளர்ந்த வீட்டிலிருந்து புகுந்தவீடு முற்றிலும் மாறு பட்டு இருந்தது. வீட்டு மனிதர்களும், அறை ஒழுங்கும் வித்தியாசமாய் இருந்தன. பெரிய பெரிய ஸ்வாமி படங்கள், தாத்தா பாட்டி போட்டோ, கல்யாணமாகி ஜோடி ஜோடியாய் புகைப்படம் எடுத்துக்கொண்ட உறவுகள் என்றுதான் அவள் வளர்ந்த வீட்டு ஹால் இருக்கும்.

புகுந்த வீட்டில் பெயருக்குச் சிறியதாய் இரண்டு ஸ்வாமி படங்கள் ஒரு முழம் மல்லிகைக்கு அடங்கிவிடும் படங்கள். ஹாலில் பாரதியார் படம். இருண்ட வானம் என்கிற நீல பெயிண்டிங். மற்றபடி வெறும் சுவர். நாலு பக்கமும் வெறும் சுவர். இதுபற்றிக் கேட்டபோது முகம் முகமா மாட்டி வைக்கிறது. எனக்குப் பிடிக்காது என்று சொல்லிவிட்டான்.

இந்த வீட்டில் அதிகம் இருந்தது புத்தகங்கள். பரணில், அலமாரியில், இரும்பு பீரோவில், கட்டிலுக் கடியில் கட்டிக் கட்டிவைத்திருக்கிற புத்தகங்கள், படமே இல்லாத புத்தகங்கள்.

''விநாயக சதுர்த்திக்கு சாஸ்திரிகள் வந்து பூஜை பண்ணுவாரா?''

''இங்கே வழக்கமில்லை மீனாட்சி. எனக்கு சமஸ் கிருதம் தெரியாது. வெறுமே அவர் சொல்றதை நான் திருப்பிச் சொல்லி உரத்த சத்தம் மட்டுமே பூஜையா செய்யப் பிடிக்கலை.''



''கொழுக்கட்டை பண்றது வழக்கமா?''

''தெரிஞ்சா செய். இல்லேன்னா பாயசம் போறும்.''

''அப்புறம் பண்டிகை எதுக்கு?''

''பண்டிகைன்னா டென்ஷனா இருக்கணுமா என்ன? நீ அடுப்படில வெந்து, நான் பூஜை ரூம்ல புழுங்கி, புழுக்கத்துல ஆள் ஆளுக்குக் கோபம் வந்து ஒருத்தரை ஒருத்தர் சீறி அப்படி இருந்தாத்தான் பண்டிகையா. பண்டிகைன்னா இந்த வீட்ல சந்தோஷ மான நாள்னு அர்த்தம். நிதானமா பரபரப்பு இல்லாம கோபம் இல்லாம சிரிச்சு சாப்ட்டு பகல்ல தூங்கி ஆனந்தமா இருக்கிற நாள். மடி ஆசாரம்னு குழந்தை களைப் பட்டினி போட்டு அதட்டி உருட்டறது இங்க நடக்காது. சுலபமா இரு. குழந்தைக்கு வேணுங்கறது கொடுத்துட்டு அப்புறம் பூஜைக்கு ஏற்பாடு செய்.''

''பெரிய பூஜைகள் இல்லாத வீடு பண்டிகை பரபரப்பு இல்லாத வீடு.

இப்படி ஆசாரம் இல்லாதனாலத்தான் இப்படிப் பட்ட குறையாய் முடிந்துவிட்டதா?

மீனாட்சி குழந்தையுடன் உள்ளே வந்தாள். என்ன சமையல் செய்வது. சாப்பிட அவன் வரப்போவது இல்லை. இனி என்ன பொங்கினால் என்ன? அவன் அப்படியே சாப்பிட வந்தாலும் வழக்கம்போல் அது ஏனோ தானோன்னுதான் இருக்கும்.

''ரசம் கைல வாங்கிக் குடிக்க மாட்டேளா?''

''ம்ம்ம்.''

''ரசம் கைல ஊத்தட்டுமா?''

''ம்ஹூம்—காரமா இருக்கும்.''

''இந்தக் காரம்கூடக் கூடாதா? ரசம் உறிஞ்சிக் குடிங்களேன்.''

நக்குவது, உறிஞ்சுவது, வழித்துத் தின்பது எதுவும் இல்லை. புத்தகமும் கையுமாய் சாப்பிட உட்கார்ந்து

அளைந்து அளைந்து சோறு விரைக்கச் சாப்பிட்டு எழுந்திருப்பான்.

''ஏதோ சாப்பிடணும் அவ்வளவுதான் மீனாட்சி. ருசிச்சு சாப்டறது பாவம். சாப்பாட்டுக்கு அளவுக்கு மீறி மதிப்பு கொடுக்கக்கூடாது. ருசியோ பதமோ பார்க்கக் கூடாது வாய் விழுங்கக்கூடிய வகையா சாதம் இருந்தா போறும்.''

அப்பா மோர் சாதத்தில் சர்க்கரை போட்டுக்கொள்வார். கேட்டு வாங்கி வெறும் சட்டினி சாப்பிடுவார். ராகவனுக்கோ ரசம் ஊசினதுகூடத் தெரியாது.

முதலில் இந்த வழக்கங்கள் விநோதமாய் இருந்து பிறகு இதுவே வழக்கமாகி விட்டது.

மீனாட்சி ஹால் நடுவே நாற்காலியில் முழங்கால் கட்டி உட்கார்ந்திருந்தாள்.

இனி எல்லா லீவு நாளும் இப்படி நடுஹாலில்தான் தனிமையில் நகரப் போகிறது. சபிதா, சபிதா என்று இவன் போன பிறகு இந்த வீட்டில் தனித்துத் திரியும்படி ஆகப் போகிறது.

மாடிப்படியருகே சப்தம் கேட்டது.

பிச்சம்மா

வேலைக்காரி. வீடு புகுந்த நாளாய் இருக்கிற வேலைக்காரி. பத்துத் தேய்த்துக்கொண்டே வீட்டின் சகல நடவடிக்கையும் தெரிந்துகொண்டுவிடுகிற வேலைக்காரி.

''ஐயரு வெளிய போறாரு போல இருக்குது.''

''ஆமா.''

''அது யாரு, வண்டில அந்தப் பொண்ணுதானா?''

''ம்ம்ம்.''

''இங்க இட்டாந்துட்டாரா?''

''அவ வந்துட்டா.''



''இங்கதான் இருக்குமா இனிமே?''

''ஹாஸ்டல்ல இருக்கும்.''

''நீ வீட்ல சேர்க்காத சொல்லிட்டேன், கண்டிசனா முடியாதுன்னு சொல்லிடு.''

மீனாடசி மௌனமாய் இருந்தாள். இவளுக்கெல்லாம் தெரிந்திருக்கிறது. இங்கு உரக்கப் பேசினது எல்லாம் கேட்டிருக்கிறது.

''எதிர்வூட்ல கேட்டாங்க. என்ன அந்த ஐயரு அப்படி செய்துட்டாரு. நீ ஒரு வார்த்தை கேட்கக் கூடாதான்னாங்க. உங்களைப் பத்திதான் மாஞ்சு மாஞ்சு கவலைப்படறாங்க. நான் சொன்னேன். ஐயரு யார் பேச்சும் கேட்கற ஆள் இல்லை. அந்த அம்மா குணத்துக்கு இப்படி வர வேணாம்னேன். வேறென்ன சொல்றது. அவரு அந்தப் பொண்ணோட போறதைப் பாக்கச் சொல்ல எனக்கே பகீர்ன்னுது. உனக்கு எப்படி இருக்கும்.''

மீனாட்சிக்குக் கண் விளிம்பில் ஜலம்கோர்த்து கன்னங்களில் வழிந்தது.

''நீ அழுவாத மீனாம்மா. கடவுள் இந்த அநியாயத்தை கேட்காத வுடமாட்டான். குருவிக் கூடு கலைச்சாப்ல உன் குடித்தனத்தைக் கலைக்கிறானே நல்லா இருப்பானா. நீ அழுதா பூமி தாங்காது. அழுவாதே. அதுதான் கேடு கெட்டதுன்னா ஆம்பிளைக்குப் புத்தி வேணாம், தப்பா நினைச்சுக்காதே. உனக்கு நெஞ்சுரப்புப்போறாது. உங்க வூட்டு மனுஷங்களுக்குத் தகிரியம் இல்லை. எங்க சாதி சனம்னா இந்நேரம் கத்தி கபடாவெல்லாம் தூக்கியாந்து கணக்கு தீர்த்துட்டிருக்கும். ஒண்டிக்காரி நீ என்ன செய்யவே. முனை வூட்டு அம்மா கேட்டாங்களாமே ஐயரை என்ன கேள்விப்பட்டேனே நிசமான்னு''

''எப்படித் தெரியும் அவங்களுக்கு.''

''ஏதோ புஸ்தகத்துல ஐயரு எழுதியிருந்தாப்பில யாம். அவங்க படிச்சுருப்பாங்க. தெசமா அது கதை யான்னு கேட்டாங்களாம.''

''என்ன சொன்னாராம் இவரு.''

''எல்லா கதையும் நெசம்தான். எல்லார் வீட்லயும் நடக்கிறதுதான். உங்களுக்குத் தெரியாத உங்க வூட்டு ஐயா சுத்தறாரு. நான் ஊருக்குத் தெரிஞ்சு சுத்த ரேன்னாராம். அந்த அம்மா கன்னாபின்னான்னு திட்டுது ஐயரை.''

'ஆமா இவர் மாதிரியா எல்லா ஆம்பிளையும்.''

''அவங்க வூட்டு ஐயாவும் சுத்தினாரு. அந்த அம்மா மடக்கி அழுத்திப் போட்டாங்க. இப்ப நல்லபடியா ஆய்ட்டாரு. சொந்த ஊருக்குப் பொட்டி எடுத்துக்கிட்டு குடித்தனம் பண்ணமாட்டேன்னு போய்ட்டாங்க. இவரு சமாதானம் பண்ணிக் கூட்டியாந்தாரு''

''அப்படிப்போக எனக்கு இடம் இல்லை பிச்சம்மா''

போக முடியவில்லைஇவனை விட்டு நகர்வதுபற்றி யோசிக்கக்கூட முடியவில்லை. ஒரு இரவு இவன் வீட்டில் இல்லையென்றாலும் தரிக்க முடிவதில்லை.

தன் வீட்டைவிட இந்த இடம் இவனோடு இருப் பதில் உண்டான சுகம் இந்த ஆறுவருட வாழ்க்கை ரொம்பவும் இறுக்கமாய் நெஞ்சில் ஒட்டிக் கொண்டு விட்டது.

அப்படியே போகவேண்டும் என்று நினைத்தாலும் இந்த ஏழு வயசுக் குழந்தையோடு எங்கே போவது, யாரிடம் போய் நிற்பது? எத்தனை நாள் தங்குவது?

புருஷனை விட்டு வந்தவளை எவரால் தாங்க முடியும்.

தனியா இருக்க முடியாதா, முடியும். டீச்சர்ஸ் காலனி மைதிலி வந்து சொல்லிவிட்டுப் போனாள். இப்படிப்பட்ட புருஷனோட இருப்பதைவிட பிரிஞ்சு போய்விடறது மேல் என்று உபதேசித்தாள்.

ஒருவேளை சோறு மைதிலி போடுவாளா? மீனாட் சிக்கு சாமர்த்தியம் இல்லைஎன்றுதான் சொல்லுவாள்.



புருஷனைப் பிரிந்து ஊர் வாயிலும் அடிபட்டுப் பெண் குழந்தையோட எப்படித் திரிய.

பகவானே நான் எவர் குடும்பத்தைக்கலைத்தேன். எவர் வாழ்க்கையைப் பாழாக்கினேன். எனக்கேன் இப்படி வந்தது இறுமாந்து இருந்தேனே ஆறு வருடம். பட்டும் நகையுமாய் புருஷனோடு சுற்றினேன். யார் கண் பட்டது. எவர் மனசு சுட்டது.

செத்துப் போய்விடலமா, மாத்திரை முழுங்கி ஒரே யடியாய் தூங்கி விடலமா.

குழந்தை என்ன செய்வாள். எப்படிக் கதறுவாள். எங்கே யாரோடு போய் இருப்பாள். இந்தப் பிஞ்சு எப்படியெல்லாம் அலைக்கழியும். தாயில்லாமல் என் னென்ன அவஸ்தைப்படும்.

உறவுகள் கூடியிருக்கிறஎனக்கே உதவியில்லையே. இந்தக் குழந்தைக்கு சிரமம் எனில் எவர் உதவி செய்வார்.

சாகக்கூடாது சாகவே கூடாது. வருவது வரட்டும். எது வேண்டுமானாலும் வரட்டும். எவள் வேண்டு மானாலும் வரட்டும் என் அன்பு சத்தியம் எனக்கு என் புருஷன் முக்கியம் நான் பொறுத்திருப்பேன். அசோக வனத்து சீதை மாதிரி காத்திருப்பேன். என் புருஷன் ராமனா இல்லாவிட்டாலும் நான் சீதை. காத்திருப் பேன்.

''குடிச்சிட்டு வந்து அடிச்சாலும் பரவாயில்லை. என் புருஷன் இன்னொரு பொம்பளைக்கிட்ட போ மாட்டான்'' பிச்சம்மா சொல்கிறாள்.

என் புருஷன் குடிகாரன். இல்லை. சூதாடியில்லை, ஆனால் பெண் சபலக்காரன். பெண் இவனுக்குப் போதையான விஷயம். போகட்டும், குடியை சூதைப் பொறுத்துக் கொள்வதுபோல இதைப் பொறுத்தால் என்ன?

நீதான் எனக்கு என்று, ஒரு நாள் இவன் மனசு மாற மாட்டானா? கெட்ட குமாரன் மாதிரி வீடு திரும்ப மாட்டானா?

ராகவன் வீடு திரும்புகையில் இரவு ஏழு மணி.

வந்ததும் சாப்பிட்டான்.

விக்கிற்று.

ஜலம் குடித்தான்.

படுக்கை விரித்து சுருண்டு கொண்டான்.

''ஏன் டயர்டா இருக்கா?''

''ஆமாம்.''

''ரொம்ப அலைஞ்சேளா?''

''வெயிலில் எத்தனை நேரம் வெளியே சுத்த முடியும்.''

''எங்க சுத்தினேள்?''

''எங்க. பீச், ஸூ. இரண்டு பேருக்குமே அலுப்பாயிடுத்து. உட்கார்ந்து பேச நிம்மதியா இடமே இல்லை.''

''ஏன்?''

''வீடு மாதிரி வராது மீனா.''

''இங்க கூட்டிண்டு வரணும்னு தோன்றதா?''

''வரலாம். உனக்குச் சிரமமாகும்.''

''என்ன செய்யப் போறேள்?''

''தெரியலை''

''ஹாஸ்டல்ல பேசமுடியாதா?''

''அங்கேயும் வெயில்லதான் உட்காரணும்.''

மீனாட்சி மௌனமாய் அவன் அருகே உட்கார்ந்திருந்தாள்.

''நீ தூங்கு மீனாட்சி.''

''எனக்குத் தூக்கம் வரலை.''

''ஏன்?''

''இப்படித் தவிக்கிறேளே. எனக்குக் கஷ்டமாயிருக்கு.''

''நானா இழுத்து விட்டுண்டதுதானே. கஷ்டப்படாம முடியுமா?''

''எத்தனை நாள்?''



''கடைசி காலம் வரைக்கும்.''

''விடவே மாட்டேளா?''

''இனி விட முடியாது மீனா.''

''நிச்சயமாவா?''

''நிச்சயமா.''

''கஷ்டமாயிருக்குங்கறேள். விட முடியாதுங்கறேள்.''

''வாஸ்தவம். ஆனால் தாங்கிப்பேன். கஷ்டப்பட்டாலும் சகிச்சுப்பேன்.''

''எதுக்கு இத்தனை வேதனை?''

''நல்லது வேணும்னா கஷ்டப்பட்டுதான் ஆகணும்.''

''இது நல்லதுதானா?''

''நிச்சயம் நல்லதுதான். எனக்கு உனக்கு குழந்தைக்கு நல்லது.''

''ஊர் காறித் துப்பும்.''

''சரியா அமைச்சிக்கிட்டா பொறாமையும் படும்.''

''சரியா அமையுமா?''

''அது நம்ம மனசைப் பொறுத்தது.''

''சரி அப்ப கூட்டிண்டு வாங்க.''

''யாரை?''

''சபிதாவை.''

''எப்போ?''

''உடனே. இப்பவே.''

''இந்த ராத்திரியா?''

''எட்டு மணிதானே வரட்டும்.''

''தெளிவாத்தான் பேசறயா.''

''ஆமாம் மூணு பேரும் இப்படி ஹிம்சைப்படறதுக்கு ஒன்னா இருந்துக்குவோம்.''

''மீனா.''

''நிஜமா சொல்றேன் கூட்டிண்டு வாங்கோ.''

''நாளைக்கு.''

'நாளைக்கு வேற ஏதாவது குறுக்க நிற்கும், நல்லதுன்னு பட்டா உடனே செய்யணும். கூட்டிண்டு வாங்கோ.''

''வந்த பிறகு அழுது புலம்பி ஆர்ப்பாட்டம் பண்ணிடுவியா?''

''மாட்டேன்.''

''மீனா.''

''உங்களை நம்பறேன். குழந்தைக்கு அப்பா வேணும். அதனாலயும் சொல்றேன். அவளும் எத்தனை நாள் தெருத்தெருவா சுத்துவா. போறும், ஹாஸ்டல்ல இருந்தா என்ன. இங்க இருந்தா என்ன. வரட்டும்.''

''மீனா.''

''என்னை விட்டுடாதீங்கோ. இது மட்டும்தான் கேட்கறேன். என்னை நகர்த்திடாதீங்கோ.''

''முடியாது மீனா. உன்னை நகர்த்துகிற நினைவு கூடக் கிடையாது.''

''அவ பொட்டியை எடுத்துண்டு வந்துடட்டும். இங்கேயே இருக்கட்டும்.''

சபிதாவோடு அவன் வீட்டு விளிம்பில் நிற்கையில் மணி ஒன்பது.

மூவருக்கும் பால் எடுத்து தரையில் வைத்துவிட்டு குழந்தைக்கருகில் மீனா உட்கார்ந்தாள். ராகவன் குழந்தையின் கால்மட்டில் அமர்ந்தான். சபிதா மெல்ல நகர்ந்து குழந்தையின் முதுகை வருடி கழுத்தில் முத்தமிட்டாள்.

அங்கே திண்ணென்று ஒரு மௌனம் இறங்கிற்று.

செம்மை நலம் அறியாத சிதடரொடு திரிவேனை
மும்மை நலம் அறிவித்து முதலாய முதல்வந்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவார் யார் பெறுவார்
அச்சோவே



ராகவன் மெல்லப் பாடினான். குழந்தையின் கால்களை இதமாய் பிடித்து விட்டான். அப்பா இது என்ன வாழ்க்கை. எப்படியெப்படியெல்லாம் திரும்புகிறது. யார் பெறுவார் இதை எவருக்கும் கிடைக்காதது எனக்குக் கிடைத்திருக்கிறது. கடவுளே நான் இவ்வரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேணும்.

## 17

' நீ சாப்பிட்டியா.'' மீனாட்சிதான் மௌனத்தைக் கலைத்தாள்.

மீனாட்சியால் மௌனத்தைத் தாங்க முடிவதே இல்லை. அவளுக்கு மௌனம் பயத்தைக் கொடுக்கும் விஷயம். தனிமை அவளுக்குக் கலவரம். விஷயமே இல்லையெனிலும் பேசிக்கொண்டிருக்க வேண்டும். எது எப்படிப் போனாலும் இரவு தூங்கும் முன்பு கணவனைப் பார்த்து விட வேண்டும். 'இன்னிக்கு முழுக்க நீங்க இல்லாம போர் அடிச்சுதுன்னா'' கலகலத்துச் சிரித்துப் பேசி சொன்னதையே பலமுறை சொல்லி, மௌனம் மீனாட்சியால் தாங்க முடியாத விஷயம்

''நீ சாப்பிட்டியா?'' மறுபடி கேட்டாள்.

சபிதாவும் உள்ளே ராகவனைப்போல் தவித்திருக்க வேண்டும் மூன்று வருட அலைச்சல் ஒரு நிலைக்கு வந்தது என்று துவண்டிருக்க வேண்டும்

பதிலை சட்டென்று சொல்லாமல் நிமிர்ந்து மீனாட்சியை வெறித்தாள். ''ஹாஸ்டல்ல சாப்ட்டேன். ஆனாலும் இப்ப பசிக்குது.''

''இங்க சாப்பிடறயா?''

''சாதமா. வேணாம்.''

''போர்ன்விடா தரட்டா?''

''கொடுங்க.''

''உங்களுக்குன்னா?''

''காபி.'

''இந்த நேரத்திலயா?''

''தாகமா இருக்கு மீனாட்சி.''

மீனாட்சி உள்ளே போனாள். ராகவன் சபிதாவை நோக்கித் திரும்பினான்.

''சபிதா, இவ ஒரு குழந்தை. ப்ரியா மாதிரி இன்னொரு குழந்தை. இவ பேச்சு, மனசு, எண்ணம், செயல் எல்லாத்திலேயும் பத்து வயசுப் பொண்தான். சில சமயம் மிதிச்சிடுவா. தாங்கிக்கணும். நான் பல தடவை மிதிபட்டிருக்கேன். இதமா காலை மிதிச்சு விடுன்னு சொன்னா குழந்தை பேலன்ஸ் தவறி அடி வயத்தில் அழுத்திடாதா அது மாதிரி நச்சுன்னு மிதிச்சாலும் பொறுத்துக்கணும்.''

சபிதா தலையசைத்தாள்.

சுற்றி வீட்டைப் பார்த்தாள்.

வெளியே போய் பால்கனியைப் பார்த்தாள். ஹாலை வலம் வந்தாள். படுக்கை அறையில் நுழைந்தாள். உள்ளே சமயலறைக்குள் போனாள். பால் காய்ச்சிக்கொண்டிருந்த மீனாட்சியைத் திருப்பி நிறுத்தி நமஸ்கரித்தாள்

''நீங்களாகவே கூட்டிவரச் சொன்னீங்களாமே.''

''ஆமா எதுக்கு இத்தனை வேதனை? மூணு பேருமா மூலைக்கு மூலை நிக்கறது மூஞ்சியைத் தூக்கிட்டு எனக்கும் திருப்தி இல்லாம அவருக்கும் அமைதி இல்லாம உனக்கும் பிடிப்பு இல்லாம அலைய வேண்டாமேன்னு வான்னுட்டேன். ஏன் உனக்கு. ஏதாவது கஷ்டமா?''

''இல்லை. எனக்கொரு கஷ்டமும் இல்லை.''



''ஊர் சிரிக்கும். சிரிச்சுட்டுப் போகட்டும். எத்தனை நாள் சிரிக்கும். உங்க வீட்லேர்ந்து யாரும் இங்கே வந்து கலாட்டா பண்ணமாட்டாளே.''

''மாட்டாங்க.''

''இந்தா இதைக் கொண்டுபோய் கொடு.''

''நீங்க கொடுங்க. நான் இங்கேயே சாப்பிடறேன்.''

''வேணாம், நீயே கொடு. நீயும் வளைய வரவேண்டியது தானே.''

''நீங்களும் வாங்களேன்.''

''நீ போ. வரேன்.''

சபிதா பானங்களை ஹாலுக்கு எடுத்துப் போனாள். ராகவன் துவண்டு சுவரில் சாய்ந்திருந்தான்.

''என்ன ஒரு மாதிரி இருக்கீங்க.''

''ஒண்ணுமில்லை.''

''டயர்டாயிருக்கா.''

''ம்ம்.''

''என்னாலயா?''

''ஆமாம்.''

''ரொம்ப ஓட வச்சிட்டேனா?''

''ஓட்டம் முடிஞ்சிடுச்சு.''

''அதான் களைப்பா.''

''இருக்கும்.''

''இன்னும் கொஞ்ச நாள்தான் இந்தக் களைப்பு. சரியாயிடும் காபி சாப்டுங்க''

''இனிமேதான் நிஜமான பிரச்சினையே இருக்கு.''

''என்ன?''

''ஊர் சுத்திச் சுத்தித் தாக்கும். தாக்குதல் தானாம கோபம் வரும்.''

''எனக்கா?''

''எனக்கும் வராது. உனக்கும் வராது.''

''ஏன்?''

''புத்திசாலித்தனம் ஜாஸ்தியாயிட்டா கோபம் வராது.''

''மீனாட்சிக்கு வரும்ங்கறீங்களா?''

''ஆமாம்.''

''தாங்குவேன். சாப்டுங்க.''

''ஏன்னா. இவளுக்குப் படுக்கை எங்க.''

''நான் வராண்டாவில் படுத்துக்கறேன்.''

''உன்னைக் கேட்கலை. அவளுக்கு இடம் சொல்லுங்க.''

''எங்க வேணா படுத்துக்கட்டும்.''

''சரி நீ உள்ள படுத்துக்க. நாங்க ஹால்ல படுத்துக்கறோம்.''

மீனா படுக்கையை ஹாலில் விரித்தாள். சபீதாவுக்கு சோபா-கம்-பெட்டைப் பிரித்து உள்ளே போட்டாள்.

இன்னிக்கு யாருக்கும் தூக்கம் வரப் போறதில்லை. ஆனாலும் தூங்கினாத்தான் நல்லது.

ராகவன் படுக்கையில் சாய்ந்தான். அவனருகில் மீனா அமர்ந்தாள். உள்ளே சோபா கிறீச்சிட்டு சபீதா புரள்வது தெரிந்தது.

''போதுமா இனி திருப்திதானே.''

ராகவன் புரண்டு அவள் மடியில் தலை வைத்தான்.

''ஏன் பேசமாட்டேங்கறேள்.''

''என்னமோ வேதனையா இருக்கு.''

''ஏன்?''

''பெரிய பாரமா உன் தலையில வைச்சுட்டேன்.''

''பெரிய கல்லுதான். இத்தனை பெரிய இடி விழும்னு நினைக்கவேயில்லை. ரொம்ப இறுமாந்து இருந்தேன். என் மூஞ்சிக்கு என் புத்திக்கு ரொம்ப கெட்டிக்கார புருஷனான்னு கர்வப்பட்டேன். கூட



வேலை செய்யறவா உறவுக்காரா எல்லோரும் ஓஹோன்னபோது, பல்தெரியச் சிரிச்சேன். தாங்க முடியாத சிரமம்தான். இதைவிட பெரிய சிரமம் வாழா வெட்டின்னு கிடக்கறது. என்னால வாழா வெட்டியா இருக்க முடியாது. எனக்குத் தெரிஞ்சவா என்னைத் தெரிஞ்சவா துணையில்லாம வாழ முடியாது. என்னை எங்கப்பாவுக்குத் தெரிஞ்சதை விட என் ஆபீஸ்காரர்களுக்குத் தெரிஞ்சதைவிட உங்களுக்கு என்னை நன்னாத் தெரியும். உங்க நிழல்ல ஒட்டிண்டிருக்கிறதுதான் சுகம். பலம் ஒரே ஒரு உதவி மட்டும் செய்யணும். என்ன ஆனாலும் என்னை உதறிடாம இருக்கணும். இவ வந்துட்டாளேன்னு என்னை ஒரு மூலைல தள்ளிடக் கூடாது. எனக்கு என் ஸ்தானத்தை எப்பவும் கொடுக்கணும். உனக்கு ஒண்ணும் தெரியாது— தெரியாதுன்னு சொல்லப்படாது. ஒண்ணும் தெரியாமலா இதைச் செய்திருக்கேன். யார் செய்வா... இதுதான் எனக்கு உங்களுக்கு சரின்னு தெரிஞ்சுது. செய்தேன். இது இங்கே வந்தது அவமானம் இல்லை. என்னை உதறிட்டேன்னா தான் பெரிய அவமானம். என்ன நான் சொல்றது புரியறதா? ஒரு நாவல்ல எழுதினேள், என்னை வச்சிதான் எழுதினேள். இது ஹிம்சையுமில்லை, வாழ்க்கையுமில்லைன்னு எழுதினேள். யார் யார் எப்பெப்ப படிச்சாளோ, அதை என்ன புரிஞ்சிண்டாளோ அதுலேர்ந்து தெரியலை. நான் இப்பதான் படிச்சேன். இன்னிக்கி கார்த்தாலேதான் புரிஞ்சுண்டேன்.

அதுல ஒரு தப்பு இருக்கு. உங்களுக்குப் புரியறதா? அந்த வார்த்தைல ஒரு தப்பு இருக்கு. சொல்லட்டுமா? இது ஹிம்சையில்லை. வாழ்க்கையுமில்லைங்கறது கேட்க அம்சமா இருக்கு. ஆனா வாழ்க்கையா இல்லாதது ஹிம்சைதான். வாழ்க்கையா ஒட்டாதது எதுவானாலும் வேதனைதான். காலுக்கு ஒட்டாம கொஞ்சம் கொஞ்சம் லூஸா செருப்ப வாங்குங்கோ, குதிகால் நடுவில் விண்ணு விண்ணுன்னு வலிக்கும். கட்டை விரல்

இடுக்கில் நரம்பு இழுத்துக்கும். பாந்தமாக இல்லாதது ஹிம்சைதான். நான் சொல்றது சரியா, இல்லை உளற லா. என்னமோ தெரிஞ்சதைச் சொன்னேன்.

ஏன் பேச்சேயில்லை. போர் அடிக்கிறேனா. இப்படி யோசனையோட உங்கக்கிட்டே ஆரம்பத்திலேர்ந்து பேசியிருக்கணும். எனக்குப் படுத்துண்டா டக்குன்னு தூக்கம் வந்துடறது. ஒண்ணுமே தெரியலை. அச டாவே ஆறு வருஷம் இருந்துட்டேன். என்ன புதுசா புலம்பறேன்னு பார்க்கறேளா...? ரெண்டு நாளா பைத்தியம் பிடிக்காத குறை. சுவத்தைப் பார்த்துப் பேசிண்டு, அடுப்பைப் பார்த்துப் பேசிண்டு, பத்துப் பாத்திரம் பார்த்துப் பேசிண்டு, தோய்க்கிற கல்லைப் பார்த்துப் பேசிண்டு எனக்கே பயமாயிடுத்து. உங்க ளைப் பிரிஞ்சுட்டேன். நிச்சயம் பைத்தியம் பிடிச்சிடும். புடவையைக் கிழிச்சுண்டு தெருத் தெருவா அலைவேன்.

என்னா... இன்னொண்ணு புரியலை. இப்படிக் கூட் டிண்டு வந்துட்டமே. உங்க தம்பியோ என் பக்கத்தி லேர்ந்தோ யாரானும் வந்தா என்னன்னு சொல்றது. தெரிஞ்சவான்னு சொல்றதா... நெஜத்தையே சொல் லிடறதா? முதல் கேள்வி கீழ் வீட்லேர்ந்து வரும். யாரு அதுன்னு மடக்கிக் கேட்டப்புறம்தான் அவாளுக்கும் தூக்கமே வரும் என்ன சொல்றது. இப்பவே படக்கு படக்குன்னு இருக்கு, எப்படி எல்லார் மூஞ்சிலேயும் முழிக்கப் போறேன்னு பயம்மா இருக்கு. எல்லோரும் சிரிப்பா இல்லை... பின்னாடி கேலி பண்ணுவா இல்லை. நினைக்க நினைக்க பயம்மா இருக்குன்னா. எப்படி நீங்க ஆடாம அசையாம இருக்கேள். தப்பு பண்றவாளை யாரும் கேட்கமாட்டா. உங்களுக்கு தைரியம் ஜாஸ்தி. நான் நெறைய கத்துக்கணும். எது வந்தாலும் கலவரப்படாம இருக்க சொல்லித் தரேளா.'

ராகவன் மௌனமாய் படுத்திருந்தான். பதில் சொல்லி விளக்கிக் காட்டிப் பேசும் நேரமில்லை இது.



பேசினாலும் வாங்கிக் கொள்ளும் அமைதி இல்லை இவளிடத்தில்.

விழிப்பு வந்து விட்டதாய் நினைக்கிறாள். மாறுத லுக்கு, சோதனைக்கு தயாராகி விட்டதாய் நினைக் கிறாள். விழிப்புதான். ஆனால் இன்னும் கண் ஈரம் பிரிய வில்லை. வெளிச்சத்தின் கூச்சம் தாங்கவில்லை. ஒளி பழக நேரமாகும் இவளுக்கு.

இது இவளின் நொய்மையான நேரம், மிகமிக பத்திரமாய் இவளை இவளிடமிருந்து பாதுகாக்க. வேண்டும். ஊர் முதலில் இவளைத்தான் மிதிக்கும். இந்த வீட்டின் பலவீனமான வாசல் இது எனத் தெரிந்து உள் விவரம் தெரிந்து கொள்ள இவளை எட்டி உதைக்கும். மூக்கை நுழைத்து குசலம் கேட்கும். உண்மையான மனிதர்கள் யார், உண்மையான ஸ்நேகி தர்கள் எவர் என்று தெரிந்து கொள்ளும் நேரம் இது. தெரிந்து கொள்வோம்...மனிதர்களைச் சந்திப்போம்.

''மீனாட்சி நாளைக்கு ஆபீஸ் உண்டா?''

''உண்டு.''

''போக வேண்டாம்.''

''ஏன்?''

''சும்மா வீட்லேயே இருப்போம்.''

''மூணு பேருமா?''

''ஆமாம்.''

''எதுக்கு?''

''புரிஞ்சுப்போமே ஒருத்தரையொருத்தர்.''

''லீவு போடவா?''

''போடேன்''

''வெளியே போவோமா?''

''உன் இஷ்டம்.''

''வேண்டாம் வீட்லேயே இருப்போம்.''

30197

''சரி.''

உள்ளே சோ-கம், பெட் அசைந்தது.

''தூங்கலை போலிருக்கே.''

''ம்ம்.''

''போய் கேளுங்களேன்.''

''வேணாம்.''

''நான் போய் பேசட்டுமா?''

''சரி.''

''சபிதா''. குரல் கொடுத்தபடி இருட்டை துழாவிக் கொண்டு மீனாட்சி எழுந்து போனாள். அறைக்குள் குசுகுசுவென்று பேச்சு கேட்டது. ராகவன் சலனமின்றி படுத்திருந்தான்.

## 18

**வா**ழ்க்கையை அதிக சிரமமுள்ளதாய் மாற்றிக் கொண்டு விட்டேனோ? இது சதைத் திமிரா? மேலும் மேலும் வெற்றிக்குத் தவிக்கும் ஈகோ நச்சரிப்பா? வெகுளியாய் வெள்ளையாய் இல்லாமல் சகல நேரமும் சிந்தனைப் பின்னலுடன் இருப்பதற்கு உண்டான விழைவா?

சும்மா இருசொல் அற என்றலுமே
அம்மா, பொருள் ஒன்றும் அறிந்திலனே

சும்மா இருக்கத் தெரியவில்லையே. ஆனால் நிறைய பேர் சும்மா இருக்கிறார்கள். பத்துமணி ஆபீஸுக்கு ஆறுமணிக்கே எழுந்து குளித்து விட்டு விபூதி பூசிக்கொண்டு சும்மா இருக்கிறார்கள். ஆறுமணி நேரம் ஆபீஸில் இருந்து விட்டு. வீட்டுக்கு வந்து சும்மா இருக்கிறார்கள். பளபளப்புடன் இருக்கிறார்கள். கன்னமும் /பிருஷ்டமும், இடுப்பு சதையும் பார்க்க கையிலேயே மெத்து மெத்தென்று தெரிகிறது சிரமப் படாத ஜீவன் என்று.



''இன்னிக்குத் தண்ணி வராதாம் சார். கம்ப்ளீட் ஷட்டவுன். மூன்று கிலோ மீட்டர் பைப் மாத்தறான். நைன்டீன் தேர்ட்டி ஸிக்ஸ் ஸிட்டில முதன்முதலா பைப் போட்டான் நன்னா ஞாபகம் இருக்கு. ஒரு ராம நவமியின் போது இனாகுரட் பண்ணினா'' கீழ்வீட்டு மனிதர் பேசுவார்.

ராகவனுக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்த விவர மெல்லாம் விரல் நுனியில் எப்படி இருக்கும். நகரத்தில் குழாய் போட்டது. குண்டு போட்டது. வெள்ளம்வந்தது. நிஜாம் செத்தது, என்றெல்லாம் தேதிகள் எப்படி நினைவு கொள்ள முடியும். சும்மா இருக்கிற. சுகமா, வாழ்க்கையில் இதைவிட அதிரக்கூடியசெய்தி எதுவுமே இல்லாமல் இதுவே அதிர்ச்சியாய் தோன்றி நேரத் தோடு பதிந்து விட்டதா?

ஆனால் நூறுமுறை கேட்டாலும் மோகனராகத்தை கீழ்வீட்டு மனிதருக்கு ஞாபகம் வைத்துக்கொள்ளத் தெரியவில்லை.

உருவய் அருவய் உளதய் இலதய் என்று உரக்க அவர் சாமிபாட்டு சொல்லித் கொண்டிருந்தபோது புரியாமல் ராகவன் விழித்தான்.

''என்ன பார்க்கறேள், எனக்குத் தெரிஞ்ச ஒரே சாமி பாட்டு. முருகன் ஸ்தோத்திரம்.''

''புரியலையே.''

''எனக்கு எங்கப்பா எழுதிக் கொடுத்தார். முப்பது வருஷமா சொல்றேன்.''

''புரியலையே.''

மறுபடி உருவய் அருவய் என்றபோது சட்டென்று பொறி தட்டிற்று.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்

எழுதிக் கொடுத்தவர் கால் வாங்காது விட்டிருக்கிறார். முப்பது வருஷமா காலில்லாமல் அவர் பாட்டு நொண்டிக் கொண்டிருக்கிறது?

விவரித்துப் பொருள் சொன்ன பிறகும் ''வராது ஸார். முப்பது வருஷமா பழக்கமாயிடுத்து'' என்று ஒரு முறை கூட சரியாய் சொல்ல மறுத்து விட்டார். சொந்த பாஷை, தாய்மொழி செப்புத்தகடு மாதிரி உறுதியும் வளைவும் கொண்ட மொழி வராது சார் என்ற ஒரே வார்த்தையில் வெளிறிவிட்டது. பொடிப் பொடியாகி விட்டது.

''யார் மறுபடி கஷ்டப்படறது. மறுபடி சரியா எழுதி கவனமா படிச்சு ஞாபகம் வச்சிண்டு யார் மறுபடி கஷ்டப்படறது.''

ராகவன் வெகுநேரம் உள்ளே உளைந்தான். தான் எதற்கெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறோம் என்று மனசுக்குள் லிஸ்ட் போட்டான், அதிர்ந்தான்.

ஒரு வேளை சும்மா இருப்பதின் பொருள் இது தானா? ஞானம் முற்றித்தான், இது ஒரு போதும் வராது என்று கைவிட்டு விட்டாரா? தேடலே இல்லை என்பதுதான் ஞானமா. வருத்திக் கொள்ளாதிருப்பது தான் வாழ்க்கையா. 'டியர் ப்ரதர் நமஸ்காரம்ஸ். ஹோப் யூ ஆர் டூயிங் வெல்' இந்த அண்ணன் தம்பி கடித ஆங்கிலமே தாய்மொழியாகி விட்டதா?

இப்போது ஏன் பொசமுட்டுறது எனக்குள் வலியில் வந்த வருத்தமா, பயமா, அடுத்தவர் சுகமாய் இருப்பதாய் நினைத்து ஆதங்கமா?

ஸ்கூட்டர் வாங்கியபோது ஸ்டாண்ட் போடக்கூடத் தெரியாமல் கால்விரல் நசுங்கித் தவித்து ஏன் இந்த சனியனை வாங்கினோம் என்று வெறும ன பிடித்துக் கொண்டு நின்றது நினைவுக்கு வந்தது.

''ஒருவேளை இதுவும் அதுமாதிரி ஆரம்ப எரிச்சலோ துவக்கத்தின் சிரமமோ. நாளை சிரமம் என்று



நினைத்து இன்றே கவலைப்பட்டு உழலும் அழுகுணி குணமோ கவலையில் வந்த அலுப்போ.

நடநட மேலே மேலே துள்ளித்திரி திமிறிக் கிளம்பு. வெள்ளமென பெருகு. வில் வளைத்து நாணேற்றி த்ரீம் என்று அதிரவிடு. சங்கொலி செய். போர் போர் எனக் கூவு. குதிரைகளைச் சொடுக்கி விரட்டு. குழல் பறக்க நில் செய் அல்லது செத்துமடி. சும்மா இருத்தல் என்பது சோம்பித்திரிவதல்ல. இனி வாழ்க்கை முழுதும் யுத்தம்தான். களைத்து கடைசி நரம்பு அடங்கும்வரை போர்தான். தர்மம் எப்பக்கம் இருக்கிறதோ, அந்தப் பக்கம் ஜெயிக்கட்டும் யுத்தம் செய்கிறபோது மனசு சும்மா இருக்கட்டும்.

ஆமாம், தர்மம் எந்தப்பக்கம் இருக்கிறது? ஜெயித்த பிறகுதான் தெரியும், சும்மா இரு. ராகவன் வாய் விட்டு சிரித்தான்.

அப்பா ஊர் என்பதற்கு என்ன பயம், பயப்பட வேண்டியிருக்கிறது. சகல காரியங்களும் மூன்றாம் மனிதருக்காக செய்ய வேண்டியிருக்கிறது. நாலு பேர் பேசிவிடக் கூடாதேயென்று தடுமாற வேண்டியிருக்கிறது. யார் அந்த நாலு பேர்? கடைசியில் தூக்கிக் கொண்டு போகிறவர்களாம். தூக்கிப் போகும்போது பேசுவார்களாம். வாழுகிறபோது உதவிக்கு கை விரித்து விட்டு தூக்கிக்கொண்டு போகும்போது வாய் கிழியப் பேசுவார்களாம். அந்த நாலு பேர் பேசக்கூடாதென்று தனிமையில் தவிக்க வேண்டுமாம்.

நான் இல்லாதபோது இந்த உலகம் எனக்கு எவ்விதம்?

நான் இருக்கையில்தான் இந்த உலகமும் இருக்கிறது. மேலும் கீழும் இடதும் வலதும் அர்த்தமாகிறது.

அடே, அடே... அப்படிப் பேசாதே. பெற்றோர் பழி பிள்ளையைக் கொல்லும் மனசு சீறிற்று.

கம்பன் யார் பிள்ளை? வள்ளுவர் யார்? தகப்பனார் யார்? சுந்தரர் என்ன பாடினான்?

வாஸ்தவம். நாம் ஒருவரை ஒருவர் பார்க்கிறோம். பல பாதிப்பின் வடிவம்தான் நான். தகப்பனே பிள்ளை. பிள்ளையே தகப்பன் என்பது எவ்விதம்?

நிச்சயம் இச்செய்கையால் நான் பலரைப் பார்க்கப் போகிறேன். பதிலுக்குப் பாதிக்கப்படப் போகிறவன் பாதிப்பிலிருந்து விடுபடலும், பாதிப்பை வெற்றியாக்கலும் தனிமனித முயற்சி.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

புலனடக்கம் இல்லாமல் அலைந்துவிட்டு மேற்கோள் வேறா? திருக்குறளா? ராகவன் உள் மனசு மறுபடி சீறிற்று.

புலனடக்கம் என்பது என்ன? புலியைக் கூண்டில் வைத்து பட்டினிப் போட்டு குற்றுயிரும் குலை உயிருமாய் அலைய வைப்பது போலவா.

அது யானையை அடக்குவதுபோல் அல்லவோ மதம் நீக்கி சொல்லுக்குக் கட்டுப்படும் மிருகமாய் மாற்றி அதன் முழுவலிமையும் உபயோகப்படுத்துவது போல் அல்லவோ? புலி பாரம் தூக்குமா ஸ்வாமிக்கு கவரி வீசுமா, குழந்தை தலையில் கை வைத்து ஆசி சொல்லுமா. கூட்டத்துக்கு நடுவே பேதமையாய் வருமா, புலனை பேதமைப்படுத்து. உயிர் போகும் க்ஷணத்தில்கூட புலி அறையும். புலனை யானையாக்கு. தீனி போடு வசப்படுத்து வலிவு கொள்ள செய். வாழவிடு.

தேவை கிட்டவில்லையென்பால் துணித்துக் கொள்வது பலமோ. பலவீனம். ச்சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற நரிக்குணம். பசித்த நரி தன் ஈறைக் கடித்து தன் ரத்தத்தையே சுவைக்கும். பசியடங்கின பின்னரே கருணை வரும். தெளிவு வரும். நரித்தனம் போகும்.



மீனாட்சியின் இந்தக் கருணை என்னை மலர வைக்கும் காதலைப் பெருக்கும், கட்டிப்போடும். யானை வசப்பட்டது மாதிரி வசப்பட வைக்கும்.

வீட்டுக்குள் பெருகின காதல் தெருவை நனைக்கும் ஊரை ஊடுருவும் என் எழுத்திலிருக்கும் விகற்பம் போகும். பெண் என்பவள் கருணை தாய் சோறு பிச்சை போடுவதால் மட்டுமில்லை. இவள் எனக்கு இனி சொல்லிக் கொடுக்கும் விஷயமில்லை. உணர்ந்தது. விநாடி நேரத்தில் மொத்த வாழ்க்கையில் மாற்றித் தந்து விட்டவளை நான் அறிவேன். சகாதேவன் கட்டிப் போட்டது போல இவள் என்னை பிணைத்து விட்டதை அறிவேன். கண்ணன் மண்டியிட்ட ஒரே இடம் சகாதேவன் கால்.

இப்போது உள்ளே பொங்குவது நன்றியோ, பிச்சை கிடைத்தபின் வரும் பல்லிளிப்போ? மகராசி நீ நல்லா இருக்கணும் என்கிற எதிர்விளைவோ?

பிச்சைக்காரன் பிடுங்கிப்போக முடியாது. சபிதாவை நான் குதிரையேறி கவர்ந்திருக்க முடியும், முரட்டுத்தனம் காட்டியிருக்க முடியும். மூர்க்கம் வெளிப்பட்டிருந்தால் வாழ்க்கை சிதறியிருக்கும், மூவர் வாழ்க்கையும் சிதலமாயிருக்கும். சபிதாவுக்கு வைப்பாட்டி என்ற பெயரே மிஞ்சும். வைப்பாட்டியாவதால் அவளுக்குள் தன்னிரக்கம் வரும். தன்னிரக்கம் கொடூரமாகும். புலியைக் கூண்டில் அடைத்த விதமாய் போகும். சபிதா யானையாய் வசப்படாது எனக்கு.

இங்கே மூன்றும் யானையாயிற்று.

உள்ளே பேச்சுக்குரல் நின்று போயிருந்தது. ''என்ன சத்தமே காணோம்?'' தனக்குத்தானே உரக்கக் கேட்டுக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான்.

''மீனா என்ன செய்றீங்க இரண்டு பேரும்?''

''சும்மா உட்கார்ந்திண்டிருக்கோம்.'' -

இருட்டில் மெல்ல முன்னேறி சோபா-கம்-பெட்டை நெருங்கினபோது மீனா நகர்ந்து இடம் விட்டாள்.

''தூங்கலையா?''

''பேசிண்டிருந்தோம்.''

''என்னவாம்?''

''புது இடம், தூக்கம் வரலை'' சபிதா பேசினாள்.

''தூங்கு சபிதா. அலைஞ்சிருக்கே.''

''உட்காருங்க.'' சபிதா மேலும் பின்னுக்கு நகர்ந்தாள்.

ராகவன் நடுவே உட்கார்ந்தாள்.

''குழந்தைக்கு என்னமோ வாங்கினியே. காட்டினியா?''

''இல்லை, காலைல பார்த்துக்கலாம்னு விட்டுட்டேன்.''

''லைட் போடவா,'' எழுந்தான்.

''ஐயோ வேணாம்'' இரண்டு பேரும் இழுத்தார்கள்.

''ஏன் லைட் வேணாம்?''

''சுள்ளுன்னு கண்ணைக்கூசும்,'' இப்போ மீனாட்சி பேசினாள். ''இது இதமா இருக்குங்க. எனத்துக்கு லைட்'' சபிதாவும் ஆமோதித்தாள்.

''சரி என்ன பேசினீங்க?''

''முடியுமா ஒத்துமையா குடித்தனம் பண்ணன்னு கேட்டேன். முடியும்னா.''

அவ்வளவு சுலபமா. ஒரு வார்த்தைல அடங்கிடற மாதிரி சுலபமா. நம்ம ஒத்துமை நம்மகிட்டதான் இருக்கு. வாஸ்தவம். ஆனா நாம ஒத்துமையா இருக்கறது பல பேருக்குக் கஷ்டமா இருக்கும். எப்படா சண்டை வரும்னு எட்டிப் பார்ப்பாங்க. என்ன இன்னும் சண்டை வரலையான்னு மறைமுகமாகக் கேள்வி



கேட்பாங்க. தனித்தனியா கூட்டிட்டுப் போய் ஐயோ பாவம்னு சொல்வாங்க. இங்கதான் பிரச்சினையே இருக்கு''

''இரண்டு கை தட்டினாதானே சண்டை. நான் வாயைத் திறக்கவே மாட்டேன்'' சபிதா. திடமாய்ப் பேசினாள்.

''உன் வாயைக் கிண்ட ஊருக்குத் தெரியும். 'என்ன சபிதா இளைச்சுப் போயிட்டியே'ன்னு கேட்டா பதில் சொல்லாம நகர்ந்துட முடியுமா?'

''திட்டம் போட்டு பிரச்சனைக்கு எதிர்ப்புக்காட்ட காத்திருக்க முடியாது. அப்பப்ப ஒதுக்கிவிட்டுப் போகணும். போனாதான் முடியும்.''

''அப்பப்ப பாதத்துக்குவோம்னா இப்ப என்னத்துக்குத் தூக்கமில்லாம புரளணும், வந்தது வந்தாச்சுன்னு சமாளிச்சுத்தான் ஆகணும். இவ தூங்கட்டும் கொஞ்சம் பேசிட்டு வாங்க. நான் போய் படுத்துக்கறேன்.''

''வேணாம் மீனா ஒண்ணும் பேச வேண்டாம். நான் கொஞ்சம் தனியா இருக்கேன்.''

''தனியா கிடக்கவா வீடு தேடி வந்திருக்கே?''

''மனசு சரியில்லை.''

''வந்த இடத்தில் உம்முன்னு இருக்க வேணாம். எனக்கு என் கவலையை மறக்கணும். நீ முனகி முனகி புரண்டா எனக்கும் ஒட்டிக்கும்.''

''முடியலை மீனா.''

''முடியும், உள்ளே புழுங்கினாலும் வெளிய சிரிச்சிண்டு இரு. நிஜமாவே சிரிக்க முடியறதான்னு பார்ப்போம்''

''இயல்பா இருக்கவிடுங்க மீனா.''

''இயல்பா இருக்கறதா எனக்கு இப்ப ஒண்ணு அழுணும் போல இருக்கு. அழமுடியுமா?''

''அப்ப வரச் சொல்லியிருக்க வேணாம்.''

''அடி முட்டாள்னு கூப்பிடறயா என்னை.''

''மீனா.''

''இதோ பார். மூணு பேர் வேதனையும் புரியறது. எனக்கு கொஞ்ச நாள் வேஷம் போட்டுத்தான் ஆக ணும் மூணு பேரும். வேற வழியே இல்லை.''

''சரி இப்ப என்ன செய்யணும் நான். அவர் இருக் கட்டும். நீங்க போய் தூங்குங்க.''

''பத்து நிமிஷம் கழிச்சு வாங்கோன்னா. நான் தூங்கப் போறேன்.''

ராகவன் சற்று இடிந்துபோய் உட்கார்ந்திருந் தான். மீனா மளமளவென்று முன்னேறுவதுதெரிந்தது. பாரத்தை டக்கென்று இங்கே இருவர் தோளிலும் போட்டுவிட்டு உயர்ந்த இடத்தில் ஏறுவதுதெரிந்தது. இதுவும் சிரமம். தடாலடியாய் வாரி வழங்குவதும் குமட்டிவிடும். ஊட்டி சாப்பிடுவது கவனமாய் இருக்க வேண்டிய விஷயம்.

''எனக்குப் பயமாயிருக்கு ராகவன்'' சபிதா முணு முணுத்தாள். மீனாட்சி நம்மை உலுக்கி எடுத்திடப் போறாங்க''

''வேற வழியில்லை.''

''நாளைக்கு நான் திரும்பி ஹாஸ்டலுக்குப் போயிடவா?''

''போய்...''

''கொஞ்ச நாள் கழிச்சு வரேன்''

''முடியாது''

''இவங்க வேகம் எனக்குத் தாங்க முடியாது போலி ருக்கே.''

''முடியும்னு சொன்னே.''



''நேரே நிக்கற போது நிஜம்மா பார்க்கிறபோது வயத்தைக் கலக்குது ராகவன். தடால்னு அவங்க சொன்னாங்கன்னு கூட்டிட்டு வந்திட்டீங்களே— யானை குழிக்குள்ளே விழுந்த மாதிரி இருக்கு.''

''அனுபவி.''

'ராகவன்.''

''வேற வழியில்லை சபிதா.''

# 19

சபிதா முன்னே நகர்ந்தாள் அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். இடுப்பை இறுக்கினாள். ராகவன் அவள் சுமை தாளாது மெல்ல சுவரில் சாய்ந் தான். அவளை இழுத்து மார்புடன் இறுக்கிக் கொண் டான். முகத்தில், கண்களில் முத்தமிட்டான்.

வாயைச் சின்னதாய் விரித்து இதழ்களைத் தேடி னான். சபிதா சட்டென்று விலக்கினாள்.

''ஏன் சபிதா?''

''சப்தம் கேட்குமே.''

''கேட்கட்டும்.''

''ஏன்?''

''எனக்கு மனசு சரியில்லை.''

''என்ன மனசுக்கு வேதனை?''

''தனியாய்ட்ட மாதிரி இருக்கு.''

''என்கூட இருக்கற போதுமா?''

''ஆமாம்.''

''ஏன்?''

''திருச்சிலகுத்தின ராகவனா தெரியலை இப்போ.''

''என்ன சொல்ற?''

''மீனாட்சி புருஷன், மீனாட்சி புருஷன்னுதான் படுது இப்போ.''

''அநேகமா புடிச்சுடும். தலைவலி மண்டையைப் பிளக்குது. தப்புப்பண்ணிட்டேன்னு ரொம்பக்குடையுது. அம்மா அம்மான்னு அழணும்போல இருக்கு.'

''உன்னை புத்திசாலின்னு நினைச்சேன்.''

''இல்லீங்க.''

''தைரியமா இரு சபிதா.''

''முடியாது ராகவன்''

''தனியா வச்சிடட்டுமா?''

''வேணாம்.''

''என்னதான் வேணும் உனக்கு?''

''மறுபடி திருச்சி போயிடணும். வீட்டோட அம்மா, அப்பா, விஜி, நீலான்னு எங்க ஜனங்களோட பழைய சபிதாவா இருக்கணும்.''

ராகவன் அவளை விலக்கினான். மெல்ல எழுந்திருந்தான்.

''ராகவன் போகாதீங்க.''

''தூங்கு சபிதா.''

''கஷ்டப்படுத்திட்டேனா?''

''பரவாயில்லை. மூணு பேரும் பயந்து பயந்து சாகறோம். பேசப்பேச பயம் தூக்குது. தூங்க ட்ரை பண்ணு. உனக்கு மீனாட்சியப் பார்த்து பயம் மீனாட்சிக்கு உன்னைப் பார்த்து பயம். உங்க இரண்டு பேர் கிட்டயும் எனக்குப் பயம். ரொம்பக் கலவரமாதான் ஆரம்பிக்கப்போறோம்.''



''இப்ப என்ன செய்யறது ராகவன்?''

''தூங்குவோம், டெம்பரரியா பயம் அடங்கட்டும்.''

விடியகாலையில் சிறிது தூங்கியதுதான். மற்றபடி எதிர்கால கற்பனைகளாய் மனசு என்னென்னவோ நினைத்துக் கொண்டது.

முதலில் ராகவன்தான் வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தான். அருகில் மீனாட்சி ஒருக்களித்து தூங்கிக் கொண்டிருந்தாள். வழக்கம்போல் ஜாக்கெட்டின் அடி பட்டன் மூன்றையும் பிரித்துவிட்டிருந்தாள். வழிந்திருந்த சேலைத் தலைப்பு தாண்டி சிவந்த மார்பு விளிம்பும் வட்டமும் தெரிந்தன.

அழுத்திப் பற்றி இழுத்து இறுக்கிக்கொள்ள ஆசை மூண்டது.

மீனாட்சி விழித்துக் கொள்ளலாம். போறும் போங்கோ என்று தள்ளிடலாம் மீறி முயன்றால் ஆசை வழியறதா இப்போ. அதுதான் ஒருத்தி வந்தாச்சே. அங்கேயே போய் சகலதும் செய்யட்டும் என்று அலட்சியப்படுத்தலாம்.

ராகவன் தலையை உலுக்கிக் கொண்டு பின்பக்கம் போனான். பல் தேய்த்துவிட்டு முகம் கழுவி படுக்கை யறையுள் நுழைந்தான். சபிதா தலை வரை போர்த்தி படுத்திருந்தாள். அருகேஉட்கார்ந்து இடுப்புவளைவை அசைத்தான். சபிதா, ''ஐயோ'' என்று எழுந்தாள்.

''நான்தான் சபிதா.''

''என்ன?''

''நல்லாத் தூங்கினியா?''

''இப்பதான் தூங்கினேன் எழுப்பிட்டீங்க.''

''ஸாரி.''

''என்ன வேணும்?''

''ஒண்ணுமில்லை சபிதா.''

''நான் ஹாஸ்டலுக்குப் போயிடட்டுமா?''

ராகவன் பதில் சொல்லாது எழுந்து வெளியே போனான். வராந்தாவில் உட்கார்ந்து பேப்பரைப் பிரித்தான். இந்திரா காந்தி தென்மாநிலங்களில் சூறாவளி சுற்றுப்பயணம். இன்சாட் பறக்குமா? பாக்லண்ட் தீவுகளை அர்ஜென்டைனா கைப்பற்றியது. காதலர்கள் தீக்குளித்துத் தற்கொலை. ராகவன் கடைசி செய்தியைக் குனிந்து படித்தான். கவலைப்பட்டான். புருஷன் மனைவி சண்டையில் மனைவி கடிதம் எழுதி வைத்துவிட்டு கெரஸினை ஊற்றிக் கொளுத்திக் கொண்டாள். கணவன் அணைக்க முயற்சித்து முடியாமல் அவள் எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு அதே கடிதத்திற்குக் கீழே அவனும் தற்கொலை காரணம் எழுதிவிட்டு மிச்சமிருந்த எண்ணெயைத் தலையில் ஊற்றிக்கொண்டு சுருண்டு செத்துப்போயிருக்கிறான். போலீசார் பூட்டிய அறையை உடைத்து பிணங்களைக் கைப்பற்றி புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

ராகவனுக்கு வயிறு கலங்கியது. அதில் போலீசார் என்ன விசாரிக்க முடியும்? யாரை விசாரிக்க முடியும்?

சபிதா ஹாஸ்டலுக்கு மறுபடிபோய் இங்கு சண்டை வந்து நானும் மீனாட்சியும் இது மாதிரி செத்துப் போனால் யாரை புலன் விசாரணை செய்யும்? கீழ் வீட்டு ரமேஷை கேள்வி கேட்குமா? ரமேஷ் என்ன பதில் சொல்ல முடியும்?

''அவருக்கு வேற பெண் தொடர்பு உண்டுங்களா?''

''தெரியலை. இருந்திருக்கும். மேலே நிறைய பொம்பளைங்க போவாங்க வருவாங்க.''

''அதுல யார் கூடவானும் தொடர்பு உண்டா—தெரியுமா?''



''தெரியலை. எல்லோர் கூடவும் தொடர்பு இருக்கலாம். நாம் என்ன சொல்ல முடியும்?''

''ஒரு நாளைக்கு எத்தனை பொம்பளைங்க அவர் வீட்டுக்குப் போவாங்க?''

''தெரியலை. ஒரு நாளைக்குப் பத்து, பதினைஞ்சு பேர் போவாங்க. சில நாள்ல யாரும் வரமாட்டாங்க.''

''அவர்கிட்ட வேற கெட்ட பழக்கம் உண்டா? குடிப்பாரா?''

''நான் பார்த்ததில்லை. பொம்பளைங்க சகவாசம் இருந்தா குடிக்காம முடியுமா?''

போலீஸார் மேற்கொண்டு தீவிரமாய்ப் புலன் விசாரணை செய்து வருவதாய் பேப்பர் எழுதும்.

''ஏன் இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கிங்க?''

சபிதா முகம் துடைத்தபடி வெளியே வந்தாள்.

''ஒண்ணுமில்லையே.''

''முகம் இருண்டு கிடக்கு.''

''தெரியலை, சும்மாதான் உட்கார்ந்திருக்கேன்.''

''வருத்தமாயிடுச்சா.''

''இல்லையே.''

''மூஞ்சில தண்ணி பட்டதும்தான் தெளிவா இருந்துச்சு. திடீர்னு ராத்திரி கூட்டிட்டு வந்திட்டீங்களா. இடமும் புரிபடலை. முகமும் புரிபடலை.''

''காலைல புரிஞ்சிட்டுதா.''

''என்ன தூங்கினியான்னு கேட்டாங்க.''

''யாரு?''

''மீனாட்சி. குளிச்சிட்டு காபிசாப்பிடறயான்னாங்க இப்பவே சாப்பிடறேன்னு சொன்னேன். காபி கலக்கறாங்க.''

காபியுடன் மீனாட்சி வெளியே வந்தாள். காப்பி டம்ளர்களை அவரவர் எதிரே வைத்து தரையில் உட்கார்ந்தாள்.

வாயில் விட்டுக்கொண்டபடி ''என்ன சமைக் கட்டும்?'' என்றான்.

''ஏதாவது.''

''சொன்னா அதுபடி வாங்கலாம்.''

''என்ன புதுசா கேட்கறே. இந்தக் கறி வேணும், இந்தக் குழம்பு வைன்னு நான் கேட்டதேயில்லையே.''

''நீங்க மட்டும்னா ஏதாவது சமைப்பேன். அவ ளுக்கு என்ன வேணும்?''

''ஓ அவளுக்குப் பதிலா என்னைக் கேட்டியா அவளையே கேளேன்.''

''என்ன வேணா செய்யுங்க மீனாட்சி.''

''பருப்பு உசிலி பண்ணட்டுமா?''

''உசிலின்னா?''

''பருப்பு ஊறப்போட்டு வேகவிட்டு அரைச்சு காய் சேர்த்து பிரட்டி எடுத்துடறது.''

''ஓ அதுவா. ஆபீஸ்ல என்கூட வேலை செய்ற வங்க, செய்து எடுத்து வருவாங்க. நாங்க செய்யற தில்லை.''

''என் சமையல்சுமாராத்தான் இருக்கும். அட்ஜஸ்ட் பண்ணிக்கோ.''

''சாப்பாடு அவ்வளவா முக்கியமில்லை மீனாட்சி. எது வேணா சாப்பிடுவேன்.''

''அவருக்கு ஏத்த ஜோடி இல்லையா நீ. அது மறந்து போச்சு''

சபிதா பேசாதிருந்தாள்.



ராகவன் வாயைத் பொத்தி சிரித்தான். மீனாட்சி பாத்திரங்களை எடுத்து உள்ளே போனாள். இவன் காய்கறி வாங்கி வந்தான். சபிதா நறுக்கத் துவங்கி னாள். குழந்தை புரண்டு விழித்து கொண்டாள்.

சபிதா அவசரமாய் எழுந்து குழந்தைக்கு வாங்கிய ஃப்ராக்கையும், பொம்மையும் பரப்பினாள். குழந்தை கலவரத்துடன் விழித்தது. மீனாட்சி பின்னால் ஒட்டிக் கொண்டு பொம்மையை ஆசையுடன் பார்த்தது.

''போய் வாங்கிக்கோ, உனக்குத்தான்.'' மீனாட்சி முன்னே தள்ளி சபிதா கை நீட்ட குழந்தை வெட்கமும், பயமுமாய் தெளிந்தாள்.

''இங்கே மேஜைல வச்சிடறேன். கொஞ்ச நேரம் பொறுத்து எடுத்துக்கோ'' மேஜையில் வைத்ததும் குழந்தை பொம்மையை அள்ளிக் கொண்டாள்.

''நிறைய விலை இருக்கும் போல இருக்கே?'' மீனாட்சி பொம்மையைத் தடவினாள்.

''நாப்பது ரூபாதான்.''

' நாப்பதா? எதுக்கு இந்த செலவு?''

''குழந்தை விளையாடுமில்லை.''

''சாமர்த்தியம்தான். எனக்கு வரமாட்டேங்கறது''

''என்ன.''

''ஒண்ணுமில்லை, சட்டுன்னு குளிச்சிட்டா வேலை யாகும்''

''ஆபீஸ் போக வேண்டாம்னு சொன்னேனே. நிதானமா குளிக்கலாமே.''

''நான் போறேன்''

''எதுக்கு மீனாட்சி?''

''நீங்க உட்கார்ந்து பேசுங்களேன்.''

"வேண்டாம் மீனாட்சி எனக்கு உறுத்தலா இருக்கும்."

"உறுத்தலாவா? உனக்கா?"

"ஏன் இப்படி சட்டுன்னு பேசிடி ரீங்க உள்ள வரச் சொல்லிட்டு காயப்படுத்தறீங்க. இத்தனை கோவம் வச்சுக்கிட்டு என்னை வரவழைப்பானேன்." சபிதா தழதழத்த குரலில் பேசினாள்.

"வான்னு சொல்லிட்டேன். வாஸ்தவம் ஆனாலும் தாங்கலை. அப்பப்ப பொங்கறது. இதுமாற நாளாகும். நான் பேசறத பெரிசா எடுத்துக்க வேண்டாம். போ. போய்க் குளி."

சபிதா நகர்ந்தாள்.

"சொம்பு இல்லியே உள்ளே." மூடியிருந்த கதவுக்குப் பின்னிருந்து சபிதாவின் குரல் வந்தது.

"கதவைத் திற. சொம்பு வெளியே இருக்கு. ஷவர்ல குளிக்கமாட்டியா." சொம்புடன் மீனாட்சி நிற்க, சபிதா துண்டு சுற்றிய உடம்புடன் கதவைத் திறந்தாள்.

"என்ன அழுதியா? கண்ணு கலங்கியிருக்கு."

"கொஞ்சம் வருத்தமா இருந்தது. அழுதேன். சொம்பைக் குடுங்க" சபிதா நீட்டினாள். அவளை லேசாய் தள்ளியபடி உள்ளே நகர்ந்து கதவைச்சாத்திக் கொண்டாள்.

"இதோ பார். நான் கோவப்படறது ஆத்திரப் படறது தப்புன்னு சொல்றியா. என் குணம் அப்படி. விட்டுக் கொடுக்கணும்னு ஆசையும், விட்டுக்கொடுத் திட்டமேன்னு பயமும் எனக்குள்ள இருக்கு. குழம்பறது நான் பேச. நீ அழ. அந்த மனுஷன் தலையைப் பிச்சுக்குவார். தாங்கிக்க ட்ரை பண்ணு. நானும் பேச்சைக் குறைக்கறேன். இன்னொன்னு. வேலைக்காரி, கீழ்வீட்டுக்காரி வந்து பேச்சுக் குடுத்தா நீயும் அதிகம்



பேசாதே. இது என்ன கழுத்துல போட்டுண்டிருக்கிறது. நல்லதா. எத்தனை பவுன்?"

"நாலரை பவுன். இது தவிர கருகமணி வச்சிண்டிருக்கேன் இரண்டு பவுன்."

"என்கிட்டயும் கருகமணி இருக்கு. இரண்டரை பவுன். குளிச்சுண்டுதானே இருக்கே."

"ம்ம்."

"எப்ப தேதி உனக்கு?"

"இன்னும் பதினைஞ்சு நாள் இருக்கு."

"இரண்டு பேர் தேதியும் ஒன்னா வரும் போல இருக்கே, சரி அப்பப் பார்த்துக்குவோம். நான் இன்னிக்கு ஆபீஸ் போறேன், அப்பதான் எனக்குக் கொஞ்சம் மாறுதலா இருக்கும். இல்லேன்னா இந்தப் பேச்சே மாத்தி மாத்திப் பேசுவோம்."

"சரி."

"இவர் ஸ்நேகிதாளுக்கு உன்னைப்பத்தித் தெரியுமா?"

"இரண்டு மூனு பேருக்குத் தெரியும்னு நினைக்கிறேன். சரியாகத் தெரியல."

"ராகவன்." வெளியே யாருடைய குரலோ கேட்டது.

"குளிச்சிட்டு சட்டுனு வா." மீனாட்சி கதவு இடுக்கு வழியே ஹாலை எட்டிப் பார்த்தாள்.

ஒன்று, இரண்டு மூன்றாய் ஆட்கள் உள்ளே வந்தார்கள்.

அத்தனை பேரும் ராகவன் ஸ்நேகிதர்கள். பல முறை வீட்டுக்கு வந்து மீனாட்சி கையால் காபி குடித்தவர்கள்,

"ராகவன் இல்லையா. என்னப்பா வீட்டில் சத்தமே காணோம், அமைதியா இருக்கு" முதலில் நுழைந்தவன் கேட்டான்.

''புயலுக்குப் பின்னே அமைதி.'' மற்றொருவன் பாடினான்.

''புயலுக்கு முன்னாலும் அமைதியா இருக்கும்.''

''இது முன்னமைதியா? பின்னமைதியா?''

''கேட்டால் போச்சு... ராகவன்.'' மறுபடி குரல் கொடுத்தான்.

மீனாட்சி சமையலறை சுவரில் சாய்ந்துகொண்டாள். கண்களை மூடிக் கொண்டாள்.

புயல் வந்து விட்டது பகவானே. எனக்கு அடக்கம் கொடு அமைதி கொடு. வேதனை தாங்கும் பக்குவம் கொடு. இனியாவது என்னைக் கெட்டிக்காரி என்று இவர் பாராட்டும் தன்மை கொடு.

படுக்கையறையில் உட்கார்த்திருந்த ராகவன் மெல்ல வெளியே வந்தான்.

ஒன்றிரண்டா பலநூறா ஆயிரமா
கரையோர முதலைகள் கணக்கில் வாரா

எங்கேயோ படித்த கவிதை நினைவுக்கு வந்தது. கரையோரத்து முதலைகள் அசுர பலம் கொண்டவை. பசித்தவை, முழுமூச்சாய் இழுத்து இரையை சேற்றில் அழுத்தி விடுபவை. மனிதர்கள் சிலசமயம் முதலையை ஒத்தவர்கள்.

ஒன்றிரண்டா பலநூறா ஆயிரமா
கரையோர முதலைகள் கணக்கில் வாரா.

## 20

''மாமி, இன்னிக்கு உங்காத்தில என்ன சமையல்?'

இளம் பிராயத்தில் தன் அம்மாவின் வயது ஒத்த பெண்மணிகள் இந்தக் கேள்வியை அநேகமாய் தினமும் கேட்பதை ராகவன் கவனித்திருக்கிறான்.



மிக அநாகரீகமான கேள்வி என்று அன்றே தெரிந்து போயிற்று. ராகவனின் அம்மா பண்பட்டவள். கூடியவரையில் இந்தக் கேள்விக்குப் பதில் தர மறுத்து விடுவாள். வெறும் சிரிப்பையே பதிலாய் தருவாள். ''எல்லார் வீட்லேயும் உள்ள கஞ்சிதான் எங்க வீட்டுக்கும். இதுல விசாரிப்பு என்ன, விவரணை என்ன'' சில சமயம் நொடிப்பாள்.

பொழுது போகாமல் பிறர் விஷயம் தலையிடுவதின் முதல் கேள்வி இது. உணவு, வருமானம், சொத்து விவரம் கேட்காமல் மனித உறவுகள் அமையவே முடியாதோ என்று பிற்பாடு யோசனை வந்தது. மத்திய தர வர்க்கத்துப் பெண்கள் எல்லோருமே இந்தக் கேள்விகளை எப்போதும் நாக்குக்கடியில் வைத்திருக்கிறார்கள். தாம்பூலச் சாறாய் ஒழுகவிட்டு நிற்கிறார்கள். பதிலைச் சர்ரென்ற உறிஞ்சலோடு வாங்கிக் கொள்கிறார்கள்.

''உங்க வீட்ல எல்லா கறிக்கும் தேங்காய்த் துருவிப் போடுவேளா எப்படி கட்டுப்படியாறது?'' மேற்கொண்டு கேள்வி வரும். இதற்கென்ன பதில் தர முடியும். அவரவர் சௌகர்யம், விருப்பம், ரஸனை, பழக்கம். இப்படிக் கேட்பது தரக்குறைவென்று இவர்களுக்கு ஏன் தெரிவதில்லை.

இன்றைய தலைமுறை இந்த ஸ்நேகிதர்கள் அவ்விதமான மத்தியதர வர்க்கத்துப் பெண்களின் பிரதிபலிப்புகள். அம்மாவின் குணம் அநேகமாய் எல்லா ஆணுக்கும் ஊட்டப்பட்டிருக்கிறது. அம்மாவின் மனச்சாயல், அடக்கி வைக்கப்பட்டதால் உண்டான கோழை குணம், பொறாமை, நைச்சியம் வளர்ந்த பின்னும் உலகம் தெரிந்த பின்னும் ஆணிடம் ஒட்டியிருக்கிறது.

''அந்தப் பெண்ணை அவன் லவ் பண்றானாப்பா.''

''ஆமான்னு தெரியுது.''

''வேலை முடிச்சிட்டானா.''

''இருக்கும்.''

''எப்படிப்பா இது, பொண்ணு லோலா?''

''எல்லா கறிக்கும் தேங்காய்த் துருவிப் போட றேளா? எப்படி கட்டுப்படியாறது.''

—கேள்வி கேட்ட பெண்ணுக்கும், அவள் பெற்றெடுத்தப் பிள்ளைக்கும் அதிக வித்தியாசமில்லை. லவ்வுக்கு அடுத்த ஜோலி முடித்தல், ஜோலி முடிந்தது எனில், எப்படி முடிந்தது என்று ஆதங்கப்படுதல்.

அவரவர் ஆர்வத்திற்கேற்ப விசாரிப்புப் பொருள் மாறுகிறதேயன்றி கேள்விகள் ஒன்றே.

கேட்டவளுக்குத் தேங்காய் வாங்கி உடைத்துத் துருவிப் போட வசதியில்லை. வசதியிருப்பினும் மனமில்லை தனக்குத் தேவையில்லை என்று புறக்கணித்து விட்டாள். தான் புறக்கணித்தது அல்லது தனக்குக் கிடைக்காதது பிறர் வீட்டில் கொலுவிருக்குமானால் கேட்காமல் போக முடியவில்லை. தேங்காய் துருவிப் போட்ட கறியை மனசுக்குள்ளேயே அள்ளி அள்ளி விழுங்கிக் கொண்டிருப்பாள். எப்படி கட்டுப்படியாறது என்று குடைந்து கொண்டிருப்பாள். ஊதாரி செலவு என்று மற்றவரிடம் போய் சொல்லுவாள். நாக்கை அப்படி வளர்க்கப்படாது, ஒரு கட்டுப்பாடு வேணும். நம்ம வீட்ல அது நடக்காது என்று உரத்துச் சொல்வாள். அவள் பையனும் அவள் நிலையே. காதலிக்க, ஜோலி முடிக்க வசதியில்லை. பொண்ணு லோலா கேள்வி மட்டும் கூச்சமின்றி வரும்.

இந்த தேசத்துப் பையன்கள் முதுகை, அம்மாக்கள் அழுத்தி அழுந்தி வளைத்திருக்கிறார்கள். வளைந்த முதுகோடு ராகவனின் ஸ்நேகிதர்கள் கை குலுக்கினார்கள்.

''என்ன ராகவன் சௌக்யமா?''



''என்ன ராகவன் இளைச்சிட்டே. உடம்பு சரியில்லையா?''

''மனசு சரியில்லைன்னா கூட ஆள் டல்லாயிடுவாங்க என்ன நான் சொல்றது.''

ராகவன் அமைதியாய் இருந்தான். மூன்று நண்பர்களும் சுவரோர நாற்காலிகளில் அமர்ந்திருக்க எதிரே மௌனமாய் உட்கார்ந்தான். ராகவனின் நண்பர்கள் அநேகமாய் எல்லோரும் கெட்டிக்காரர்கள். சூட்சுமம் மிக்கவர்கள், படித்தவர்கள், எழுதுவதைப்பற்றித் தெரிந்தவர்கள், எழுதுகிறவர்கள். எழுதுவது பற்றிப் போட்டி, பொறாமையோடு பேசுகிறவர்கள்.

''என்ன ராகவன் பதிலே இல்லை?''

''மௌனம்தாம்பா பெரிய பதில். ஸைலன்ஸ் ஈஸ் கோல்ட்.''

''ஏதாவது ஹெல்ப் வேணுமா ராகவன் சொல்லு செய்கிறோம்.''

ராகவன் பேசவேயில்லை.

மறுபடி மௌனம் நின்றது.

''எங்கே உன் வொய்ப் காணோம். அடட இங்கே நிக்கறீங்களா. ஒரு கப் காபி கிடைக்குமா ஹோட்டலுக்குப் போலாண்டான்னான். வேணாம் நல்ல காபியா சாப்பிடுவோம்னு உங்க பேர் சொன்னேன். அரை கப் கொடுத்தா போதும்.''

காபியைக் கொண்டு வந்த மீனாட்சியின் முகத்தை ஊடுருவினார்கள். அவள் டம்ளர்களைப் பிரித்து வைக்கிறபோதே கேட்டார்கள்.

' என்ன கேள்விப்பட்டோமே நிஜம்தானோ.''

மீனாட்சியின் அதிர்ச்சியைக் குறித்துக் கொண்டார்கள்.

''யார் சொன்னான்னு ஆச்சர்யமா இருக்கா ராகவன் உங்க அவுங்களுக்கு ஹாஸ்டல் வேணும்னு

கேட்டாயாமே ஒருத்திகிட்ட அவதான் சொன்னா-போயும் போயும் அவகிட்ட உதவி கேட்ட பாரு. ஊர் முழுக்கப் பரப்பிக் கிட்டிருக்கா. இதெல்லாம் ஏண்டா அவகிட்டப் போய் சொல்ற, நான் செய்யமாட்டேனா இதை.''

'பொம்மனாட்டிக்கு பொம்மனாட்டி உதவி செய்வான்னு கேட்டிருக்கான், உதவி செய்தவளே கழுத்தை அறுத்துட்டா.''

ஆனா ஒண்ணு ராகவன் ஆம்பளை கேலிபண்ணலாம். சண்டை போட்டு சத்தம் போடலாம். அடிதடிலகூட இறங்கலாம். ஆனா இப்படி கழுத்தறக்க மாட்டான் பின்னால் குத்த மாட்டான், இந்த மாதிரி விஷயத்தை லேடீஸ்கிட்ட சொல்லக் கூடாது.''

ராகவன் எதற்கும் பதில் சொல்லாமல் அமைதியாய் இருந்தான்.

''ஒரு விஷயம் புரிஞ்சு போச்சு. மீனாட்சி இன்னும் உன்கூட இருக்காங்க. உன் கூடவே உன் குழந்தையும் இருக்கு. ஐயம் ஹேப்பி. அவங்க முகம் பார்த்தபோது ஒரு நல்ல முடிவுக்கு வந்துட்டாங்கன்னு தெரியுது. மச் மோர் ஹேப்பி ஆல் த பெஸ்ட். கையைக் கொண்டா மறுபடி சொல்றேன், பொம்பளையை இந்த விஷயத்துக்கு துணை கூப்பிடாதே, யாரையும் கூப்பிடாதே 'ட்ரை டு பி அலோன் ஆன் திஸ் ஸப்ஜெக்ட்' கிளம்பட்டுமா.''

மூன்று ஜோடி கண்களும் பேசிக் கொண்டன. மறுபடி வீட்டைச் சுற்றின

''பின்பக்கம் போய்ட்டு வந்துடட்டுமா?'' ராகவனின் அனுமதிக்குக் காத்திராமல் ஒருவன் சமையலறையில் நுழைந்து. உள்ளே நின்றிருந்த சபிதாவைத் தாண்டி பின்பக்கம் போனான்

அவன் வந்த பிறகு மற்ற இருவரும் பின்பக்கம் போனார்கள். சபிதாவைத் தாண்டிப் பார்த்து விட்டு வந்தார்கள்.



மூத்திரப் பைகளின் பாரம் குறைந்தது. விடை பெற்றுக் கொண்டார்கள்.

''இன்னொரு விஷயம்பா. இதுபத்தி ஒரு சிறுகதை அடுத்த வாரம் வர்றது. ஹாஸ்டல் பார்த்துக் கொடுத்த மகராசிதான் எழுதறா. ஜாக்கிரதை. பதிலுக்கு செமத்தியா ஒரு சிறுகதை உங்கிட்டேர்ந்து எதிர்பார்க்கிறோம் என்ன சொல்றே.''

ராகவன் தலையசைத்தான்.

இவனே அந்த மகராசியின் வீட்டுக்குப்போய் இங்கே சகலரையும் சந்தித்தது பற்றி உறுதி செய்வான். உட்கார்ந்து பேசுவான்.

அவங்க வீட்ல தினமும் தேங்காய்த் துருவிப்போட்ட கறி, எப்படி கட்டுப்படியாறது. காலம் கெட்ட காலத்துல ஊதாரித்தனம்னா அது நாக்கை இழுத்து வைச்சு ஒட்ட அறுக்கணும். வரவர தேங்காயைப் பார்த்தாலே குமட்டறது எனக்கு. எங்க வீட்லயும் யாருக்கும் பிடிக்காது. ஒத்துக்கறதும் இல்ல. வயத்தால போயிடறது. தேங்காயே கூடாதுன்னு வெச்சிட்டேன்.

உருட்டி உருட்டி தேங்காய் போட்ட உணவை மனசுக்குள் விழுங்கிக் கொண்டு

தேடிச் சோறு நிதம் தின்று—பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி
வாடிமிக உழன்றுபிறர் வாடப்—பல
செய்கை செய்து

சின்னஞ்சிறு கதைகள், சிறுகதைகள். சுய அனுபவம் இல்லாமல், அனுபவச் சந்திப்புக்குத் திராணி இல்லாமல், மனசுக்குள்ளேயே கோட்டை கட்டி கொடியேற்றி கர்ஜனை செய்து காதலித்து, புணர்ந்து மனசிலும் தோல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து தோற்றுப் போனால் எப்படி அழுவோம் என்று கற்பனை பண்ணி,

தோல்வியில் செத்துப் போனதாய் சுகம் கண்டு, இந்த தோல்வி சுகத்தைப் பேச்சாக்க, எழுத்தாக்கி வெளியே சிறுகாயம்கூடப் படாமல் உள்ளே கதறி கதறி அழுது—

ஒன்றிரண்டா பல நூறா ஆயிரமா கரையோர முதலைகள் கணக்கில் வாரா.

இந்தக் கவிதையை எழுதிய ரங்கநாதக் கவிஞன் பொறுமி பொறுமி பத்து வருஷம் முன்பு பேசினான். மனிதர்களைச் சந்திக்கும் போதெல்லாம் பயம் வருகிறது என்றான். அசையாமல் கண்ணில் ஜலம் வடிய மௌனமாய், எவருக்கும் தீங்கு செய்யும் எண்ணமற்ற பாவனையாய், வாயைப் பிளந்த பசித்த முதலைகள் திருக்குச் சட்டென்று திரும்பும் சௌகர்யத்துடன் மரபு விளிம்பில் ஆசையோடு காத்திருக்கும் முதலைகள், கரையேறும் பலமற்ற முதலைகள், பயந்த முதலைகள் என்று குமுறினான்.

இன்றுதான் கவிதை புரிகிறது.

பதிலுக்கு செமத்தியாய் ஒரு சிறுகதை எதிர்பார்க்கிறார்களாம். ஊர் இரண்டுபட கோமாளிக்குக் கொண்டாட்டம். சகலரும் இங்கு கோமாளியே.

மகராசி என்ன எழுதுவாள்? மீனாட்சிக்கு அனுதாபம் தெரிவித்து, அல்லது ஆத்திரமூட்டி ஆண் வர்க்கமே அவலம் என்று சொல்லி இன்னும் எத்தனை நாளைக்கு இந்த கொடுமை என்று கதறி.

நியாயம்தானே. மகராசி அப்படித்தானே யோசிக்க முடியும். சந்தோஷம் என்பது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது என்பதுதானே எல்லோரும் சொல்கிற விஷயம் சட்டதிட்டம்தானே சந்தோஷம்.

பெண் சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு. பெண்ணும் புகையிலையும் அப்பா என்ன காம்பினேஷன், பறித்து உலர்த்தப்பட்ட தாவரமும்



பெண்ணும். பெண் சிரிக்கக்கூடாது எந்த உயிரினத்துக்கும் இல்லாத இயல்பு சிரிப்பு, மனிதன் மட்டுமே வாய் விட்டுச் சிரிக்க முடியும். அந்த மனித இனம் சிரிக்கக் கூடாது. சந்தோஷப்படக்கூடாது. சட்ட திட்டத்துக்கு உட்பட்டு நிலம் நோக்கி புன்முறுவல் செய்ய வேண்டும்.

சந்தோஷப்பட்டு மனைவியை பலர் நடுவே தழுவக் கூடாது. முத்தமிடுதல் கூடவே கூடாது. இன்றைக்கு அன்பு மிகுந்தால்கூட நாளை தனியறையில் வெளிப்படுத்து. முத்தமிடும் நினைப்புக்கே வெட்கப்படு.

நடு அறையில் மனைவியை அறையலாம். அது ஆண்மை. முத்தமிடுதல் ஆபாசம். உணர்வு மென்மையெல்லாம் பூட்டிப்பூட்டி வைத்துப் பொய் சொல்லி, கணவன் மனைவியிடமிருந்து மறைத்து, மனைவி கணவனிடமிருந்து மறைத்து, இருட்டில் சினிமாவில் வயலின் இழையும் காதல் காட்சியில் தவித்துப் போகிறார்கள். திருட்டுத்தனமாய் ஊரைவிட்டுப் பையனும், பெண்ணும் ஓடுகிற படம் நூறுநாள் தாண்டுகிறது. தான் செய்ய முடியாத காதலை திரைப்படத்துப் பையனும், பெண்ணும் செய்வதைப் பார்த்து நெகிழ்ந்து போகிறார்கள். வாழ்க்கையை எதிர்கொள்ளாமல் ரோஜாப்பூ கொடுத்துவிட்டு தாடி வளர்த்து செத்துப் போகும் பையனுக்கு உருகுகிறார்கள்.

காதல் என்பது வளைத்தலா, விட்டுக் கொடுத்தல். ஒருவர் மட்டுமா, சகலரும் சமநேரத்தில்.

சட்டென்று விட்டுக் கொடுத்த மீனாட்சியும், சரிய விட்டுத் தனியாய் மடக்காமல் சரியென்று வீட்டுக்குள் நுழைந்த சபிதாவும் பலம் காட்டி ஹிம்சைப்படுத்தாமல் பணிய வைக்கத் துடிக்காமல் பழகி அனுபவித்தவரை போதும் என்று கைகழுவாமல் சகல ஊர்பேச்சுக்கும் ஈடு கொடுத்த நானும்.

இதன் மையம் புரியுமா. மரபு மட்டும்தான் வாழ்க்கையா? யாரை நோகடித்து யார் வாழ முடியும்.

இந்த ஆரம்ப அடிகளைத்தாங்குவோம் மீனா. இந்த ஆரம்ப பயமுறுத்தல்களை கடப்போம் சபிதா. இதன் அடிவேர் புலப்பட்டு விட்டது. எதிர்கதை தேவையில்லை. பயந்தவனுக்குத்தான் சமாதானப் பிரகடனம் அவஸ்யம். கோழைக்குத்தான் ஆயுதம்.

''ராகவன், ஏன் அவங்க அப்படி செய்துட்டாங்க. நம்மகிட்ட நல்லா பேசினாங்க. ஹாஸ்டல்ல இடம் வாங்கிக் கொடுத்து ஆல் தி பெஸ்ட் சொன்னாங்க. இப்படிக் கதை எழுதணுமா'' சபிதா முகம் முழுக்க வியப்பாய் வினவினாள்.

''அது வேற முகம். இது வேற முகம் சபிதா.''

''நம்மகிட்ட நல்லா பேசினாங்களே.

''அது நாகரீகம்.''

''முடியாதுன்னு உடனே சொல்லியிருக்கலாமே''

''அது அநாகரீகம்.''

''இப்படி முதுகுல குத்தறது அநாகரீகமில்லையா. எல்லார் கிட்டயும் சொல்றாங்களாம்.''

''சரி யார் போய்சொல்லித்தரது.?வித்தியாசத்தை.''

''பார்த்தா கேப்பீங்களா?''

''மாட்டேன்.''

''ஏன் ராகவன்?''

''பார்க்கறப்போதெல்லாம் சிரிச்சுட்டு விட்டுடணும். கேட்பானோ கேட்பானோன்னு தானே மனசு அறுத்துக்கட்டும்.''

''மீனாட்சி கலவரப்படமாட்டாங்களா கதை படிச்சுட்டு.''

''உன்னையும் என்னையும்விட தீர்மானமான இடத்துக்கு அவ வந்துட்டா. இனி அவளை அசைக்க முடியாது ''



''இன்னிக்குக் காலைல வரைக்கும் கூட வயிறு கலங்கிச்சு. உங்க ஃபிரெண்ட்ஸ் வந்துட்டுப் போனவுடனே சிலீர்னு கோபம் வந்தது. சரி வாழ்ந்து காட்டணும்னு தோணிப் போச்சு ''

''செய், அமைதியா செய்.''

''மாவரைக்கிற கடை எங்க இருக்கு?''

''மீனாட்சிக்குத் தெரியுமே.''

மீனாட்சி நீங்க ஆபீஸ் போறபோது கூட வரேன். மாவு மிஷின் காட்டுங்க. அரைப்படிக்கு எவ்வளவு? நான் அரைச்சுக்கிட்டு வந்துடறேன். ப்ரியா என் கூடவே இருக்கட்டும்.'' சபிதா உள்ள நகர்ந்தாள்.

மீனாட்சியுடன் போய் சபிதா மாவு அரைத்து வந்தாள் ப்ரியாவைக் குளிப்பாட்டினாள். விளக்கேற்றி கோலம் போட்டாள். துணிகளைத் துவைத்தாள். குழந்தைக்கும் அவனுக்கும் சாதம் போட்டாள். குழந்தை முதுகைத் தட்டி தூங்கச் செய்தாள். கதவைத் தாழ் போட்டுவிட்டு வந்து, புடவையை உருவி எறிந்துவிட்டு, பாவாடையும் சட்டையுமாய் நின்று ராகவனை வெறியோடு தழுவிக் கொண்டாள். ராகவன் அவள அணைப்பில் திணறினான். அவள் இழையலில் வெறி மிகுந்து அவள் கன்னத்தைக் கிள்ளி 'வைப்பாட்டி நாயே' என்றான்.

''இருந்துட்டுப் போறேன் என்ன வேணா கூப்பிடுங்க. இந்த வீட்டை விட்டு இனி அசைய மாட்டேன். பூச்சிகாட்டி பாக்கறாங்களா எல்லோரும்.''

''யார் மேல கோபம் உனக்கு.''

''ம்ம். பேர் சொல்லிட்டாக்கூடகோபம் கொஞ்சம் ஆறிடும். பேர்கூட சொல்லக்கூடாது.''

''சொல்ல வேணாம். உன் கோபத்தில் இங்கே யாரையாவது மிதிச்சிடப்போறே.''

''மிதிச்சா உங்களைத்தான் மிதிப்பேன். தாங்கிக்கங்க. மீனாட்சி, குழந்தை இரண்டு பேரையும் கண்ணா வச்சுக்குவேன்.''

''சபிதா.''

''நல்லதும் கெட்டதும் வீட்டுக்கு வீடு மனுஷனுக்கு மனுஷன் மாறுபடும். ஆனா மனசும், முகமும் ஒரே வார்ப்பா இருக்க வேண்டாம்?''

''அது கஷ்டம் சபிதா.''

''முதுகுல குத்தறது கோழைத்தனம், நான் கோழையில்லை. சபிதா ரொம்ப திமிர்புடிச்சவ.''

''ஈஸியா இரு சபிதா.''

''பூ மாதிரி இருப்பேன். அடில முள்ளும் இருக்கும்''

''உலகம் அப்படித்தான் பேசும் சபிதா.''

''ஆயிரம் பேசட்டும், முகத்துக்கு நேரே பேசட்டும். சோறு போட்டுட்டு நாயை ஏவி விடற மாதிரி இருக்கு. ச்சே.'' சபிதா கண்ணில் நீர் துளிக்கப் பேசினாள். ராகவன் அவளை அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்தான்.

## 21

''இன்னிக்கு எங்க ஆபீஸ்ல கேட்டுட்டாங்க.''

''என்னது மீனாட்சி?''

''வேறென்ன கேட்கறதுக்கு இருக்கு. புடவை புதுசான்னு கேட்கப் போறாங்க?''

''பழசுதானே, அது இரண்டு மூணுதரம் கட்டிடலையா நீ?''



''அவங்க நம்ப விஷயம் சொல்றாங்க.'' சபிதா இடையில் பேசினாள்.

''அட, எனக்கு மறந்து போச்சு. எப்படித் தெரிஞ்சுது?''

''மொட்டை போன்கால்.''

''ம்ம்?''

''மீனாட்சிக்கு நீங்களாவது ஆறுதலா இருக்கணும்னு போன்ல விஷயம் சொன்னவங்க கேட்டுக்கிட்டாங்களாம். நாலஞ்சு பேரா இதைக் கூடிப் பேசி ஒட்டுமொத்தமா என் ஸீட்டுக்கு வந்தாங்க. எல்லாத்தையும் மறந்துட்டு நான் பாட்டுக்கு வேலை செஞ்சிண்டிருந்தேன். மூணு லேடீஸ், ஒரு ஆம்பளை. துக்கம் விசாரிக்கிற மாதிரி நின்னாங்க. ஆமான்னா, பிறகு யாரும் பேசலை சொல்லிட்ட பிறகு எனக்கும் தாங்கலை, விசும்பி அழுதிட்டேன். அழுதது தப்பாப் போச்சு. லீகல் ஆக்ஷன் எடுத்துடலாமின்னார் ஒருத்தர். சீ! சீ! இது எங்க விஷயம் உங்ககிட்ட இருபத்தி பேசறதே தப்புன்னு சீறிட்டேன். சீறினதும் தப்பாப் போச்சு. என்ன என்னன்னு எல்லாருக்கும் பரவிடுத்து.''

''ம்ம்ம்.''

''நான் அழுதிருக்கக்கூடாது இல்லையா, முடியலை. கேட்கறபோது ஜலம் கட்டிடறது கண்ணுல. அப்புறம் சொல்லிட்டேன். நானாத்தான் கூப்பிட்டு வீட்டுக்குள்ள வரவழைச்சேன்னு.''

''எனக்கு கொஞ்சம் பயமாயிருக்கு மீனாட்சி.''

''என்னன்னா?''

''பின்னால ரொம்ப வருஷம் கழிச்சு இந்த விஷயத்தை நினைச்சு நினைச்சு உனக்குள்ள பலமில்லாம பைத்தியம் புடிச்சுடுமோன்னு.''

''புரியலையே.''

''உனக்கு ஒரு கதை படிக்கக் கொடுத்தேன். ஞாபகம் இருக்கா. அசோகமித்திரனுது. ஒரு வயசான அம்மா, அறுபது வயசு இருக்கும். படுக்கையிலேயே கிடப்பா. உளுந்து அரைக்கச்சொன்னாடி. பன்னெண்டு வயசு எனக்கு. கல்யாணமான மறுநாளே இரண்டு படி உளுந்து ஊறப்போட்டு அரைக்கச் சொன்னாடின்னு புலம்புவா. பன்னெண்டு வயசுல பட்ட ஹிம்சை இன்னும் தொடர்ந்து மனசுக்குள்ள வறது. எப்பவோ அரைச்ச உளுந்து வலி இன்னமும் இருக்கு. புழுங்கிப் புழுங்கி பைத்தியமாகி விட்டது.''

''புரியலையே.''

''ஒரு முடிவுக்கு வரவரைக்கும்தான் வேதனையோ துக்கமோ. இடதோ, வலதோ, மேலேயே. கீழேயோ, உட்கார்றதோ, நிக்கறதோ எப்பவும்? எல்லா நேரமும் நாம முடிவு எடுத்தாகணும். அந்தந்தமுடிவை அந்தந்த இடத்தில் விட்டு நகரணும். இடது பக்கம் போயிருக்கணும். வலது பக்கம் திரும்பினது தப்புன்னு இருபது வருஷம் கழிச்சு யோசனை பண்ணினா என்ன பலன்.''

''ஆம்பளைகளால அப்படி தீர்மானமா இருக்க முடியும். நான் பொம்மனாட்டிதானே.''

''உணர்வு, எல்லாருக்கும் ஒன்றுதான். முழங்கால்ல இடிச்சுண்டா ஆம்பளைக்கு கொஞ்சம்தான் வலிக்குமா. ஆனால முடிஞ்ச காரியம் பெண்ணுக்கும் சாத்தியம், கொஞ்சம் பயிற்சி அவஸ்யம்.''

''என்ன இருந்தாலும்பொம்மனாட்டிக்கு நொய்மையான மனசு இல்லையா ''

''இல்லை. நொய்மைன்னு ஒரு பொய் காலம் காலமா சொல்லிண்டிருக்கோம். மாற்றாந்தாய் கொடுமை நொய்மையா? பொம்மனாட்டியிடமும் கடுமை உண்டு.''



''எனக்குத் தாங்க வலிவு இல்லையே.''

''ஏன் இல்லைன்னு கேளு.''

''ஏன் இல்லை?''

''பயம். என் பத்தி பயம். எதிர் காலம் பத்தி பயம். அது என்னன்னு தெரியாததுனால வர பயம். எதிர்காலம் பற்றி யாருக்குத் தெரியும். முடிவு எடுத்தாச்சு. திடமா மேற்கொண்டு நின்னா வரதை சமாளிக்க முடியும்.''

''அழறது தப்பா?''

''அழறது? அனுதாபம் கொண்டுவந்து கொடுக்கும். அனுதாபம் பலவீனமாகும். யார் தோள்ளயாவது சாஞ்சுக்க வைக்கும். உன் முடிவுல, உன் கால் நிக்கற தைரியம் போகும்.''

' இன்னொருத்தர் தோள்ள சாஞ்சு மனசை கொட்டிடறது என்ன தப்பு?''

''என் ஸ்நேகிதன் மூர்த்தி சொல்லுவான். நம்முடைய துக்கத்தை பிறரிடம் பகிர்ந்து கொள்வதில் பயனில்லை. பாதி பேருக்கு அதில் சந்தோஷம். மீதி பேருக்கு அதில் அக்கறையில்லை.''

''எங்க அப்பா, அம்மாவுக்கு கூடயா?''

''ஆமாம் உன் விஷயத்துல உனக்கு இருக்கிற முழு அக்கறை மத்தவாளுக்கு வராது.''

''உங்களுக்குக் கூடவா?''

''ஒரு விதத்துல யெஸ். என்னை வச்சுதான் உன் துக்கம் சந்தோஷம் எனக்குப் புரிஞ்சுக்க முடியும்.''

''அப்ப நான் என்ன செய்யணும்?''

''எத்தனை புலம்பினாலும் புலம்பலால ப்ராப்ளம் துளிக்கூட நகராது. நகருமோ?''

''புரியறது. ஆனா ஒரு கேள்வி. உங்க ஸ்நேகிதர் வந்தபோது மூஞ்சி முழுக்க கலவரமா நின்னேளே பயம்தானே.''

''பயம்தான். எங்கே கோபப்பட்டுடப் போறாரோன்னு பயம். ஊசியால எவ்வளவு குத்தினாலும் தாங்கணுமோன்னு கவலை. பேசினாதானே வம்பு. அதனாலே பேசாம இருந்தேன்.''

''சபிதாவுக்கு இந்தக் கவலை வராதா?''

''கேளேன், நீயே கேளேன்.''

''வந்தது மீனா. ஸ்நேகிதமே கூசாம குத்திச் சின்னா வேறு யார்தான் துணைன்னு கவலை வந்தது. உறவும் கலைக்குது. ஸ்நேகமும் கலைக்குது. மனுஷத் துணையே இல்லாது போய்டுமோன்னு வேதனை வந்தது. உதவியா நான் செய்யறேன்னு துக்கம் பொங்கிச்சு.''

''துக்கத்தை யாரோடையும் பகிர்ந்துக்க முடியாறுன்னா. ஒன்னுக்கு இரண்டா உறவு எதுக்கு. சந்தோஷப்பட மட்டும்தானா.''

''இதுக்கு நானே பதில் சொல்றேன் மீனா.'' சபிதா பேசத் துவங்கிய ராகவனை விரல் நீட்டி நிறுத்தி விட்டு மீனாட்சியை நெருங்கினாள்.

''அவர் ஸ்நேகிதர் மூர்த்தி சொன்னதை நான் இப்படி புரிஞ்சுக்கிறேன். துக்கத்தை சொன்னா ஸ்நேகம் வளராது. தன் துக்கத்தைச் சொல்லி இன்னொருத்தரை துக்கப்படுத்தக் கூடாது. தொந்தரவு செய்யக்கூடாது. நம்ம சந்தோஷத்தைக்கூட அடுத்தவங்களுக்கு தொந்தரவு இல்லைன்னாதான் வெளிப்படுத்தணும்.''

''உன்னைக் கேலி பண்ணினா என்ன செய்வே?''

''வாயை மூடி கேட்டுக்கிட்டு இருப்பேன்.''



''வைப்பாட்டின்னு சொன்னா?''

''ஆமான்னு சொல்வேன்.''

''உன் பிள்ளையைக் கேலி செய்தா?''

''அதுக்கு நெஜம் சொல்லித் தருவேன் உண்மையில் நீ அப்படித்தான்னு சொல்வேன்.''

''யம்மாடி, எவ்வளவு திடம்மா பேசறீங்க இரண்டு பேரும். நான் என்னிக்கு கத்துக்கப் போறேன் இதை. எனக்கு வருமா இந்த புத்தி. எனக்கு இன்னொரு கவலை வருதுண்ணா, இப்போ நான்மக்கா இருக்கறதுனால பாரமாயிடுவேனோன்னு, வேண்டாம்னு பட்டுடுமோன்னு.'' மீனாட்சி சுவரில் சாய்ந்தாள். குனிந்து, முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டாள்.

''என்ன பேசற மீனா, உன் இயல்புபடி இரு.''

''என்னோட இயல்புமக்குத்தனம், அசட்டுத்தனம்.''

''ஒரு சமயம் தைரியமா பேசற. மறு சமயம் சரிஞ்சுடறயே'' ராகவன் மீனாட்சியை நிமிர்த்தினான்.

''நான் எதுக்கும் மசியமாட்டேன்னு புரிஞ்சுபோச்சு அவங்களுக்கு, கலவரப்பட்டுட்டாங்க இப்பவும் ஒண்ணும் முழுகிடல மீனா, சரின்னு சொல்லுங்க. மறுபடி ஹாஸ்டல் போயிடறேன்.''

''நீ இவளுக்கு மேல இருக்க. ஹாஸ்டலுக்குப் போய் என்ன செய்யறது?''

''வெறும் ஸ்நேகிதமா இருக்கேன். தாலி கட்டிக்காம பிள்ளை பெத்துக்காம பேச்சுத் துணைக்கு மட்டுமா.''—சபிதாவின் பேச்சில் சோர்வு தெரிந்தது.

''நீ பொய் சொல்ற இப்போ.'' கவிழ்ந்து உட்கார்ந்திருந்த மீனாட்சி நிமிர்ந்தாள். 'பேச்சுத் துணைக்கு மட்டும் இருக்கறவளா ரயில் ஏறி இவ்வளவு தூரம் வந்திருக்கே.''

''ஆசைதான் மீனா.''

''எதுக்கு ஆசை.''

''நல்ல புருஷன், கெட்டிக்காரன், சூட்சுமம் உள்ளவன் எனக்குக் கிடைக்கனும்னு ஆசை. மனசுக்குள்ள இருக்கிறவனே புருஷனா நிஜம்மா வரலாம்னு ஆசை.''

''இந்த மனுஷன் உனக்கு முதல்ல கிடைச்சிருந்தா இன்னொருத்தியை விடுவியா.''

''மாட்டேன்.''

''அதைச் சொல்லு முதல்ல.''

''இன்னொருத்திக்கிட்ட வசப்பட விடமாட்டேன் நூறு பொம்பளையாய் நானிருப்பேன். எங்கிட்ட இல்லாதது எவகிட்டயும் இல்லைன்னு தெளிய வச்சிருப்பேன். வேறு எவளும் என்னைவிட உசத்தியில்லைன்னு சொல்ல வச்சிருப்பேன்.''

''நான் இதைச் செய்யலைங்கறையா.''

''இனியாவது செய்யுங்கன்னு சொல்றேன்.''

''இனி என்ன செய்து என்னடி, என் மேல கருப்பு விழுந்தாச்சு.''

''துடைங்களேன்.''

''என்ன?''

''என்னை அடிச்சு விரட்டும்படி செய்யுங்களேன்.''

''அது எனக்கு முடியாதுன்னு தெரிஞ்சுதானே திமிரா பேசற.''

''நானாப் போறேன்னுதான் சொல்றேன்.''

''நீ போனா உன்னை நினைச்சு உருகுவார். உருகி உருகி கதை எழுதுவார்.''



''அது முக்கியமில்லையா அவர் மலர மலர கதை எழுத வேண்டாமா.''

''ஆமா கதை ஒண்ணுதானா சகலமும் ஊரில் எல்லா ஆம்பளையும் கதை எழுதிதான் மலர்ந்து போறானாக்கும்.''

''நிறுத்துங்க மீனா. மனுஷாளை காயடிச்சு கருகடிக்க கூடாது ஊட்டம் கொடுக்காது போனாலும் உலர வைக்கக் கூடாது இவர் எழுதாம இருக்கக் கூடாது.''

''அவ்வளவு என்ன உசத்தி?''

''ஆமாம் உசத்திதான்.''

''உன்னைத் தாண்டி இன்னொருத்தி வருவா மலர வைய்யுன்னு நகர்ந்துப்பியா? என்னமோ பேசறா.''

இதுக்கு பதில் முன்னையே சொல்லியாச்சு. நூறு பொம்பளையா நானிருப்பேன்னு சொல்லியாச்சு. அழுத்தம் திருத்தமா பேசியாச்சு.''

''இந்தத் திமிர் எத்தனை நாள்? மார்சதை விண்ணுன்னு இருக்கிறவரைதானே. உனக்கும் தழையும். வயிறு விழும் நரைக்கும்.''

''உடம்பால ஆம்பளைய கட்ட முடியாது மீனா, மனசால கட்டணும்.''

''எப்படி?''

''இடம் கொடுத்துப் பாருங்க.''

''இரண்டாவது நாளே இத்தனை ராங்கியா பேசறியே.''

''பேச வச்சிட்டீங்க.''

''நிச்சயம் ஒரு நாள் என்னைத் தூக்கித் தெருவுல போட்டுடுவே.''

"அதை இங்க வராமயே செய்திருப்பேன்."

"ஏன் செய்யலை?"

"இந்த மனுஷன் கருகிடுவார். நான் ஆயிரம் பொம்பளையா விசுவரூபம் எடுத்தாக்கூட. உங்களைப் பிரிஞ்சு துக்கம் தாங்கமாட்டார். உங்க பொண்ணைப் பிரிஞ்சு இருக்க மாட்டார். உங்க மேலே அவருக்கு இருக்கிற பிடிப்பு எனக்குத் தெரியும்."

"அதனால."

"இங்க வந்து உட்கார சரின்னு சொன்னேன். இன்னொரு வீடு வேண்டாம்னு சொன்னேன். இவரை மிகவும் சலனப்படுத்தி மறுக அடிக்க எந்தப் பொண்ணாலயும் முடியும். நான் அதை செய்யக்கூடாதுன்னு நினைச்சேன். உங்க முன்னாடி குறுகி நிற்கிறது. தயங்கித்தயங்கி வளைய வரது எனக்கும் கஷ்டம் மீனா. என் குடிசைல எட்டடிக்கு எட்டடில ராணியா இருக்கலாம். ஆனா இவரு ராஜாவா இருக்க மாட்டாரு."

"அவ்வளவு லவ் இவபேர்ல."

"நிச்சயமா. முப்பது வருஷம் பெத்து வளர்த்தவங்களை விட்டு வந்திருக்கிற லவ். எங்கம்மா பேர்ல எனக்கு ஆசையில்லையா. எங்கப்பா அழுதா எனக்குத் தாங்குமா. அத்தனையும் மீறி வந்திருக்கிற லவ் இவ்வளவு சிரமம் எதுக்கு? சுத்தி வளைச்சு பேச்சு எதுக்கு? உங்களை நான் சிரமப்படுத்தினா அவருக்கு வேதனை என்னை நீங்க இழிவுபடுத்தினா அவருக்குதான் வேதனை. முதல் காயம் முதல் வலி அவருக்குத்தான்."

"ஜன்ம ஜன்மமா தாலி கட்டிண்டா மாதிரி பேசறா."

"தாலி கட்டிக்கறது மட்டும்தான் உசத்தியா. தாலியை குனிஞ்சு கட்டிண்டு கழுத்து நெரிக்கிறவளை பார்த்ததில்லையா. மஞ்சக்கயிறு வெறும் சடங்கு; மனசு புரியணும். அதுதான் கல்யாணம், காதல் எல்லாம்."



"மறுபடி என்னை முட்டாள்ங்கற."

"இல்லை மீனா தாலி கட்டிக்கறதோ வைப்பாட்டி ஸ்தானமோ. உசத்தி. தாழ்த்தியில்லை. வாழறது முக்கியம்."

"அப்பா ரொம்ப லக்கின்னா நீங்க. பளீர் பளீர்னு அசத்தறா மாதிரி பேசறா இல்லை. இதெல்லாம் எங்க கத்துண்டே."

"கண்ணைத் திறந்து சுத்தி நடமாடறதை பார்க்கறேனே. வாழ்றதா சொல்றவங்க யாரு, என்ன லட்சணம்னு தெரியுதே."

"அப்ப நான் வாழ்ந்தது வாழ்க்கையில்லேங்கற. நீ சொல்றது என்ன இவர்தான் எழுதிட்டாரே. இது ஹிம்சையுமில்லை, வாழ்க்கையுமில்லைன்னு."

"என்மேல கோபமா, மீனா காயப்படுத்திட்டேனா?"

"இல்லடி இவ்வளவு தெளிவா பேசறவகிட்ட என்ன கோபிக்கறது. நான் 'டீ'ன்னு சொன்னா வருத்தமில்லையே."

"ஒரு வருத்தமும் இல்லை. கூப்பிடுங்க அப்படியே. நல்லா இருக்கு."

"தட்டை எடுத்து வை. சாப்பாட்டுக் கடையை முடிப்போம்."

"தேங்க்யூ மீனா."

"அதெல்லாம் வேண்டாம். 'டீ'ன்னு கூப்பிட சொல்லிட்டு தேங்யூ என்ன."

"வாஸ்தவம்."

"நீ தட்டு கொண்டு வந்திருக்கிறாயா?"

"இல்லை."

''என் தட்டை வச்சிக்கோ.''

எண்ணை தடவிய தண்டவாளத்தில் நின்றிருந்த கப்பல் வழுக்கியபடியே, நீலக்கடலுக்குள் சிலீரென்று இறங்கிற்று. எல்லோரும் கைதட்டினார்கள். கொடிகள் அசைய, விசையை முடுக்க புகைவிட்டது. நீர் திவலை தெறிக்கப் புறப்பட்டது.

ராகவன் பிரமிப்புடன் டி.வி.யைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

## 22

''அதெல்லாம் வேணாம். மத்யானம் நாங்க சந்தோஷமாத்தான் இருந்தோம். நீங்கபோய் படுங்க மீனாட்சி. நான் மேடையைத் துடைச்சுட்டுப் படுக்கறேன்.''

''சொல்றது கேள் சபிதா.''

''வேணாங்க.''

''அப்ப நீயும் வா.''

''தடக்குன்னு உள்ள இழுத்துடறீங்க மீனா.''

''இனி உன்னை ஒண்ணும் சொல்லமாட்டேன் வா.''

''இது ரொம்ப சிக்கலான இடம் மீனா.''

''தெரியும் வா. நீ சொன்னியே ஸ்நேகிதியா இருக்கிறதுன்னு, ஸ்நேகிதியா இரு வா.''

''இது இயல்பா நடக்கட்டுமே.''



''மூக்குத்தியும், தோடும், கைவளையலும் இயல்பா, ஆசை ஆசையா பூட்டிக்கலையா. பூட்டிக்கறதுதான் இயல்பு. இல்லைன்னா மூளியா படும்.''

''பேசத் தெரியாது. பேசத்தெரியாதுன்னு சொல்லியே மடக்கறீங்களே.''

''சகவாச தோஷம். உன்கூட சேர்ந்திருக்கேனே. இனியும் பேசத் தெரியாம இருந்தா எப்படி?''

''இன்னும் எம்பேர்ல நம்பிக்கை வரலையா?''

''ச்சீ. விளையாட்டுக்குச் சொன்னேன்.''

''விளையாட்டுக்குக்கூட சொல்லாதீங்க மீனா.''

''இப்ப நீ வரப்போறியா இல்லையா?''

''வேலையை முடிச்சிட்டு வரேன்.''

சமையலறையிலிருந்து ஹாலும், விரித்த படுக்கைகளும் அரையிருட்டில் உட்கார்ந்து டி.வி. பார்க்கும் ராகவனும், அவனுக்கு அருகே குப்புறப் படுத்தபடி அவனையும் டி.வி.யையும் மாறி மாறிப் பார்த்தபடி இருக்கும் மீனாவும் தெரிந்தனர்.

இப்போது உள்ளே நுழைந்து எங்கே உட்கார்ந்து கொள்வது? ராகவனுக்கு இடப்புறத்திலா சற்று பின்னாலா, சுவர் ஒட்டி தனியாகவா, இப்போது எது இயல்பு?

போய் சற்று தயங்குவோம். யார் எங்கு அழைக்கிறார்களோ அங்கு உட்காருவோம். எவரும் எவ்விதமாகவும் அழைக்கவில்லையெனில் சுவரோரம் வெறுமே நிற்போம்.

பாத்திர அடுக்குகளை கடைசியாய் சரிசெய்துவிட்டு திரும்புகையில் டி.வி. முடிந்துவிட்டது.

உள்ளே நுழைந்த சபிதாவைக் கடந்து சென்று ராகவன் டி.வி.யை அணைத்தான். திரும்புகையில்

அவள் பின்பக்கம் பட்டென்று தட்டினாள். சட்டென்று அடி வயிற்றில் ஒரு ஜ்வாலை பற்றிக்கொள்ள இது போதுமாய் இருந்தது. வெகு அருகாமையில் நடந்து போனவனை இழுத்து வம்பு செய்ய ஆசை வந்தது. பரபரப்பை அடக்கிக் கொண்டு அமைதியாய் ராகவன் அருகில் உட்கார்ந்தாள்.

தலைப்பக்கம் இருந்த ரேடியோவை ராகவன் திருகினான். திங்கட்கிழமை பாட்டு நீண்ட நேயர் வரிசையோடு துவங்கியது. இருட்டில் மூவரும் மௌனமாய் உட்கார்ந்திருந்தனர்.

ஊமை என்றால் ஒருவகை அமைதி. ஏழை என்றால் அதிலொரு அமைதி. நீயோ கிளிபேடு, பண்பாடும் ஆனந்த குயில்பேடு. ஏனோ தெய்வம் சதி செய்தது. பேதைபோல விதி செய்தது.

'கண்ணே கலைமானே.'

இனியவார்த்தைகள், சோகத்தில் மெல்ல தோய்ந்தபடி சாசரமாய் இழைந்தன. மூவருமே உள்ளுக்குள் தவிப்பதை சபிதா உணர்ந்தாள். இந்த இனிய வார்த்தைகளின் வேகம் தாங்காமல் மீனாட்சி ராகவன் மடியில் சாய்ந்தாள்.

இவள் பேதைதான். என்னை இங்குகொண்டு வந்தது தெய்வம். தெய்வம் செய்த சதிதான். விதிதான்.

மீனாட்சியின் முதுகை, பிடரியை வருடி வருடி ராகவன் கொடுக்கிற காட்சி நெகிழ அடித்தது. இன்னும் முன் நகர்ந்து மீனாட்சியின் கால்களை மடியில் வைத்துக் கொண்டாள்.

பறவை மாதிரி விகல்பமின்றி திரிந்த பெண்ணல்லவா இவள்.

மீனாட்சிக்கும் இந்த நெருக்கம் தேவைப்பட்டதோ என்னவோ. இன்னும் புருஷனையும் சபிதாவையும்



நெருங்கிக் கொண்டாள், இடப்பக்கம் எட்டி போர்வையைப் பிரித்துப்போர்த்தியபோது சுருண்டு கொண்டாள்.

மீனாட்சி சுருண்டதும் ராகவனும் மல்லாந்தான்.

''போர்த்திடட்டுமா?'' — சபிதா ரேடியோவை அணைத்தாள்.

''ம்ம்''

எழுந்து மற்றுமொரு போர்வையை உதறி ராகவனுக்குப் போர்த்தினாள். அருகில் அமர்ந்து நெற்றியை விரல்களால் நீவி விட்டாள். அயர்ந்ததும் தலையணையை அண்டக் கொடுத்தாள்.

நகர்ந்து சுவர் ஓரம் தனியேசரிந்து உட்கார்ந்தாள்.

தும்பையாய் நரைத்ததலையும், கண்களுமாய் வலம் வரும் தன் அம்மாவை நினைத்துக்கொண்டாள். தடித்த கண்ணாடியுடன் தியேட்டர் புரொஜக்டருக்கு அருகே ஒட்டாது படம் பார்க்கும் அப்பாவை நினைத்துக் கொண்டாள்.

ஏனோ தெய்வம் சதி செய்தது.

பேதை போல விதி செய்தது.

—மனகன் பாட்டு ஒடிற்று. தனக்குள்ளும் இந்தப் பாட்டு சரப்படுத்துகிறது. விதி என்னை இப்படி அலைக்கழிய வைத்து இங்கே உட்கார வைத்திருக்கிறது. எல்லோருக்கும் கிடைப்பதான வாழ்க்கை எனக்கு இல்லை என்று வைத்திருக்கிறது.

நான் பேதையில்லையா. அன்புக்கு ஏங்கும் ஏழையில்லையா, நெஞ்சில் பொங்குவது அத்தனையும் வெளியே கொட்ட முடியாத ஊமையில்லையா?

கண்ணே கலைமானே என்று என்னையும் யாராவது பெண் குழந்தையாய் அணைத்துக் கொள்ள மாட்டார்களா?

அப்பாவும், அம்மாவும், உறவும் ஊரும் தூற்றும்படியாயிற்று. உடன் பிறப்புகள் முகம் திரும்பி சிடுசிடுக்கின்றன.

சகலமும் ராகவனே என்று சரிந்தாலும் இன்னும் யாராவது உன்னைப் புரிகிறது சபிதா என்று குரல் கொடுக்க மாட்டார்களா என்று ஏங்குகிறது மனசு.

ஆனால் எவருமில்லை, எங்குமில்லை, இந்த க்ஷணம் ராகவனைத் தவிர நெஞ்சில் வைத்து அணைத்துக்கொள்ள ஆளே இல்லை.

எழுந்து இருட்டில் துழாவி டேப் ரிகார்டரை, மூன்றாம் பிறை கேஸட்டை எடுத்துக் கொண்டாள்.

தூங்குகின்றவர்க்கு இடைஞ்சலில்லாமல் விசையை மெல்ல திருப்பி மடியில் வைத்துக் கொண்டு இசை நாடாவை சுழல விட்டாள், குழலொலி பறந்தது.

'காதல் கொண்டு கனவினை வளர்த்தேன். கண்மணி உனை நான் கருத்தினில் நிறைத்தேன். உனக்கே உயிரானேன், என்னாளும் எனை நீ மறவாதே.'

நெஞ்சிலிருந்து கேவல் புறப்பட்டது. ராகவன் பாதங்களை எடுத்து நெஞ்சில் அழுத்திக் கொள்ள வேகம் வந்தது. ராகவன் பிரிந்தால் என்ன ஆகும். இவனும் புறக்கணித்தால் என்ன கதி.

'நீயில்லாமல் எது நிம்மதி.

நீதானே என் சந்நிதி.

சபிதாவால் முடியவில்லை. விசும்பி விசும்பி கண்ணில் நீர் பொங்க துவண்டாள்.

தயவுசெய்து இப்போது தூங்காதீர்கள் ராகவன். விழித்துக் கொள்ளுங்கள். என் தலையையும் வருடிக் கொடுங்கள். என் முதுகையும் தடவிக் கொடுங்கள்.



கண்ணே கலைமானே கன்னி மயிலெனக் கண்டேன் உனை நானே என்று பாடுங்கள். ஆரிராரோ என்று என்னையும் தூங்கச் செய்யுங்கள்.

சபிதா கரையக் கரைய அழுதாள்.

ச்சே எதற்கு இப்படி சினிமா பாட்டுக்கு அழுகிறேன். என் தைரியத்தை விட்டு விட்டுக் குழைந்து போகிறேன். ஏன் இப்படி அவநம்பிக்கை கொள்கிறேன்.

வீட்டிற்குள் அருமையாய் கொண்டு வந்து மீனாட்சி வைத்த பிறகும் ஏன் பதறுகிறது எனக்குள். இன்னும் என்ன தேவை, யார் உத்தரவாதம் வேண்டும் இனி.

என்னை ஊர் மொத்தமும் ராகவன் மனைவியெனக் கொண்டாட ஆசையா. என்ன குழப்பம் எனக்குள்.

ஊர் தூற்றுதல் நின்றுதான் போகும் ஒரு நாள். அன்று மனசு சமாதானமாகி விடுமா. என்று ஏச்சுகள் நிற்கும். வெறும் செயினோடு வலம் வந்தால் என்னை மனைவியென்று ஏற்குமா. ராகவன் பிள்ளையை வயிற்றில் சுமக்கிறேன் என்றால் சிரிக்காதிருக்குமா.

எனக்கு தாலிக்கயிறு வேண்டும்? வெறும் மஞ்சளில் முடித்த கயிறாவது வேண்டும். இதை அணிவித்தவன் இவனே என்று சொல்ல வேண்டும். இதை அணிவித்தவனே புணர்ந்தான் என்று நிமிர வேண்டும்.

இப்போதே உலுக்கி ராகவனை எழுப்பலாமா. வேண்டாம். தூங்கட்டும். என்னைப்போல் இதுவும் அலமலந்து கிடக்கிறது. தூங்கட்டும். சகலத்தையும் தாங்கிக் கொள்வேன். சபிதா என்று சொன்னாலும் அடிவாங்கும்போது தவித்துதான் போகிறது.

விடிந்ததும் கேட்க வேண்டும். மீனாட்சியிடம் பேச வேண்டும்.

''வெறும் ஸ்நேகிதியாய் இருக்கேன்னவளா நீ நிச்சயம் கேலீ செய்வாள். பொறுத்துக் கொள்ள வேண்டும். பிடிவாதம் பிடிக்க வேணடும். கெஞ்சியா வது சம்மதம் பெற வேண்டும். எனக்கு எப்படியும் தாலிக்கயிறு வேண்டும்.

உன் உரமும் வலிவும் எங்கு போயிற்று. ஊர் தாக்குதலுக்கு இத்தனை வலிவா. இங்கே பிடிப்பு வர எனக்கு நானே பிணைத்துக் கொள்ள கயிறு கேட்கி றேன். இனி ராகவனை மறக்க முடியுமா, இனி இவனை விட்டுப் பிரிதல் சாத்தியமா.

மீனாட்சி எழுந்திருங்களேன். என் ஆர்க்குய மெண்ட் புரியுதா இவங்களுக்கு. எழுந்து சரியென்று சொல்லுங்களேன்.

என் மார்டர்னிடி எங்கு போயிற்று. எதுவரினும் தாங்கும் இலக்கிய அறிவு சார்ந்த மன அமைப்பு எங்கு போயிற்று.

எங்கு வேண்டுமானாலும் போகட்டும். எனக்கு மஞ்சள் கயிறு வேண்டும். புருஷன் வேண்டும். பிள்ளை வேண்டும். சமையலறை வேண்டும். துவைக்கிற கல் வேண்டும். உறவு வேண்டும். சுற்றம் நட்பு வேண டும். அம்மா வேண்டும், அப்பா வேண்டும், தம்பி கார்த்தி அவஸ்யம் வேண்டும்.

புருஷனும் தம்பியும் அரட்டையடித்து சோறு சாப்பிட, மலர மலர சாதம் பரிமாற வேண்டும், கார்த்திக்கு ப்ரியா டான்ஸ் ஆடிக் காட்ட வேண்டும். நல்லா இரு சபிதா—கார்த்தி சொல்லிட்டுப் போக வேண்டும்.

எல்லாவற்றையும்விட இந்தப் படுக்கையில் கூச்ச மின்றி கால் வைக்க வேண்டும்.



உள்ளே வா உள்ளே வா என்று அழைப்பது மட்டும் போதாது மீனாட்சி. உள்ளே வரும் சௌகர்யம் எனக்கு வேண்டும்.

டேப்பிலிருந்து விசையை ரேடியோவுக்குத் தள்ளி சென்னையைத் தேடினாள்.

'கண்ணான பூமகனே, கண்ணுறங்கு சூரியனே'' சட்டென்று உரத்த பாட்டை அடக்கினாள். சூரியன் மாதிரி பிள்ளை வேண்டும். ராகவன் பிரதி என்னுள் இறங்க வேண்டும். இந்தக் கருணையும் உறுதியுமாய் இன்னொருவன் வரவேண்டும்.

அப்பா உன் செலவில் எனக்கொரு தாலிக்கயிறு அனுப்பு. இன்றைக்குப் பிற்பகலில் என் புருஷனோடு சந்தோஷமாய் இருந்ததை உறுதிப்படுத்த எனக்கொரு மஞ்சள் கயிறை அனுப்பு.

மெல்ல நகர்ந்து ராகவன் காலடியில் தலைவைத் துக் கொண்டாள் வலது கையால் அவன் முழந்தாள் களைப் பற்றிக் கொண்டாள்.

'உனக்கே உயிரானேன் என்னாளும்
எனை நீ மறவாதே'

தூக்கத்தில் அவளை ஒரு நாகம் துரத்திற்று. சமய புரம் கோவில் மாதிரி இருந்தது. தும்பையாய் நரைத்த தலையும் பெரிய கண்களுமாய் உள்ளே உட்கார்ந் திருந்தவள் மெல்ல சிரித்தாள். அவளை நோக்கி ஓட, நாகம் காலடியில் நின்றது. அம்மாஎன்ற பயத்தில் கூவ நாகம் தூணுக்கு பின்புறம் சென்று மறைந்தது.

''என்ன, கனா கண்டியான்ன. விசும்பி விசும்பி என்னதிது. எழுந்திரு இந்தா ஜலம் குடி.'' மீனாட்சி உலுக்கி எழுப்ப, சபிதாவுக்கு மறுபடியும் கனவுநினைவு வந்தது.

''அழுதுட்டேனா பாம்பு துரத்திச்சு மீனாட்சி.''

''பாம்பு கனாதானே. நல்லதுதான். எழுந்துகாலை உதறிக்கோ. ஜலம் குடி. நன்னா கால் நீட்டிப்படு.''

''பாம்பு கனவில் வந்தா என்ன மீனாட்சி?''

''ம்ம்ம், கல்யாணம் ஆகும். கல்யாணம் ஆனவளுக்கு வந்தா பிள்ளை பிறக்கும்.''

தனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா இல்லையா.

''என்ன நெஞ்சை தடவிக்கற.''

''ஒன்றுமில்லை.''

''சொல்லு.''

''காலைல சொல்றேன் ''

''பரவாயில்லை சொல்லு.''

''காலையிலேயே சொல்றேனே.''

''என்ன எல்லாத்துக்கும் பிகு பண்ணற பட்டு பட்டுன்னு உடையேன்.''

''எனக்கும் கல்யாணம் ஆகனும்.''

''ஆகாம என்ன, நாளைக்கே தாலி கட்டிக்கோ. ஊர் கூட்டாதே.''

''நெஜமாவா.'

''பின்னே வெறும எப்படி இருப்பே.''

''நாளைக்கேவா.''

''சரி நல்ல நாள் பார்த்து செய்.''

''அப்பா, ராத்திரி முழுக்க குழம்பினேன் மீனாட்சி.''

''நிறைய படிச்சாலே குழப்பம்தான்.''

''எப்படி சொல்றீங்க.''



''புஸ்தகம் படிக்கிறபோது இதுல சொல்லியிருக்கறது சரின்னு தோணும். இரண்டு சுத்து இட்லிக்கு அரைச்சாலே அரைச்ச முதுகு வலிக்கும். இட்லிக்கு அரைச்சாலே முதுகு வலிக்கறது. புஸ்தகத்துல எழுதியிருக்கிற வீரம் எப்படி நிற்கும்.''

''புரியலையே.'

''நீ கெட்டிக்காரி, எப்படி புரியாம போகும்.''

''இல்ல மீனாட்சி நான் மக்கு, படுமக்கு.''

''அப்ப என் மாதிரி.''

''இல்லை உங்களைவிட மட்டம்.''

''சரி போதும் தூங்கு.''

''ஊர் கூட்டாதேன்னு சொன்னீங்களே எதுக்கு.''

''ஏன் பொல்லாப்பு. மேலோட்டமா நமக்கு மட்டுமே உண்டான காரியமா இருக்கட்டும்.''

''சரி.''

''போர்த்திக்க மாட்டியா.''

''வேண்டாம் வேர்க்குது.''

''கனவு பயம். கழுத்தை தூக்கு'' மீனாட்சி தன் புடவைத் தலைப்பால் சபிதாவின் பிடரியை, முதுகை, மார்பைத் துடைத்து விட்டாள்.

''கண்ணே கலைமானே உங்களுக்குப் பிடிக்குமா மீனாட்சி.''

''சித்த முன்னாடி டேப்புல போட்டியா, லேசா கேட்டுது.''

''சித்த முன்னாடியா.''

''நான் தூங்க ஆரம்பிச்சே அரைமணி நேரம் தானே ஆறது ''

''அரை மணிக்குள்தான் இந்தக் கனவும் பதட்டமுமா.''

''இப்படி நான் இவர் கால் கிட்டக்கயே படுத்துக்கறேனே.''

''என் கிட்ட வந்து படு.''

''மீனா மீனா மீனாட்சி.''

''ச்சீ என்ன அழுகை மறுபடி, தூங்கு.''

''அந்திப் பகல் உன்னை நான் பார்க்கிறேன் ஆண்டவனை இதைத்தான் கேட்கிறேன்.'' சபிதாவின் மனசுள் மறுபடி பாட்டு ஓடிற்று. மீனாட்சியின் கையை கன்னத்தில் வைத்துக் கொண்டாள். உள்ளங்கையை முத்தமிட்டாள்.

இரண்டு நிமிடத்தில் தூங்கிப்போன மீனாட்சியை தலை உயர்த்தி வியப்புடன் பார்த்தாள்.

மீனாட்சிக்கு அருகே ராகவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

''தத்தி தூங்கறதைப் பாரு.'' அவன் மூக்கை மெல்லப் பிடித்து அசைத்தாள்.

குளிர்ந்தது. போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

'உனக்கே உயிரானேன் என்னாளும்
என்னை நீ மறவாதே'

—வெறும் பாட்டு மட்டும் சபிதாவைத் தாலாட்டிற்று.

## 23

''சாண்டல்வுட் சோப் மூணு. ப்ரியாவுக்கு ஒரு ஹமாம். சபிதா உனக்கென்ன?'' ஹாலில் இருந்தபடி மீனாட்சி குரல் கொடுத்தாள். ராகவன் மளிகை லிஸ்ட் எழுதிக்கொண்டிருந்தான்.

''பியர்ஸ்'' உள்ளேயிருந்து வந்தது.



''இரண்டா?''

''ஒண்ணு போதும்.''

''இரண்டா வாங்கிடுங்க.''

''முகப்பவுடர் சபிதா?''—மீனாட்சி மறுபடி குரல் கொடுத்தாள்.

''உங்களுதே இருக்கட்டும்.''

''உனக்கு என்ன வேணும்?''

''உங்களுதே.''

''வேறென்ன வேணும்?''

''பவுடர் பேஸ் வாங்கி வரச் சொல்லுங்க.''

30197
9657070

''அப்புறம்?''

''மணைக்கட்டை.''

''எதுக்கு?''

''தரைல உட்கார்ந்து தோய்க்க முடியலை. முதுகு நோவுது.''

''வண்ணாத்தி மாதிரி தினமும் எல்லார் துணியும் போட்டு குமுக்கினா?''

''யாராவது செய்யத்தானே வேணும்!''

''பாதி ட்ரை க்ளீனிங் போடு.''

''வேண்டாம். தண்டச் செலவு.''

உள்ளே திடீரென்று குக்கர் இடைவிடாமல் சீறிற்று.

''ஏய் என்ன பண்ணினே?''

''நாலு பக்கமும் காத்து போவுது மீனாட்சி.''

''இன்னும் உனக்கு குக்கர் மூடத் தெரியலை.''

''இதுல என்னவோ தப்பு இருக்கு.''

''ஒரு தப்பும் இல்லை. காஸ் அணைச்சுடு முதல்ல. நகரு. ஏன் ஜாஸ்தி பண்ற. அணை அதை. உன்னை

சமைக்கவிடவே பயமா இருக்கு. புடவையை இழுத்து சொருகு முதல்ல.''

''அது ஒன்றும் ஆகாது.''

''ம்ம்ம்? ஆவாது. ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆச்சுன்னா எல்லோரும் கூண்டுல நிக்கணும். சத்தியம் பண்ணாகூட ஆக்ஸிடெண்ட்டுன்னு நம்பமாட்டான். இன்னி தேதிக்கு அம்மா பரதேவதே, பாதிகூட தண்ணியில்லையடி குக்கர்ல.''

''என்ன அளவு?''

''இப்ப கேளு. தெரியும் தெரியும்னு தலையாட்டிட்டு.''

''சொல்லிக் கொடுங்களேன்.''

''உனக்கு தினமும் மனைமாட்சிதான் நடத்தணும் போ.''

''என் மீனாட்சி கத்தறீங்க?''

''பயமாயிருக்கு. நேத்திக்கு மூழங்கைல சுட்டுண்டு நின்னே. இன்னிக்கு குக்கரை பறக்க விடறே.''

''நான் தனியா சமைச்சதில்லை.''

''ஆள் படையோட செய்ய இதென்ன அக்கௌண்ட்ஸ் ஆடிட் வொர்க்கா.''

''அக்கௌண்ட்ஸ் ஆடிட் தனியா செய்யலாம்.''

''அது மட்டும் செய் போதும். நகரு. நான் பார்த்துக்கறேன்,''

''நானும் பாக்கறேனே. இரண்டு டம்ளர் தண்ணி தானே?''

''மூணு.''

''அரிசி களைய வாணாமா. களைந்த தண்ணி இருக்குதே?''



''களைஞ்சுபோட இது புழுங்கரிசியா? பச்சரிசி சும்மா ஒரு சுத்து சுத்தி அலம்பினா போதும். வாழக்காய் இப்படி நறுக்காதே, மீன் துண்டா இருக்கு.''

''இப்படி தானே நெடுக அரிவாங்க வாழக்காயை.''

''இது குழம்பில மீன் துண்டமா தெரியும். அப்புறம் எனக்கு சாப்பிடப் பிடிக்காது. சிரிக்காதே அதுவும் பிடிக்காது.''

''சும்மா புருபுருன்றீங்களே. எப்படித்தான் குடித்தனம் பண்ணறாரோ?''

''போய்க் கேளேன். ஆறு வருஷம் குடித்தனம் பண்ணியிருக்கேன். ஒரு நா உப்பு தப்பியிருக்குமான்னு கேளேன். ஒண்ணு செய். போ, போயி லிஸ்ட் கொடுத்து அவரோட மளிகை சாமான் வாங்கி வந்துடு. போ மடமடன்னு கிளம்பு.''

''முன்னூத்தி எழுபது ரூபா நாற்பது பைசா டோட்டல.''

''முன்னூத்தி எழுவதா? மகாபாவி.''

''நீங்க கொடுத்த லிஸ்ட்டுதான். என்னை பாவின்னா?''

''நான் கடைக்காரனைக் சொன்னேன். போன மாசம் முன்னூத்தி பத்துதான் ஆச்சு.''

''இந்த மாசம் நான் வேற சாப்பிட்டுருக்கேன். எனக்கு சோப்பு, பேஸ்ட்டு.''

''ஆமா பொல்லாத பேஸ்ட்டு, சோப்பு. உங்கப்பாவுக்கு காசு அனுப்பிச்சியா.''

''நூறு அனுப்பினேன்.''

''மூணு பேர் சம்பாத்தியம்—நமக்கே தத்திணத்தோம் போடறது. நூறுல என்ன குடித்தனம் பண்ண முடியும் ஏன் குறைச்சுட்டே?''

''அவங்களுக்கு என் தம்பி கார்த்தி அனுப்புவான் தனியா.''

''போறாது சபிதா.''

''அவரும் சொன்னாரு.''

''வயசானவங்களை வாடவிட வேண்டாம். கூட அம்பது அனுப்பு.''

''பிச்சம்மாவை நிறுத்திடலாமா மீனாட்சி.''

''பத்து யாரு தேய்ப்பா?''

''நானோ நீங்களோ, மாத்தி மாத்தி...''

''சும்மா கிட அது கஷ்டம்.''

''அப்புறம் ஒண்ணு கேட்கணும் உங்களை.''

''என்ன?''

''இந்தத் தாலிக்கயிறு அழுக்காயிடுதே. என்ன மஞ்சள் போட்டாலும், தினமும் மஞ்சள் தேய்க்கறேன் மீனாட்சி. அப்படியும் அழுக்கு கலர்தான். இக்துக்குப் பதிலா என் செயின்ல கோர்த்துக்கிட்டா என்ன தாலியை.''

''ஏன் கயிறு போட்டுகிட்டா கல்யாணமானவள்ன்னு தெரியுதோ?''

''இல்லேன்னா தெரியாதாங்காட்டியும்.''

''எப்படித் தெரியும்?''

''தன்னால தெரியும்.''

''என்ன?''

''ஒண்ணுமில்லை.''

''ச்சசு சொல்லு?''

''பதினைஞ்சு நாளாச்சு.''

''சொன்னியா அவர்கிட்டே?''



''ம்ம்ம்''

''என்கிட்டே சொல்லவேயில்லை அந்த மனுஷர்.''

''இன்னும் பத்துநாள் போகட்டும்னாரு.''

''என்கிட்ட சொல்லவா?''

''இது என்னான்னு டாக்டர் கிட்ட போக.''

''டாக்டர்கிட்ட போவானேன். நெஞ்சு எரியறதா?''

''இல்லை.''

''ஒக்காளிப்பு இருக்கா?''

''இல்லை.''

''புளிப்பு வேணும்னு இருக்கா?''

''இல்லை.''

''என்னடி இது புதுசா இருக்கே?''

''பிள்ளையா இருந்தா வாந்தி வராதாம்.''

''ஏன், உனக்கு பிள்ளைதான் வேணுமா?''

''அதுதான் ப்ரியா இருக்குதே ஆசைப்பொண்ணா.''

''உனக்குப் பொண் பொறந்தா?''

''வாணாம், வாய் வைக்காதீங்க. எனக்குப் பெண் பிறந்தா கஷ்டம், அதுவும் என்னை மாதிரி சிரமப் படும்.''

''உனக்கென்ன சிரமம்?''

''ஒண்ணுமில்லை.''

''சொல்லு.''

''எதுக்கு மீனாட்சி பொண்ணு. வரன் தேடி, செலவு செஞ்சு, கல்யாணம் பண்ணி சரி வருமா. இது இரண்டாவுதுக்குப் பொறந்ததும்பாங்க.''

''ஏன் ப்ரியாவுக்கு கல்யாணம் பேசினா உன்னைப் பத்தி கேட்க மாட்டாங்களா. அடிபோடி. இன்னும்

பதினைஞ்சு வருஷத்துல இதெல்லாம் கேள்வியே யில்லை.''

''அதெல்லாம் சும்மா மீனாட்சி அப்பவும் கேள்வி இருக்கும்.''

''நான் நினைக்கலை.''

''எனக்கு பொண்ணு வேணாம்.''

''நாமா தீர்மானம் பண்ணமுடியும். வீட்டுக்கு எழுதினியா?''

''இல்லை.''

''எழுது, இதை நான் அடுக்கி வைக்கிறேன்.''

''இன்னிக்கு ஆபீஸ் போகலையா சபிதா?''

''முடியலை மீனாட்சி. கிளம்பிட்டு முடியாம படுத்திட்டேன். வயிறு இழுத்துப் பிடிச்சுகிடுச்சு.''

''நீ சொல்ற கணக்குக்கு வயிறு பெருசா இருக்கே. தப்பா கணக்குப் போடலியே.''

''கணக்கு சரிதான் மீனாட்சி. அப்படியே இருங்க நான் காபி போடறேன்.''

''உன்னை தேடிண்டு யாரோ வந்தாளாமே?''

''ஆமா எங்க பக்கத்து வீடு. திருச்சில. கல்யாணின்னு பேரு. அவங்களும், அவங்க புருஷனும் வந்தாங்க.''

''என்னவாம்?''

''பார்த்துட்டுப் போறதுக்கு.''

''என்ன பார்த்தாங்க?''

''எல்லாம்தான்.''

''உங்க வீட்ல என்ன சொல்றாங்களாம்.''

''அப்பா வருத்தப்பட்டாராம்.''

''எதுக்கு?''



''சபிதாவுக்கு ஒண்ணும் செய்ய முடியலை இந்த நேரத்துல கூடன்னாராம். அவரோட வீட்டுக்கு ஒரு தரம் வரச் சொன்னாங்களாம். சரின்னேன்.''

''போய்ட்டுவா. பிரசவம் அங்க வச்சுக்கப் போறியா இங்கயேவா?''

''ப்ரியாவை கவனிச்சு, ஆபீஸுக்குப் போய், என்னையும் பார்த்துக்கறது சிரமம் மீனாட்சி.''

''அழுதியா மத்யானம்?''

''இல்லையே.''

''கீழ்வீட்டு அம்மா சொன்னாங்க, அழற குரல் கேட்டதுன்னு.''

''ருப்பு. வேற வேலையில்லை அவங்களுக்கு. நான் எதுக்கு அழணும்?''

''இல்லே உனக்குள்ளே ஆசையிருக்கும் அம்மா கிட்டே போகணும்ன்னு.''

''அதெல்லாம் இல்லீங்க மீனாட்சி, இது போதும் எனக்கு ஆயுசுமுட்டும். அப்படியே எங்கம்மா என்னைக் கூப்பிட்டுப் போனா அது நம்ம வீட்டு சௌகரியத்துக்குத்தான்.''

''நாளைக்கு ப்ரியாவுக்கு ஸ்கூல்லீவு. நான் ஆபீஸ் போகணும்.''

''என்கிட்ட விட்டுட்டுப் போங்க. நான் நாளைக்குப் சேர்த்து லீவு போட்டுடறேன்.''

''சரி சாயந்திரம் ஏதாவது படத்துக்குப் போகலாம்''

''எழுதணும்னாரே.''

''என்னது?''

''கல்யாண மரம் நாவல் பாதி முடிச்சிட்டோம்.''

''அப்புறம் எழுதிக்கலாம், நான் சொல்றேன் அவர் கிட்ட, படம் போணும்னு.''

''மீனாட்சி, படம் போகணும்னியாமே? ப்ரீவ்யூ போலாமா மேனா'தியேட்டர்ல?''

''யார் படம்னா?''

''ஐயர் படம், ஐயர் டைரக்ஷன் இல்லை. தயாரிப்பு.''

''ஐயருதா? அட ராமா''

''ஏன் ராமா?''

''போனா நாலு பேரும் போகணும். ஐயர் யாரு என்னன்னு கேட்பாரே? ப்ரீவ்யூ வேண்டாம்''

''கேட்கட்டுமே, சொன்னா போவுது.''

''போவுதா. சபிதா பாஷை வந்தாச்சு. நம்ம பாஷைக்கு தலை குளிச்சாச்சு.''

''ஹை, தலைக்கு குளிக்கறது சபிதா பாஷை தான்.''

''நீங்க சும்மா இருங்க மீனாட்சி. ஐயர் கிட்ட அவர் பழைய படங்கள் பத்தியெல்லாம் நான் பேசறேன். உங்க பாஷைல, மச்சினின்னு நினைச்சுக்குவாரு.''

''மச்சினியா. முஞ்சில எழுதி ஒட்டியிருக்குதே. சோழிய வேளாளர்ன்னு. கருப்பி, கருப்பி, ப்ரியா இங்க வந்து சபிதாவைத் தொட்டுப் பாரேன். கருப்பு ஒட்டு தான்னு.'' ராகவன் சபிதாவைத் தொட்டு நிமிண்டி னான்.

''அடடே உங்கப்பா அப்படியே ரெத்த சிவப்பு டைரெக்ட் மங்கோலியன். ப்ரியா உங்கப்பா என்ன நிறம்.''

''ப்ரௌவுன்.''

''நீ?''

''ப்ரௌவுன்.''

''உங்க அம்மா?''



''ப்ரௌவுன்.''

''தானு?''

''நீயும் ப்ரௌவுன்தான். தினமும் கார்த்தால க்ரீம் தடவிக்கோ சபிதா, இன்னும் ப்ரௌவுனாயிடுவே.''

''பெரிய ஆளுங்க இது. என்னம்மா அட்ஜஸ்ட் பண்ணி பேசுது பார்த்தீங்களா?''

''ப்ரியா, சபிதா கருப்பு தானே. என்கிட்ட காதோடு சொல்லு பார்க்கலாம்.''

''சும்மா சபிதாவை கருப்பு கருப்புன்னு சொல்லா தப்பா. ஸ்வாமி கூட கருப்புதான், இல்லம்மா?''

''கருப்பே அழகு. காந்தலே ருசி.''

''காந்தல்னா என்னம்மா?''

''தன்னா வறுபட்டது''

''அதாவது நான். சாமி என்னை நல்லா வறுத்து அனுப்பிச்சிட்டார்.'' சபிதா குழந்தை எதிரே மண்டி யிட்டாள்.

''சும்மா இரு சபிதா குழந்தைகிட்ட போய் கன்னா பின்னான்னு.'' மீனாட்சி அடக்கினாள்.

''ஸ்வாமி ஏன் உன்னை தன்னா வறுத்தார்?'' ப்ரியா சபிதாவை அணைத்துக் கொண்டே கேட்டது.

''நல்லது பண்றதுக்காக. நல்லதுதான் பண்ணிட் டாரே. ப்ரியா கிட்ட அனுப்பிச்சிட்டாரே.''

''அப்புறம் நீ துருவ நட்சத்திரமாயிடுவியா?''

''துருவ நட்சத்திரமா?''

''ஆமா. துருவனுக்கு முதல்ல ரொம்ப கஷ்டம் கொடுத்து அழவச்சு, அவன் தபஸ் பண்ண பிறகுதானே நட்சத்திரமா பண்ணி என்னென்னிக்கும் தெரியும்படி வடகோடில, என்னென்னிக்கும் என் கூடவே இருன் னுட்டாரே ஸ்வாமி.''

சபிதா தடுமாறினாள். உள்ளுக்குள்ளே நெகிழ்ந்தாள். குழந்தையை அணைத்துக் கொண்டாள். குலுங்கினாள். என்னென்னிக்கும், என்றென்றும், எல்லா நேரமும், எப்போதும் வாழ்நாள் முழுவதும், ஆயுசு பரிந்தயமும், ஜன்ம ஜன்மமாய், கடவுளே கடவுளே எனக்கு இந்தக் குடும்பத்தில் இடம் கொடு. இந்தக் குடும்பத்துக்கு நலத்தைக் கொடு.

''சபிதா. சபிதா.'' ராகவன் அவன் தலையை வருடினான்.

''சபிதா. ச்சு என்ன இது?'' மீனாட்சி நெருங்கினாள். முதுகை நீவினாள்.

''சபிதா ஏம்மா அழறா? அப்பா கருப்புன்னதுக்கா? ச்சே இந்த அப்பா ரொம்ப மோசம்.''

ராகவன் நெடியதாய் மூச்சு விட்டான். வாஸ்தவம் இதில் மோசமானவன் நான்தான். இங்குள்ள நால்வரில் எடை போட்டு நிறுத்தினால் மாற்றுக் குறைவானவன் நான்தான். என் சுயநலத்திற்கு, என் உள்ளே பொங்குவதற்கு, வடிகால் தேடி நான் செய்த காரியத்திற்கு அடிபட்டவர்கள் இவர்கள்தான். தங்கள்வலியைத் தாண்டி என் பொருட்டு இவர்கள் சுதாரித்துக் கொண்டார்கள். ஊர் நலகப்பை, அவமானத்தை விழுங்கிய மீனா, ஊர் எதிர்ப்பை, உறவு இகழ்ச்சியைத் தாங்கின சபிதா, மூன்றாம் ஆள் வருகையைப் புரிந்துக்கொண்டு, எவர் துணையுமின்றி தனக்குத்தானே தேற்றிக் கொண்ட ப்ரியா இவர்கள் எல்லோருக்கும் தேற்றைய வலி மறைந்து விட்டது. தனக்கு மட்டும்தான் வலிக்கிறது. அப்பா குத்து, அம்மா குத்து, பிள்ளையார்குத்து பிடிச்சுக்கோ குத்து என்று விளையாட்டாய் குத்துவிட பிடிக்காமல் நழுவ விட்ட குத்து மாதிரி நெஞ்சில், பட்டு வலிக்கிறது. குழந்தை எதற்கோ அப்பா சுத்த மோசம்



என்றாலும்கூட நோகிறது. இது குற்ற உணர்வோ. என்னதான் கோவிலுக்கு கல் கொண்டு வந்தாலும் புகழி தான்தானோ?

ராகவன் நிதானமாய் நடந்து செருப்பை மாட்டிக் கொண்டான்.

நல்ல வேளை ப்ரீவ்யூவில் ஐயர் இல்லை. ஐயரின் மகள் புஷ்பலதா இருந்தாள். எழுந்து வரவேற்றாள். மீனாட்சியின் தோளைத் தொட்டாள். சபிதாவை உற்றுப் பார்த்து இவள்தானா என்றாள். தெரிந்திருக்கிறது. ராகவன் ஆமென்று தலையசைத்தான். புஷ்பா மெல்ல சிரித்தாள். அந்த க்ஷணம் மூன்று பேரும் வெட்கப்பட்டார்கள்.

''அப்பா படம் ஆரம்பிச்சுட்டுதுப்பா'' ப்ரியா கூவினாள், அமர்ந்தார்கள்.

நமது கதை புதுக்கவிதை
இலக்கணங்கள் இதற்கு இல்லை.
நானுந்தன் பூமாலை.

கதாநாயகி படத்தில் துள்ள, இருட்டில் சபிதா ராகவன் கையைக் கிள்ளினாள். ராகவன் சபிதா கிள்ளினதை மீனாட்சியின் காதோடு சொன்னான்.

''சும்மா இருங்கோ. புஷ்பா பின்னால உட்கார்ந்து பார்த்திண்டிருக்கா''

புஷ்பலதா மறுபடி சிரித்தாள்.

''உடம்பைப் பார்த்துக்கோ. இன்னொரு ஊசி மறக்காம ஊருக்குப் போய் போட்டுக்கோ. கவலைப் படாதே. பயப்படாதே. அம்மாகிட்ட இருக்கறதுதான் நல்லது. முடியலையா முப்பது நாள்ள குழந்தையைத் தூக்கிண்டு வந்துடு. பிச்சம்மா இருக்கா. குளிப்பாட்டி எண்ணை வழிச்சு விடுவா. கூட பத்து இருவது கொடுத்தா போறது. ஊருக்குப் போய் கடுதாசு எழுது.

இனி நான் சொல்ல வேண்டாம். மாத்தி மாத்தி கடுதாசி பக்கம் பக்கமா பறக்கும். எனக்கும் ரெண்டு வரி எழுது. நானும் எழுதறேன். ச்சி அசடு, கண்ணைத் துடை, வரவர ரொம்ப அழுமூஞ்சியாயிட்டே.''

''நான் நிச்சயம் உங்களுக்கு எழுதறேன் மீனாட்சி. எனக்கு நீங்க எழுதறபோது என்றென்றும் அன்புடன்னு எழுதணும். அவர்கிட்டயும் அப்படி எழுதச் சொல்லியிருக்கேன்.''

''சரி. என்றென்றும் அன்புடன். அப்புறம்?''

''விட்டேத்தியா சொல்லாதீங்க மீனா.''

''வார்த்தைல என்ன இருக்கு?''

''அங்க தனியா இருக்கறபோது வார்த்தைதான் முக்கியமாகும். அப்படி நீங்க எழுதினாதான் சமாதானமாகும். எனக்கு மனுஷங்க இருக்காங்கன்னு படும்.''

''தனியாவா இருக்கப் போறே? தம்பி கூட வரான். அப்பா அம்மா இருக்கா. திருச்சி முழுக்க உனக்கு உறவு சிநேகிதம்.''

''ஒட்டாது மீனாட்சி.''

''ஒட்டணும்.''

''முடியாது மீனாட்சி.''

''அப்ப என்றென்றும் அன்புடன்னு எழுதறதுக்கு என்ன என்ன அர்த்தம். இருபத்திநாலு மணிநேரமும், இருபத்திநாலு இண்ட்டு அறுபது நிமிஷமும் அன்புன்னு சொல்லிட்டு, இவா ஒட்டும், இவா ஒட்டாதுன்னு பிரிக்க முடியுமோ? பார்க்கிற எல்லார் பேர்லையும், எல்லாத்துப் பேர்லையும் அன்பா இருக்கணும்னு தானே இந்த வார்த்தைக்கு அர்த்தம்.''

ராகவன் மெல்ல மீனாட்சியின் கைகளைப் பற்றினான்.



''என்ன?''

''ஒண்ணுமில்லை. சில சமயம் பொறி கலங்க வச்சுடறே?''

''எனக்கென்ன தெரியும்? தெரிஞ்சதைச் சொன்னேன். மக்குதானே நான்.''

''போறும் அடக்கமா பேசறதா அலட்டிக்க வேண்டாம். உள்ளே போய் உட்காரு சபிதா.''

சபிதா தம்பியுடன் ரயில் பெட்டிக்குள் போய் உட்கார்ந்தாள். ஜன்னல் வழியே தலை நீட்டி ப்ரியாவை முத்தமிட்டாள். மீனாட்சியின் விரல்களைப் பிடித்துக் கொண்டாள். ராகவன் முழங்கையைப் பற்றினாள். ரயில் நகர்ந்தது. மூக்கருகே ப்ரெளவுன் ப்ரெளவுனாய் நடந்தது.

''எம்மேல் கோவமா? எனக்கு இப்ப கஷ்டமா இருக்கு. உங்களுக்கு இன்னும் வேதனையா இருக்கும். தேத்தி வரைக்கும் அத்தனை துணியும் பாவம் அவதான் தோச்சா.''

''என்கூட பேசாதே மீனா.''

''ஏன்?''

''பேசாம விரலைப் பிடிச்சுண்டுவா. அதுபோதும். கடைசி வரைக்கும் என்னைப் பிடிச்சுக்கோ. அது போதும்.''

''கதை எழுதறா மாதிரி பேசினா யாருக்குப் புரியறது?''

''உனக்குப் புரியும். புரியாத மாதிரி நடிக்காதே.''

''கொஞ்சங்கூட புரியாமத்தான் இருந்தது முன்னாடி. இவ வந்த பிறகு பரபரன்னு புத்தி யோசிக்க ஆரம்பிச்சு எனக்கே தெரியறது. நான் மாறிண்டு வரேன்னு. மனுஷாளுக்கு கஷ்டம் வறது ஒரு விதத்துல நல்லதுதான். என்ன சொல்றேள்?''

''விரலைப் பிடிச்சுக்கோ மீனா.''

சபிதா தலையை நீட்டிப் பார்த்தாள். கூட்டம் மூவரையும் அரைகுறையாய் மறைத்தது. மாம்பலத்தில் இறங்கி பனிரெண்டு பிடித்தால் நேரே வீடு என்று தோன்றிற்று. மாம்பலமும் கடந்தது.

உள்ளே நகர்ந்து பின்னால் சாய்ந்து கொண்டாள். கண்களை மூடிக்கொண்டாள்.

ரயில் வேகமாய் ஓடத் துவங்கிற்று. தாளமிட்டது. புகழி புகழி புகழி புகழி என்று பேசிற்று.

அடே புகழி கூட என்றென்றும் அன்புடன்தான்.

இருபத்திநாலு இண்ட்டு அறுபது நிமிடமும் அன்புடன்தான். அதனால்தான் அத்தனை பேரையும் கட்டி மேய்த்தாள். கல்கொண்டு வந்தாள். ஊர் முழுக்க நேசிக்கிறவள்தான் உபயம் செய்யமுடியும். தன்னையே உபயமாக்க முடியும் இன்னார் இனியார் என்று பிரிக்காமல் பெரிய காரியம் செய்யமுடியும். நேசிப்புக்கு மரபு உண்டா? இலக்கணம் உண்டா?

யார் இங்கே கெட்டவர்கள். யார் பிடிக்காமல் போனவர்கள். அப்பா கெட்டவர் இல்லை. அம்மா கெட்டவர் இல்லை. தம்பியில்லை, அக்கா இல்லை. என் ஸ்நேகிதர்களோ, ராகவன் ஸ்நேகிதர்களோ இல்லை கீழ் வீட்டுக்காரி கெட்டவள் இல்லை. பிச்சம்மா இல்லை.

ஏன்? சிறுகதை எழுதின மகராசிகூட கெட்டவள் இல்லை. அவரவர் அபிப்பிராயம் சொல்லப்பட்டதே தவிர, யார் கெடுதல் செய்தார்கள். யார் கெடுதல் செய்ய முடியும். என்றென்றும் அன்புடன் இருக்கத் தீர்மானித்தால் மீனாட்சி மாதிரி இருபத்திநாலு இண்ட்டு அறுபது நிமிடமும் அன்புடன் இருக்கத் தீர்மானித்தால் யார் கெடுதல் செய்ய முடியும்? பிரிந்த பசுக்களைத் தானே சிங்கம் வேட்டையாடும். இனி ஒருக்காலும்



அந்த வீட்டைப் பிரியமாட்டேன். நெல் முனையளவு கூட நகர மாட்டேன். மீனாட்சி என்னவள், ராகவன் என்னவர், ப்ரியா என் குழந்தை.

டேய் அம்பி வயிற்றுக்குள் தூங்குபவனே உனக்குப் புரிகிறதா, நான் மதிக்கிறவரை நீயும் நிச்சயம் மதிக்க வேண்டும். நேசிப்பை இப்போதே நீயும் கற்றுக் கொள்ள வேண்டும். எதிர்பார்ப்பு இல்லாமல் விட்டுக் கொடுக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். உலகம் அன்பு மயமானது. அம்பி மனிதர்கள் மிக நல்லவர்கள். நல்ல நேரம் பார்த்து வெளியே வா. இன்னும் நிறைய சொல்லித் தருகிறேன். உன் பெரியம்மா மாதிரி எளிமை, உன் அக்கா மாதிரி சுறுசுறுப்பு புத்தி. உன் அப்பா மாதிரி இனிமை, என்ன மாதிரி. என் மாதிரி எனக்கு என்ன தெரியும். என் மாதிரி அதிர்ஷ்டம் உனக்கு வரட்டும். நல்லவிதமாய் வெளியே வா. என்றென்றும் அன்புடன் இருக்கச் சொல்லித் தரப்படும். ஆயுசு பரியந்தமும் அன்பைத் தெளிக்கக் கற்றுக் கொடுக்கப்படும்.

இப்படி ஒரு நினைப்பு ஓடினதை ராகவனுக்கு எழுத வேண்டும். எழுதி, என்றென்றும் அன்புடன் என்று கையெழுத்திட வேண்டும். தம்பிக்கு, அம்மாவுக்கு, அக்காவுக்கு, எல்லோருக்கும் இந்த என்றென்றும் அன்புடன் பற்றி சொல்லித் தர வேண்டும்.

இருட்டில் ஓடிக்கொண்டிருந்த ரயில் பெட்டியின் வெளிச்சம் வெளியே விழுந்து அதில் ஜன்னலின் நிழல் துள்ளித் துள்ளி கூடவே வந்து கொண்டிருந்தது.

முற்றியது